[illegible]

[illegible]

T.D.R.C 3317

RR No. 128.1-1889.

892MMP3 M68

117101

சுப்பிரமணியன் துணை.

பெங்களூர் விநோதசபை.

# நளவிலாசம்.

இஃது

சைவசமய குருபரம்பரை கும்பகோணம்
சரவணமூர்த்திசுவாமிகளின்
மாணாக்கராகிய
திரிசிரபுரம் - திருமலை
அப்பாவுபிள்ளை என்னும்
இயற்பெயருடைய

**முத்துசாமிபிள்ளை யவர்களால்**

இயற்றியது.

ம-ள-ள-ஸ்ரீ - குத்தம்பாக்கம்
அண்ணுசாமி முதலியா ரவர்களால்,
ஸ்ரீ. சுப்பராயர் அண்டு சந்.
சென்னை:
சாரதாவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

**Registered Copy-right.**
*And right of Translation reserved.*

1888.

**Price 10 As.**

O-,842 MMP3, N
M88

117101

117101

THIS WORK IS RESPECTFULLY

**DEDICATED**

TO HIS HIGHNESS

THE STREE CHAMARAJENDRA ODDYAR BAHADOOR,

**THE MAHARAJA OF MYSORE.**

---

The Most Obedient and
Humble Servant,

☞. **THE AUTHOR.**

27-10-88.

உ.

சுப்ரமண்யன் துணை.

# பெங்களூர் விநோத சபை

## விளம்பரம்.

---

நாடகத்தமிழ்வளம்பெறவென்றும்வாழ்க
மூடர்தம்செயல்கள்மெலிந்துமேவீழ்க.

இதனால் யாவருக்கும் தெரியப்படுத்துவதியாதெனில், இதற்குமுன் அநேக கவிவாணர்கள் பாடியிருப்பதைப்போலிலாமல், ஏதோ வென் புல்லறிவினிடத்தே தோன்றியவாறு தேசியபாணியில் என்னாலியற்றிய **இந்நளவிலாசத்தை** என்றுமேகண்ணுற்றுங் கேட்டுமிராத பலவித நூதன விராக தாளங்களமைத்ததோடும், சமயோசிதத்திற்குத்தக்க ஆங்காங்கு வசனங்களையும்படங்களையு மமைத்த ஷ நளவிலாசத்தை, ம - ா - ா - ஸ்ரீ; குத்தம்பாக்கம்-அண்ணாசாமிமுதலியாருக்கு (ஓல்சேலாக) விற்பனைசெய்துவிட்டபடியால், வேண்டுபவர்கள், சென்னை, பெத்துநாயக்கன்பேட்டை, கோழிக்காரவீதியென்று வழங்கும் குமரப்பபூ வீதி, 1 - வது நெம்பர்வீட்டிலிருக்கும் ஷை கு - அண்ணாசாமிமுதலியாரிடத்தில் விலை அணா, 10 - கொடுத்து ஷ நளவிலாசத்தை பெற்றுக்கொள்ளலாம்; இதுவுமன்றி இவ்விலாசத்தை என்னனுமதியின்றி எவராகினும் அச்சிற்பிப் பதிப்பிக்கப்படுவார்களேயாமாகில், ரிஜிஸ்டிரேஷன், ஆக்ட்டுப்பிரகாரம் கண்டிப்பாய் சார்ஜு செய்து, வசூல் செய்யப்படும்.

சென்னை,
1888ளு
அக்டோபர்மீ 27உ.

இப்படிக்கு,
☞ தி - தி - அப்பாவுபிள்ளை.

உ

சுப்ரமண்யன்றுணை.

## மைசூர் மகாராஜன் வாழ்த்தல்.

கோட் - மோகனம் - ரூபகம்.

இராஜன் மைசூர் இராஜ சாம இராஜ
சரணம் சரணம் சரணம் , ணம். (இராஜ)

தேசமதில் புகழ் பெருக
நிமை யோட சுகம் வருக
சரணம் சரணம் சரணம் சரணம். (இராஜ)

சாமுண்டியை போற்றுங் கையா
சால்ய வாகன சாம்பிர தாயா
சரணம் சரணம் சரணம் சரணம் (இராஜ)

கிருஷ்ண இராஜன் மகிழ்ந்த லிலா
கிரீடி யெங்கு மேற்றும் லோலா
சரணம் சரணம் சரணம் சரணம். (இராஜ)

வித்வ ஜனர் பாடும் கையா
விநோத சபைக் கருளும் ஐயா
சரணம் சரணம் சரணம் சரணம். (இராஜ)

முத்து சாமி மொழியும் வாறே
முனிந்து அளிப்பாய் நீ சிறே
முருகா முருகா முருகா சரணம். (இராஜ)

---



தோடயம் - நாட்டை - திரிபுடை.

ஆதிமூலகன்னடிமறவாத வரசாதங்களில்மிக்கவன்
அருடைதங்கியபொருமையாளனு மந்நளன்காதைபாடவே
ஜோதியாயெங்குமிலகுந்தம்பரன் சுந்தரங்களன்னருளது
ஜொலிக்கவென்னுளே யிவ்விலாசமுஞ் சொகுசுற தமிழ்ப்பாட
[வே. (ஜெய)

நிடதமாண்டதோர் நளன்சரிதையை கிலத்துளோருளங்களித்தி
கித்தனருளதால்பற்பாவிசைகனில் நீடுரத்தமிழ்பாடவே [ட
படமதினெங்குங்காணுவந்த பைங்கொடிதமயந்திதான்
பட்டபாட்டையும்பெற்றபேறையும் பார்த்தவாறிதிற்பன்னவே.

கருமுளகவிவாணர் நன்னடிக்கடியனானறிவற்றவன்
கழருமிக்காதைபலருமேந்திடக் கன்னனருளென்றுந்தங்கிலெ
மருழும்வாக்குடனரன்பதம்பணி மாசிலாமணியன்பனும்
மானிலத்திநற்கீர்த்தியோடு சன்மானியாய் நாளும்வாழ்கவே.

---

விருத்தம்.

பெங்களூரகமதனிலோங்கிவளர்விநோதசபை
ப்ரசிடெண்டான
கங்கைகுலத்திலகனருணாசலன்றன்றவப்புதல்வன்
கனவன்னுரன்
தங்குபுகழோங்கிரத்னமுதலிநளவிலாசமொன்று
தருகவென்ன
பங்கமின்றிப்பற்பாவாற்பலவிசையும்வசனமுடன்
பகன்றேன்மாலே.
இச்சரிதைமேனகென் மனமுயன்றுபலரிதனை
யினிவதோடு
மெச்சுனரத்தக்கவெனப் பா-மாசிலாமணியென்
மேன்மையாளன்

அச்சிட வேண்டுமயர்ச்சிதனையமைத்தகுணசீலனா
 யடிதுதிப்போன்
எச்செகமுந்திகழ்பெருஙிப்புத்ரமித்ரனைபதியா
 யிருக்கவாழி.

---

### மங்களம் - சுருட்டி - ரூபகம்.

மங்களமிபாதம் நமஸ்தே - வைகுந்தம்வாழி
மங்களமரிபாதம் நமஸ்தே. (மங்களம்)

திங்களிளம்பிறைபோனுதலுந்
திகழும்வதுமைபூண்டநீதி
எங்குமோங்கிடதமாண்ட
எழிலுருநளன்பெருமையோடு. (மங்களம்)

வேதம்சாஸ்திரமுணர்ந்தோருக்கும்
வித்தைபுத்தியுள்ளோருக்குஞ்
சாதுசங்கமுடையோருக்குஞ்
சாவனதுர்த்திசரணடிகட்கும். (மங்களம்)

நல்குணசாலிவள்ளுநர்
நகரன்ராஜரத்னனுக்குஞ்
சொல்லரியமாசிலாமணி
சுபம்பெருகக்குணடிகட்கும். (மங்களம்)

---



## முகவுரை.

---

கனவான்களே !

இந்நளன்கதையை யிதற்கு முன்னமே சம்பூர்ணபண்டிதர்களால் நைடதமென்றும், நளவெண்பாவென்றும், நளவாசாப்பென்றும், தமயந்திநாடகமென்று மியற்றி யிப்பூமியின்கண் வசிப்போர்களின் வாஞ்சை மற்றுங் கவனிப்பிற்காகப் பிரசுரஞ்செய்திருக்க, சிற்றறிவுடைய வடியே னச்சரிதையையே ஓர் விலாசமாக வமைத்து வெளியிடக்கொண்ட காரணமென்னெனில் ; மேற்காட்டியவைகளில் முதலிரண்டுங் கல்வியைக் கசடறவுணர்ந்தறிவை விசாலப்படுத்திய விவேகவான்க ளதிலடங்கிய ஒவ்வொருகவியினற்பயனைத் தெரிந்து பிறருக்குப் புலப்படுமாறு ராகியமான சங்கதிகளைத் தங்களுடைய மனோதர்மத்தினால் வருவித்துப் பன்னிப்பன்னி புகழக்கத்தக்கவைகளாயிருக்கின்றனவேயன்றிக் கேவல மெனைப்போன்ற புல்லறிவாளரினறிவிற்கறிதாயிருப்பதாலும் மற்றிரண்டெனிலோ யிவ்வகுப்பினரா லெளிதி லறியக்கூடியவைகளா யிருக்கினும் பலரு மாவலாய்க்கருதி வாசிக்கத்தக்கவாறு தற்காலத்திற்குரிய வர்ணமெட்டுகளடங்கிய யிசைக ளமைக்கப்படாதிருப்பதனாலுஞ் சங்கதிகள் கோவையில்லாதபடியினாலும் நான் மேற்செப்பியவைகளிற் காட்டிய சங்கதிகளுட னங்காங் கவசியமாகுஞ் சமயோசிதத்திற்கொவ்வுமாறுமுள்ள சங்கதி மற்றுங்காரணங்களையிணைத்து, கதையைக் கோவையாகவுங் கேட்பவருக் கல்லது வாசிப்போருக் கொருவிதவன்பை விளைவித் ததனுடைய பயனையெளிதிலறிந்துகொள்ளுமாறுந் தகுதியான விடங்களிற் படிப்போ ரல்லது கேட்போர்களுக்குச் சிரவணானந்தத்தை மீட்டத்தக்க நூதனமெட்டு விராகதாளமடங்கிய வோரடிப்பதங்கள், ஜாவளிகள், கிருதிகள், தருக்கள், த்விபதங்கள், கஜல்கெத் முதலானவைகளை யமைத்து, மற்ற விசேடங்களை வசனரூபமாய், வாசிப்பவர்கட்குங் கேட்பவர்கட்கு முல்லாசத்தை யூட்டு

மாறு, எதிர்முன்னிலையிற் காட்டினேன், நால்வகையோனியி லெ
ழுவகைத் தோற்றங்களா யுதிக்கப்பெற்ற ஜீவராசிகளிற் சிறந்த
மானிடருக்குரிய நிலை, நெறி, உண்மை, ஒழுக்கம், ஊக்க, முயு
தி, முதலானவைகளுட னேர்ப்பு கடைப்பிடி யென்பவையும்
விரிவாகக் காட்டியிருப்பதுடன், தெரிசாளாக இவ்விந்துதேய
த்தி னிருண்ட வாரண்யங்க ளடைந்து தொளிந்துக்கொண்டிருந்
தென்றால், பெண்பாவைகள் கல்விகற்பதேயாகுமது யிப்போ
ததிநீதியோ டரசியற்று மாங்கிலேய துரைத்தனத்தாரின் மே
ன்பாடான முயற்சியினாற் சிலகாலமாய்க் காட்டைவிட்டு நாட்டு
ட்பிரவேசித்து முன்னிருந்த நிலைமையைப்பார்க்கினு மதிகவிரு
த்தியைப்போந்துவருவதா லவ்வாறுளபயர்ச்சியால் வாசிப்புண
ர்ந்தமடைந்தையர்களிவ் விலாசத்தை வாசிக்கின், தங்களுக்கு
ரிய ஒழுங்குஉடை பதிவிரதமொன்றேயென்றுமதை யனுட்டிப்
பதற்குரியசெய்கைக ளிவ்விதமானதென்று மதனாற் றங்களுக்க
மரும் பய னிவ்வகை யுளதென்றும், பதியைப்பணிவதைப்பார்
க்கினும் பாவையர்க் குற்றதொழில் வேறில்லை, (தெய்வந்தொழா
அள் கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப்பெய்யுமழை) யெ
ன, நாயனாருரைத்தனங்கப் பலவற்றை வெண்மொழிகளால
மைத்ததோடு நாடகத்திற் காட்டத்தக்கதாகிய, நவரசபாவங்க
ளையுமடக்கி யாங்காங் கொரு சங்கதியைப்பற்றிய வினாவிடை
சந்தேக சமாதானத்தின்பேரிற் றெளிவையுங் காட்டப்பட்டி
ருப்பதா லிதை வாசிக்கு மித்தேயப் பாவைகள், நாணமட மச்
சம் பயிர்ப்பென்பவைகளை, புணர்ந்து சீலத்தொழுகிச் சிரடைவ
ரெனக் கோருகின்ற வென் னெண்ணத்தைப் பூர்த்தி செய்விக்
குங் கருவிகளி லிவ்விலாசமே யதி மேன்மை தங்கியதென வெ
ளியிடலாகினே னிதிலேதாயினுந் திருத்தத்தக்க பாகத்தைக்கண்
ணுறுங்கனவான்க ளடியேனுக் கன்புகூர்ந் தறிவிக்கி னவ்வாறே
இரண்டாம் பதிப்பிற் றிருத்திக் காட்ட சித்தமா யிருப்பதோ
டிதி லேதாகினுஞ் சொற்பிழைகளிருக்கின் வாசிக்கு மல்லது
கேட்கு மறிவுடையோ ரெளியனென் சிற்றறிவிற் புலப்பட்ட
வா றியற்றியதை, ஒருவா றிகழாமற் றிருத்தி யிச் சிறுவனைத்
திகழுடையச் செய்வர், சிறப்புள சான்றோரென வவர்கள்
மேலான கனத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

☞ தி. அப்பாவு



உ

சுப்ரமண்யன் துணை.

பெங்களூர் விநோத சபை.

# நளவிலாசம்.

## தற்சிறப்புப்பாயிரம்.

### துதிகள்.

### வெண்பா.

### கணபதி.

மாநிலத்து மாந்தருக்கே மாநெறியைத்தான்புகட்டுந்
தேனமரின் னாடகமாந் தீஞ்சரிதை - யானளைக்கப்
பற்பலநா ளெத்திசெயப் பாசாங்கு சம்படைத்த
கற்பகவி நாயகனே காப்பு.

### பரமன்.

திங்களிளம்பிறையுமந்த திரிபுரமெரித்தகண்ணுங்
கங்கையைத்தரித்தசிரக் கரத்தில்மான்மழுவோடும்
பொங்கரவணிந்தமார்பும் பொன்விடையேறுமோனச்
சங்கரன்ஞானபோதன் சரணடிகதியெனக்கே.

### பார்வதி.

இந்திரனிமையர்வேத னெழிலுருமுனிவர்சித்தர்
சந்திரன்ரவியுமண்டச் சராசரத்துறுக்கடம்பில்
ஐந்துருப்பதனைப்பூட்டி யவைகளைக்காக்கப்பேசுந்து
சந்ததமிலகுமாதி சாம்பவிகதியெனக்கே.

### முருகன்.

கருமுகிற்குறத்திவள்ளி காதலாவுமையாள்பாலா
குருமுனிக்கருளீந்தக் கோமளாகண்டைக்காலா
இருவினைகளைக்களைந்தே யெனக்கருளியவேண்டி
முருகனன்னடியைநானு முனைந்திதோபணிந்திட்டேனே.

## திருமால்.

ஆதியேமூலாவென்றங் கலரியகரியைக்காத்தாய்
கோதிலாபனத்தோய்தைத்தியக் குலமதைக்கருவறுத்தாய்
வேதியேவிரண்யசெஞ்சை விரணசுந்தாற்பிளந்தாய்
ஜோதியேயென்னையாளத் தொழுதிதோபோற்றினேனே.

## வாணி.

தம்பைமாமலரின்மிக்க தூயநற்பட்டுடுத்தும்
அம்பிகாமணியேவெள்ளை யரவிந்தமதனில்வாழும்
நம்பினோர்வாக்கினென்று நவிருடனிருந்தமாதா
உம்பர்களேத்தும்வாணி யுனதடிவணங்கினேனே.

## குருவணக்கம்.

முன்வினையதனலிங்கு மூண்டிமொயைநீக்கி
நன்மைசேர்பாதைநோக்கி நாதனின்னுருவைக்கண்டு
சென்மசாபல்யனைச் சிற்சபையுலாவச்செய்த
என்குருச்சரவணைய் ரெழிலடிக்கிதோநமஸ்த்தே.

## அவையடக்கம்.

மேகமதிங்காழிதனிற்கவிந்துரிந்தே
மேலேகிப்பூமியெலாமேன்மைகொண்டு
சாகமுறநீர்சொரியுமாறுபோலச்
சாற்றிடுநன்னியலிசைநாடகங்களெல்லாம்
போகமுறவறிந்துரைக்கும்வாணர்முன்னே
புல்லறிவோனயினுங்கடையன்சொன்ன
பாகமதைச்சீர்தூக்கிக்கொள்வர்சான்றோர்
பயனறிந்துகுற்றமெனப்பகரார்மாதோ.

நற்சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

---



உ

சிவமயம்.

## சிறப்புப்பாயிரம்.

இஃது
அஷ்டாவதானம்
பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்
இயற்றியது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

சீர்வளர் சலசஞ் செறிந்திடு சரசுங்
கார்வளர் கருவி கவினுங் காவுந்
திங்க ளுலவித் திகழ்தரு மேனிலை
தங்கி யோங்கலைத் தாழ்த்து மாடமுங்
கன்னியோர் பங்கிற் கலந்த கண்ணுதல்
மன்னிய நன்விழா மல்கிய மறுகும்
எழிலி யளக்கொன் றெண்ணியெந் நாளும்
இழிந்து புனலை யேற்றிடு மகழியுந்
திருநிறைய யாணர் திட்டிய பொறிகள்
பொருந்தல ரஃகினைப் பொடிக்கு மதிலும்
மோக்க மிவர முயங்கு மேனியென்
றேக்கங் கொள்ளு மொண்கோ புரமும்
இன்னபல் வண்மை யிலகுஞ் சோண
டென்னு நாட்டி லினிது திறங்குந்
திரிசிர புரமாந் திவ்விய நகரில்
பரிசினர் நாப்பண் பாங்கா யுதித்தோன்
கல்வியு மொக்கமுங் கற்றவ ரிணக்கமும்
நல்லவர் சேக்கையு நன்கு கொண்டோன்
கங்கா குலத்திற் கதித்த மன்னவன்
செங்கழு நீர்த்தொடை செறிந்த மார்பன்
ஓங்கிய பாஷைக ளுள்ளுளா தெரிந்து
பாங்குறப் பற்பல படித்துத் தேர்ந்தோன்

இயலிசை நாடக மியைந்த நூல்கள்
நயம்பெறச் செய்து காட்டிய புலவன்
அம்பொன் முடிதிக ழாலயந்தொகுந்த
கும்ப கோணங் குலவி நின்று
திரணம தாகச் சிவனை யுன்னிடுஞ்
சரவண மூர்த்தித் தாளினைப் பணிவோன்
அப்பா வென்னு மழகிய பெயரால்
இப்பா ருள்ளா ரியல்பெற வழைக்கும்
வித்தகம் பெரிது விளங்கி வாழும்
முத்துச் சாமி முதலி யுடையோன்
செய்ய பதுமச் செழும்பொருட் டேடிப்
பையக் குருவளர் பணில முயிர்த்த
மணிக ளிலவுறு மதியென வெறிக்கும்
அணிதரு மருத வகன்பணை யதனிற்
கவையடி மேதி கரும்பை வணக்கச்
சுவைமது பாய்ந்து சுடர்வான் தருவென
அடர்ந்து வளரு மருந்தன் டலைசூழ்
கிடத காட்டிட னீணிலம் புரந்த
நளனது சரித நண்ணிய விலாசம்
வளம்பெற வமைத்து வழங்கின னிங்கே
இத்தகை யோர்நூ லெவருங் கொள்வான்
முத்திரித் திடற்கு முன்னே நின்றான்
பூரி கொழிக்கும் புண்ணியர் நாடேம்
பாரி வாக்கம் பழம்பதி வந்தான்
சிலர்புகழ் செல்வனைச் சிறிது மறியான்
புலவர் தம்முடன் பொலிந்து வாழ்வான்
விளங்குறு சென்னை மேதகை யாளன்
களங்க மில்லாக் காட்சி மனத்தான்
குற்ற நீங்கிய குணமிக வுடையான்
பெற்ற மேறும் பிரானடி பணிவான்
அருசொல் சைவ ரகமகிழ்ந் திடச்செ
மாசி லாமணி மாண்புடையோனே.



உ

சிவமயம்.

அரன்வாயல் - வேங்கடசுப்புப்பிள்ளையவர்கள்

சோதரர்,

## அ - தங்கவேல்பிள்ளையவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குளகம்.

திருமிகுறைநாடாகுநசித்தலைமைப்பொன்னிரும்
சிரபுரத்தே
வருமணியாருயர்சைவசமயகுருபரம்பரையில்
வாழ்குடந்தைப்
பெருமையதேபொலிந்தசரவணமூர்த்தியெனுங்குரவன்
பெட்பாருந்தேன்
தருமறைப்பூந்தாளிணைகட்ககமகிழ்வாற்றெண்டியற்றுந்
தவத்தின்மிக்கோன்.

சுந்தரதிருமலைவாயலப்பாவென்றுரைப்புகழாற்
றுலங்கும்பேர்கொள்
கந்தமலர்த்தொடைமார்பன்முத்துசாமிக்கவிஞன்
கவிஞர்கோமான்
செந்தமிழ்மாமணம்மிகநயங்களெலாமொருங்கமைத்த
திறமிதென்ன
அந்தமிகுநிடதநளன்கதையினைவிலாசமதா
யமைந்துதந்தான்.

அறைந்தளிந்தவிறைந்தபுகழ்நிடதநளவிலாசமதை
தகிலந்தன்னின்
மறைந்திடாதொளிர்தகணிதன்கொடுதாவெழுத்தினிலே
மன்னச்செய்தான்
நறுந்தளிர்சேர்பொதும்பர்புடைசூழ்பாரிவாக்கமதி
னல்வாழ்வெய்துஞ்
செழிந்தசீரொழிலாளன் மாசிலாமணிப்பெயர்கொள்
சீமான்றானே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திராவிடமஹாபாஷ்யமுநயேநம:.

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள் மாணாக்கர்

வல்லை - சண்முகசுந்தரமுதலியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

செப்பரியவியலிசைநாடகத்தமிழை
　யொருங்குடனேதெரிந்தகோமா
னிப்பெரியவுலகமகிழ்திருமலைவா
　யற்பதியிலியவில்வோர்தம்மு
ளப்பாவுவெனவருவோனிடநள
　விலாசமதைப்பழகாய்ச்சொன்ற
னெப்பெரியகவிஞர்களுமொப்பிவனுக்
　கெனவறைதவிலதாதம்மா.

சூல்கொண்டவால்வளைகள்திகழ்பண்ணை
　யினில்வாளைதுள்ளிப்பாயக்
கால்கொண்டசெம்முளரிப்பிரசமதை
　யோவாதுகளுழ்த்தசாலி
நால்கொண்டசிட்டபுரிகளஞ்சரித
　விலாசநனிகலங்கொண்டோங்கச்
சால்கொண்டசீர்பாரிவாக்கமா
　சிலாமணியச்சதிலிட்டானே.

உ

சுப்ரமண்யன்துணை.

வெங்களூர்

விநோதசபா:

# நளவிலாசம்.

வீமராஜன் - கடவுள் வணக்கம்.

சக்கரங்கெதைகோதண்டம் சார்ங்கஞ்சங்குமேந்தி
தக்கசன்னெறிபிரேறு தாமரைமலரோன்கூட
எக்கவன்றனிற்தேடி இணையடிமுடியைக்காண
முக்கணவென்றுசெங்கோல்மொழிபெறச்செய்வாய்நாதா.

மந்திரி - விருத்தம்.

புவனமீரேழுமேற்றப் புண்ணியராசிகூடத்
தவநெறியோங்கிவாழ்க தகைமையும்பொருமைபூண்டு
சிவனடிப்பணிநாளுஞ் சிந்தைபின்மைதிறப்போற்றும்
நவகுணவீமராஜ நாதனேவென்றன்போற்றி.

(வீமசேனமகாராஜன்-வ-ம்) அடாமந்திரி! நமதுதேசத்தில் அதர்மமென்பது அகன்று, தர்மமென்ப தெங்கணுந் தழைத்தோங்கி நான்குவருணத்தாரும் தங்கள் தங்கள் நெறிபிசகாமல் நடப்பதுடன் ஒவ்வொருவருந் தினம்பொழுதை போக்காமல் வேதநூல்களை விவேகத்தாலுணர்ந்து, ஒருவருக்கொருவர், கற்பித்தவன் கருணையைப்பற்றிப் புகழ்ந்துபேசிவியந்து உருகி உண்மையையுணர்ந்துசுகிதர்களா யிருக்கின்றார்களா! உரைசெய்வாய் அன்பனே! (மந்திரி-வ-ம்.) அப்படியேயிருக்கின்றார்கள் ஆண்டவனே; (வீம-வ-ம்.) சந்தோஷமப்பாவா ; (மந்-வ-ம்.) ஆ! இதென்னவாச்சரியம்! இன்று நமது அரசன், குடிகள் கோட்பாட்டை விசாரித்தபின், வேறுவிஷயத்தை விசேஷமாய் விசாரியாமல், ஏதுவித விசனக்குறிபோல்காட்டும் முகத்தோடு

வதொன்றும் வசனியாமல் இருக்குங்காரணம் ஏதுவோ, வறி யாதவனுகிறேனும்; நல்லது, வேந்தன், மொழியினுல் வியசனத் தின்மூலத்தைக் கண்டறியலாம்; இதுவேசரி, கிதர்னிப்போம்; (விம-வ-ம்.) ஆ! மந்திரி? (மந்-வ-ம்.) அரசே!

---

வீமராஜன் - விருத்தம்.

நாளுமெந்தன்பத்தினியும்பலகாலாக
    நவிலொணுத்துயாருந்துவிட்டாளுதன்
வாளுலகிலெக்களேப்போல்வருந்துவோரை
    வழுத்தவுந்தான்கேட்டறியேன்கண்டதில்லை
மாளுமமுவேந்தபவனருளுமில்லை
    மனக்கவலைநீக்கவொருமார்க்கமில்லை
எனினிப்சகடவமெனவுளங்கரைந்து
    என்னுதுமென்னுநப்பாவென்செய்வேனே.

(விம-வ-ம-) அப்பாமந்திரி? நானென்பத்தினியைமணர்ந்து, நாங்கள், ஆனமைக்குள்ளாகிச் சிலகாலம் அங்கங்களிக்க ஆடிப்பாடி, ஆனந்தத்திலாழ்ந்து, அறிவைநிலையில்நிறுத்திய நாள் முதற்கொண்டு, எங்களிருவரின் எண்ணத்தி லேதோவொன்றுபட்டு, ஏக்கத்தைப்படிப்படியா யெழுப்புவதைத் தடையச்செய்ய எதுமார்க்கமுந் தெரியாமலிருப்பதால், அதைநவில்லவண்ணமாய் அகற்றக்கூடுமெனு முயர்ச்சி யின்னதென்றறிந்தெடுத்துரைப் பாயாநேசா! (மந்-வ-ம்.) நமது மன்னனையும் மகாராணியையும் ஒரேவாறாக வருத்தத்தக்கதன்பம் எதுவாயிருக்கும், யோசிப்போம்; நமது ஆண்டவருக்கோ, அஷ்ட ஐசுவரியமும், தன கனகவஸ்துவாகனமும், கீர்த்திப்பிரதாபமுதலாகியதும், பெருகியிருந்தும், அருந்ததிக்கொப்பாகிய தேவியையடைந்திருந்து, மனவருந்தவுந்தகாரணமென்ன? இவருக்கில்லாதகுறை என்ன? சரி; தான்முதலிற்சொல்கேட்க்காத அபராதமொன்றிருக்கலாம், இதுவன்றிவேறிராது; அதுவாயிருக்கின் அந்தஅரவாபரணனடி களைநியானித்து அருந்தவமியற்றினுல், முன்வினையேதெனுமிரு



க்கின் அவைகளை முக்கண்ணனன்நீக்குவான்; இதைவெளியிட்டு வேந்தன் எண்ணத்தைக்கண்டறிவோம்; அரசே! போற்றி.

---

மந்திரி - விருத்தம்.

மன்னவனேஇவ்வுலகில் யாதனாயா
    மாசெறியோடிருந்தாலுமரசாண்டாலும்
துன்னுபலதானங்களீந்திட்டாலும்
    தொகுதியாய்வேதநூலுணர்ந்திட்டாலும்
பன்னரியபாக்கியத்திற்கதிகமான
    பாலனென்றாரொருவரைப்பாரிலென்றே
அன்னகனாயனுகவொட்டாரமரதூதர்
    அடியனுமக்கித்துயரென்றறிந்திட்டேனே.

(மந்-வ-ம்.) சுவாமி! பூலோகவாசியாகிய நரனுக்கு, சகலைசுவக்கிய சம்பத்துக விருந்தாலும், கீர்த்தியென்னும் சந்திரனை யணிந்திருந்தாலும் முப்பத்திரண்டு அறங்களை யளித்தோனுயிருந்தாலும், ஒருபுத்திரபாக்கியம்படையாதிருப்பானுகில் அவன் மாபாவியென்றும், மோக்ஷவிருப்பத்தகாதவனென்றுந் தூக்ஷணியமின்றி தள்ளிவிடுவார்கள் தேவதூதரென, வேதமுறையிடுவதால், அதுவே தங்களையும், வருந்தாத்துயரமெனத் தனையனறியலானேன், வேந்தே! (விம-வ-ம்.) அப்பாமந்திரி! நீ யின்று என்கருத்திலுள்ள வருத்தத்தைப் பகுத்தறிந்தோதியதால், அத்துயர் என்னைவிட்டகன்றோடத்தக்க வுபாயமேதேனுந் தோற்றுமாயின்வெளியிடில், நான் அவ்வாறுசெய்யப்பூரணவெண்ணமுடையவனுயிருக்கின்றேன் நேசா; (மந்-வ-ம்.) சுவாமி, தாங்களுந் தேவியாருஞ், சான்றோன்று, பஞ்சகரணசுத்தியோடு, சந்தரிசனைத்தொழுது தவமியற்றி வித்துயரானது தொலையுமென் பதிற்கிஞ்சித்தேனுஞ்சந்தேகமில்லைதேவே; (விம-வ-ம்.) பாலா! நான், அப்படியேசென்று, அரனடியணிந்து அவனருளடைந்து வருமளவும், நீகுடிகளைப்பாதுகாப்பாய் தோழா? (மந்-வ-ம்.) நல்லது, சுவாமி; (விம-வ-ம்.) அடிபெண்ணே?

வீமராஜன் - விருத்தம்.

இன்றெனது துயரமதையெடுத்து மோத
இணையிலாமந்திரியோர்மார்க்கஞ்சொன்ஞன்
நன்றுனதாய்நானுந்தேன்கேளாயெந்தன்
நாயகமேநாமிருவர்மனமகிழ்ந்தச்
சென்றுசிவனடி பணிந்தால்சுரத்திற்கண்ணே
செல்வனையும்மடையவருள்சமக்களிப்பான்
என்றனடிநானெகப்போரேனுந்தன்
எண்ணமெதோர்விளம்புவாயினிவாய்த்தானே.

(வீம-வ-ம்.) அடிபெண்ணே ! செனபாக்கியவதி,மந்திரிசொன்னவாறு புத்திரபாக்கியம்பெற புரமூன்றெரித்தோனைப்போற்றிசெய்யப் புண்ணியஜென்மிகள்வசிக்கும் பூமியடையப்போகத்துணிந்தேன், உன்கருத்தெதுவோ,வெளியிடுவாயென்மானே? (தே-வ-ம்.) பிராணநாதா ! என்போன்ற பெண்கள் என்னை, சனமலடியென்று பேசும்படிக்கு, எனக்கு எம்பெருமானிட்ட கதி, யெப்போதகலுமோவென, இரவும், பகலும், ஏக்கங்கொண்டிருக்கும் என்னை நீர்மனஞ்சோதிக்க எண்ணுவதேற்குமா, இதோ நான், மரவுரியணிந்தேன் வாரும்போவோம் வன்மையுள்ளயத்தாவே. (வீம-வ-ம்.) சந்தோஷம்.

---

வீமராஜன் - தரு.

காம்போதி-ரூபகம்.

வருவாயடி மாதே

அடி மயிலே குயிலே மருவே திருவே- நீ
வனத்திற்கேகி சுகத்தைப்பெருவோம் (வரு)

அருமறைகளும்புகழும்நாதன்
அடியர்வினையையறுக்கும்பாதன்
பெருமையியுங்குணபிரக்கியாதன்
பிஞ்சகன்பித்தன்பேயோடாடும்பாதன் - நீ (வரு)



அருசையொன்றாய்அமைத்தநாமே
அகங்காரத்தைபொடிக்கித்தாமே
செருசைத்தலைக்கிகிற்கலாமே
சித்தனருளைப்பெத்திடப்போமே- நீ (வரு)

(வீம-வ-ம்.) ஆ ! என்பிராணநாயகி! இதோ,நாம் வனமடைந்தோம், இங்குபார்த்தையா, புண்ணியவந்தர்கள்,அந்தமுக்கண்ணனைத் தியானித்துக்கொண்டு பசிதாகம் என்பவைகளற்று, ஆசாபாசங்களையகற்றி, அந்தகன் அணைவதையடக்கி யிருகண்களைமூடி, யிங்கு மங்கு மெங்குமொன்றாயிருக்குமெம்பிரானை, யேற்றுகின்றாரடி யிவாளை நாம்கொண்டுவந்த எண்ணங் கைகூடபிரதக்ஷணஞ்செய்து பணிந்து அச்சோலையடைந்து, ஆனைபுரித்தோனைத்துதிப்போம் வருவாய்மாதே ; (தே-வ-ம்.) அப்படியேபிராணநாதா.

---

வீமராஜன் - துதி.

மோகனம்-ஆதி.

சங்காரசம்போ சதாசிவமூர்த்தியே
பொங்கரவணிந்த புலித்தோலுடையா
மங்களவுமையாள் மருவிடும்போகா
திங்களைத்தரித்த திரிபுரதகனா
எங்களுக்கான யிலகிடும்பாதா
கங்கையைத்தரித்த கவுரிமனோகரா
துங்கவெண்விடையா துரியாதிதுரியா
எங்களின்முறைக்கே யிரங்கிவாபோற்றி.

வீமராஜன் - தேவாரம்.

ஆதியேஅரிஞர்தேனே அடி-முடிநடுவாய்நின்ற
நீதியேநிருபவித்தே நிர்க்குணநிமலமுந்தே
பாதியாம்பிறையணிந்த பார்வதிலோலவெங்கு
ஜோதியாயிலகும்ரூபே சுந்தராஅபயம்காரே.

## 2-ம் தேவாரம்.

மலைவிளர்வுலகைவேண்டேன் திற்குறைவுடைமைவேண்டேன்
துலைகாறுச்சுற்றம்வேண்டேன் தொல்புரியாகம்வேண்டேன்
வலையதாமாலையுருப வருந்தியருதவும்வேண்டேன்
அலையுறுதிருக்கவந்தன் அடியையாயாக்கிக்கொள்ளே.

(பரமசிவன்-வ-ம்.) அப்பா விதர்ப்பதேசத்தை யாளாநின்ற வீமசேனமகாராஜனே? நீ யெந்தகாரியத்தை யெண்ணியிங்குற்று என்னைக்கோரி யுருகினின்றனையோ, அந்தக்காரியத்தை, யிப்போது மறந்துவேறெண்ணி வருந்துவதிற் பயனடையப்போகாய், ஆதலால், நீகோரிவந்தவாறு உன்நாயகிகெர்ப்பத்தில், ஒருதிவ்யஆணும், ஒரு அதிசுந்தரப்பெண்ணும், உதிப்பார்கள் அவர்களால் உன்கீர்த்தி எங்கு மதிகரித்துவிளங்கும், அன்றியும், வரும்பிறப்பில் உனக்கு இப்போது என்னைக்கண்டுநீகன்னைமறந்துகேட்ட பதவிகிடைக்கும், பாலா! இனி யுன்னாடு சேர்வாய், நாம் செல்கின்றோம், வாழிவாழி, அன்பர்களே. (வீம-வ-ம்.) மகாபாக்கியரு, சத்துசித்துஆனந்த சர்வஜீவதயாபரமூர்த்தியே; மாதே நமக்கினிமல்லடர் எனும்வசையகன்றது, அரண்மனைபோவோம், வருவாயடிகண்ணே. (தே-வ-ம்.) நல்லது சுவாமி.

---

### வீமராஜன் தரு.

பூரிகல்யாணி-ரூபகம்.

பல்லவி.

போவோம்வாராய்- பூவே நாம்
ஆவலாய்வந்ததை யடைந்தோமினிநாம் (போ)

அநுபல்லவி.

புத்திரன்புத்திரி புவியில்நீதருக
உத்தமசோதிநின் உண்மையாய்ப்பெறுக. (போ)



சரணங்கள்.

வேந்தரிலாமைப்போல் வேந்தரில்லையென்று
மாந்தர்களேற்றாவற மகிழ்ந்திடப்பெறுவோமின்று. (போ)

ஆதலால்பாதவர் அனைவருமநம்மையே
ஓதுவார்மேலென்றுத்தமக்கோம்மையே. (போ)

(மந்-வ-ம்.) போற்றினான்றுண்டவனே? தாங்கள்சென்றகாரியங்கைகூடியதா? கடையனுக்கருள்செய்வீர் கருணைக்கடலே! (வீம-வ-ம்.) அப்பாமந்திரி! நானியற்றிய தவத்திற்கிரங்கிப்பரமனுநானங்கனிந்து என்பத்தினியினுடைய கெர்ப்பமோரிருபாலனும் ஒருபாலியும்பிறப்பாரென்று வரமளித்ததோடு வரும்பிறவியில் என்னைத்தடுத்தாட்கொள்ளுவதாகவும் வாக்களித்துச்சென்றசந்தோஷத்தை, நான், என்னென்றெடுத்துரைப்பேன் எனதன்பனே. (மந்-வ-ம்.) சுவாமி கோரிப்போனகாரியத்தோடு புவிதனிலிக்கும் வரம்பெற்றுவந்த வுமது புண்ணியபாதங்களுக்கிதோ போற்றினோம். (வீம-வ-ம்.) மாதே நான்கொலுமுகமே கிவருகின்றேனடிகண்ணே, நீதாதிமார்களுடன்கூடிச் சந்தோஷமா யரண்மனையிற் காலங்களிப்பாய்ப் போக்குவாய்; (தே-வ-ம்.) நல்லதுஎன்பிராணநாதா, (வீ - போற்றிவிருத்தம் செப்பவும்) (நாட்டியப்பெண் - வ - ம்) போற்றி போற்றி மகாராஜனே (வீம-வ-ம்.) ஓ! நாட்டியமாதே? இன்றென்மன மகிழ்சந்தோஷத்தோடுகொலுமுகமடைந்திருப்பதாலவ்வாறே யென் சபையிலுள்ளோர்க ளெல்லோருங் களிப்புறத்தக்கதாகவோரு பதம்பாடி சகலருமந்தசம்புவின்பெருமையைக்கொண்டாடும்படிக்கிச் செய்வாய்பெண்ணே (நா-வ-ம்.) மகாபாக்கியம் தேவே.

---

### நாட்டியப்பெண்-தரு.

இ-ம். சாமா-ஆதி.

பல்லவி.

ஆதிவராவன் ஆடியபெருமையை
அமரர்முனிவர்கூட அறியொணாத்தன்மையை. (ஆ)

அநுபல்லவி.

கரவடதோராகும் சொன்னபடியேநேர்வன்பாய்க்
குவித்திடில்மனமது சுகித்திடுமெருளது (ஆ)

சரணங்கள்.

காரதன்புரமீட்ட கந்திமத்தளங்கொட்ட
காரணனயன்ருத்திர நாவிலேந்தினையேற்ற (ஆ)
சீரதாயுமையவள் சிலம்புமசையநொடிக்க
சிவநெருகாலேத்தூக்கி ஜிம்ஜிம்மெனவடிக்க (ஆ)
சித்தர்களுளமது பக்தியால்துடிக்க
முத்துசாமியெண்ணத்தை முனைந்துமேமுடிக்க (ஆ)

(வீம-வ-ம்.) ஆ! ஆ! மெத்தசந்தோஷம், நீயின்றுசெப்பிய வாக்கியத்தைக்கேட்டு இன்னுமுதலாகிய பறவைகளும்பரவசமாகிக்குந்தியவிடம் விட்டகலாதிருக்க இங்கிருக்கும் விவேகவான்களினுளம், இவ்வாறிருக்குமென எவரால் எடுத்தோதக்கூடும், அப்பாமந்திரி; இம்பராஜக்குவேண்டியதைக் கொடுத்தனுப்புவாய் (ம-வ-ம்.) அப்படியேமகாராசனே (தே-வ-ம்.) அடிபாங்கி யின்றெனக் கென்னமோ ஒருவிதமான களைப்பும் ஆயாசமுமாய்த்தோணுகின்றது, மெல்லமெச்ச வாங்குகின்றது நிற்கவும் உட்காரவும், அல்லது சயனிக்கவுங் கூடாமையாய்க் காட்டுகின்றது இதற்கென்னசெய்வேனடி (தோழி-வ-ம்.) அம்மணி தங்களுக்குப் பூரணகெர்ப்பமாயிருப்பதனால், இந்தச்சேட்டைகள் காணலுத்ததே, இதோ நான்கட்டியனியேவி மருத்துவமாதை யழைத்துவரச்செய்கின்றேன் தாங்களிந்த சோபான விசுப்பலகையின்மீது உட்காருவீர்,

---

தேவியார் - தன்னொளி.

சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

அம்மா அம்மா தோழிமாரே
அடிவயிற்றிலே நோகுதடி (அம்)



சும்மாவென்று எண்ணுதடி
குனிந்தகைய நூக்கச்செய்யுதடி (அம்)
இருந்திருந்து கமிக்குதடி
இருதுடையும் நடுக்குதடி (அம்)
அருகிருந்து அணைப்பாயடி
அங்கமெல்லாம் வேர்க்குதடி (அம்)
பெண்ணின்ஜென்மம் கெட்டதடி
பிள்ளையாசை விட்டதடி (அம்)
என்னவென்கோ ஆகுதடி
இரக்கலாம் தாகாதடி. (அம்)

(மரு-வ-ம்.) அம்மணி இதோ புத்திர ஜெனனமாகுவதினி யொருதுன்பமுமிராது தாயே; (தோ-வ-ம்.) அம்மணிநான்கோனுமுகஞ்சென்றறிவித்துவருகின்றேன்; (தே-வ-ம்.) அப்படியே செய்வாய். (தோ-வ-ம்.) மெய்யமகாராசனே யின்று தங்கள் தேவியார் ஒருபுத்திரனையும், புத்திரியையும்பெற்றனர், அவருந் தேகசவுக்கியமாயிருப்பதையுந் தங்களுக்குஅறிவிக்கவடியாளோடிவந்தேன் சுவாமி; (வீம-வ-ம்.) மெத்தசந்தோஷம், அப்பா மந்திரி! இன்று நமக்கு புத்திரபாக்கியம் பெருகியதால், நமது தேசவாசிகளுக்கெல்லாம்வேண்டியவைகளை யளிப்பாய், மாதே தேவியாருக்கு அறிவித்து பிள்ளைக்குதபாமயென்றும் பெண்ணுக்குத் தமயந்தியென்றும், வால்கில்லியமாமுனிவர் சொன்னவாறு அழைக்கச்செய்வதுடன் பாலகர்களை யதிகஜாக்கிரதையோடு பார்க்கத்தக்கது உன்னுடைய அதிமுக்கியமானகடமையென்றறிவாய்; (தோ-வ-ம்.) நல்லது மகாராஜனே.

---

நளமகாராஜன் - வணக்கம்.

ஆதியாய்நடுவாகி யந்தமுமில்லாய்ஞானச்
சோதியாய்சுகமாகிச் சுகமாருள்ளியமாகி
வேதியாயெங்குந்தாகும் விளங்கிடுமெரியென்னை
ஓதினேனெனவந்தசெங்கோல் ஓங்கிடவருள்வாய்போற்றி.

மந்திரி - விருத்தம்.

புவனமறையோர்குடைக்கிறைஞ்விரா
புண்ணியநெறிமீறுதருணவத்தாரா
நவநிதியும்படைத்தகநிலமர்ரா
நயத்துபலவுயிர்கட்கினக்கார்க்குந்சிரா
அவனிதனில்முனிவருமாயகளிக்குந்திரா
அன்புதவைப்பெருமைதனைவாய்த்ததேரா
பவமகற்றும்சிலையுடையர்பகைஞர்க்காரா
பார்த்திபாநளமாபூபதியேபோற்றி.

(கட்டிய-வ-ம்.) சசா பராக்கு, - நிஷ தேசாபராக்கு, நன்தேசாபராக்கு, நள மகாராஜாபராக்கு. (நள-வ-ம்.) அப்பா மந்திரி நமதுநாட்டில்மா தருமங்களியெய்துதேவாலயப்பூசைகளும் வேதபாராயணங்களும் எக்கிய வோமாதிகளும்குறைவின்றி நடந்தேறுகின்றதா? அல்லது எதாகிலுங்குறைவுண்டா வெனக்கறிவித்தபின் மற்றவைகளையிங்கெடுத்தோதுவாய் (மந்-வ-ம்.) ஆண்டவனே அவைகள் எதொன்றுங்குறைவின்றி நடந்தேறிவருவதனுல் தங்கள் தேசமானது அந்த அமராபுரி அளகாபுரியைவிடவதிகயென்மையுஞ் சிறப்புள்ளது மெனப்பலருங்கொண்டாடப்பிரகாசிக்கின்றது பிரபுவே ; (நள-வ-ம்.) அப்படியா எல்லாம் அந்த அகிலலோசனனுடைய வருளானதா லவனடிக்கு நாம் வணங்குவோமாக (மந்-வ-ம்.) மகாபாக்கியமரசே.

வீமராஜன் கொலு.

(தோழி-வ-ம்.) சுவாமி? தங்கள் குமாரத்தியாகிய தமயந்தியிதுவரையிற் பள்ளிக்குச்சென்று கல்வியைத் தெளிவுறவுணர்ந்ததோடு பருவமடையும் பக்குவ காலத்தையும், பெற்றமையால், இனி அவர்களைப்பள்ளிக்கு அனுப்பாமல் ஒருதிவ்வியமாளிகையில் தக்கதாதிகளுடன் இருந்தத்தகுந்தகாலமிதுவென்று தங்கள் சன்னதிக்கறிவித்து அக்ஞையடையவந்தேன் சுவாமி (வீம-வ-ம்.) மெத்தசந்தோஷம் ; அப்பா மந்திரி? என்னருந்தவப்பெண்மணி பொன்மணி மிருகன்மலியாகியதமயந்தியம்மாள்

பருவமடைந்தமையால், நமது கன்னியாமடத்தை இன்னேதன் மணிப்புறுக்கள், சகோரங்கள், வானம்பாடிகள், குயில்களுடன் சதுரங்கப்பலகைகள், ஆயுதங்கள் முதலானவைகளுடன், திவ்யரூபப்படங்களாலு மலங்கரித்து தக்கவிருத்தர்களையுந் தோழிமார்களையுமமைத்து, இம்மோதக்கறிவித் தென்புத்திரிகாரத்தினத்தை, புத்தமநெறிப்புத்தகத்தை, அங்கமரச்செய்து எனக்குத்தெரிவிப்பாய் நேசா ; (மந்-வ-ம்.) மகாபாக்கியம் அரசே ; (வீ-வ-ம்.) இனியென்குமாரத்திக்குத்தக்க மணவாளனையுங் காவமரியக்தம், நான்உண்டது உடலைப்பற்றுதுபாலா ; (மந்-வ-ம்) தாங்களோமெத்தவும் புண்ணியபரிபாலர் பூமிக்கொப்பாகிய பொறுமையைவகுத்தவர், மற்றும் அந்த மாதவசிரேஷ்டசிகாமணியாகிய வால்கில்லியமுனிவருடைய அனுமதிப்படி அரவாபரணனைப்பணிந்து அடைந்த அருங்குணவந்தியாகிய தமயந்தியம்மாளுக்கு, இந்த நிஷ - தேசங்களுங் கொண்டாடத்தக்கப் பெருமையும், கீர்த்தியும், புனைந்த புண்ணியவந்தர் புருடனுவாரென்பதற்கு ஏதேனுஞ்சந்தேகமில்லை, ஈசனுர் சொன்னமொழி இரவி, மதி, யிப்பூமியழிந்தாலும் இடறாது வேந்தே. (வீம-வ-ம்.) அப்படியே யெல்லாமுடிவுசெய்யத் தக்கவன் அவனன்றி நம்மாலேதுநடக்கும் நேசா.

யாத்ரி-பெண்கள் - தரு - பியாக் - ஆதி.

பஜநாராயணா பஜநாராயணா பஜநாராயணா எனுமனமே.

கஜமுறைகேட்டவன் கடலினிற்றுயின்றவன்
க்ஜநின்றுண்டவன் நிகிலலோசனனுமம். (பஜ)

இந்திரனுக்காதியாம் இமையர்க்குவேதியாம்
இகபரஜோதியாம் எற்றிடநிதியாம். (பஜ)

ஆதிமூலப்பொருளாம் அண்டாண்டத்தெருளாம்
நீதிநிலைபருளாம் நினைக்கத்தக்கமருளாம். (பஜ)

(தம-வ-ம்.) அம்மாதோழி ? அதோபாரோ! தீர்த்தயாத்திரைவாசிகளாகிய வேதியப்பெண்கள் அந்த அரிபரந்தாமன்பெருமையை மனம் இரம்மிக்கநன்குயமைத்துப்பாடிக்கொண்டு வரு

கின்றார்கள், அம்மாதர்களீங்கழைத்துவருவாய், நான், அவாளுக்கு, வேண்டியவைத்தனைக் கொடுத்தனுப்பக்கோருகின்றேன். (தோழி-வ-ம்.) நல்லதம்மணி. ஓ! யாத்திரைமாதர்களே! உங்களைத்தெரிசிக்கங்கருதி,யென்றன் தேவியாகிய வீமசேனமகாராசன்புத்திரி தமயந்தியம்மாள் அழைக்கின்றாள்; (வே-வ-ம்) மெத்தசந்தோஷம், நாங்களும், அந்தப்பெண்ணைக்கண்டு, ஓர்வார்த்தைசெப்பிப்போகக் கருதித்தா னிவ்விடம்நோக்கி வரலாயினோஞ்சேடியே; (தம-வ-ம்.)போற்றப்பத்தாமனடிகளைப்படிக்கும்பண்புளோர்களே! இவ்வாசனங்களில் வீற்றிருந்து, தாங்கள், தெரிசித்தபலதேசவளப்பங்களை அடியாளுக்கறிவித்து,நான் புரியுஞ்சிற்றேவலைசிரமேற்றுச்செல்வீர்களோ தேவிமார்களே (தே-வ-ம்.) அம்மாதமயந்தி? நாங்களுனக்கு, ஒருமுக்கியமான சங்கதியை மனதிற் பதிப்பிக்கேதக்கருதி, யிம்முகம்நோக்கி வரலாயினோதன்றி வேறன்று, அதாவது உன்னுடையநடையொழுக்கம், நீதிநெறி, சுந்தரத்தைக்கொடுத்தகடவுள், அவைகளோடுமோதிக்கத்தக்க மாப்பிள்ளையு முனக்கிப்பருவகாலத்திலேயே கொடுக்கவேண்டும்; அப்படிக்கிக்கொடுப்பதினு மந்த நிடததேசாதிபதியாகிய னளமகாராசனை யுன்வசஞ்செய்வனுகில், பழம்நழுவிப் பாலில்விழுந்ததுபோலும், கனிதவறிகருப்பஞ்சாற்றில் விழுந்ததுபோலவுமிருக்கும்; அந்தப் புண்ணியவானே உன்னழகுக்குத்தக்க புருடன்தமயந்தி; (தம-வ-ம்.) ஆ! ஆ! அப்படியா! அவருடைய ரூபலாவண்ணியங்களையுங் குணதிசயங்களையு மெனக்குச்சற்றேதெளிவாயெடுத்தோதுவீர்களோ உங்கள்திருப்பாதங்களுக்கு வந்தனஞ்செய்கின்றேன் அம்மணி (வே-வ-ம்.) அப்படியா! ஆனைச்சொல்லுகிறோமம்மா தமயந்தி.

---

யாத்திரி-பெண்கள் - தரு - காம்போதி - திருபுடை.

அந்தநளனுடைய வழகையெடுத்து ஓத
ஆதிசேடனாலேயு-மாகாது-அம்மா.

சந்திரவொளியோருபில் சாற்றுமொழியோகின்னரி
சனொளிமிகுதிகழ் சத்தியன்அதிவுத்தமன். (அந்த)



பூமிதேவியைவிடப் பொறுமைதனிலதிகன்
புகழும்நன்னடையாளன் பூசார்க்குபூசான்
காமினியேமதனைக் கனைக்கச்செயுமழகன்
கால்ருத்திரனைவே கணைதொடுத்திடும்வீரன். (அந்த)

மதிமுகமரவிக்காந்தி மனத்திடனீகைவான்
மானேகயற்கண்ணான் மரபிலதிமிக்கவான்
சதியானேமாந்தளை தந்தமுத்தின்கோர்வை
சரசரன்வலம்புரிச் சங்காங்கழுத்தின்பார்வை. (அந்த)

இருபுயங்கிரியென இயம்பலாங்கரங்களோ
இடைவிடாக்கணைவிடு மேற்பாம்விரல்களோ
பருமம்சிலையைக்கூடப் பற்றிமுறிக்கவல்லன்
பாவையேமற்றவையே பகரச்சேடனேவல்லோன் (அந்த)

(வே-வ-ம்.) அன்றியுங் கேளாய்தமயந்தி! இன்னுவனையிலொருபெண்ணையுங்கண்ணெடுத்துப்பாராத காவந்தன், னளனுபரியந்தமுந்தன் குணதிசயங்களுக்கொப்பிய மங்கையைத் தான்மணம்புரியவேண்டுமென அந்த மகாவிஷ்ணுவை தியானித்துக்கொண்டிராநின்ற திவ்யகுணவா னுனக்குத்தக்க நாயகனாகையால், அவனை உனக்கு சித்திக்கத்தக்கமுயற்சிசெய்வதும், உன்னையின்றெடுத்தோர்களின்முக்கியகடமை; இனி, நாங்கள், போய்வருகின்றோம் நீ வாழியம்மா தமயந்தி; (தம-வ-ம்.) நல்லது பரிசுத்தமனமுள்ள பாவைமார்களே! உங்கள் பாதங்களுக்குநேர்நமஸ்கரித்தேன், அடியாள் தங்களுக்குக்கொடுத்த தொந்திரைக்காய் மன்னிப்பை மன்றாடுகின்றேன் மாதாக்களே. (வே-பெ-வ-ம்.) ஐயஐயரே! நான் தமயந்திக்குனளன் பெருமையைத் தெரிவிக்க அவள் அவன்மீது காமியாயினள், நீர் நளனிடஞ்சென்று இவள் அந்தத்தை அறிவித்து அவனை இவளைமணம்புரியச்செய்தால், நமக்குக்கன்னியாதானப்பலன் கிடைக்கும். இதுவுமன்றி வரும்பிறப்பிலாவது ஒரு புத்திரபாக்கியம் பெற்றுப் பெருமையடையலாம் வேதியரே; (வேதி-வ-ம) அப்படியே இதோ நிடததேசம் போய்வாரேன், நீரும் வாரும் ஐயங்காரே.

### தமயந்தி - விரு.

அன்னநடையு மொழுக்கமுட னறிவின்மிக்க
சங்கையே யென்தோழி கவிலக்கேளாய்
இன்னிமையிக்குற்றவர்களை நிந்தனைத்த
இறைவரந்தகளச்சக்கிரவர்த்தியென்போர்
சன்னெறியுஞ்சாந்தகுண மழகுமாண்மை
சந்திரமுகவஜீகரத்தைச் சாற்றக்கேட்ட
என்மனமுமேங்குதடி யவரெனக்கே
வினையவருள்புரிகுவரோ யீசன்தானே.

(தம-வ-ம்.) அம்மா தோழி, யாத்திரைவேதியப் பெண்களின்று, இங்கெதித்தேறிய, அந்த நிடதபூபதியெனும், நளமகாராஜா என்னையே, மணம்புரியத்தக்கவென்ன மவருடையமனதிலுண்டாகுவரோ அந்தப்பரந்தாமன், என்னெஞ்சமுருகுதடி அவருடைய ரூபலாவண்யாதிகளையும், வல்லமையையும், ஒருவாறுயவள் எடுத்தோதியதைக் கேட்டது முதற்கொண்டு, அதுவே எனக்குக்கவனமாயிருக்கின்றதன்றி வேறில்லை, இந்தக்கோரிக்கை யெனக்குக்கைகூட என்னமுயற்சி செய்யத்தக்கதோ நீ சற்றுகிரணமா யாலோசித் துரைப்பாயடி பாங்கி; (பா-வ-ம்.) நல்லது அம்மணி.

---

### நளமகாராஜன் - கொலு.

(நள-வ-ம்.) மந்திரி! நமதாளுகைக்குட்பட்ட தேசங்களில் எங்கேனுங் களவு, பொய், கள்ளு, அகங்காரமொழியாடல், கொம்பமுதலாகிய துர்ச்செய்கைகள், தலைகாட்டவுண்டா; நீ எதாகிலுங் காதுவிசேஷமாய்க் கேட்டிருந்தால் வெளியிடுவாய் நேசனே; (மந்-வ-ம்.) அரசே! தங்கள்கிருபையின்பெருமை, யின்னதென்று வெளியிடப்போமோ, அவ்விதமானக் கிருத்தியங்களொடுயொழிந்திருக்குமிடங்கூட இவ்விடமென வறியக்கூடாததாயிருக்கின்ற தரசே!

---



### மாடுமேய்ப்பவர்

(காடன்-வ-ம்) டே அண்ணே நாம் பசுக்களையோட்டிப் போக நேரமாச்சு, இப்போது உ - முளப்பொழுது மேறிவிட்டது, வாடா; (மோடன்-வ-ம்) இதோ வாரேண்டா, வாடா ஓட்ராபசுமாட்டை.

---

### டப்பா - சாமா - ஏகதாளம்.

டேயடேயடேயி அம்மா டேயில்லொரடேடேய்யி
கஞ்சிவளர்காமாட்சி கருங்குடிமீனாட்சி
நெஞ்சிலிருநேமாச்சி நீகெதிநீசாட்சி. (டேய)

(மோடன்-வ-ம்.) டே அண்ணே! மயிலைப்பசு தண்ணிக்குட்டைப்போகுதடா (காடன்-வ-ம்.) டே ஓடிக்குறுக்கேமடக்கடா! நான் அந்த செங்கன்றைத் திருப்பிவாரேன்; (மோடன்-வ-ம்.) டே ஒரு மொக்கன் நரி தண்ணிக்குட்டைக்கிப் போகுதடா! மயிலைக்கி மண்டைப்பூச்சி மாண்டுதடா.

காத்தவராய சந்நிதியுள்ள அம்மையா
ஆத்தங்கரைநீலி அம்மாடிமுத்தாச்சி
இந்தசமய மிருகலப்பராம்மா
தந்திகவேன்புறை தாரேடிவாஅம்மா. (டேய)

(காடன்-வ-ம்.) அண்ணே! பார்த்தியா! நரிதலையை, வண்டிச் சக்கரம்வந்து அதைக்கொண்டுபோச்சு (காடன்-வ-ம்,) ஆமடா, ஆம், நான் சீக்கிரம்போய் ராசாவுக்குச்சொல்லிவாரேன் எதாகிலுங் கொடுப்பாண்டோ; (காடன்-வ-ம்.) ஆமடா; (மோடன்-வ-ம்.) நீ மாட்டையடக்கி ஓட்டிப்போ; (காடன் வ-ம்.) நல்லதடா. (காடன் - வ - ம்) கொம்பிடுறேன்சாமி; (மந்-வ-ம்.) அடா! நீயார் எங்கிருப்பது இங்குவந்தகாரியம் என்ன பயமில்லாமல்வெளியிடுவாய் (கா-வ-ம்.) சாமி யின்னைக்கி பகலுமேலே யெம்பசுமாடுமேஞ்சு வாத்திக்கரைக்குட்டையில் தண்ணிகுடிக்கும்போது ஒரு நரி பெரியமொக்கன் அங்கு தண்ணிகுடிக்கவந்ததைக்கண்டு நான் பயந்து ஓடி பெரிய ஆலமரத்

திவேளுகிக்கிறேன் (ம-வ-ம்.) என்னடா ஒருநரி யதுவோசிறியமி ருகம் அதைக்கண்டுபயந்தா மரமேறிக்கொண்டாய் ; (கா-வ-ம்) குள்ளநரியல்லசாமி பெருயநரிசாமி ; (ம-வ-ம்.) ஓ நாயா (கா-வ-ம்.) அல்லசாமி புலிசாமி மொக்கன் ; (மங்-வ-ம்.) சரி அப்பால் (கா-வ-ம்.) என்பசுமாடு வாலைப்பிச தண்ணிபுலிமேலேப ட்டது, காதை கிழித்து வாலைச்சுயற்றி வுறும்ப ஆகாசத்திரு ந்து ஒரு சின்னவண்டி உருளை சூரிய வெளிச்சத்தோடு வந்து மொக்கன்தலையை யறுத்துக்கொண்டுபோச்சு ஆண்டவனே ; (ம-வ-ம்.) அப்படியா சந்தோஷம் அப்பாசேர்வையே யிவனுக் குத்தக்க வெகுமதிகொடுத்தனுப்புவாய் ; அரசேதாங்களிவ்வள வுபெருமையுள்ள நீதியிற்றும் நாட்டி லக்கிரமங்களுந் தலைகா ட்டுவதுண்டா தேவே : (நள-வ-ம்.) சந்தோஷமந்திரி.

யா வே-தியால்-இந் சுருட்-ஏகதாளம்.

---

அதிதினவைகுந்தவாசனை - அடா
பதிவரும்பணிவரும் பாரினில்கீர்த்திவரும்
சதியருங்கதிதரும் சடகோபனடி. (அதி)
மும்மைச்சிக்கரும் முக்குணமுனையரும்
தம்மையதேவரும் நாராயணனடி. (அதி)
இருவினைதானரும்மரமன்வாதையரும்
தருமவழியைத்தரும் தண்டபாணியடி. (அதி)

(வே-வ-ம்.) அன்பனே நாமிதோ கிடந்தேசம்வந்தோம், இங் குஅரசாட்சிசெய்யும் ராஜனோ மகா உத்தமன், பாவியன், தரு மகுருமி, நாம் விதர்ப்பதேசத்திற்கண்ட தமயந்திக்கு, இவனே தக்கபுருஷன், இவன், அவளிடஞ்சென்று, விவாகஞ்செய்து கொள்ளும்வாறு இவனுக்கு அவளுடைய குணாதிசயங்களைக் கொஞ்சம்போனு, மனதினில் நாட்டச்செய்துப்போவோம், இ ப்படிச்செய்வதனுல் நமக்கு கன்னியாதானஞ் செய்த பலன் கிடைக்கும், நாமோ, அபுத்திராளாயிருக்கின்றோம், இந்த தரு மசைங்கிரியப் பலனையாவது பெருவோம்; (வெ-வ-ம்.) நல்லது



தேசா ; வாழி வாழி மகாராசனே சுகிபவா ; (நள-வ-ம்.) சுவா மிகளே இந்த ஆசனத்திலிருந்து, தாங்கள் விஜயஞ்செய்தவிட ங்களிற் கண்ணுற்றபல விநோதங்களில் அதிகமேன்மையானவை களைதேனுமிருக்கின் அடியேன் மனங்களிக்க எடுத்துரைப்பீர் கள் எனக்கோருகின்றேன் ; (வே-வ-ம்.) மகாராஜனே! உமக்கு மணமாயிற்ற ; (நள-வ-ம்.) இன்னமில்லை சுவாமிகளே.

---

யா - வேதியர் - விருத்தம்.

மானிலத்தில்மானிடனாய்ப்பிறத்தல்மெத்த
மாதவமாமதிலுமொருமன்னனாக
சனிலத்தில்வருவதுவுமரிவோடுநீதி
யியம்பொணப்பெருமையன்றோவின்னமின்னந்
தானியம்பக்கேளாசேவகுணங்கள்போன்ற
தமயந்திக்கொப்பானமாதைச்சேர்ந்து
வானியம்புபுத்திரனையீன்றோர்க்கன்றோ
வாய்க்குமந்தவைகுந்தம்வழுத்தினேனே.

(வே-வ-ம்) அரசே! உலகில்மானிடனாய்ப்பிறப்பதரிது, அதி லும் அவயவங்கள் குறைவின்றி வருதலரிது, அதிலும் நீதிநி லையிலை யடைதலரிது, அதிலு மன்னனாய்ப் பிறப்பதரிது, அப்படிப்பிறந்தும் தமயந்திக்கொப்பாகிய ஒரு பெண்ணைமணா ந்து புத்திரனைப்பெற்ற புண்ணியனையன்றோ அந்தப்பராந்தகன் தன்னருகில் வைகுந்தத்தி லிருத்திக்கொள்ளுவான் ; (நள-வ-ம்) சரிதான், சுவாமிகளே ; தாங்களாருகுணங்கள் எனச்செப்பிய தைவெளியிடவேண்டும் ; (வே-வ-ம்.) அப்படியே.

காரியேஷூதாசி கருணேசமந்திரி
ரூபேசலக்ஷமி க்ஷமயாதரித்திரி
போஜ்ஜேஷூமாதா சயனேசவேசியா
ஷட்கர்மநாரி குலதர்மபத்தினி.

(வே-வ-ம்.) புருஷனுக்குப் பணிவிடைசெய்வதில் பாந்தியை ப்போல்வும், ஆலோசனைகளைகூருவதிலும் புருஷன் பொருளைப் போஷிப்பதிலு மந்திரியைப்போலவும், புருஷனுக்கு அன்னம

ளிப்பதில், தாய், குழந்தையை, வருந்தியூட்டுவதைப்போலவும்
புருஷனைவருத்தகாலத்தில் வாதிக்காமலும், ரூபத்தில் ஸ்ரீயவ
ளைப்போலவும், படுக்கையில் அன்னியனுமின்றி வந்தவனை
நெடுநாளாயறிந்தவனைப்போல அன்புபாராட்டியானந்தங்கொடு
க்கும்வேசியைப்போலவு மிருப்பவளைத்தான் குலத்திற்குகந்தப
த்தினியென்பதாம் வேந்தே ; (நள-வ-ம்.)இத்தியாதிகுணங்கள்
ஒருமாதிக்குண்டா ? (வே-வ-ம்.) உண்டு ; (நள - வ - ம்.) தமய
ந்தியெனச்சுட்டிக் காட்டினீர்களே அம்மாதுயாரோ எங்கிரு
ப்பதோ, அவள் குலமெதுவோ, அம்மாதை மணம்புரிந்த புரு
ஷன்யாரோ, அடியேன்கேட்க உரைசெய்வீர்கள் உத்தமர்க
ளே ; (வே-வ-ம்.) மெத்தசந்தோஷம், அப்படியே உரைக்கின்
றோம் அரசே.

யா - வேதியர் - விருத்தம்.

காமதேனென்பதற்குவொப்பதான
கருவந்தன் குணவந்தன் கனம்பூமி
சேமமுடனேற்றுமந்தவீமராஜன்
தெரியதனூற்சிவனருளால்வந்தபேடு
சாமமுதனூலுமுணர்ந்தமங்கை
சன்மார்க்கநீதிநிலையறிந்தமாது
காமனுங்கண்டயர்ந்தோடும்ரூபசுந்தரி
கவனிப்பீர்விதர்ப்பமுள்ளகன்னிதானே.

(வே-வ-ம்.) அரசே ! வீமசேனமகாராஜனருந்தவபுத்ரி, ரதி
ரூபவதி, வேதாகம நீதியொழுக்கங்களையறிந்த குணவந்தி,நல்ல
மன்னர்குலவந்தி, விதர்ப்பதேசத்திலிருக்குந்தமயந்தி, இன்னம்
கலியாணமில்லை, அப்பேர்க்கொற்ற மங்கையை, நீர் மணந்து,
நற்பதவியையடைவீர் ; நாங்கள்போய்வருகின்றோம் காலதாம
தமாகின்றதுவேந்தே ; (நள-வ-ம்.) நல்லது சுவாமிகளே ! அப்
பா மந்திரி ? இங்கு அந்தவேதியர்க ளுரைத்தவைகளை நீ கேட்
டனேயோ ! (மந்-வ-ம்.) கேட்டேன்வேந்தே ; (நள-வ-ம்.) அந்
தவிதர்ப்பதேசத் தரசனாகிய வீமசேனமகாராஜன் புத்திரியாகி
யதமயந்தி எனபவளுடைய குணநியங்களைவேதியர்க ளிகளி



ரப்பாய் எடுத்தோதியகர்ரண மெதுவாயிருக்கும் அது, மெய்
யோ, அல்லது பொய்யோ, நீ தீர்க்காலோசித்துனெக்குரைசெ
ய்வாய்;(மந்-வ-ம்.)அரசே!அவாளோ,பூலோக ஆசைகளைப்போ
க்கி புவனீசன் நேசத்தைத்தாக்கி தங்கள் வாழ்நாட்களை திவ்ய
க்ஷேத்திரதீர்த்தயாத்திரை தெரிசனங்களிற் கழித்துவப்பவர்களொ
ருபோதுமில்லாததைப்பேசத்துணியார்! அல்லது, தன்புத்திரிக்
குத்தக்க நாயகன் வேண்டுமெனப்பெற்றவனாகிய தகவுதசெப்பி
யனுப்பியிருப்பாரெனெ வெண்ணிலோ செங்கோல்தாங்கிய மன்
னனுதலாலும், வீமசேனமகாராஜன் அதி நீதிவானதலாலும்,
அவ்வாறுவலியனுதனுப்பமொப்பியேயிரான்,அன்றியும்,நானும்
நெடுநாளாக அந்த வீமசேனமகாராஜனியற்றிய அருந்தவத்திற்
கிரங்கி அன்னவர்க்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பிறக்கும்படி
வரமளித்ததாயும், அவாளிருவருக்கும் வால்கில்யமாமுனிவர்
சொன்னவாறு தமனானியென்றும், தமயந்தியென்றும், பெயரிட்
டு,நாளொருமேனி பொழுதொருவண்ணமாய் வளர்ந்ததாயும்
இப்போது மாதுசிரோமணியுருவமடைந்திருப்பதாயும், அவ
ளைமணரத்தக்கவ னந்தவைகுந்தவாசனின்றி மாநிலத்திலெவரு
மில்லையென்றும், அனேகரால் கேள்விப்பட் டிருக்கின்றேன்
ஆதலால்,வேதியர்கள்மொழியை அபத்தமெனப்படாது சுவாமி;
(நள-வ-ம்.) அப்படியா, ஆனால்சரிதான், அப்பேர்க்கொற்றமா
தானம்மைப்போன்றவனைக் கருதுவாளோ ? கருதாள், கருதாள்,
“கிட்டாதாயின்வெட்டென மற„ வென்பதுபோல இந்த எண்
ணத்தை மறந்திருப்பதேநன்மை ; (வே-வ-ம்.) நாம் நாடிவந்
தவரிடம் என்னமோகத்தாலொருபதிலளிப்பதித்து
(மறு)வே-வ-ம்.) இந்நளமகாராஜனை அந்த தமயந்தியைமணா
ம்புரிவான் என, எப்படிநம்புகின்றனே ! (வே-வ-ம்.) அப்பா !
அறிவுள்ளோனே ! யாமந்த தமயந்தியினுடைய குணநியங்க
ளையொருவாறுங் காட்டகேட்ட நளபூபதி வினவிநதுரைக்கக்
கோரியதொன்றே, அவன்அவள்மீதிற்சுவனம் நாட்டினனென்
பதற்கு தடையில்லை யல்லவா, விவேகவான்கள் மனதிற்பட்ட
தை முடிப்பதற்கு வேண்டியமுயர்ச்சி எடுப்பார் இதுநம்புவா

ய்! (மநுவே-வ-ம்.) எல்லாம் நாம் கன்னியாகுமரி யாத்திரை முடிந்துவரும்போது இன்னுட்டில்வந்து நளனைக் கண்டால் எல்லாம் வெளியாகும் இனி நாம் முன்னேறிச்செல்வோம் வாருமையரே; (நள-வ-ம்.) அப்பா மந்திரி! இன்று சித்திராபவர்ணமியானதால், நான் சிங்காரத்தோட்டம்போக என்னுகின்றேன் உன்கருத்தென்னவோ வெளியிடுவாய்நேசா; (மந்-வ-ம்) சுவாமி புஷ்பவனங்களி லுலாவத்தக்க சமயம் இதுவேயானதால் தாங்கள் கருத்திட்டவாறு போய்வருகலாம்; அதிற்காகவேண்டியவைகளை சித்தஞ்செய்துவைக்கின்றேன்? (நள-வ-ம்.) நல்லது மந்திரி, பொழுதஸ்தமித்தது சந்திரனுதயமாகினன், நமக்கோ மனம் தமயந்தி தமயந்தியென வாடுகின்றன இவ்வருத்தத்தை நீக்க சிங்காரவனமடைந்து, அங்கு சற்று நமதுவியாகூலம் நீங்கும்படி காலத்தைப்போக்கிவருவோம்; ஆ! ஆ! இங்கு மல்லிகை, முல்லை, யிருவாட்சி, சென்பகம், மரு, மருக்கொழுந்து, குருவேர்முதலானதின் மணவாடையைச்சகிக்க நமது மனந்தாளன்மையைப் பாராட்டுகின்றது, குயில்களினுடைய தொனியோ நமது செவிகளில் நுழைந்தவுடன், நமது எண்ணத்தை மாற்றுகின்றது, ஆ! அந்த மயிலினங்கள் சிறகைவிரித்தாடும் உன்னதமோ மனதிற்கதிக உல்லாசத்தைக் கொடுக்கின்றது, ஓ! வெஷிமனமே, அந்தக்கிளிகளின் கூட்டத்தைப்பார்த்தையா! அவைகள் தன்தன் பேடுகளுடன் சந்தோஷமாய் வசனித்தாடு மானந்தத்தைக்கண்டாயா, அந்த மெய்யறிவில்லாத புள்ளுகளும் பேடோடாடிப் பெருமையையனுபவிக்கநீ மதியுளமானிடனாய்ப்பிறந்தும் அரசர்க்கரசனுகவிருந்தும், என்ன பலன், ஆனந்தவிஷயம் அனுபவிக்கத்தக்க ஒரு பெண்மணியைடையாமல் எவ்வளவுகாலத்தைப் பெற்றிருப்பதைநோக்கில் உன் வாழ்வு சூரியனில்லாப்பகலுக்கும் சந்திரனில்லா யிரவுக்குஞ்சமானமேயின்றி, வேறல்ல, உன்பெருமை, என்னபெருமை, உன்றேண்மை என்ன ஒரு ஆண்மை, இதைவிட நீ மரவுரிதரித்தவனமடைந்து, அருந்தவமியற்றி, ஆகுதிபெறுதல்மேன்மை, யன்றோ அப்படிக்குச்செய்தாலும் என்னபலன், அபுத்திரனுக்



குகதியில்லை, என்பதாய் நான்மறையிடுகின்றது, புத்திரனையடையவேண்டிலோ முதல் பத்தினியைப்பெறவேண்டும், பத்தினியைத்தேடுவோமெனிலோ அறுகுணங்களிருப்பவளை அகத்திற்குகந்தவளென வேதியர்கள்கூறிச்சென்றார்கள் அப்படிக்கு இருப்பதெவளுக்கெனிலோ தமயந்திக்கு என்றனர்களே ஆ! தமயந்தி நீ எனக்குப் பாரியாளாகுங்காலமும் வருமா? இதற்கென்னமுயற்சி நான் செய்யத்தக்கதோ இதொன்றும் எனக்கெடுத்துரைப்பவர்களில்லையே அல்லது, உன்னிடம்வந்து என்னுக்க முறையைச் செப்பத்தக்க தூதர்கள் யாரோ அறியேனே.

---

## நளமகாராஜன் - தரு - காபி - ஆதி.

எப்போவருவாய்மயிலே - ம - ம - ம - நீ
அப்போதல்லோவென்னதுஆவிகளிக்குமானே. (எப்)
வேதியருன்பெருமைவிரித்துரைத்தநாளதாய்
வில்லவேளிமதன்வாளிவிரும்பித்தாவுரான்தேனே. (எப்)
கூராப்பொறுக்காமல்போச்சுஉருகிக்குலையலாச்சு
உத்தமமடையாளேஓடியெந்தனைத்தேடி. (எப்)
உரமிழந்தனைப்போல்உடற்பெதிர்கின்றவார்
உளரிவாயெழுந்துநான்ஓடிக்கிக்கரையலானேன். (எப்)
குயிலொலிகிளிமொழிகுதேசங்கிரஹெரி
கோபமெனமோவென்மேற்கூர்வாயிலுய்மாடி. (எப்)

(நள-வ-ம்,) ஆ! நம்மை யிவ்வாறு வருத்தத்திலசையிருத்தித்தான், தன்செடிகளோடுங் கிள்ளை, வானம்பாடிமுதலான பறவைகளின் பாடலைக்கேட்டு, ஆனந்தவாரியி லாழ்ந்திருக்கும் அந்த அனுதாபனையுள்ள மாதரத்தினத்தைநாம் எண்ணிமனமுருகுவதனல் வருப்பயன் என்ன! அம்மாதுதான் எந்நாயகனை மணரவேண்டுமென்று மனதிலிட்டிருக்கின்றளோ, அப்புண்ணியவானை யனுகுவாளேயின்றி, நம்மைப்போன்ற குருபியைக்கோருவாளா! அல்லது நம்மைக்குறித்தும், நமது, சிறியபுகழையும் குரியவடிவையுங்குறித்து, அந்த தமயந்திக்கு எடுத்தோதி யிசையச்செயததக்கவ ரெவருண்டு, அல்லதவன் தந்தையா

யவீமசேனமகாராஜனுக்குநாமேவணக்கமாயொருகுடிதம்எழுதலாமென்றெத்தனியலாமெனிலோ யதுசெங்கோல்தாங்கியவேந்தர்களில் தகாதநடக்கையென நகைமையுள்ளோர்களுரைசெய்துநகைப்பர்கள் என்மனமும்நாணுகின்றது இவ்வாறுநாம்சிந்தித்துக் கரைந்துருகுவதைவிட நமது ஆவியைப்போக்கடித்துக்கொள்வோமாகில் அனங்கனுடையவேதனைகள்நம்மைவிட்டகன்றுபோகுமல்லவா அப்படிச் செய்வதைப்பார்க்கிலு மாறுதடை மாரன்கணைக்கில்லை இவ்விடம் விட்டெழுந்து வனத்தைநாடிச்செல்வோம் ஓ! வைகுந்தவாசா? அடியார்கள்கோரும் இஷ்டகாமியார்த்தங்களைக் கொடுத்தாட்கொளு மெம்பிரானே! எனக்கு அந்த தமயந்தி வாய்க்கும்வரையும் மாறுபுரியவாகாவதுமையா, ஆயின் என்னுவிவை நீக்கி யுமதடிகளின்கீழிருக்க அருள்செய்யும் அநந்தசயனா.

---

### நளமகாராஜன் - தரு - கண்டா - ரூபகம்.

அருள்செய்தென்னையாட்கொளுமையா
அலமேலுமங்கைஅணையுந்துய்யா. (அரு)

மருவலர்த்துளாய்மாலையணிந்த
அரிகோபாலநாராயணையா. (அரு)

அன்றுமுறையிட்ட வானைக்கிரங்கினாய்
அடிபுகழ்ந்திட்ட அன்பரைதாங்கினாய்
இன்றெனையாளஏன்பின்னடைந்தாய்
எங்குநான்உயிர்வாங்குதுகெட்டேயிர். (அரு)

பிரமன்முறைக்கு இரங்கிமச்சமாய்
பெருங்கடலைக் கலக்கநூக்கமாய்
காய்ந்துவிந்தவ னிரக்கமச்சமாய்
நைமிசாரணியங்கம் பெய்பவித்தபோதம். (அரு)

தமயந்தியெனு மாதைக்கூட
தாவியேயென்மனந் தயங்கிவாட
சமயமிதுவே நீ யருள்காட
சரணம்வரவே கருணைபெறவே. (அரு)



(நள-வ-ம்.) ஆ! ஆ! இந்த அன்னதநின் கூட்டங்களைப்பார்த்தையோ மனமே, அவைகளின் மேனியின்காந்தியை இவ்விதமானதென எடுத்தோதச் சக்தியானதன்று இவைகளைப்பூலோக அன்னங்களெனப்போகாது, நமதுமனோவியாகூலத்தை, ஒருவாராய்நீக்கும்பொருட்டாக இந்த மன்மதனைப்பெற்றமகாவிந்தன் ஏவிய தெய்வலோக அன்னப்புள்ளுக்கள் என்பதற்குத்தடையில்லை, இவைகளில் ஒன்றை நாம்பிடித்துக் கூண்டிலடைத்து உல்லாசமாய்ப்பார்த்து வியசனத்தைப்போக்கி ஒரு தூதுவன்வசமாய் அந்தவிதர்ப்பதேசத்தரசன் குமாரத்தியாகியதமயந்திக்கு அனுப்பி யதுமுகாந்திரமாய் நமது எண்ணத்தையவளுக்கு அறிவிப்போம், இதைவிட அம்மாதுக்கு நாம் அனுப்பத்தக்கபெருமையுள்ளவஸ்து வேறொன்று மில்லையேயில்லை, இனிப்பிடிப்போம்- ஆ! ஆ! இந்தக்கூட்டத்தில் எல்லாம் நம்மைநாடி யுற்றுப்பார்க்கின்ற அன்னம் பெரிதாயும் அதிக அழகுள்ளதாயு மிருக்கின்றது, அதையேபிடிப்போம்; (அன்-வ-ம்) ஓ! நளமகாராஜாவே, நீர் சகலநீதிகளையு மறிந்தவராயிருந்தும் என்னைப்பிடித்ததுமக்கழகோ, (நள-வ-ம்.) ஓ! அன்னமே; நான் கொண்ட வியாகூலத்தை பொறுவாராய் நீக்கிக்கொள்ள வேடிக்கார்த்தமா யுன்னைப்பிடித்ததேயன்றி உன்னைவதைக்கவன்று நீ யச்சத்தைவிடுவாய், (அன்-வ-ம்) ஓ! ராஜனே! உம்முடையமனதில் அந்த தமயந்தியென்கிற பெண்ணைக் கூடவேணுமென்னும் ஆசைபெருகி, மன்மதவேதனைக்குள்ளாகி, வருந்துகின்றீர், அதை ஒரு பெரியகாரியமாக எண்ணி உம்மைப்போன்ற விவேகவான்கள் கலங்கப்போகுமா கண்டவர்கள் கேட்டவர்கள் நகையார்களா! ஆனால், நீர் என்னசெய்யக்கடவீர் மாரன், ஆரையும்விட்டவனன்று நானேசென்று, உமது குணகிசயங்களை அந்த தமயந்திக்கு எடுத்தோதி உம்மைக்கூடியசீக்கிரத்தில் மணம்புரியும்படிக்குதிட்டஞ்செய்கின்றேன், வியசனத்தைவிடுமரசே? (நள-வ-ம்.) ஓ! ராஜ அம்சமே! நீ அந்ததமயந்தியினிடஞ்செல்ல மனுஷனுமல்ல அல்லதுதேவனுமல்ல பட்சியாச்சுதே உன் வார்த்தையை யெப்படிக்கு நம்புவேன் (அன்-

வ-ம்.) அரசே யென்னை இந்த நாட்டுபட்சிகளைப்போல் என்னைப்போகாது நானோ தெய்வலோகப்பட்சி யெனக்கோதிரிகாலமுந்தெரியும் என்மொழிபிசகாது நம்பும் இப்போதே நான் அவளிடஞ்சென்று காரியங் கைகூடுமார்க்கம் ஏற்படுத்துகிறேன் அன்றியும் அவளுடைய அழகிற்கேற்றநாயகனீரோ உமது குணாதிசயங்களுக்குத்தகுந்த நாயகி தமயந்தியேயின்றி வேறில்லை நான் விதர்ப்பதேசம்போக விடைதாரும்வேந்தே! (நள-வ-ம்.) அம்சமே! நீ முக்காலமுமறிந்ததோடு பூலோகத்திலுள்ள சகலவற்றையுமறிந்த தெய்வலோகப் பட்சியானதால் நீ தயவுசெய்து அந்த தமயந்தியினுடைய ரூபலாவண்ணியம் எப்படிக்கொத்ததோ நான் கேட்டுக்களிப்புறச் சற்றேயெடுத்தோதி என்வியசனத்தை யொருவாறுநீக்கி விடைபெற்றுச்செல்லுவாய்விவேகமுள்ள விண்ணுலகில் வாழாநின்ற அன்னராஜனே (அன்-வ-ம்.) அப்படியா ஆனாற்கேளும் சுருக்கமாயெடுத்துரைக்கின்றேன் காலவிளம்பஞ் செய்யப்போகாது நான் விதர்ப்பதேசமடைந்து தமயந்திக்கு உம்முடையகாரியங்களை யெடுத்தோதி அப்பாலென்னிருப்பிடஞ்சென் றிரையெடுக்கவேண்டும் (நள-வ-ம்.) அவ்வாறே சொல்வாயன்னமே.

---

அன்னம் - தரு - சங்கராபரணம் - திருபுடை.

அந்தத்தமயந்தியின் அழகையெடுத்து-ஓத
ஆயிரம்நாக்கள்வேண்டுமே - ஓ அரசே! (அந்த)
சிந்தைசெய்திட்டமேகம் நீண்டகுழலழகி
நெத்தியோகார்த்திகை திங்கள்மூன்றாம்பிறையழகி. (அந்த)
ஆற்றிலாடுங்கெண்டைக்கொப்பாயமைந்தவிருநேத்திரமும்
அனங்கன்வில்லோவெனமதிக்கு மழகுள்ளதாமிருபுருவமும்
சாற்றிடுவென்குமிழம்பூவைச் சரசஞ்செய்யாநாசிவட்டம்
சரிவார்காதைகிளிமொழி சங்கையொத்தகழுத்தினுடையாள்.
முத்தின்சரமோதந்தபற்கள் மொழிவெளிதழ்கோவைக்கனி.
முகத்தின்காந்திபூரணமதி முழுநாட்களோ அலைவயினி [பின்
சக்தியுமைபோற்பொறுமைமனசைவத்திற் கழலேயவருடைதாப
சாரும்பயிந்தங்காய்விரல்கள் சதகைகோபசம்பாதங்களுமசைப
[புள். (அந்த)



ணைகலந்தநடையன்னாட வாகண்டுமயங்குந்தக்கதொடைமைகள்
காமிதன்னிடைப்போமின்னற் கனகநிறமேனிவர்ணிக்க இடைகள்
மனமுருகுஞ்செவியன்னைக்காமமன்னவனே காந்தப்பூலாம்
பசிநேரைகையோபெருப்புத்தாளை மதனரதிகண்டாலயங்கவிவா
[ம். (அந்த)

(நள-வ-ம்.) ஆ! ஆ! அப்படியா! இவ்விதரூபத்தைப்போன்ற கன்னிகாரத்தினத்தைக் கையேற்று அனுபவிக்கத் தக்கவரந்த நன்றிமுப்பில்லாத ஜென்மினைவிருத்திர்களேயன்றி நாமல்ல, ஆயினும் இந்த தெய்வலோகப்பட்சியின் உறுதிமொழியினாலும், நமக்குக்கிட்டப்போகின்ற நம்பிக்கையை விருத்திக்கச்செய்வதனால் "ருணானுபந்த ரூபேணும் பசுபத்னி சுதாலயா,, வென்பதுபோல, நாம் தமயந்தியைச் சேர்ந்துவாழ்க முன்ஜென்மத்திற் செய்திருந்த பலனிருந்தாலிப்போது கைகூடுவதற்கு ஏதொருங்குறையுமில்லை எதுக்குங்காலதாமதஞ்செய்யாமல் அன்னத்திற்குப்போகவிடைதருவதேவிவேகமாகும் ஓ! ராஜ அம்சமே எனக்காய் நீ இப்போதுசெய்யத்துணியுமுதவிக்கு நான் மாறுசெய்யமார்க்க மறியாதவனாயிருப்பது, நீ உணர்ந்ததேயின்றி வேறில்லை, நான் கொண்டஆசைக்கு அந்தியமத மயந்தியைக்கூடுவது, அல்லது ஏன்கூட்டிலிருக்கும் ஆவியைப் போக்குவது இன்றி வேறில்லை, அவ்விதத்துக்கேற்படாமல் அங்குனக்கு அபயமறுமொழியை அடியேன்பேரில்கிருபைகூர்ந்தோதியபின் உன்னிருப்பிடம்போகும்படிப்பிரார்த்திக்கின்றேன் அம்சராஜனே; (அன்-வ-ம்.) அப்படியே நீனி இந்த விசாரத்தைநீக்கி, தேசவிசாரணையிலமைவதனாட்டு தமயந்தியை உமது சொந்தமனையாட்டி யெனக் கொண்டிரும் நானின் முயற்சிகாரியமு முடியாதிருப்பதாமுண்டோ வேந்தே, நான் போய்வருகின்றேன்; (நள-வ-ம்.) என்மீதபூர்வகடாக்ஷமிருக்கவேண்டுமாக்கும்; (அன்-வ-ம்.) அதற்கொருதடையோ?; (தம-வி-ம்.) அடியம்மாதோழி! அந்த யாத்திரை வேதியப்பெண்கள் என்னிடம்வந்து, அந்த நிடதபூபதியின் பெருமையை யெடுத்தோதக் கேட்ட என்மனமானது; அன்றுமுதற்கொண்டு என்றுமறியா

தமன்மகு வேந்தர்க்குள்ளாகலானதே, அந்த நளமகாராஜனை,
நான், மணந்த விவ்வுலகி லின்னுஞ் சிலநாள்காலம் வாழவிடமா
கும், இல்லாவிடில் எமனைக்குறித்துத் தவமியற்றிச் சீக்கிரத்தி
லவனுட்டுக் குடியேறத்தக்க முயற்சிசெய்வதே என்னுடைய
முக்கியகடமையன்றி வேறில்லை, அடிமாதே ; (தோ-வ-ம்.) அம்
மணி, தாங்களின்னங்கொஞ்சகாலம்பொறுமையைக்கைக்கொள
ள்வேண்டியது, இப்போதாகத முயற்சியால் அத்தளம்பெருமா
னெப்படியுமுங்களுடைய மனக்குறையைத் தவனின்நிலைகத
வரவிடானம்மணி ; (அன்-வ-ம்) இதோ நாம் விதர்ப்பதேசம்
வந்தோம், இனி தமயந்திவாழும் கன்னியாமடத்தை நாடிச்செ
ன்று, அவள்கரத்தில் வலியவமைந்து, வந்தகாரணத்தை விளம்
புவோம்இதுவேசரி ; (தம-வ-ம்.) அம்மாபாங்கி ! அதோபார்த்
தையா ! கமது முற்றத்தில்வேடிக்கையார்த்தமாயமைத்திருக்கும்
பூச்செடிகளின் மத்தியில்அன்னப்புள்ளுகள்வந்து இறங்கியது,
நீமெத்தெனஅப்பாரிசமாகவருவாய், நானிப்பாரிசமாயவைகளி
விடமடைந்து, பறந்துபோகாமுன் னதில், ஒன்றைப்பிடித்து
க்கொண்டா விதைபார்த்தாவது என்மனதை, ஒருவாறுத்
தேற்றுவேன் ; (பா-வ-ம்.) நல்லது அம்மணி, (தம-வ-ம்.) ஆ !
ஆ ! இதோ நான், ஒன்றைப்பிடித்துக்கொண்டேன் இதின்மே
னியெல்லாம் வியர்வைகொண்டிருக்கின்றது ஓ ! அன்னமே !
உனக்கும் இவ்வளவு துரிதமான காரியங்களுண்டா ? (அன்-வ-
ம்.) மாதே தமயந்தி ! நால்வகையோனி எழுவகைத்தோற்றமா
யுதித்த பிராணிகளில் எதுவாயிருந்தாலும், ஒருவருக்குபகா
ரியா யிருப்பதல்லோ, முக்கியகடமையென நூலோதுவதும்
நீயுணர்ந்தது மவ்வாறே உனக்கு நான்,கண்டபுண்ணியபுரு
ஷனை இன்றுனெனக்கு அறிவிக்கவந்தேன், கேளாய், நிடததே
சத்தை யாளாகின்ற நளமகாராஜன் அதிவல்லவன், அதிநல்ல
வன், அதியழகன், அதிதர்மி, அதிநயாளி, அதிஜீவகாருண்யன்,
அதியுத்தமன், அதிசத்தியன், அதிசேமி, அதிகுணவந்தன், அதி
தனவந்தன், அவனைப்போன்றவன் இப்பூமியின்கண் வேறொரு
ருவில்லை, ஆதலாலவனையே நீ மணம்புரிந்து சுகிக்கத்தக்க பிர



யத்தினம் உன்தந்தைமூலமாய்ச் செய்வதில் நீ அசட்டைசெய்
யப்போகாதென உனக்குக் ஞாபகப்படுத்திப்போக நானிங்கு
வந்ததேயன்றி வேறல்ல, எனக்கு பூலோகத்தில் என்னவேலை
யுண்டு, நானோ தெய்வலோகத்தில் வசிக்கும் பட்சி. நீ பூண்டிரு
க்கும், அந்தந்திரக்கும் அறிவுக்குத்தக்க புருடன் நளராஜனி
ன்றி வேறுண்டா, இல்லவேயில்லை நான் ஏதுமவனிடம்பரி
சுபெற்று வந்ததுமில்லை அல்லது உன்னிடத்திற்பெறக்கருதுவ
துமில்லை அப்படிக்கு நீ யவனைவரிக்காமல் மற்றவனைமாலையி
ட்டாலும் காட்டிலெரித்த நிலாப்போலும் கடலிற்பெய்தம
ழைபோலும், ஆற்றிற்கரைத்த புளிபோலும், ஆனைவிழுங்கி
யவிளாப்போலும்,உன்னுடையகாந்தியுங் கல்வியுங்கற்புமழகு
மப்போதுமே இன்றிப்பிரகாசத்தை விளைவிக்காது இது உண்
மை, நீ உன்கருத்தை எனக்குவெளியிட்டால், என்றுந்தகுதிய
பிரயாசை எடுத்துக்கொண்டு உன்னை என்னுடம்பிறப்பாகமதி
த்து இப்போதே அந்த நளபூபதிக்கு உன்மீது ஆசையுறச்செய்
து சீக்கிரத்திலுன்னைக் கலியாணஞ்செய்துகொள்ளச் செய்கி
ன்றேன், அன்றியுமவனோ நாளதுவரையில், ஒரு பெண்ணையுங்
கண்ணெடுத்துப் பாராத காவலன் ; (தம-வ-ம்.) ஆ ! என்து
ணையே ! முன்னமே பிராமணப்பெண்கள் அவனுடைய ரூபத்
தையுங் குணங்களையுமெடுத்தோதக்கேட்ட முதலாய்நானே ஏக்
கங்கொண்டிருப்பது போதாமல், இன்று தெய்வலோக அன்ன
மும், உமது பெருமையைச்செப்பக்கேட்ட என்மனமெப்படிக்
குதுகலிப்பை யடைந்திருக்கும் இச்சமயங்களைக் கைக்கொண்டு
என்னை வருத்தெடுக்கவன்றோ மாயன்மகன் எதிரில் மறைந்து
காத்துக்கொண்டிருக்கின்றான் ; (அன்-வ-ம்.) அம்மா தமயந்தீ,
நீ மனங்கலங்கப்போகாது, உன்கருத்தை எனக்கு வெளியிட்டு
காரிய சித்திசெய்துகொள்ளுவாய் ; (தம-வ-ம்.) ஓ ! அன்ன
மே ! நீ என்னை உடன்பிறப்பாய்க்கொண்டபடியே, நான்வெ
றுவெளியிடத்தக்கதுமுண்டோ அந்த நளமகாராஜனை நான்
மாலையிடவேயன்றி, மற்றவனை என் மக்ளாக எண்ணியிரு
க்கின்றேன், அப்படிக்கு நீ என்னும் தெய்வாட்டாட்சத்திற

ல்முடியாவிடில் இந்த உடலை அக்கினிக்கு ஆகுதிசெய்துவிடு வேன், இது சத்தியம் அவருக்கும் என நீ செப்பியதால், அவ ரை சீக்கிரம் பிரயாண சித்தமாயிருக்கச்செய்வாய், அப்படிக்கு ச்செய்யாவிடில், நான் அவர்மீதுகொண்டிருக்குங் காமத்தீயால் எறிக்கப்படுவேன் காமத்தீயைப்பொறுக்க எவராலாகும்.

---

தமயந்தி - விருத்தம்.

நெஞ்செனும்நெருப்பையிட்டு நெட்டுயிர்க்காற்றூதி
முன்செய்தவினையால்மூண்டு மூளைத்தவக்கனலேதாவி
பஞ்செனுமாக்கைமீதிற் பரந்தெழுந் துயிரைவாட்டுஞ்
சஞ்சலக்காமத்தீயைச் சகிப்பதுங்கடினமானே.

(தம-வ-ம்) ஆதலால், எனக்கொருவருந் திக்கில்லை, சகாயமில்லை, தாதருமில்லை, துணைவருமில்லை, நீயேசென்றுஎன் எண்ணத்தை அவருடன்விரித்தோதிகாரியசித்திசெய்வாய்அன்னமே, இவ்வுப காரத்தை என்றுமியுள்ளமட்டு மறவேன்மறவேன் நீ சீக்கிரஞ் செல்லுவாய் அன்னமே; (அன்-வ-ம்.) அப்படியே நான்செல் கின்றேன் நீ உன்கவலை ஒழிவுண்டாக்கலைப்போக்கச்செய் வாய்; (த-வ-ம்.) அப்படியே அம்சமே; (நள-வ-ம்.) நம்மிடம் விடைபெற்றுச்சென்ற அன்னம், தமயந்தியி னிடஞ்சென்று, நமது கருத்தை வெளியிட்டிருக்குமா அல்லது நமது கைப்ப ட்டதை விடுவிக்க அவ்வாறுபேசி தனதிருப்பிடம்போய்விட்ட தா! ஒன்றுந்தெரியவில்லை, அது முக்காலங்களையு முணர்ந்த தெய்வலோகப்புள்ளானதால், பொய்பேசியிராது. எதற்குமின் னுஞ் சற்றுவிசாரித்து, அப்பால் யோசிப்போம்; (அன்-வ-ம்) ஓ! நளமகாராஜனே! ஜெயம், நான்தமயந்திக்கு உமது, பெரு மையை பயன்படும்படிக்கு நயம்படவுரைத்தேன் அவளும் உம் மையே மணம்புரிவதின்றி வேறில்லை மற்றவர்கள் தான்பெ ற்ற மக்களை உண்மையாக எனக்கெடுத்துரைத்து நீர்வந்து அவளை வரிக்காவிட்டால் நானிறப்பதன்றி வேறில்லை என் றும் தனக்கு சுயம்வரம் என சீக்கிரத்தில் மணவோலை தந்த தையாற் போக்குவதாயு முடக்குவிக்கச்சொன்னவா றுமக்கு ரைத்தேன் விரைவிற் பிரயாண சித்தமாயிருக்கவேண்டியது நான்



தெய்வலோகம் போகிறேன் சக்கிரவர்த்தியே; (நள-வ-ம்.) அடிபாங்கிஇப்போக்கொற்ற பருவகாலம்எனக்குவந்ததால் என் னபலனடி நாயகனில்லாதங்கையாசுகாணி இருப்பதேயன்றோ.

---

தமயந்தி - தரு - செஞ்சுருட்டி-சாப்பு.

சகிகளே நான் எதுசெய்வேன்
சகிக்கலாகேன் காமன்வேதை (சகி)

அகிலபுவனத் துன்னோர்களும்
ஆட்டிவைக்க போட்டிவன்செய். (சகி)

தென்றலது சமயமென்றுத்
தேடியேன்மேல் வீசநின்று
கன்றெனும்வாடை வேண்டேனினி
நாடிக்கொண்டு போடி தூரம். (சகி)

சந்தபுஷ்பம் கருதேன்மேனி
கனலாயெரியுதேகிதானி
இந்தவிதம் பொறுக்கலாகா
எக்காலுந்து சோகமிறதுர. (சகி)

அன்னரசமருந்தலேனே
ஆடையணியணியலேனே
மன்னானன்தன்னைக்கண்டால்
மாறும்வேதைத்தெருநகோதே. (சகி)

(தோ-வ-ம்.) அம்மா! தாங்கள் நிபுத்தியும் பொறுமையும் விவேகமு கல்வியு முணர்ந்தவர்களாயிருந்தும் இப்படிக்குத்தி யங்குதலழகன்றே இதை எவராகிலும் மறியவர்களாயின் ஒருவி தவித்தை வார்த்தைகளாட இடந்தருமின்றி வேறல்ல நாமொ ருவரது நம்முடைய எண்ணத்தைப்போல் முடிபுமாகில் தெய்வ ச்செயல் எனப் பேசிவருமொழியானது தேசத்தில் வழங்காத ன்றோ மானிடதேகிகள் தாங்கள் கருதிய எண்ணம் கைகூடுத க்க முயற்சிகள் என்றால் மனதினாலும் வாக்கினாலும் கரங்களா லும் பாதங்களாலும் வணக்கத்தினாலும் வல்லவர்களினாலும் புரி ந்தாலது சித்தியாகுவதற்கு ஏழாவதிருமை எம்பெருமானு

ன்றோ இதைச்சற்றுமுணராமல் இவ்வாறு மனஞ்சென்றவாறு புத்தியைப் போக்கிப்புலம்புவது பொருத்தமானதன்றுதாயே; (தம-வ-ம்,) அடிபாங்கி எருதுக்கிருக்கும் நோய் காக்கைக்குத் தெரியுமா தோழி.

### தமயந்தி - ஜா - காபி - ஆதி.

மாரன்என்மேல்விடு மலர்க்கணைநோய்நீங்க
மருந்திருக்கிறதற்சொல்லடி-மாதே. (மார)

நேரமுமோடுது தென்பதும்வாடுது
பாரிவிவ்வியாதி பற்றினனிக்கிடமே
பரிகாரியில்லையோயடி-மாதே. (மார)

இத்துயர்நீக்கவே எட்டெலாம்நோக்கவே
பத்தியோர்முறைதான் பகரவுங்காணுதே
பரதவிக்குதேன் அடி-மாதே. (மார)

தேகமெழியுது தெளிவுங்குறையுது
வாகடநூற்களை வாசித்துப்பார்த்தொரு
வன்கமிருந்தாற்சொல்லடி-மாதே. (மார)

(தோ-வ-ம்.) அம்மணி தாங்களே இவ்வாறு பிரலாபித்தால் நான்செய்யத்தக்கதேது அரசனறிந்தால் என்னைஅன்றோகொண் டிப்பார் தாங்கள் சற்றுமனதைத் திடப்படுத்தினால் இதற்குத் தக்கமுயற்சி எதாகிலுஞ் செய்யக்கூடுந்தாயே தங்களை இப் போது வருத்தும்படியான காமநோயை புத்தியாலடக்கவேண் டியதாக்கும் தன்னைமிஞ்சிப்பாயுவ தேதொன்றுமில்லை தங்களை ப்போன்றவரை காமம்வருத்துமென்பது ஆச்சரியமே அரசி; (தம-வ-ம்.) அடி.

### விருத்தம்.

ஒடுங்கியொருகால்முடமாகி
ஒளியுமழுங்கிச்செவிபடங்கி
நடுங்கிவயிறுமேலொட்டி
நாமுலர்ந்துசுன்வணைந்து
பிடிக்கியுணவைப்பற்களின்றி
பெறுவாற்கூளயானகுக்கல்



படிந்துமையற்கொண்டுழலப்
பாவைக்கில்லாதிருக்குளதோ.

(தம-வ-ம்.) மாதே தோழி நான்சொல்வதைச் சற்றுகவனிப் பாய் நாஇராவில்பின்பாகத் தொருகால்முடமாகி கண்கள்வெ ள்ளலிபூத்து காதுகள் செவிடுபட்டு வாயகன்று ஒருவத்துவை கடித்துட்கொள்ளத்தக்க பல்லுக ளெல்லாமுதிர்ந்து உணவி ல்லாமையால் வயிறுமுதுகொடு ஒட்டிக் கூன்வளைந்து வாலுங் குழையரிநி தேய்ந்து மெலிந்துநடந்தோடவுஞ்சத்தியின்றியிரு க்கும் நாயுமல்லவோ அக்காமமெழுந்த காலைஇத்தியாதிகளையும் போக்கி மற்றொருநாயைத்துடர்ந்து ஓடச்சேனன்போன்ற எவ் வள நிலையுளோரை மதன் வருத்தானென்பதுஞ் சகிக்கக்கூடிய தென்பனவு முனக்குத்தகுதியா ! (பா-வ-ம்.) அம்மணி தா ங்களிப்போது கூறியதன்மையே ஆனல் தாங்கள் கட்டிக்காட் டியது அறிவில்லா விலங்கினமானதால் அவ்வாறு நடக்குமென் பதற்கு ஏதொரு சந்தேகமில்லை தாங்களோ அறிவிற்சிறந்தவர் களிவ்வித மனதைக் கலங்கவிடப்போகுமோ தாயே; (தம- வ-ம்.) என்னடிபாங்கி நீ சற்றுயோசனையின்றி ஆடுகின்றாய்.

### தமயந்தி - விருத்தம்.

வேதாந்தவித்தானபரமன்காம
வெறிகொண்டுதானலைந்தான்விந்துதன்னை
மாதானதாரையுமேல்விழுந்தனைந்தாள்
மதியுயர்ந்தவிந்திரனுமமையக்கேளாய்
குதர்கரிஷிமாதைத்தொடத்துணிந்தான்
சுப்பிரமணிகுறமாதைவணங்கினின்றான்
போதாதோமாயனலக்குமிதனக்கடங்கல்
பொல்லாதகாமநோய்பொறுக்கொணாதே.

(தம-வ-ம்.) சேடியே ! ஐந்தெழுத்தானியான பரமன் காம வெறியாற் காடுகொடெல்லா மலையவில்லையா தாரையானவள்கா மநோயாலல்லோ சந்திரனை வசமாக்கிச்சேர்ந்தாள் தேவேந்தி

ரனகவிகையநாக்குட்ட புகுந்தாஞ் மகாவிஷ்ணு மாலக்ஷ்மிக்கொ
ண்டின்றன் தொகப்பனைசாயியாகியவேலன்றனைக்குறத்திக்காகக
லீந்துணையாடிவணங்கிறேன் அப்பேர்த்தொற்பமகாறுபாவர்களை
எல்லாம் வீட்டிவருத்தியகாமபயினிஎன்னைவாட்டாதேனும்கா
ட்டமென்னுடி பாலகியே ; (பா-வ-ம்.) அம்மணி சற்றுநேரம்
தாங்கள் மனம்பொறுத்திருந்தால் தாங்களந்த மகாராஜன்மீது
கவனமிட்டிருக்கும் நிலையை வீமசேனமகாராஜருக்குத் தெரிய
ச்செப்பித் தங்களுக்கு சுயம்வரமென்றுபறைவிப்பதோடு
அந்தநிடதபூபதியைக்கட்டாயமாய் வரவழைத்தக்கமுயற்சியு
மெடுக்கச்செய்து தாங்களிப்போதுகோரியமன்னவனையே மண
ம்புரியச்செய்கின்றேன் ; (தம-வ-ம்.) அடியம்மா தோழி நீ
சொல்லிய வார்த்தைகளைக்கேட்ட என்மன மொருவாறுகுளி
ர்ந்தது நீ உரைத்த உறுதிமொழியை என்றுடலு முயிரும்
நம்பியது சீக்கிரஞ்சென்று காரியத்தை முடிவாக்கிக்கொண்டுவ
ருவாய் நானிதோ ஏக்கத்தைப்போக்கி ஏகாந்தமாய் நீ வருமள
வுமிருக்கின்றேன்; (தோழி-வ(ம்.)இதோ போகின்றேன்தாயே.

## வீமசேனமகாராஜன் கொலு.

(தோழி-வ-ம்.) போற்றி போற்றி மகாராஜனே ; (வீம-வ-ம்)
அம்மா தோழி ; நீ இன்று இவ்வேளையில் இத்தனைவிரித
மாய் நடந்து முகவாட்டத்துடன் மௌனமாக்குங் குருநீசொரி
யவந்தகாரணத்தை இப்போ வெளியிடாமல் எனக்குப்போற்றி
செய்ததென்னமோ ; (தோ-வ-ம்.) அரசே தாங்கள் என்வசம்
ஒப்பித்த தமயந்திதேவியாரை இதுவரையில் யாதொருகுறை
யில்லாமல் பாதுகாத்துவந்தேன் இனி யவளைக்காக்க என்றனுடல்
இன்னமிதாராதுமுடியாது ; (வீம-வ-ம்,) அப்படியா அதுவெ
ன்னகாரணம் வெளியாக்குவாயா ; (தோழி-வ-ம்.) தேவேசில
அன்னங்கள், தெய்வலோகத்திலிருந்து அந்தரமார்க்கமாய் வந
திறங்கியது, அவைகளைக்கண்டு களிப்புற்று கன்னியும்பாய்ந்
தாபிடிக்க அதில் ஒரு ராஜஅம்சம், அம்மையின்கைசிக்கி, நிடத



தேசத்தையாளாகின்ற நளமகாராஜருடைய அழகையும், அவ
ருடைய நற்குணங்களையு மெடுத்தோதக்கேட்டவள், தானவ
ரையே மணம்புரிவேனின்றி மற்றமன்னர்கள் எல்லாம் தனக்
கு நன்ற மைந்தருக்கொப்பானவர்கள் என உறுதிசெய்தி அவ்வ
ன்னத்தை அவரிடந் தன்கருத்தைப்போ யுரைக்கவேண்டி வி
டைகொடுத்துத்தானதிகாமியாகி, உண்ணாள், உடுத்தாள், உரை
யாடாள், அழைத்தால் உத்தரமொழிகளாகிலுந் ஒருவருக்கு
வைக்கேட்க அதைக்கொடுத்தால் அதுவல்ல, வேறொன்றுமொ
ழிந்தாவெதுமாக இரவிலும் நித்திரையின்றி நளராஜா நளராஜா
வென்பதும் இனிப்பிராணத்தியாகஞ் செய்வேனென்றும் பிதற்
றுவதைக்கண்டு பயந்துசந்நிதானத்திலறிக்கைவிடவந்தேன்மகா
ராஜா ; (வீம - வ - ம்.) மந்திரி பாங்கிமகளை பன்னியதை
க்கேட்டையா அதற்கென்னயோசனை சடுதியில் எடுத்துரை
ப்பா யன்பனே. (மந் - வ - ம்.) வேந்தே அந்நளமகாராஜ
னே அதிநீதிவான், சத்தியவான், தர்மசொரூபி, சக்கிரவர்த்தி,
அவரை நீர் மருகனாயடையப் பூர்வஜென்மப் பலனிருக்கவே
ண்டும் அன்றியு மவர் கருத்தைத் தெரிந்துக்கொள்ளாமல் நாம்
சுயவரஞ் சாற்றவும்போகாது பொருத்துச்செய்யுங்காரியம் புக
ழுடன்முடியும் மகாராஜனே ; (வீம-வ-ம்.) ஆம் நீ சொல்வது
சரிதான், மாதே பாங்கி, நீசென்று என்மகளுக்குவேண்டியசந்
தோஷவார்த்தைகள்கூறி இன்னஞ்சிலநாள் அவளுக்குஅந்தக்கா
மநோயணு காமலறிவாவசேதிகளைப் போதித்துவருவாய் நா
னுமந்த நளமகாராஜருடைய மனோபாவத்தை மந்திரிமூலமாய
றிந்த பின் சுயவரம்சாட்டுகின்றேன் ; (தோழி-த-ம்) அரசே,
என்னாற்கூடிய பிரயத்தனங்கள் செய்தும் பயன்படாததைஉணர்
ந்தல்லோ இங்கோடிவரலாகினேன்.

## தோ. - விருத்தம்.

மூலத்தில்எழுமக்கினிபசியாமற்கினி
மூண்டெழுந்தசோபக்கினிசினாமக்கினி
சீலமுள்ளபாக்கியிர்வானவைக்கு
செப்புவேன்றுணவுபருந்திவால்

கலைகளாமதிறும்அவிக்கலாகுஞ்
கொடியதொருகாமத்தீயெதிர்த்தாலுஞ்
சாலவேயாழியினுள்ளமிழ்த்தினாலுஞ்
சாற்றுமவேண்டாங்காமலக்கிக்குந்தானே.

(தோழி-வ-ம்.) அரசே! மூலத்தில் எழுமக்கினியை மருந்தா லணைக்கலாம், பசியாலெழுந்தீயை, பாகஞ்செய்து உண்டியால் போக்கலாம், ஆத்மாரத்தால் எழுங்கோபாக்கினியை அறிவைக் கொடுக்கும் நீதிகளைப்போதித்து சாந்தமடைந்து அவிக்கலாம், காட்டத்தால் எழும்நெருப்பை தண்ணீரைக்கொண்டு அவிக்க லாம், தவத்தாலெழும் அக்கினியை வரத்தால்வாட்டலாம். அந் தவேகமில்லாத மன்மதன்செய்கையால் பருவகாலத்தி லெழுங் காமாக்கினிக்கு பயந்து பெருந்தகைமுடைய கடலில் அமிழ்த்தி னுலுங் கனமேறிய உடலைக்கடுமேயின்றிவிடாதுவேந்தே நான் தமயந்திக்கு சுயவரமெனப்பறைசாட்டலொழிந்து அவள்செவி களைக் கேட்கச்செய்யாவிடில் நானே அவள்பிராணம் சடத்தி லிருக்குமென நம்பேன் நீரும்நம்பப்போகாது தந்தையே; (விம-வ-ம்,) அப்படியா, நல்லது ஆவதாயின்யோகாட்டும்மந்திரி யென் மகளுக்குச்சுயவரமெனப்பறைசாட்டி (௫௬)தேசத்தரச ர்கட்கு மணவோலை அனுப்புவாய், அந்த நளமகாராஜன் அவ ளெயம்வந்து சேரத்தக்க முயற்சி எதுவோ அதனையுஞ்செய்வ துன்கடன் தேசா, அம்மா தோழி! நீ சென்று இங்குநடந்த தை என்மகளுக்குரைப்பாய்; (தோழி-வ-ம்.) மெத்த சந்தோஷ ம்சுவாமி, போற்றிஅம்மணி; (தம-வ-ம்.) பாங்கிநீ சென்றகாரி யத்தின் முடிவென்ன சீக்கிரமுரைசெய்வாய்; (தோழி-வ-ம். அம்மணி அரசன் தங்களுக்கு சுயவரமெனப் பறைசாட்டச்செ ய்ததுடன் (௫௬) தேசத்திற்கு மணவோலைபோக்க வாக்கினீய்பி ட்டார் தாங்கள்கோரும் நளமகாராஜனை எப்படியும் வரவழை க்குமுயற்சிசெய்ய மந்திரிக்குத்திரவுமிடக்கேட்டு ஆனந்தித்து யறிவிக்கவந்தேன் தாங்களினி வியாகூலத்தைவிட்டு கோரியக ளாவனைக் கூடச்செய்யும்படிக்கு கிருபாநிதியாகிய கோதண்ட தீக்ஷகனை மனதில் தியானஞ்செய்வீர் அம்மணி; (தம-வ-ம்.)



மெத்தசந்தோஷம் அப்படியே செய்கின்றேன் பாங்கி; (மந்-வ-ம்.) மகாராஜன் தன்னருந்தவமகளாகிய தமயந்தி அம்மாளுக்கு ச்சுயவரமென மணவோலை போக்கச்சொன்னார் அந்த நிடத தேசாதிபதியாகிய, நளமகாராஜனவசியம் வரத்தக்கமுயற்சியு ஞ்செய்யச்சொல்லினாரன்றோ, அதின் கெவ்வாறுசெய்வதோசற் றுயோசிப்போம், சரி, தோழி சொன்னதி லன்னத்தைநேசித் தமயந்திதேவி தன் எண்ணத்தை நளபூபதிக்கு உரைக்கும்படி வேண்டி விடையிற்றனென்றதால்வன்னமவ்வாறே புரிந்தி ருக்குமேயன்றி வேறியற்றியிராது அந்த நளபூபதியுந் தமயந்தி மீதாசைவைத்துக்கொண்டே இருக்கலாம், ஆனதால் நாமவருக்கு அ னுப்பு-மணவோலையினுடன் தமயந்தியம்மாளுடைய ரூபங்களை த்தீட்டிய ஓர் படத்தையு மவர்கண்ணோட்டத்திற்கா யனுப்பி லதைக்கண்டால் அவர்விரைவாய்வந்து தடையிராது அப்படி யே செய்வோம், அப்பா கட்டியனே சீக்கிரஞ்சென்று தூதர்க ளாயழைத்துவருவாய்; (தூத-வ-ம்.) போற்றி சுவாமிகளே; (மந்-வ-ம்.) அப்பா தூதர்களே நமதுமகாராஜாவின் புத்திரியா கிய தமயந்தி அம்மாளுக்கு சுயவரஞ்சாட்டி இருப்பதினால் வ கரித்த மணவோலைகளை (௫௬) தேசத்தரசர்களுக்குங் கொடுக் கவேண்டும் இந்தப்பட்டுச் சுருளையமைந்த ஓலையை நிடதபூப தியாகிய நளச்சக்கிரவர்த்திக்குக் கொடுத்து அவரிதைவாசித்த பின் நடந்தகாரியங்களை அறிந்து இங்குவந்து தெரிவிக்கவே ண்டியது இவ்வோலை, அப்பா தூதர் நீவிரனைவிர் கொண்டேக வேண்டியதாகும்; (தூத-வ-ம்.) நல்லது சுவாமி; (மந்-வ-ம்) போற்றி மகாராஜனே! தாங்களாக்கினை யிட்டவாறு தமயந்தி அம்மாளுக்கு சுயவரமென பறைசாட்டச் செய்ததுடன் (௫௬) தேசத்தரசர்களுக்கு மணவோலை போக்கினேன் நிலந்த, நிட தேசத்தை யாளாநின்ற, நளமகாராஜருக்கு அனுப்பிய மண வோலைக்குள், தமயந்திதேவியாரின் ரூபங்களைத்தீட்டிய ஓர்நிலை யபடத்தையும் அனுப்பினேன் வேந்தே! (விம-வ-ம்.) அப்படி யா சந்தோஷம், அவ்வாறே செப்பன்தேசத்தோருக்கு மறு ப்பினையா பாரா! (மந்-வ-ம்.) இல்லைபிரபோ; (விம-வ-ம்,) அது

என் ; (மந்-வ-ம்.) சிடகபூபதிக்கு மாத்திரந்தான் ; (வீம-வ-ம்) நீ அப்படிச்செய்ததேனே வெளியிடுவாய் ; (மந்-வ-ம்.) சுவாமி கன்னிகருதிய காதலனக்குக் கன்னிஉருவைக்காட்டும் ஒவியத்தைக் கையிலிட லவனைக் கவனிப்பாறனில், காமமுனைந்துக் கடிகிற்கன்னியைக் காணவருவன் எனக் கவனித்தனுப்பினதேயன்றி வேறில்லை வேந்தே ? (வீம-வ-ம்.) சந்தோஷம் சந்தோஷம் மந்திரி இனிக்கலியாணத்திற்காக வேண்டியவைகளை சித்தப்படுத்துவாயப்பா, (மந்-வ-ம்.) மகாபாக்கியம்.

---

## நளமகாராஜன் - கொலு.

(தூத-வ-ம்.) அப்பா கட்டியனே ? விதர்ப்பதேசத்திலிருந்து தூதர் நிலைவன் தங்களைநேரிற்காணவேண்டி வந்திருக்கிறானென உன்னரசராகிய நளசக்கிரவர்த்திக் கறிவிப்பாயா ; (கட்-வ-ம்.) அப்படியே, ஆண்டவனே பராக், வீமசேனராஜருடையதூதன் தங்களைக்காணவேண்டி வந்திருக்கின்றான் சுவாமி ; (நள-வ-ம்.) அப்படியா வரச்சொல்லுவாய், (தூத-வ-ம்.) போற்றி இத்திரிபுவனங்களுங் குறைவின்றி எந்தும்படியான நீதியுஞ் சத்தியமுஞ் சாந்தமுஞ், சவுந்திரியமுமுள்ள எங்களரசே, விதர்ப்பதேசத்தை பாலாநின்ற வீமராஜருடைய அருந்தவ அன்னப்பேடாகிய தமயந்தி தேவியாருக்குச் சுயம்வரமென மணவோலையும்படமுங்கொணர்ந்தேன், கைக்கொண்டு கவனிப்பீரென்றடியேனை; (நள-வ-ம்.) இப்படிக்கொடுப்பாயப்பா ஆ ! ஆ ! இவ்வுருவுள்ள கன்னி யாராயிருப்பள் தேவகன்னியா அல்ல அப்ஸரியா அல்ல நாககன்னியா, அதுவுமல்ல, தெய்வலோகஅன்னம் நமக்குரைத்தபாது இவள்தானோ என்னமோ இன்னங்குறிப்பாய்ப் பார்ப்போம். சரி,

---

## நளதர்பார் ரூபகம்.

ஒப்பினேன் - நான் - ஒப்பினேன்.

(நள-வ-ம்.) ஆ ! பார்த்தையா, அன்னந் தெய்வலோகப்பட்சியாயிருந்தும் இவள்ரூபத்தை ஒருவாறுய்ச் செப்பிப்போயிற்றே



இன்றித்தெளிவாய் விளக்காமற்போயிற்றல்லவா, இப்போதிப் படத்தைக்

கண்டபோதேபுளங்களைக்துவாடுதே
காமரதினைக்கருத்துமீராகுதே
கொண்டகினைவெங்கோகுலைக்குறுடுதே
கோதையென்றேயிதைக்கூடவுந்தேடுதே. (ஒப்பி)

(நள-வ-ம்.) இப்படத்தைநோக்கி எவ்வன்னம், நமக்செடுத்தோதிய பிரபாவங்களையும், அதற்குமுன், கன்னியாகுமரியாத்திரை வாசிகன்றிய உத்தமவேதியருரைத்த ரூபலாவண்யங்களையுவ்விட அதிகமாய்க்காட்டுகின்றதே, இதுவுமப்பிரம்மன் சிருஷ்டிதானா. இராது அந்தப்பரமசிவ னப்பார்வதியின் அகத்தையொடுக்க வமைத்திருக்கவேண்டும், அல்லவ்வ, அந்தரூபக்களஞ்சியமாகிய வைகுந்தன் இலக்ஷ்மிதன்னையே கருதும்பொருட்டு மூன்னைவிட்டு அதிகச்சுந்தரி பூலோகத்துண்டெனக்காட்டிப் பயமுறுத்தவேண்டியமைத்தான்போற் காட்டுகின்றது, சரி இதுவே சரி, அப்படியேயிருக்கும்.

கூந்தலினழகைக்கூரவும்போகுமோ
கொண்டலெண்டுபிதற்கொப்பிணையாகுமோ
சாந்தமுகவிம்பஞ்சந்திரனுக்கிகுமோ
சரசிகாசிக்குமிழுஞ்சாற்றிணையாகுமோ. (ஒப்பி)

(நள-வ-ம்.) ஆ ! என்நேத்திரங்களே உங்களாணவாடங்கஇம்மாதின்கூந்தலையும் முகாரவிந்தங்களையும், பாருங்கள் பாருங்கள், என் இப்பைகளை மூடிக்கொண்டீர்கள்சரிதான் இம்மாதிரத்தினத்தின்நேத்திரவடிவைக்கண்டுவெட்கினீர்களோ, சீசீ, அறிவிலாதவிழிகளே மூடிக்கொண்ட இரப்பைகளைத் திறந்துபிந்தக்.

கண்டத்தின்வடிவைக்காணுயிர்ங்களே
கவிஞரிணைச்சங்குங்காணுது அங்களே
அண்டத்தவர்களுமைவலாயெங்களே
அலையப்போராரெனவடக்கினனிங்களே. (ஒப்பி)

(நள-வ-ம்.) ஆ ! ஆ ! மனமே இப்பாது சிரோன்மணியினுடைய பயோதரங்களைக்கவனிப்பாய் ஒவிய னில்லாத உருவத்தை அமைத்திருப்பானோ இரானிரான், சீ வெறிமனமே அப்படிக்கவ னமைக்கி னரசனுடைய தெண்டனைக்காளாயிருப்பனே

அரசனவ்வுருப்படைப்பார்த்தறியாதவனுதலால் இதனெழுதினவ
ன் சேட்டையென்னென்றையோ, எழுதினபின் தமயந்தி இதைக்க
ண்ணுறும், இருந்திராளப்பக்கு. அப்பெதங்களிருப்பதையுண
ர்ந்தாலப்பிரேதே ஓர் ஒருகாலத்திலிது தன்பெருமைக்குத்
தாழ்வைத்தருமெனத் தடுத்திருப்பளேயன்றி வெளிவிட்டிடை
யிந்திரான் அதினுமவளோ அதிகவித்தியாவந்தியென்றும் விவேக
சக்தியென்றும் பலராயக்கேட்டிருக்கின்றேம் அதினும் அவள்
நம்மையேவரிக்கப் பூர்ணவெண்ணமுடையவளாயிருப்பதாயும்
அப்படிக்கவளைவிட விரப்பதே விரதமாயனிந்திருப்பதாயுந்,
தேவலோக அன்னந் தீட்டியிருப்பதாலும், நமக்குநேரின்பார்
வைக்கனுப்பியபடத்திலில்லைதனை எழுத ஒப்பவேலப்பா னாத
லால்மனமே சற்று உற்றுநோக்கி உளமுல்லாசங்கொள்ளுவாய்

ரசிதக்கிண்ணமோரத்தினமல்லியோ
ராசிநவமணிசேர்ந்தசிலையோ
விசிதமுமப்பில்லார் விரும்புந்தெளிமையோ
விரண்டுமதனுடைவினைந்ததன்மையோ. (ஒப்பி)

(நள-வ-ம்) இதைத்தீட்டிய சிற்பி யிக்கும்பர்களின்மத்தியே
தக்கபடிநெஞ்சைஅகண்டு காட்டாததேனே, இக்கவனுக்கிடம்
போதாதிருப்பதேயாகும், சீ பேய்மனமே என் அறிவினமாயா
லோசிக்கின்றாய், உத்தமநடைநெறி ஒழுங்குள்ள பதுமினிஜாதி
ப்பெண்களுக்கு தனங்கள்கூடியமைந்திருக்குமெனக் கொக்கோ
கநூற்கூறுவதை மறந்தாயா என்னிறாய் எழுதினவன்மீது நிந்
தைசொல்லுகின்றாய், அன்றியும், விதர்ப்பதேசத்தரசன் சிற்பத்
திற்சிறந்தவனெனக் கேள்விப்பட்டிருக்கிறோமன்றியு மவனிட
மிருப்பவர்கள் சுந்தவிலொன்றைக் கொடுத்தனுப்பினு லதைக்
கொண்டே ரூபமுழுமையுங்குறைவறத் தீட்டத்தக்க திரண்மையு
முள்ளவர்களெனச்சொல்லப்பட்டிருக்க நீ நினைப்பதெல்லாந் தீ
மையே ஆ! அங்குதோன்றுஞ்சாயலென்ன ஒருதிவ்யருபமு
ள்ள எவ்வனபுருடனுய்க்காட்டுகின்றது நம்மையே உற்றுநோ
க்குகின்றான் நீ யாரப்பா என்னையேபார்க்கின்றனை.



நருவிருக்கைப்போங்குதேமனமே
உருப்பிமலர்க்கணையூட்டுறான்முனமே
இருவிந்தோய்களேற்றியிக்கணமே
எங்கச்செய்வதுமேர்க்குமோ அன்னமே. (ஒப்பி)

(நள-வ-ம்.) அப்பப்பா அரி, அரி, சகிக்கக்கூடவில்லையேஐ
யாசாணுக்குப்பயங்கயாரியல்லவே இன்னுவாகனு என்னை என்
னளவேனுங்கருதாமல் விதர்ப்பதேசத்திலேயே குடியாயிருக்கு
மதன்னக்கூடா தமயந்தியிட மெதுவாகச்சென்று மிரட்டப்போ
காதா அவளிடஞ்செல்லவெட்கிஎன்னைபோன்றகுருபிமீதிற்கொ
டுமையான கடுங்கோபத்தைக்காட்டிக் கணையைப்பூட்டி கணைக்
காமல்தீட்டுவது? மேனியெல்லாம் அக்கினிவீசுதே, உஸ், ஆ!
தமயந்தி! (மந்-வ-ம்.) அப்பா தூதனே நீசென்று உந்தனரச
ருக்கு நளராஜாவந்தனஞ் சொன்னதா யறிவிப்பாய், அப்பாசே
னதிபதியே நமது வேந்தன் விதர்ப்பதேசம் போகப்போறார்
ஆதலால்வேண்டியசேனைகளைச் சித்தப்படுத்துவாய், அப்பாசா
ரதி, ரதத்தைச்சீக்கிரமமைப்பாய், அப்பாபிரதானியே அரசன்
காமருல்களைப்புண்டதைப்போக்கத்தக்கதாகு முயற்சி நாமெ
டுக்கச்செல்கின்றோ வீரிந்தத்தூதனுக்குத் தக்கவெகுமதிகளைக்
கொடுத்தனுப்புவீர் ஓ! அரசே! அரசே! சுவாமி! சுவாமி!
(நள-வ-ம்.) ஆ! தமயந்தியா வந்தவள்பார்ப்பேன், ஆவலைத்தீர்ப்
பேன், ஆவியைக்காப்பேன் யாரது, எவளையுங்காணேனே இ
ங்குற்றவளெங்கோடி யொளித்தாள் தேடுவேன் காணிற்கூடு
வேன் ஆனந்தக்கூத்தாடுவேன் காணேனே.

## நள - சிரு - ஆபி - ஆதி

உன்னைக்கூடா திருக்கேன் - அடி
உறக்கமேதடி ஓ! ஓ! சகியே. (உன்)

என்மனமையோ எங்குதே மானே
இன்னமுமோடியா யிருப்பதேன் தேனே. (உன்)

பார்த்திடப்படமே பாவையைத் தேடி
பற்றிடிலலோககம் பலித்திடுங் கூடி.

திரத்திடவாசையைத் தேடுவேன் ஒடி
தெய்வங்கூட்டிவைக்குமோ தெரிகிலேன் நாடி. (உன்)

(மங்-வ-ம்.) மகாராஜனே தமயந்திதேவியாருக்குச் சுயவர
மென் மணவோலைகொணர்ந்த தூதனுக்கு வேண்டியவெகுமதி
களைக் கொடுத்தனுப்பினேன் தாங்களினிக் காலதாமசஞ்செய்ய
ப்போகாது முகூர்த்தநாளருகாமையி லிருப்பதனாற் பலதேசத்
துமன்னர்களு மங்கிருப்பார்கள் தாங்களுங் காலத்திலங்குசேர
வேண்டியிருப்பதால் தக்கசேனைகளையும் ரதமுஞ்சித்தஞ்செய்
திருக்கின்றேன் இனிப்பிரயாணப்படவீர் வேந்தே, தமயந்தியம்
மாளையுந்தண்டு கடவுளருளாற் கைப்பற்றுவீர் நாதா ; (நள-வ-
ம்.) அப்படியே மந்திரி பிரயாணமங்களபேரிகையறைவிப்பாய்.

---

## வீமசேனமகாராஜன் - கொலு.

(தூத-வ-ம்.) போற்றி ஆண்டவனே ; (வீம-வ-ம்.) அப்பாநீ
எத்தேசத்திற் கோலைகொண்டேகினவன் : (தூத-வ-ம்.) நிடத
தேசத்திற்கரசே ; (வீ-வ-ம்.) அப்படியா நளமகாராஜனை சேரி
ற்கண்டையா ; (தூத-வ-ம்.) கண்டேன் ; (வீம-வ-ம்.) ஓலையை
யீந்தனையா; (தூத-வ-ம்) மணவோலை தேவியாருடைய பட மிர
ண்டையுங் கொடுத்துவிணங்கி நின்றேன்; (வீம-வ-ம்.) ஓலையை
வாசித் தவர்சொன்னமறுமொழியாதோ.

---

## தூதன் - விருத்தம்.

நானீந்தவோலைபெற்றநளேந்திரனையா
நாயகியின்னுவியத்தையுற்றுநோக்கி
தானிருந்தநிலைமறந்துமையல்மீறி
தமயந்திதமயந்தியெனப்புலம்பி
மானமின்றிச்சபையிலிவெட்டுவிளையுமி
மயக்கமாய்ச்சனித்தானவாசேயென்று
தென்மொழியாலமைச்சன்செப்பிலதிந்தான்
திரும்பிவேந்திவொர்தெரிவீர்போற்றி.



(தூத-வ-ம்.) சுவாமி! படத்தைப்பார்த்தவுடன் நளபூபதிகாமி
யைப்போல மனமுருகிவாடி நாணமோர்ப்பென்பவதையு மகற்
றி அக்கொலுச்சபையில் மூர்ச்சைக்கொண்டனர், பிரயாணத்தி
ற்காகவேண்டியவைகளை மந்திரி அமைத்துக்கொண்டிருந்தனர்
எனக்கு விடைகொடுத்து வேண்டியவெகுமதிகளையுமீந்து அனு
ப்பினர்வேந்தே ; (வீம-வ-ம்.) சரிதான் அப்பாமந்திரி மற்றதே
சத்திலிருந்துமேதாகிலுஞ் சமாச்சாரங்கள் வந்ததா ; (மந்-வ-ம்.)
அவ்விடங்களிலொன்றும்விசேடம்நடக்கவில்லை என ஓலைகொண்
டேகியதூதர்கள் சொல்லிப்போயினர் மகாராஜனே ; (வீம-வ-
ம்.) மந்திரி நளச்சக்கிரவர்த்தி வருவாரென்பதற் கிஞ்சித்தேனு
மையமில்லை, ஆதலாலவர்வந்து தங்கத்தக்கவிடுதியொன்றமைப்பி
பாய் ; (மந்-வ-ம்.) நல்லது தேவே ; (வீம-வ-ம்.) மந்திரி உன்
னுடைய அதிநுட்பமனயோசனைக்கு நான் என்னவெனச் சந்
தோஷங் கொள்ளப்போகிறேன், தமயந்திக்கு என்னைவிடப்பதி
மடங்கதிகமான தந்தை நீயேயாகும், எப்படியெனிலோ, அ
வளுக்குத்தக்க நாயகன் வந்து அவள்முன்தோற்றத்தகுந்தமு
யற்சி நீ அனுப்பியபடத்தினாலுண்டானதேயன்றிவேறில்லையித
ற்குமாறு நான் என்னசெய்யப்போகின்றேனேசா ; (மந்-வ-ம்.)
நானவ்வாறு செய்வது என்னுடைய முக்கியகடமையானதால
தற்காய் தாமதன் மேன்மைபாராட்டப்போகாது தந்தையே,
(தோ-வ-ம்.) போற்றி அய்யா ; (தம-வ-ம்.) நீ இன்று கொலு
முகஞ்சென்றவ னொன்றுமில்லாத சந்தோஷக்குறியோடுவந்த
காரியவிசேடமென்னவோ தெரியச்செய்வாயா ; (தோழி-வ-ம்)
தாயே விவாகவோலையோடு தங்கள் படத்தையுமந்திரி நளபூ
பதிக்குமாத்திரமனுப்ப, அவர் கண்ணுற்று காமமீறிப் பிதற்
றிச் சோர்ந்தாரெனத் தூதன்சொல்லக்கேட் டானந்தத்திலா
ழ்ந்தினே னுன்னுடன்புபலனடைந்தம்மணி ; (தம - வ - ம்)
அடிபாங்கி அமைச்சனை அவருக்குமாத்திரமென்னேவியத்தை
யனுப்பும்படிக்கறிவைக்கொடுத்தவனந்த ஆதிகேவிற்பள்ளிகொ
ண்டவனன்றி வேறில்லை அப்பக்தவத்சலன் பாதங்களுக்கிதோ
பலகோடிவந்தனமடி பாங்கியே ; (கட்-வ-ம்.) போற்றி ஆண்

டவா, இப்போதிங்கு வந்திருக்குமன்னர்களைப்பார்க்கிலு மதிக அடம்பரத்துடன் நளமகாராஜர்வருகின்றார் வேந்தே ; (வீம-வ-ம்.) அப்படியா, மந்திரி! நாம் எதிர்சென் றவரையழைக்கத்தக்க தன்றோ ; (மந்-வ-ம்.) அவசியஞ்செய்யத்தக்கதே, வாருங்கோ வே ; (வீம-வ-ம்.) வாரும் வாரும் நிடதபூபாலரே, தாங்களிங் குவர நாம் என்னபாக்கிய முன்ஜென்மத்திற்செய்திருந்தேனோ வறியேன் தங்களுக்காக வமைத்திருக்குஞ் சிம்மாசனத்தில் விஜயஞ் செய்யவேண்டுமே. மந்திரி இவர்களுக்குவேண்டிய விசாரிப்புக ளை அரட்டையின்றிநடத்துவாய் அதிவிரைவாய்ந்தமோசா ; (மந்-வ-ம்.) மகாபாக்கியம்.

(நாரதர்-வ-ம்.) விதர்ப்பதேசத்தரசனாகும் வீமசேனன் புத்திரியாகிய தமயந்திக்குச் சுயம்வரமென காஸ்மீரத் தரசனறி கேள்விப்பட்டோமன்றோ அந்த ரூபவதிக்குத்தக்க நாயகனே வன்வந்திருக்கின்றானோ வன்றியு மந்நாடெவ்வாறு அலங்கரிக் கப்பட்டிருக்கின்றதோ கண்ணுற்றுச்செல்லுவோம், ஆ! ஆ! இந்நாட்டுக்கு எதையிணையிடப்போகும் வைகுந்தவாசனுடை ய போகபூமியைவிட அதிகமாய்க் காட்டுகின்றது நல்லது இங் குவந்திருக்கு மன்னர்களிலெவ னவளுக்குத்தகுந்த நாயகனாயி ருக்கின்றானோ அதைபுந்தானு கவனிப்போம், அதோ அந்த தோட்டத்திலுலாவும் நளனே தக்கவன், மற்றெவருஞ்சரியான வரன்று தமயந்தியினுடைய வடிவோ தேவதாப்பெண்களினுங் காணப்போகாது மெத்தவும் புத்திசாலி அவளுடைய மனவுறு தியை நாம் சோதித்தறியவேண்டியது, எப்படியறிவது. இவள் பெருமையை இந்திரனுக்கோதி விரகமூட்டி யவனை இந்நள னையே அவளிடமனுப்பித் தன்னை மணக்கேட்பான் அப்போ திவளுறுதி வெளியாகும் சரி, அப்படியே செய்வோம்.

## தேவேந்திரன்-கொலு-தே-இ-கடவுள் துதி.

மாயவன்சேயையன் றுயரித்திட வெறித்தகன்றை
நேயர்க்காய்முப்புரத்தைநீறாய்ச்செய்தவன்றை
தாயதாயெல்லாப்பிறப்பை நீக்காக்குந்தன்ய அன்றை
நாயனேநமசிவாயாநாயனைக்காப்பாய்போற்றி.



(மந்-வ-ம்.) போற்றி போற்றி தேவர்கோவே ; (தே-வ-ம்.) மந்திரி யக்கினிராதிகள்முதலான வெல்லவருந் தங்கள் காரியங்க ளைச்சீராய் நடத்துகின்றார்களா? தேவர்களியாக்கைநருடைய தொ ந்திரைகளின்றிசு சுகமேயிருக்கின்றார்களா ; (மந்-வ-ம்.) அப்படியே வர்கோவே ; (தே-வ-ம்.) மந்திரி பூலோகத்தில் ஏதேனும் விசே டமுண்டா ; (மந்-வ-ம்.) சுவாமி! திரிலோகசஞ்சாரியாகிய நாரதபகவான் இன்னமிங்குவாராததனால், தங்கள் வினவுக்கு விடை இப்போதேகொடுக்கத்தடையானதற்குமன்னிக்கவேண் டியதாகுமே ; (தே-வ-ம்.) அப்படியா, அவர்வருகிறவரையில் நம து சபையோருவாறு மிருக்குமாதலால் அப்சரப்பெண்களை முறைப்படி இங்குத்தோன்றி ஆடல்பாடல்களை நடாத்தச்செய் வாயா, (மந்-வ-ம்.) மகாபாக்கியம் தேவே, அப்பா சபைகாவ லனே அப்சரப்பெண்களை முறைப்படி யழைத்துவருவாய், (ச-கா-வ-ம்.) அப்படியே, (ரம்-வ-ம்.) போற்றி இந் திராணிலோலா, (தே-வ-ம்.) மாதே இன்று உனதோர்முதல்மு றை, (ரம்-வ-ம்.) ஆம் நாதா, (தே-வ-ம்.) அப்படிக்கிருந்தவஸ்தா விருந்தும்இன்னோர்வரவிருந்தகாரணமேதுவோ, (ரம்-வ-ம்.) அரையே தங்களைக்கிணக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன் நாதா, (தே-வ-ம்.) அப்படியா மெத்தசந்தோஷம் தேடமாக மாயென் சடையின்கண் விற்றிராணின்றகவந்தாள் கனைஎல்லாப் பூலோகவாசிக ளிந்த அப்சரகளின்மோகத்தினாற்றிஇருப்பதா யறிவேகமாயாவேதகளுநாயனாதாரர்கேள்விப்பட்டோமல்ல ன்றோ இப்போதுவெளியானதா அப்படிக்குநாரதரைக்காணுடைய மேல்கத்திலாழ்ந்தினவுயிருக்கின் இவர்களென உத்திரவிற்காடக் கிஇருப்பார்களா இரார்களன்றோ, (ர-வ-ம்) அப்பா தேவே, (தே-வ-ம்) பெண்ணே இனி உன்முறையை முடித்தேருவாய், (ரம்-வ-ம்) நல்லது சுவாமி.

## இரா - ஜா - காபி - ரூபகம்.

அடியவன்ஆசை ஆற்றிடு கண்ணதுபுனிதுகுமே
ஆத்திபுனிதாகுமே அந்நாற்றின்வைதாருமே, (அ-ம)

அவளுவல்நிரகத்தவாள் அணைந்தபினமைஎத்துவான்
அணைந்தபின்னெத்துவான்வேறனம்மையர்மனைசுத்துவான்.()
சமயத்திற்குபலவாய் சரசியென்பான்மிகவாய்
சசரசியெனமிகவாய் மாதிகொள்வானேவெவாய் (அடி)
உள்ளன்பிலாதவளைகள்ளனெனநீகினை
கள்ளன்யெனகினைமெள்ளப்பணியோன்தனை. (அடி)
ஆடவர்மேலுமாசைஆகாதடியேநேசை
ஆகாதமிவேசைஅவனீயானடியோர்காசை. (அடி)
(தே-வ-ம்.) மகாசந்தோஷமாகே, (ஊர்-வ-ம்.) போற்றிநாதா
(தே-வ-ம்.) தடையேனோ ஊர்வசி.

---

## ஊர் - ஜா - காபி - ஆதி.

வாடுறேனே - வுன்னால் - வாடுறேனே.

தேடித்திரிந்துமனந் திகைத்துப்பாதவித்து. (வாடு)
பேதையென்றறிந்தும் பிடிவாதஞ்செய்வதும்
வேதைக்கிடமென விளங்காததைநினைந்தும். (வாடு)
அக்கினிபற்றினு லவிக்கலாகுமேநீரால்
அநங்கனிட்டதீயை அணைக்கப்போகுமோஎன்னால். (வாடு)
காமமுமீறவது சனைத்துடல்சோருது
தாமதம்போக்கடா தாவிடக்கோருது. (வாடு)
என்னுசினிப்பொறுக்க ஏலாதெனவறிந்து
மன்னுவலதுவேண்டா மாரன்வாட்டுரீனிந்து. (வாடு)
(இந்-வ-ம்.) இனியாருமையை முறையோ ; (மேனகை-வ-ம்.)
அடியாள்வந்தேன் ; (இந்-வ-ம்.) சீக்கிரமேனகா.

---

## மே - ஜா - கமாஸ் - ஆதி.

அழகுளதுரையேஎன்றுவிலைத்திராமல்
அடமதுசெய்குவ தடுக்குமோடா-என். (அழ)



நெடுநாளாக நேசித்தவாஞ்சையை
நீக்கப்போமோகனை தாக்குறான்பாரடா-என். (அழ)
காமத்தியாலே கரையுதென்மேனி
கவனமெங்கனுநாட்டி களிக்குறாய்என்னடா. (அழ)
உனையின்றிவே றொருவரைநானும்
உகந்தணைந்ததுண்டோ உரைசெய்யடா-என். (அழ)
நொடியோருகமாய் நோக்கிப்போக்குறேனிதோ
நோம்பதோமுன்னிட்ட திம்பதோதெரியேனடா. (அ)
(இந்-வ-ம்.) இன்றைக்கு கடைமுறை எவருதோமந்திரி, (ம-வ-ம்.) சுவாமி திலோர்த்தமையுடையதாண்டவா ; (தி-வ - ம்.) இதிகோ ஆரம்பஞ்செய்கின்றேன் சுவாமி.

---

## தில - ஜா - கமாஸ் - ஏகதாளம்.

வணங்கிநானின்றுமன வாட்டமென்னடாசாமி
கண்மொருஆண்டதாய்க் கழிக்கலாகுதே-பாவி. (வண)
திக்குநீயெனத் தேடிநான்வந்தும்
அக்கரையில்லாதசட்டையேனோடா
பக்குவக்காலையிற் பராமரிக்கையாமோ. (வண)
உன்னைநானின்றி யொருவரைக்கூட
வுளமதுநாடே னுண்மையிதே
என்னைநீவருத்துவ தெர்க்கா தெர்க்காது-பாவி. (வண)
அன்பதைக்காட்டி ஆசையைப்பூட்டி,
இன்பதையூட்டி எனைவசமாக்கியே
துன்பத்திலிருத்துவ தோஷஞ்சொன்னேண்டா-பாவி (வ)
(கட்டி-வ-ம்.) சுவாமி அதிகவேகமாய் நடந்து இதோ நாரத மகாமுனிவர்வருகின்றார் தேவே, (தே-வ-ம்.) அப்படியா ஏதோவிசேஷமிருப்பதாய்க் காட்டுகின்றது வாரும் வாரும் நாரதரே இதுநேரம்வரையில் தங்களைக்காணுமலென்மன மிருளடைந்திருப்பதை நீக்கச்சூரியன்போ லுதயமானீ ரேதாகிலும்

நான் கேட்கத்தக்க புதுமைகளிருக்கின், சீக்கிரஞ்சொல்லியிரும க்கிறேனெக்கனம், (நார-வ-ம்) நாஜின்று பூலோகத்திற்கண்ட தை என்னென்றெடுத்துரைப்பேன், விதர்ப்பதேசத்தரசன்மக ளாகிய தமயந்திக்கு சுயம்வரமெனக்கொள்விப்பட்டங்குற்றேனெ ம்மாதரத்தினத்தினழகைக்கண்டேன், கண்கள்படைத்தபயன் தவனுக்குத்தக்க நாயகனெவனோவென்ன வங்குற்றமன்னர்களை நோக்கிடவும் நிடதபூபதியாகிய நளன் தகுந்தவனென மதித்தே னவனோநான் கண்டமாத்திரத்திலம்மாயனென மயங்கி சற்றுலோ சித்தச் சதுர்ப்புயங்களில்லாமையா னரனென மதித்தே னம்மா திவுடையழகை வர்ணிக்க என்னொருநாவான்முடியா தவனிட த்தானங்குட்டத்திற் கிளையென் வித்தேவகன்னிகளி லெவ்வா யுஞ்சொல்லப்போகாதென்று விரோயோசித்துக் கொள்ளலாம் அப்படிக்கொத்தபெண்ணின் நீர் மணம்புரிவீராகில் லென்மனம்மகி ழச்சந்தோஷிப்பது அப்படி யினியுமகிஷ்டம் மென்னுடபாக்கியந்தே வே, (தே-வ-ம்.) அப்படியோ, நீர்சொல்வதைக்கேட்டே என்ம னஞ்சோர்வடையச்சே அந்தச்சுந்தரியை நேரிலெதிர்க்கிறு லென் னகதியாகுமோ தெரியேன் நானீர்போதேசென்று அவளைக் கைப்பற்றிவருகின்றே னீங்களும் என்கூடவாருங்கள் திக்குப்பா லகர்களே ஆ! ஆ! பார்த்தீர்களா நாரதர்சொன்னபுருடனவனே யாகவேண்டும் மிவன்காந்தி தேவர்கட்குமில்லை, இவன்வரிக்கக்க ருதிய தமயந்தியிருப்பதனை நாம் எப்படிக்குக்காண்பது அவ னிடம்விவளையே நாம் தூதுபோக்கி அங்குநடக்கும் காரணங்க ளையறிந் தப்பாலோசிப்போம், ஓ! நளமகாராஜாவே இப்படி வா ரும் (நள-வ-ம்.) ஆ! இன்று நாம்செய்தபுண்ணியமே புண்ணி யம் தேவேந்திரனையும் திக்குப்பாலகர்களையும் தெரிசிக்கலாயிற்று ப்போற்றி போற்றி அமரர்கோனே அடியேனையொருபொருட் டாய்வந்தருளி அநுக்கிரகித்ததை அருள்செய்யவேண்டுங் கரு ணையங்கடலே, (தே-வ-ம்.) ஐயா! இதையறிந்து [illegible] விரானி ன்ற இந்திராணி ஆதிசெல்வநகை புண்டமையால் னாவினை [illegible] இக்குற்றே நீர் திருவடிசெய்தீர் இவண்மென் னைப்பலிக்கும், (நள-வ-ம்.) தேவே அடியேனாலாகத்தக்ககாரி



ருந்தா லிந்தநொடியிற் புரியத்தடைசெய்வேனோ? புலையனென மதிப்பீர் சுவர்க்கபூபதி, (தே-வ-ம்) சந்தோஷம் நீ எனது பக் கல் தூதனாக அந்தத்தமயந்தியிடஞ்சென்று என்னைப்பாணிக்கி ரகணஞ் செய்துக்கொள்ளத்தக்க வேற்பாட்டுகளுடனேதிக் கா ரியசித்தியாக்கவேண்டியது என்னையாவது அல்லது எங்கள் நா ல்வரிலெவரையாவது ஒப்பச்செய்தாற்போதுமானதே நீர் வில் லேத்திய வீரத்தன்மையைக்காட்டி அங்குவார்த்தையாட்டப்போ கா, நளினநயமொழிகளாடவேண்டும், நீரோ சகலமுந்தெரிந்த வரானதால் நான் விசேடஞ்சொல்லலேனுமதுவாக்கைக்காப் பதுடன்நீர் மற்றவர்களுடையகண்களுக்குப்புல்ப்படாதிருக்க வுந்தமயந்திக்குமாத்திரந்தோன்றவுஞ்செய்வேன், இனிப்போவீ ர். (நள-வ-ம்.) அப்படியே இதுவும் நாமுன்செய்தவினையின்கூற் றேயாகும் எப்படிக்குச்சென்று அவளுடனிந்தவார்த்தையாடு வது என்னமதிப்பாள் போகத்தடைசெய்திலோ வாக்குப்பிசகிய தோஷத்திற்கிடமாகும், போயறிவதேஆண்மை, அக்காரியம் ந ம்மால்முடிந்தால் நமக்கதிகப்பெருமையுண்டு போகலாம் இது தான் தமயந்திஇருக்கு மந்தப்புரம் உட்செல்லுவோம், (தம-வ- ம்.) ஆ! இவராரிங்கு இடைவிலனவந்துகுதித்தவர் ஸ்ரீமந்நாரய ணரோ அடியாள் சீக்கிரந்திவ்ய ஆசனமவருக்களிப்பாய்அந்த ஆசனத்தி லெழுந்தருளி அடியாளைக்கருதிவந்த காரியத்தைவெ ளியிடவிர்தேவே, (நள-வ-ம்.) நானிடததேசத்தையாளாநின்ற,

---

### நளமகாராஜன் - விருத்தம்.

நளனென்றுயெனைச்சொலுவார்சேளாய்மாதே
நானிங்குவரக்கண்டுநளிரின்மிக்க
தனம்பெருத்தவிந்திரனுங்குபேரன்தர்மன்
தானறிவாய்வருணனுமெனைக்கருதிக்கோதே
இன்மையிலேயவளைநீவரிப்பாயென்று
என்னையிங்குதூதனுப்பவந்தேன்கண்ணே
புளபளப்பிலதிகரித்தோர்பதியின்மேலோர்
பாவையேயினங்கொஞ்சம்பகரக்கேளே,

(நள-வ-ம்.) என்பேர் நளன், உன்னைக்காதி இந்திரன், எமதர்மன், வருணன், குபேரன் இவர்கள் வந்திருக்கிறார்கள். இவர்களி லெவரை மணரவுனக்கிஷ்டமென வறியும்படிக்கென்னைத் தூதனுப்பினர் அவர்களோ தேவர்கள் மேலானபதிகளுடையவர் வின்னதுசொல்வேன் கேளாய்மாதே!

மானிடரில்தேவர்களால்மதிக்கப்பெற்றோய்!
மன்னவரின்மிகைகண்மணியேயமிழ்வாய்கேளாய்,
தேனமர்ந்தஅவர்லோகஞ்சிறக்கில்பிச்சர்,
தெரிகுவாய்மூப்புநரைவாராதயில்லை
தானமேதோகற்பதியார்த்மடந்தியுன்னைத்
தானின்றோர்புகழ்பெருகுந்தரணிமன்னர்
நான்சொலுவேனவர்களைக்கண்பார்வைக்காக
நாடிபலதற்றவங்கள்புரிவர்தாமே.

(நள-வ-ம். பெண்ணேதமயந்தி இதுவன்றிப் பூலோகத்துப் பெண்களைத் தேவர்கள்கருதியதில்லை, உன்புண்ணியமுமுன்னைப் பெற்றவர்களுடைய பூஜாபலத்தையுமென்னசொல்வே னன்றியுமவரை நீ சேர்ந்தா லுனக்கு மூப்பு, நரை, திரை, எமவாதையிராது அன்றியு மவர்கள்பராமுகம்பதிக்கின்ற இப்புவியிலொன்றுமில்லை அவர்களுடைக்கண்பார்வைக்காக பூலோகத்தி லென்னைப்போன்றவர்யெல்லா மருந்தவமியற்றுவார்கள் கேள்ப்பாய்

சொன்னகால்வரினீர்மொருவருக்கே
சூட்டிடுதல்மாலையின்றுசுந்தரமேபாரு
தன்னதுவராங்கற்பகமுங்காமதேனும்
நாயகமேபாரிசிந்திபத்மஞ்சங்கம்
வன்னமுச்சிச்சிரவமைராவதமுந்தேனே
வணங்கிநிற்குந்தேவவஞ்சிதோழியாக
உன்னருகேபணிபுரிவளுலகோர்க்கெல்லா
முடாகிதுக்கமுமாத்தேனேப்பே,

(நள-வ-ம்.) மாதே நான்கூறிய நால்வரிலொருவரை மணந்தால் உன்புண்ணியமேமேலன்றோ கற்பகவிருக்ஷம் காமதேனு பாரி



சாதம், சிந்தாமணி, பத்மநிதி, சங்கநிதி, உச்சைச்சிரவம் ஐராவத முதலானதன்றி, தேவநாட்டுப்பெண்களுனக்கேவல்புரிவர் அந்தரவாசிகள் தினந்தோறும் சிகூறுவர் பூலோகத்தரசனைவரிப்பையாகிற் சிலகாலஞ்சுகமும், சிலகாலந்துன்பமு மனுபவிக்கத் தக்கதேயின்றி சதாசவுக்கியங்கிட்டாது; என்மொழிக்கிரங்கி ஒப்புவாய் பெண்ணே; (தே-வ-ம்.) தேவர்களே! இவரைநிடுத்தமன் என்பதிற்சந்தேகமில்லை, தான்மணரக்கோரியமாதாயிருந்தும் வாக்குப்பிசகாமல் நம்மைக்குறித்துமெத்தவும்பேசினான் இனியம்மாதுசொல்லுமறுமொழியைஅறிவோம் நளன்சொன்னகருத்திற்கிணங்குவளென்பதிற் றடையில்லை, ஏனெனில் சிரமெடுத்தாலோசிக்கின்றனள்; (தம-வ-ம்.) ஓ! வைதருந்தவாசா நானுன்னை அனுதினம் பிரார்த்தித்த பலனிதற்கோ என்னைஇவ்வாறு துன்பத்திருத்துவதழகோ என்கோரிக்கையின்படிக் கிந்த நளமகாராஜனென்னைக் கைப்பிடியாராகிலுடனே அக்கினிப்பிரவேசமாகி உனதிடம்வருவேனிதுஉண்மை, இதுசத்தியம், கேளும் ராஜாவே நீர்சொன்னமொழிகள் எல்லாமென்செவிக்குள்ளனுழைய அச்சப்பட்டுமருகிலையே அஞ்சிநிற்பதறிந்தில்லோ அதேனெனில்.

---

தமயந்தி - விருத்தம்.

நல்லநெறியுளமாது ஒருவாதய்மை
நாயகனுய்மணரமனம் பூண்டபின்னர்
வல்லமையிற்பெருந்தவர்களெவரென்றாலும்
வாஞ்சையிடார்கிலேபிசகில் விழுந்தநக்கேனும்
அல்லலுடனருந்துயர்கள் சோகம் பாவம்
அனுகவ்வ்விகங்குறைந்துவந்திபோலச்
சொல்லவருநரகடைவள்[illegible]
சுந்தரமேஎனநானுந் கரும்புதனமே.

(தம-வ-ம்.) நாதா பூலோகத்திற்பிறந்த மாதர்களில் உத்தமநெறியை வகுத்தவரொருவரை மணம்புரியு[illegible]
[illegible]

கொடியதரித்திராயு மிருக்கின்ற மொப்பவ னதைமறந்து சிறுகுசிறப்பைக்கருதி மனசிலேமாறி வல்லமைதங்கிய மற்றவரைவரிக்கவென்னில்உடனே வறுமையும்,பாவமும், துக்கமுஞ், சோகமுஞ்சூழ்ந்து பேணிகொரந்து அழகுகுன்றி யருநரகிற்காளாகுவன் எனநூலோதுவதை நீர் இங்குகவனிக்கத்தக்கது நீரிதுவரையி லுரைத்தமொழிக ளென்னிலையைஉணர்ந்து, என்னருகனுக வஞ்சித் தங்களிடத்தே தத்தளித்துக்கொண்டிருக்கின்றது கள் இராஜாவே.

---

## நளமகாராஜன் - விருத்தம்.

மாநிலத்தின்மாதர்களைத் தேவர்கோரார்
மானேகேளிவர்வணங்கித் தவமியற்றி
தானினைத்தபடி முடிக்கத்தளருவார்கள்
தையலேகிட்டாதிலைக்காதென்றும்
ஞானியம்புமிந்திரனேதுட்டர்காரி
நவநிதிக்குமதிகாரி குபேரன் எமன்
நீசினைப்பாயதிவனுவோன்வருணன் பாவம்
நீக்கிடுவோன்மறுத்துரைத்தல்நீதியன்றே.

(நள-வ-ம்.) பெண்ணே பூலோகமாதர்கள் தங்களுக்குத்தேவர்களைவஞ்சகவேண்டுமென அருந்தவஞ்செய்வதறியாயோ, அப்படிக்கிச்செய்து மடைவதறிது உன்னைத்தேவர்களே வலியவிரும்பிவந்தும் நீ தடுத்தா லுன்னையிந்த உலகமெச்சாது தானுய்வருஞ் சிதேவியைக்காலாலுதைப்பது சகடரின்கொள்கை. நான் செப்பியவர்களில் தேவேந்திரனே துஷ்டநிக்கிரகன் சிஷ்டபரிபாலகன், சுதாபோகி, சவியாத்தியாகி, சற்குணவிவேகி! குபேரனே, நவநிதிகளிலுமுயர்ந்தவன், எமனே,தனக்குநிகரொருவருமில்லை எனத்தக்கவல்லவன், சத்தியன்,தருமசொரூபி வருணனே, சகலபாவங்களையும்போக்கும் புண்ணியவானிப்பேர்க்கொற்றவர்களை, மறுத்து என்னைபோன்ற, நரை, திரை, மூப்பு, நோய், வறுமை, சாக்காட்டிற்குடன்பட்டவனைக் கருதலுறகன்றுகவனித்துரையாடுவாய் கண்ணே ; (தம-வ-ம்.) அப்படியா.

---



## தமயந்தி - விருத்தம்.

பதிவிரதம்பூண்டவர்க்குநிருரைத்த
பலதேவரிடன்றுபகாரக்கேனும்
விதியறியாமாதரன்றேசிலைமறந்து
வேறுகொள்வரெனையிவ்வாறுதனித்துவந்து
அதியலவேசோதிக்கவெனக்கத்தேவர்
தந்தையொக்குமினியேனுந்தடுத்துரைத்தால்
மதிதளரேனுயிர்விடுவேனிந்ததோஷம்
மன்னவரேயுமைச்சாருமறிந்துசெல்வீர்.

(தம-வ-ம்.) அரசே, பதிவிரதம்பூண்டபெண்களுக்குத் தேவரொருபொருட்டா, நெறியிலாப்பெண்களல்லோ பிறரை நாடுவர்கள், நீரென்னைச் சோதிப்பதடாது, எனக்கு அத்தேவர்களெல்லாமின்றுதந்தையொக்கு மினிப்பன்னிப் பேசுவீராகி லிங்கனே என்பிராணனைப்போக்குவேன் அப்பழிபாவமும்மைச்சேருமென் றறிவீரென்பிராணநாதா ; (தே-வ-ம்.) இனி நாமிங்கிருக்கப்போகாது முன்னிருந்தவிடஞ்செல்வோம் நளன்பேரிற்குற்றமில்லை இவனே சத்தியன், அவளே உத்தமிவாருங்கள் ; (நள-வ-ம்,) ஆனால் போய்வருகின்றேன் மாதே ; (தம-வ-ம்.) உமது திருப்பாதங்களுக் கிதோநமஸ்காரந்தேவே ; (நள-வ-ம்) தேவர்களே நானெவ்வளவோ எடுத்தோதியுந் தமயந்தி ஒப்பேனென உயிரைப்போக்கத்துணியவெண்ணங்கொண்டாள்; (தே-வ-ம்.) ஆமாம் நளபூபதியே நீரே சத்தியவான், உமதுபேரிற்குற்றமில்லை நாங்கள்போகின்றோம்,வாழி வாழி சக்கிரவர்த்தியே, தேவர்களே நாமிந்த நளனைப்போல உருவெடுத்து மணவாசாலையில் நிற்போம் தமயந்தி யொருவேளை மயங்கி நமக்கு மாலேதிட்டிற் புண்ணியமே, இல்லாவிடில் வாழ்த்திச்செல்லுவோம்; (வீம-வ-ம்.) அப்பா மந்திரிஎன்மகளுடையமணத்திற்காக(ருசு) தேசத்தரசர்களும் வந்திருக்கின்றார்களா; (மந்-வ-ம்.)நேற்றையத்தினமேஎல்லோரும்வந்திருக்கின்றார்கள்வேந்தே; (வீம-வ-ம்.) அப்படியானால் தமயந்திஅம்மாளைமணக்கோலம்பூண்டுவரச்செய்குவாய், காலவிளம்பந் கண்டிக்கத்தக்கது ; (மந்-வ-ம்.) மகா

பாக்கியம் ஆண்டவனே, அம்மா தோழி! உன்தேவியாரைச்சிங்காரித்தழைத்துவருவாய்; (தோழி-வ-ம்.) நல்லது சுவாமி; (தம-வ-ம்.) போற்றி போற்றி என்னையீன்றபிதாவே இங்கழைப்பித்தகாரணமருள்செய்யவேண்டுந் தந்தையே.

### வீமராஜன் - விருத்தம்.

அன்னமேமானீன்றமானேதேனே
அமுர்தமொழிப்பசுங்கிளியேயாருங்கோருஞ்
சொன்னமேசந்தரமேசுயம்புமேனிச்
சோலைவளர்கன்மயிலேகுயிலேயானே
பன்னரியகற்கண்டேகனியேபாகே
பச்சிலையேநற்சுவையேயடிப்பின்மிக்க
என்மகளேயிம்மாலையேந்தியுந்தன்
இட்டமுளவருக்கணிவாயினிவாய்ந்தானே.

(வீம-வ-ம்.) மகளேஉனக்குச்சுயவரமெனநான்போக்கியமணமாலையைக் கைக்கொண்டமன்னர்களெல்லா மணவரைச்சாலேவந்திருப்பதா லிந்தமாலையை நீகையிலேந்திதோழி அவாளவாருடைய பெருமையைச் சொல்லக்கேட்டுனக்குச் சந்தோஷமானவருக் கிதையணிவாய் கண்மணியே; (தம-வ-ம்.) மகாபாக்கியம்என்பிதாவே ; (வீம-வ-ம்.) அப்பா மந்திரி நீ ஆயுதபாணியாகமுன்செல்லவேண்டியது, அப்பா மகனே. தமநர்பிநீயுஞ்சேனபதியுமிருவருஞ் சகல ஆயுதங்களுடன் எச்சரிக்கையியம்பி குபுரஞ் செல்லவேண்டியது, அம்மா பாங்கி, நீ அந்தந்தமன்னர்களின் பெருமையையெடுத்து என்மகளுக்குரைக்கவேண்டும், நானுமாயுதபாணியாய்ப் பின்பற்றிவருகின்றேன் ; (தோ-வ-ம்.) அப்படியே : (தோழி-வ-ம்.) அம்மணி தமயந்திதேவியே நான் சொல்வதை மனமுஞ் செவியுங்கொடுத்துக் கேட்கவேண்டும்.

### தோ - தரு - சாவேரி - ஆதி.

அம்மாஇங்குற்றவரசர்தன்பெருமையை
அரையுமோன்கேளன்னமே. (அம்)
பெம்மான்பிறைசூடிப்பித்தனருளால்வந்தப்
பேதையேசற்றுனைக்கோதையேகவனமாய். (அம்)



கோசலத்தாரிவர்குணவந்தரதிபுண்யர்
கூர்ச்சரத்தவரிவர்கோனுமனமுடையார்
நேசியேநேபாளர்நிஜவந்தர்நரபதி
திருபருத்தமர்கண்ணேநீடப்பாய்முன்னே. (அம்)
மகதத்தரசரிவர்மாளிசோழநாட்டின்
மகாராஜர்பத்திமான் மச்சரத்தவரிவர்
சகியனேயவந்தியர்சன்மார்க்கர்வங்காளர்
சாற்றுவேன்பலவந்தர்சார்ந்தினிஎன்பின்னே. (அம்)
நிடதபூபதியிவர்நிகரில்லாவலுவுளோர்
நீதிசீலபிசகாநெறிவந்தரறிவாளர்
இடம்பொருளுள்ளவரியம்பொருவழகுளோர்
இவரோநளராஜரென்னுவாயினிமானே. (அம்)

(தே-வ-ம்.) அன்பரே இதுதான்சமயம் நாம் நளனைப்போல உருவெடுத்து மற்றெவருக்குந்தோற்றமலுந்தமயந்திக்குத்தோற்றும்படியாய் அவனைச்சேர்ந்தாப்போல் நின்றுநமது அதிஷ்டபலனைப்பரிக்ஷிப்போம்; (மறு-தே-வ-ம்.) அப்படியே, (தம-வ-ம்.) இதென்னபுதுமை இந்த நளபூபதியைப்போலவே ஐந்துபேரிருக்கின்றார்கள், அப்படியுமுண்டாகம்மிடமிவரைநேற்றையதினந்தூதனுப்பியதேவர்களாயிருக்கவேண்டும், தேவர்மாய்கையைவெல்ல நம்மால்முடியாது, இதர்க்குத்தகுந்தயோசனை செய்யாவிடில் நமது எண்ணமுடியாது, போற்றிதேவர்களே தாங்களேயெனக்குத்தந்தைகள் நானே தங்களுக்குப்புத்திரி என்மனதைசோதிக்கத் தாங்களேமுயல்வது தர்ம்மமா இதோ உங்கள்திருப்பாதங்களுக்கு நமஸ்கரித்தேன் கனிவுகூர்ந்து அந்தநிடததேசமன்னராகிய, எனதிடக் தெய்வலோக அன்னப்புள்ளுகளை தூதேவியமகானுபாவராகிய நளச்சக்கிரவர்த்தியை எனக்குக்கணவராக்கி வாழ்த்திவரங்கொடுத் தாட்கொள்வீ ரடியருக்கிடர் நினைக்காத அமரரே, (தே-வ-ம்.) இனி நாமிங்கிருக்கப்போகா இவளைப்போன்ற பதிவிரதையைநாமெங்குங்காணப்போவதில்லை, இனியேதாகிலுங் கிருத்துவமென்னினும் சாபமேற்றிச் சஞ்சலப்ப

ட்வேண்டியது மேல்மனைவோம், (தம-வ-ம்.) அடியாங்கி இவர்தானுதான்கோரிய நளபூபதி, (தோழி-வ-ம்,) ஆமாம் அம்மணி (தம-வ-ம்.) சத்துசித்தானந்த சர்வஜீவதயாபரமூர்த்தியேஇதோ நான்சத்தியத்தை நிலைநாட்டி நளமகாராஜனுக்குமாலையிட்டினேன் என்னையு மென்பத்தாவையு மிகத்திலும் பரத்திலு மிணைபிரியாதிருக்க வருள்செய்வாய் நாதா.

---

## அரசர்கள் - தரு - கல்யாணி - ரூபகம்.

ஏதுக்கெனநாமகிழுவோம் அடிமானே- தேனே
எங்கியுனைத்தான்இகழுவோம்அடியழினே. (ஏது)
நீதிலாச்சந்திரபிம்பம்போன்ற திருமுகத்திற்கோ
தேசஜுக்கோசான்ற
தெளிவிற்கோ தந்தவொளிவிற்கோ நடைதெளிவிற்கோ
மேனிஅளியிற்கோ-இனி. (ஏது)
கார்த்திகைபிறைபோலநெத்தி
காணுமொயிலுக்கோதிலதந்தீந்தி
கண்ணின்வடிவிற்கோகயலைமாத்திக்
காட்டுவழலுக்கோகுமிழைநாத்தி
வீத்திடுபாதமம்ஸவடிவிற்கோ
விரல்காணும்மலர்மணவாடைக்கோ
வில்லுக்கோ கிள்ளைச்சொல்லுக்கோ வரிசைப்
பல்லுக்கோ-மனக்கல்லுக்கோ-இனி. (ஏது)
நூனிழைபுகவுமிடமியாத்தொக்கலாகா
உந்தன்பயோதரங்கட்கோ
நடிக்கத்தகாவரிதுயிலாவில்லியர்
நோக்குமுந்தனடிவயிற்றிற்கோ
ஒனியம்பலென்பிடிச்சிற்றிடைக்கோ
உழலுகும்கோவைகிறமோட்டுமிதழிற்கோ
ஓசைக்கோகளனுக்கோ செய்தபூசைக்கோ
எங்கள்-மீசைக்கோ-இனி. (ஏது)



(அர-வ-ம்.) நேசர்களே இனி நாமிங்கிருப்பதிற் பயனில்லை அதோபார்த்தீர்களா, நளன் தமயந்திவலக்கரத்தைப்பற்றி, நமக்கெதிரில் களையும் மானும்போல நடந்துவருகின்றான் அதையிங்கிருந்து பார்ப்பதைவிட நாமெழுந்தப்புரமகன்று நமது தேசங்களையடைவதே அதிமேன்மையெனக்காட்டுகின்றது, (வே-வ-ம்.) அப்படியே செய்வோம், (வீம-வ-ம்.) சுவாமி எங்கள்குலகுருவாகிய வதிஷ்டமூர்த்தியே இனி நடக்கவேண்டிய காரியங்களைத் தங்களிஷ்டப்படி நடத்துவீர் சுவாமி, (வதி-வ-ம்.) அப்படியே, (தே-வ-ம்.) அப்பா நளமகாராஜாவே நீ செய்யுமாகமங்கள்நிற்விக்கினமாய்நடக்கும், நீ தொடும்பதார்த்தம்தேவாமிர்தம்போல நளபாகமாகவேண்டும், வாழி, (கு-வ-ம்.) ராஜாவே உமக்கு நவநிதிகளும்பெருகவேண்டியது வாழி, (எ-வ-ம்.) ராஜாவே நீரெப்போரிலும் வெற்றிபெறக்கடவது வாழி, (வ-வ-ம்) ராஜாவே நீர்கோருமிடங் திவ்ய தீர்த்தங்க ளமையக்கடவதுவாழி, (நள-வ-ம்.) மகாபாக்கியந் தேவர்களே, (தே-வ-ம்.) அம்மா தமயந்தி நீயு முன்பத்தாவுமநனும்மாதிபோ லாடிப்பாடி சூரியச்சந்திரருள்ளவரையி லோங்கிநிற்கத்தக்ககீர்த்தியையடையக்கடவதுவாழி, (தம-வ-ம்.) மகாபாக்கியந் தங்கள்பாதங்களுக்கிதோ அடியாள் சிரசாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தேன் தந்தைகளே ? (சனி-வ-ம்,) ஆ ! ஆ ! இன்று விதர்ப்பதேசத் தரசன்மகளாகிய தமயந்திக்குச் சுயம்வரமெனக்கேட்டு அவளைமணரக்கருதி இந்திரனும், குபேரனும், எமனும், வருணனும், போயிருப்பதால் நாமும்போவோம் நம்மைவிட அவர்கள் சிறந்தவர்களா ? நாம் சென்று அந்தப்பெண்முன்தோன்றிச் சரசமொழிகளாடிக்கைப்பற்றுவோ மினிக்காலம்போக்கப்போகாது, (தே-வ-ம்.) தேவர்களே சனிபகவான்வருகிறவேகத்தைப்பார்த்தீர்களா! எங்கு போகின்றனரோ விசாரிப்போம், ஓ ! காரியே என்னஅவசரகாரியார்த்தமாய் நடக்கின்றீர்சுவாமி (சனி-வம்,) தேவர்கோனே நானின்று வார்த்தையாடத்தக்க காலவிளம்பமில்லை நானே தமயந்தியை வரிக்கப்போகின்றேன், (தே-வ-வம்.) வரிக்கப்போகின்

வீரா ! மன்னர்களிக்கப்பேர்கின்றீரா ! அவள்புனனுக்குமாலையிட்டினள் நாங்களுமதிகாவலாய்சசென்று முகமிறங்கி வரலாயினேம்; (சனிவ-ம்.) அப்படியா.

---

## சனிபகவான் - விருத்தம்.

அன்னளனேஅவள்சுகிக்கப்பார்ப்படனுதான்
அறிகுவிர்குரிசியோனறையக்கேளும்
மன்னவனைச்சூதாடச்செய்துமந்த
மாதினையுநான்பிரித்துமாரண்யத்தில்
உன்னியழச்செய்வதுடனளன்வலுவை
ஓட்டியேபணியாளாயுழலவைப்பேன்
பன்னியவாற்முடிக்காமல்தப்பிலென்னை.
பருதிமகனல்லவெனப்பகருவீரே.

(சனி-வ-ம்.) கேளுமிந்திரனே அந்தநளனைச்சூதாடச்செய்து தோர்வடையப்பண்ணிக் காட்டிலேயவிட்டுத் தமயந்தியைத்தனியாய்ப் புலம்பச்செய்து நளனுடைய அந்தத்தை அகற்றி ஒரு சிற்றரசனிடம் பணியாளாக்குவேனிதர்க்குப் பின்னிடிலென்னைச் சூரியன்பிள்ளையென் றென்றுமெண்ணுநீர்கள் தேவர்களே இதோ நானவனுடு செல்கின்றேன்.

---

## நளமகாராஜன் - விருத்தம்.

அன்னமேகிளியேமானே,ஆருயிர்கமுதேதேனே
நன்னெறிப்பெடேபூவேநாயகிசெப்பக்கேளாய்
இன்னகர்தனிலென்ஞ்ஞருமிருந்திடல்மயிலேநீதான்
உன்னகரடையக்கோருமுற்றநாளென்றுவோசொல்லே.

(நள-வ-ம்.) அடிபிராணநாயகி நீ என்னோடிந்தநாட்டிலேயே என்னோடாடிப்பாடிக்கொண்டு காலங்கழித்தால் உன்சொந்தநாடாகியகீடதேச மெப்போதுபோகநினைத்திருக்கின்றனையோ அதை இவெளியிடுவாயா நாயகி.

---



## தமயந்தி - விருத்தம்.

படிமிசைமாதரன்னைபக்கலைப்பிரியவென்றுங்
கடிமனம்படைக்கார்சதோகயவரின்கொள்கைநானே
முடிமிசைநீருறைத்தமொழியினுட்பத்தைஏற்றி
அடிபணிந்தின்றோர்வாழ்ந்தலடைந்துடன்வருவேனுநா.

(தம-வ-ம்.) பிராணநாதா அறிவில்லாதபெண்கள் தாய்மனை விட்டுதன்மனைபோகலேசில் ஒவ்வார், நானவர்களன்று, தாங்களிப்போதுரைத்த வார்த்தையின்சூக்ஷத்தை என்சிரசாலேகுத்தென்தாய்தந்தைய ரனுமதிபெற்று உடனேவருகின்றேன் பிராணநாதா.

---

## நளமகாராஜன் விருத்தம்.

காட்டினிற்றிருவோனுங்கைப்பொருளைக்காதோனு
மேட்டியாமறிவோர்தம்மை மிக்கவேகேசிக்காளும்
நாட்டினில்மங்கையாசை நவிலுவோன்கெடுநாள்மட்டும்
வேட்டகத்திருப்போனவர் விவேகமில்லாராம்றாலே.

(நள-வ-ம்.) அடிகண்ணே! நானிப்படிச்சொல்லத் துணிந்தேனெனவருந்தாதே, இருண்டகாட்டில் ஒன்றியாய்ச் சென்றவனும், வாலிபத்தில் பூமியிலொருபொருளை அடையாதவனுந்தன்மனையாளினுடைய மனோபீஷ்டத்தை ஐயமின்றி அன்னியம்குறைந்தவனும், நெடுநாள்தன் மாமிவீட்டிலிருந்தவனுமாகிய இவ்வைந்துபேரையும், அறிவீனர்களென்று நீதிநூலோதுவதைஇன்றுகவனித்துனக்குக்கியாபகப்படுத்தினேனிரத்தினமே; (தம-வ-ம்.) பிராணநாதா எனக்குஞ் சிலநாளாய் மனதிற்பட்டிருந்தபோதிலுந் தங்களுடையதிருவாக்கிற்கெதிர்பார்த்துக்கொண்டிருந்தவளேஇன்றி வேறில்லை,எனக்குவிடைதரிலென்தாய்தந்தையரைவணங்கிவருகின்றேன் சுவாமி; (நள-வ-ம்.) அப்படியேசெய்யடிக்கிளியே; (தம-வ-ம்.) போற்றியெனையருந்தவஞ்செய்துபெற்று அன்புபாராட்டி வளர்த்து, அடியாளின் கோரிக்கையின்ப

டி. விடதேசத்தரசருக்குத் தாரைவார்த்த தயாநிதியாகியதந்தையே, எனதுபிராணநாதரின்று தன்னாட்டை மனதிலினைந்தமையால் அடியாளவர்கருத்தின்படி தங்களைப்பிரிந்து அவருடன் பரிந்து விடதம்போகத்தலைவாக்கருளுவீர், தமயந்தபநாயியைப்போல் நானுதிக்காமல் தையலாய்ச் செனித்ததினலன்றோபிவ்றெனைத் தாய்தந்தையரைப்பிரிந்துச் செல்லத்தந்ததுபிதாவே; (வீம-வ-ம்.) மகளே பெண்கிளே பெருங்கிளே எனப்பெரியோர்களுரைக்கும்வாறு பிரமனுன்னை உதிக்கச்செய்தநாலன்றோ நானொரு சிற்றரசனாயிருந்தும், மகாமண்டலீகரெல்லாமென்விடுதி வந்து புசிப்பெய்க்கவும், அந்த மகாவிஷ்ணுவின் அருள்தங்கிய நளச்சக்கிரவர்த்தி எனக்குமருமகனாகவும்பெற்றேனன்றியுந்தேவர்களையுந் தெரிசித்தேன், என்னைப்போன்றபாக்கியவானெவனுண்டு, எல்லா முன்னுலமைந்த பெருமையின்றித் தபநாயியாலன்று, என்னருருணை இரத்தினமே நீ சந்தோஷமாய்.

---

வீமராஜன் - தரு - புன்னாகத்தோடி - ஆதி.

போய்சுகிப்பாய் கிளியே உன்சொந்தநாடு - இது
தாய்மனையாமஅளியே தபநாயிவீடு. (போ)

காயமுளமட்டுமென் கனவிலுனைமறவேன்
கண்மணியேநான்பெற்ற பொன்மணியேமருவே. (போ)

அடிக்கடியுனைவந்து அம்மாபார்ப்பேனாகந்து
ஆளனடிபணிந்து அடங்கிநடவினிந்து
இடிவரினும்பயந்து மெய்யாதேநீசிறந்து
மெச்சுமுலகுகந்து மிந்திரனவனேயிந்து. (போ)

கணவனுரங்கியபின் கண்ணுரங்குவையேயுன்
காதலன்மகிழநற் கார்யம்புரிவாய்சன்
குணமுங்குலம்பெருகுன் கோத்திரந்தழைக்குமென்
கொடியுயோங்கிடுமேயின் கோதேமகளேயின். (போ)



அவருண்டசேஷமுண்ணு அமரர்பிரசாதமென்று
அநங்கங்கள்க்காண்று ஆவிலைக்காயமென்றும்
எவரும்புகழப்பண்ணு இந்திரனுலகும்விண்ணும்
ஏற்றவனையென்கண்ணு மிருதயமுமென்னும். (போ)

(தம-வ-ம்.) அப்படியே நடந்துகொள்கின்றேன்பிதாவே, அன்னைதபநாயி? நான்போய்வரட்டுமா, இதுவரையில் நாமினைபிரியாதிருந்தோம், இப்போது நான் என்நாயகருட னென்றுடு போவதனை லினி நீ நாளதுவரையில் விருந்தவர்பிராமனுன்னுட்டைச் சீர்படுத்துஞ் சன்மார்க்கத்தில்முயன்று தள்ளாண்மை பொருந்திய தாய்தந்தையரை எல்லாவிஷயத்திலுங் களிப்புறச்செய் துன்னைநத்திவந்த என்னன்னியாருக்குத்தக்க சந்தோஷத்தைவிளைவித்து உன்பெருமையை உண்மைத்துவிராகிய விடதபூபதி என்றோடிக்கடி மேன்மையாய்ப் பேசும்படிச் செய்வதுன்னைச்சார்ந்தகடன், அண்ணியம்மாஇப்போதென்பிதாஎனக்கெடுத்தோதிய கருத்தையெல்லாம் நீயுமுணர்ந்து நடப்பதுன்கடமை, என்னைதசமாதந்தாங்கிப்பெற்று * பெறும்புகழ்க்காவண்ணம் வண்மைபாராட்டி வளர்த்தொருவருக்குத் தாரையிட்டதாயே? நான் உன்னையகன்று செல்லுங்காலநேரிட்டதிற்கென் செய்வேனம்மணி; (தாய்-வ-ம்,) மகளே நீ! கணவனோடுகளிப்பாய்ப் போகுங்கால் கண்ணீர்சொரிவதழகாமோ, உன்மனதிலெங்களைப் பிரியுங்கவலை வருத்தாதிருக்குமென் றெண்ணியல்லவா இத்தனைநாள்பரியந்தமுன்னையு முன்கணவனையுமிங்கிருத்தினோமன்றி வேறல்ல, நானுமுன்னைப்போலன்றோ, பிறந்திடமுறந்து புக்கவிடஞ்சிறந்துன்னைப்பெற்றுப்புகழுடம்பெடுத்தேன் நீயுமென்னைப்போலாகவன்றோ என்னவன்பாடுகின்றது சுகமாய்ப்போய் வருவாயடி கண்ணே; (வீம-வ-ம்.) அப்பாமந்திரி! எனது மருகனுமகளும் விடதேசம்போவதால், தமயந்திக்காக வமைத்தசகலஆட்டசாமான்கள்முதலியதையும், சிலதாதிமார்களையுஞ்சேவகர்களையுங்கூட்டி அனுப்புவதுடன் நீயுஞ்சென்று இவரை ஆண்மனைபுகச்செய்து விடைபெற்றுவருவாயப்பா.

(மவ-ம்.) நல்லதுவேந்தே ; (வீம-வ-ம்.) ஐயா மருகனே சுகமாக நீருந்தமயந்தியும் நீடநாட்டைவிளக்கிவாழி ; (நள-வ-ம்.) மகானே, ஐயமாமா, அடிமாதே ! என்னுடனிராதத்திலேநுவ்வாய்கண் பாக்இதோநாம், காடு, மேடு, வனம், வனாந்திரங்களைக்கடந்துவிட்ட புரிவந்தோம், அதோ அந்தணர்வீதி, அதோ பார்வேந்தர்வாழ்வீதி அதோ பார்த்தையா உத்தமநெறிவழுவாதசத்தியம்பிசகா நிலையமைந்துத் தன்னுயிர்போல மன்னுயிரைப்பாலிக்கும் வேளாளர் வீதி, அதுதான் நீவசிக்கக்கட்டியிருக்குந் திருவரண்மனைஅடிமயிலே ; (தம-வ-ம்.) பிராணநாதா என்னுட்டிற்கு மென்னரண்மனைக்கு மென்தேசவளப்பத்திற்கு மீனைவிட்டுச்சொல்ல இப்புவியின்கண் வேறொரு தேசமுண்டோ! இல்லவேயில்லையென்னென் மனங்கொள்வித்திங்குறைப்பதற்குமன்றுமுயின்றேன்மணவாளனே (நள-வ-ம்.) மாதே நான்கண்ட தேசங்களிலெல்லாமுன்தந்தை நாடாகிய விதர்ப்பதேசமு மதின்வளப்பமுஞ், செழிப்புமவருடையவரண்மனைச்சிறு மதிகமேன்மைதங்கினதாயிருக்க அதைமறைத்தின்னுட்டை மேன்மைப்படுத்தி யோதுவதுனக்கழகோ என்னுயிர் ; (தம-வ-ம்.) சுவாமி.

---

## தமயந்தி - விருத்தம்.

சிந்தையிலறிவுங்கியானஞ்செவிக்காதமாதரன்றோ
தந்தையினாட்டைமேலாய்த்தானுரைத்திடுவர்கல்வி
விந்தையாபுணர்ந்தோர்வாழும்விடமதேமேலாய்ப்பேசி
நிந்தையையகற்றிச்சீராய்நிலத்திலினிதுய்வர்வேந்தே.

(தம - வ - ம்.) பிராணநாதா தங்களுடைய திவ்யபாதங்கள் அப்பூமியிலெல்லையை மிதித்ததிலவன்றோ, அத்தேசம் அவ்வளவுமேன்மையைக்கொண்டது, அறிவில்லாத பெண்மாதர்கள், தங்கள் தாய்மனை அதிகமென்றுணர்ந்து நாய் பெருங்கீர்த்தியைப் பூண்பர் கற்றறிவடைந்த கன்னியர், கணவர்நாட்டையும் வீட்டையுங் கைலயங்கிரிக்கொப்பாய்மதித்துக் கொழுநனே கோருங்குணமுள கோவெனக்குறிகொண்டு கொண்டவரிடங் குல



பீடமெனக்கோரி வாழ்நாட்களைக்கழித்து வைகுந்தபதவியடைவர்களன்பரே ; (நள-வ-ம்.) அப்படியா சரிதா னீயரண்மனையடைவாய், நான் கொலுமுகம்போய் வருகின்றேன்பெண்ணே ; (தம - வ - ம்.) நல்லது சந்தோஷமாய் போய்வாருந்துரையே ; (மந்-வ-ம்.) போற்றிநாதா இன்றுதங்கள் திருமுகத்தைக்கண்டேன்மனம் என்றுங்கொள்ளாத மகிழ்வை அடைந்தபடியால் அடியேன் தங்களரண்மனைக்கேகி என்தாயாருடைய திருப்பாதங்களை நமஸ்கரித்துவர விடைதரவேண்டுந் துயாநிதியே ; (நள-வ-ம்.) அப்பாமந்திரி நீ செய்தமுயற்சியால் நான் விதர்ப்பதேசங்காலத்திலடைந்தது மின்றித் தேவர்களையுந் தெரிசித்தே அவரளித்த திவ்யவரங்களையுங் கைக்கொண்டேன், தமயந்தியையுமணம்புரிந்தேனுனு லவாளென்னைக்கோரித் தூதனுப்பியகாரியத்தை முடிவுசெய்யாத ஓர் குறைமாத்திரமென்மனதை விட்டகலாதிருக்கின்றது தோழா ; (மந்-வ-ம்.) அக்காரியமெவ்வகையானதோவென வறியஆவலுடையவனாயிருக்கின்றேன்தேவே ; (நள-வ-ம்;) மந்திரி, இந்திரன், எமன், குபேரன், வருணனென்னுமிவ்வரு மென்னைவருந்தித் தமயந்தியினிடந் தூதுபோக்கித்தங்களிலொருவரை வரிக்கச்செய்யும்படிக்கு வேண்டநானுப்பிச்சென் றெவ்வளவோ இம்மாதுக்கெடுத்தோதியுமறுத்து என்னையேமாலையிட்டனளிதுவன்றி வேறில்லைபாலா ; (மந்-வ-ம்.) உத்தமநெறியுள்ள பத்தினிமார்கள் துவக்கத்தில் தங்கள் மனம்ரத்தியவன் தக்க நிலைநெறிகுறைவுள்ளவனாயிருக்கினுமவனினுஞ் சிறந்தவர்களைக்கருதாமல் கொண்டவனைத்தொழுதுபடிப்பதே கொள்கையானதால் அவ்விஷயத்திற்குத்தாங்கள்சந்தோஷிக்கத்தக்கதேயின்றி மனக்குறையைக்கொள்ளப்போகாது அதுமுடியாதிருக்கப்பற்றி வருத்தமுண்டிருந்தாலத்தேவர்கள் தங்களுக்கு வரங்கொடுத்தருளியிருக்க மாட்டார்களரசே ! (நள-வ-ம்.) அப்படியா நீ சொன்னது ஒப்பத்தகுந்ததே, நானில்லாதகாலையில் நடந்தவிசேஷங்களிருந்தா லறிவிப்பாய்மந்திரி ; (மந்-வ-ம்.) வேற்றுமையான தொன்றும்நடக்கவில்லை ; (நள-வ-ம்.) சந்தோஷம் நீசென்று தமயந்தியைக்கண்டுவருவாய் ; (மந்-வ-ம்)

மகாபாக்கியம், போற்றி அம்மணி! என்னை நெடுத்தமாதர்வுக்கு ஒப்பானதேவியே; (தம-வ-ம்.) வாழியப்பாமைந்தனே அந்தவு குந்தவாசனரும் நளமகாராசருடைய அன்பு முன்மீதோங்கி, அகத்திலும், புறத்திலும், நீபுகழைப்பெருகவேண்டியதல்லோ; (நள-வ-ம்.) மகாபாக்கியர் தல்லியே எனக்கினித்துயரில்லையே; (தம-வ-ம்.) நீ கொதுமுகமடைவாய் மகனே; (மந்-வ-ம்.) நல்லதம்மணி; (சுசி-வ-ம்.) அப்பா, கட்டியனே நானொருசந்நியாசி, விப்புரகுலம், உங்களரசனைக்காணவேண்டிநெடுநாளாயிங்குகாத்திருந்து மென்னையாரென்று விசாரிக்க அரசனுநரனை செய்தாய், நானேநேரிற்காணவிருப்பங்கொண்டுவந்திருப்பதாகவுங்களரசருக்கறிவிப்பாயா, (கட்-வ-ம்.) அப்படியே, சுவாமி தங்களைக்காணவேண்டி ஒரு பிராமண் சந்நியாசி வந்திருக்கின்றார் வேந்தே; (நள-வ-ம்.) அப்படியா வரச்சொல்லுவாய், போற்றி சுவாமிகளே, தாங்களிருப்பதெத்தேயம், இங்குவரக்காரணமியாது? தங்கள் திருநாமமெதுவோவெளியிடவேண்டுமய்யனே, (சுசி-வ-ம்.) அப்படியா என்னை இன்றைனென்றறிந்துகொள உன் செல்வத்திறு லகாங்கரித்தவனுமவிள்வுவாயினே; அரிதுவுஞ் சிந்தையில்லை, என்னையின்றேனென யானே எடுத்துரைக்கின்றேன் கேளப்பா விடதுச்சக்கிரவர்த்தியே.

---

சுதிபகவான் - விருத்தம்.

ஆதியாய்முப்புரத்தையன்றெரித்த
அரனைவிட்டுமன்றடவுமயனைத்தம்பி
ஓதிகழப்பொய்யுரைக்கவைமத்தேன்மற்றும்
உடலிலாத்லையவிட்டேன்மதனையப்பா
நீதியுளவிந்திரனுக்கோராயிரங்கண்
நிலைக்கவைத்தேனுடலதனிலிச்சகுனாய்
மாதினையும்பிரிந்திருக்கச்சலனைச்செய்த
மன்னனினமென்பெருமைமகிழ்வாய்க்கேளே.

(சுசி-வ-ம்.) பரமசிவனைப் பாம்பின்விஷம் குடிக்கச்செய்தேன், பிரமனைப்பொய்யனாக்கினேன், மன்மதனை அங்கமில்லாதவ



னச்செய்தேன், தேவேந்திரனுக் குடலெல்லாம் யோனிக் கண்களாக்கினேன், அயோத்தியையாண்ட அரிச்சந்திரனை புலையனுக்கடிமையாக்கிப் பத்தினியைப் பிரிந்து பாதவிக்கச்செய்தேனிந்நாகேளுமிராஜனே.

---

சுதிபகவான் - விருத்தம்.

மாயனையம்மரியிலேமேற்படுக்கச்செய்தேன்
மார்க்கண்டனுக்காயெமனையுதைக்கப்பார்த்தேன்
தாயுடனுமபிர்தவனைத்தழுவிச்சாபந்
தரனேந்திசந்திரனைத்தவிக்கவிட்டேன்
நேயமுடனேனையின்றரவிதன்பற்கள்
நீங்கவைத்தேன்குத்திரியைமயானத்திட்டேன்
காயமதுநோய்பெறவேகண்டேன்வியாளன்
கலங்கவேபுரிந்தவன்காண்காரிநானே.

(சுசி-வ-ம்.) அரசே! மகாவிஷ்ணுவை, ஆலிலைமேற்படுக்கச்செய்தேன், யமனை மிருகண்டு சுதனுதைப்பித்தேன், குருபத்தினியென்பதையுமறந்து சந்திரன் தாரையைத்தழுவிச் சாபமடைந்தலைந்தோடப்படச்செய்தேன், என் தந்தையாகியசூரியனுடைய தந்தங்களெல்லாம் போக்குவித்தேன், எனக்கு மற்றுமுப்பத்துமுக்கோடி தேவாசுரருக்குங் குருவாகிய பிரகஸ்பதியைக் காவலர்களால் கட்டியடிக்க மனங்கலங்கி அழவிடுத்தவனுமுந்நான் குணவந்தன் நான், தனவந்தன் நான், அருள்மனவந்தன்நான், என்பெயரோ சுதிபகவானென எல்லோரும்வணங்கிக் கொண்டாடுவார்கள் என்றறிகுவாய் மன்னுமன்னு.

---

நளமகாராஜன் - விருத்தம்.

ஆரெனக்கேட்டேன்றுட்டனெனவிளம்புதலேபூவே
மெய்மெந்தனெனவென்றும் விதித்திடப்போந்தன்மை
பாரினிலனித்யமாந்தர் பற்றுதலிலைசாதயுந்
சீருடனுரைப்போர்வந்த செதிதானியேதுவந்தே.

(நள-வ-ம்.) நிலையில்லாவாழ்க்கையைப்போன்ற மானிடதேகத்தை அடைந்தவனுக்கு அறிவுவிளங்குதலரிதாகையாலடியேன் தங்களையாரெனவினவியதேயன்றி வேறல்ல, வக்குற்றத்தை

நளமகாராஜன் - தரு - சாமா - ரூபகம்.

தேவே நீ போக்கும் என்னைத்திகழ்பெறநோக்கும்
கோவே நான்புரிந்திட்ட கொடும்பிழைமனதினிற். (தே)
பெற்றவர்செய்பிழை பெருங்குற்றமென்னவே
பொறுக்குவரோமனதிற் குறுக்குவரோவெந்தன். (தே)
முக்காலமுணராத மூடர்களுளனதால்
மோடியாயிங்கேனே மொழிந்தவுறையதை. (தே)
எனக்குக்கெதியுந்த னிருபாதமல்லாமல்
இறையேவேறுமுளதோ என்னையின்றுவளர்த்த. (தே)

(சனி-வ-ம்.) அப்படியா இந்தவணக்கமப்பொழுதெங் சகன்றிருந்ததோ கொட்டினுற்றேன், கொட்டாவிட்டா லதைப்பின்னைப்பூச்சியெனக்கொள்வ இந்தக்குலவயத்துளோர்களின் கொள்கையே, இனி நானிங்கு வந்தகாரியத்தைக்கேள்சுராசுரர்களும் நராநரர்களும், அரசர்களுமென்றால் எறும்புகடை யென்பத்திநான்குநூராயிரஞ்ஜீவராசிகளுந் தங்கள்வாழ்நாட்களில்சிலநாள் நான்கோ றும்போது எனக்குடன்பட்டுநடக்கத்தக்கதென்று பரந்தால் விதிக்கப்பட்டிருப்பதனு துன்னிடஞ் சில்காலம்வசிக்கவந்தேன், நீ சொல்லுங்காலமெதுவோ அதுணர்ந்துன்னிடம் வரஎண்ணம்பூண்டேன், உனக்கெக்காலந் தகுதியோ வுரைக்கிலக்காலம்வருகின்றே னரசே, (நள-வ-ம்.) சுவாமி, எனக்குமுன்இன்னிலையில்லாவுலகை அதிநீதியோடாண்ட அரசர்களெலாந் தங்களுக்குடன்பட்டொடுங்கியனுபவித்தமிடிகளைக்கேட்டிருக்குமென்னுளமிப்போதே, தாங்கள்வரலாமோவென்றபோதேவதறலெடுக்கச்சேதாங்களென்முதாலமையில்வரின்எப்படிக்கிச்சகிப்பேனுதலால், இந்த எவ்வனகாலமேதகுதியென்றெண்ணுகின்



றேன், அப்படிக்கென்னைச் சுவாமிகளனுகினும் என் பத்தினியாகிய தமயந்தியை என்னைவிட்டுப்பிரிக்காமலு,மவளுக்கொருமைனோதக்க மனுகச்செய்யாமலு மிருக்கும்படிக்குத் தங்கள் திருப்பாதங்களுக் கிதோ கோடாகோடிதெண்டம் ஆண்டவனே, (சனி-வ-ம்.) நல்லதப்படியே செய்கின்றே னினிவனுஞ்சிலகாலங் கழித்துன்னிடம்வருகின்றேனிராஜனே, (தோழி-வ-ம்.) அப்பா காவலனே நமது தேவியாருக்கின்று பிரசவவேதனைகண்டிருப்பதனுல் நீ சீக்கிரமோடி அரண்மனை மருத்துவமாதை அழைத்துவருவாய்; (கா-வ-ம்.) நல்லதம்மா. (மரு-வ-ம்.) அம்மாபாங்கி தேவியாருக்கின்று சகல அவயவ ஆண்மையோடு மன்மதனைப் பழிக்கு மழகுள பாலன் பிறந்தசேதி அரசருக்கறிவிப்பாய் ; (தோ-வ-ம்.) நல்லது, போற்றிசுவாமி ; (நள-வ-ம்.) என்னவிசேஷம்பாவையே ; (தோழி-வ-ம்) மகாராஜே.

தோழி - தரு - காம்போதி - ரூபகம்.

பாலன்பிறந்தானையா பரிதிகுலம்விளங்க. (பால)
கோலமயின்மீதேறுங் குமரன்வடிவிலங்கச்
சீலமுடனுங்குலஞ் செழிக்கவரியருளாற். (பால)
சந்திரகாந்தியைமாற்ற சாந்தக்கிரணம்வீச
சொந்தமயநிறையின் சந்திரகெர்ப்பத்தின்று. (பால)
மதிவொளிவீசிட மன்னரடிபணிய
அதிகவழகுடனே அன்னைகளிக்கவின்று. (பால)

(நள-வ-ம்.) அப்படியா! மெத்தசந்தோஷம், மந்திரி, நமக்குபுத்திரன்பிறந்த ஆனந்தத்தைப் பலருங் கொண்டாடத்தக்க வெகுமதிகளைத் தோணச்செய்வதுடன், பாலகனுக்குஜாதகங்குறித்து நாமகரணஞ்செய்யவேண்டி யிருப்பதனுல், வசிஷ்டமூர்த்தியை வரவழைப்பாய் ; (மந்-வ-ம்.) நல்லதுவேந்தே; (வசி-வ-ம்.) நளச்சக்கிரவர்த்தியே குசலமா! வாழி, (நள-வ-ம்.) போற்றிகுரு

குருவே, இன்றெனக்கு திவ்யகுலபுத்திரன் தங்களாசிர்வாதத்தி
னல் பிறந்திருப்பதா லவனுக்கமைக்கத்தக்க திருநாமத்தை அரு
ள்புரிகிறென இங்குவரத் தொந்திரவைத் தங்களுக்கு கொடு
க்கவாயினேன் மனம்பொருப்பீர், (வசி-வ-ம்.) அரசே என்னெ
ண்ணமத்தை வைகுந்தனருளால்முடிந்தது, எனக்கிப்பேர்க்கொத்
ததொந்திரவை நீ அடிக்கடி கொடுக்கிறது மகிழ்ந்தனேன்,
நீபெற்ற குலவிளக்கிற்கு இந்திரசேனனென்று பெயரிட்ட
ழைப்பாய் மன்னவா; (நள-வ-ம்) புத்திபுத்தி மகாபாக்கியம்,மா
தே தோழி, பாலகனுக்கு இந்திரசேனனென்று பெயரிட்டழை
ப்பீர்கள் ; (தோ-வ-ம்.) நல்லது சுவாமி; (குடி - வ - ம்.) அண்
ணே, இது என்ன இன்றாமென்றங்கண்டுங் கேட்டறியாதஅ
க்கிரமங்களைப்பார்க்கலாயிறோம்; நளமகாராஜனுடைய நீதிச்சக்
கிரமின்னேரமட்டிலும்,நமது முன்பிரயோஜனங்களுக்காக விட்
டிருந்தபயிர்களைத் தங்களிருப்பிடமகன்று, இங்குதோன்றி அழி
க்கும்படியான மிருகங்களை வதைக்காதிருக்குங்காரண மின்ன
தெனவறியத்தக்க புத்திகூர்மை நமக்கில்லாமையால், நாங்கால
தாமதஞ்செய்யாமல் அரசனிடஞ்சென்று முறையிடி லிவைகளி
ன்தொந்திரவைப் போக்கத்தக்கமுயற்சி அவராலடைக்கு மில்
லாவிடி லிவைகளினிநமக்குயிர்த்துணையாகியகால்நடைகளையுமி
ம்சித்துவிடுமென்பதிற் சேதந்தடையில்லை ; (முனி-வ-ம்.) அப்
படியேசெய்வோம்வாரும் அண்ணே, போற்றி எங்களாண்டவ
னே ; (நள-வ-ம்.) என்னருமைநங்கிய மக்களே! நீங்களின்றின்
னேரவேளையி லிரங்கியமுகத்தோடு வந்தகாரணமெதுவோ சீக்
கிரம்வெளியிடுவீர்களென்பமோ ; (கு-வ-ம்.) அரசே இந்தக்கால
க்கொடுமையை என்னென்றுசொல்லுவோம், வனமிருகங்களெ
ங்கள்வயல்களிற் பிரவேசித் ததஞ்செய்வதைத்தடுக்க அசக்தர்க
ளாகித் தங்களிடமுறையிடவந்தோம், இச்சமயங்காக்காவிடில்
நாங்கள்வலிய உயிர்விடுவதன்றி வேறுமார்க்கந்தோன்றாதவர்களாயி
ருக்கின்றோம் ; (குடி-வ-ம்.) அப்படியா நீங்கள் சென்று கிரா
மங்களிலுள்ள கால்நடைகளைப் பாதுகாருங்க ளிதோ நான்



உங்களைப்பின்பற்றிவருகின்றேன்;(குடி-வ-ம்.)நல்லது சுவாமி ;
(நள-வ-ம்.) மந்திரி இவர்களுக்குத்தக்க வெகுமதிகளைக்கொடுத்
தனுப்புவதுடன் வேடர்களையும்வரச்செய்குவாய், எனக்கொரு
வேட்டைரதமுஞ் சிலாயுதங்களையுஞ் சித்தப்படுத்துவாய்,
நான் வேட்டை யுடுபாவனை அணிந்து வருகின்றேன் பாவா :
(மந்-வ-ம்.) நல்லது துரையே.

---

நளமகாராஜன் - தரு - சஹானா - சாபு.

என்னகாலகெதியிது பெண்ணே-நான்
இன்றுகேட்கலானசேதி கண்ணே.
பன்னகசயனனருள்பறந்ததோமறைந்ததோதான்
என்னருங்குடிகளின்றியம்பியவார்த்தைகேட்கநான்.(என்)
கெட்டமிருகங்கள்தோன்றி கெட்டியபயிர்களைமானே
கேடுசெய்வதைக்கண்டுங்கிலியானெடுங்கித்தேனே
வட்டமிட்டனியுஞ்சுழல்வண்டுபோல்மனம்பதரி
வருந்தியவ்விட்டமுறைவார்த்தையைக்கேட்கவோதெரி ()
(தம-வ-ம்.) பிராணநாதா, வருவினையைவிலக்க வல்லவராலு
முடியாதே எதுவரினு மனுபவிக்கவன்றோ இச்சடலத்தைத்தா
ங்கியிருப்பது வருந்தப்போகா, குடிகளின்குறையை நீக்கத்தக்
ககாரியத்தில்முயல்வதே முக்கியகடமையாயெனக்குத்தோற்று
கின்றது சுவாமி, (நள-வ-ம்.) அடி யென்பிராணநாயகி.

---

நளமகாராஜன் விருத்தம்.

அறிவடைந்தகாலமுதல் விண்ணுண்மட்டும்
அன்னமேகொலையென்பதுகற்றிந்தி
குறிவுடனேகுவலயந்திற் பெய்தேனகத்தக்
கொடியகுணக்காரியினற்கொண்ர்ந்தகற்றுய்த்
தெரியுகடி விலங்கினங்கள்வரவுமெந்தன்
தேவியேசக்கிரமுந்தேடிச்செல்லா
நெறியிசதோகிலேகுறைவோயெனவேயிந்தோ
நெஞ்சமதுகலங்கித்திடமிங்குதையோ.

(நள-வ-ம்.) பெண்ணே தமயந்தி! நானறிவடைந்த நாள்முதற்கொண்டு ஒரு ஜீவஹிம்சையுஞ்செய்யாதிருந்த நெறியின்றுமாறலானதே, வனமிருகங்கள் பயிரையழிப்பதையுணர்ந்தும் சத்தியச்சக்கரமானது அவைகளை வதைக்காதிருப்பதையுமாதே நான்யோசிக்குமளவில் என்னெஞ்சு மந்தகாரியின் [illegible]ாய்கைக்கஞ்சிப் பலவாறு கலங்குதடி கண்ணே, (தம-வ-ம்.) பிராணநாதா.

தமயந்தி - விருத்தம்.

சன்னெறியுஞ்சன்மார்க்கஞ்சத்தியவாக்குஞ்
சற்றும்பிசகாதவரிச்சந்திரனையா
தன்னரசைத்தாரைவிட்டுப்பெண்டை விற்றுந்
தானடிமையாகிநின்றும்பாலன்மாண்டும்
பன்னரியதுயரடைந்தான்காரிதன்றாற்
பத்தாவேமனத்திடத்தின்பலத்தாலன்றோ
நன்னகரைத்தானடைந்தானெக்குங்கீர்த்தி
நாட்டினான்தெரியத்தால்நாதாபோற்றி.

(தம-வ-ம்.) சுவாமி, காரியின்கைப்பட்டு அரிச்சந்திரன்பதியிழந்து, பத்தினியைவிற்று பாலனைப்பாம்புக்கிரையாக்கி, தான் பறையனுக்காளாகிநின்றான், ஆனாலந்த மனவுறுதியெனுந்தைரியத்தால்நல்லகீர்த்தியைமுன்னைவிட அதிகமாயடைந்து, பூலோகத்திலென்றுமழியாமலிருந்து நம்பதவியடைந்தானாதலால் தாங்கள்மனவுறுதியைக் கலக்கப்போகாது, (நள-வ-ம்.) நல்லது மானே நானின்று வேட்டைக்குப்போய்வருகின்றேனீயும்வருகின்றாயா கண்ணே, (தம-வ-ம்.) மெத்தசந்தோஷ மிகப்பிரியாணப்பட்டேன்துரையே.

நளமகாராஜன் - விருத்தம்.

பார்த்தையாமந்திரியிந்தப் பயிர்களைமிருகமெல்லாஞ்
சேர்த்தொன்றாய்க்குடியின்கு செய்ததீங்கினைக்கண்டாலே
கார்த்திடக்குடிகள்தம்மைக் கனமினிக்கவிழ்ப்போமாகில்
தீர்த்திடும்வேறுடனஞ்சீவர்ப்பவிர்தாமே.



(நள-வ-ம்.) அப்பாமந்திரி, வனமிருகங்களொன்றுசேர்ந்து குடிகளிட்ட பயிரைச்செய்த அலங்கோலத்தைப்பார்த்தனையா? இனி ஒருக்ஷணம் சும்மாயிருப்போமாகில் வடிவோடழிக்குமென்பதற்குந்தடையுண்டா? வேடர்களையேவி அவைகளைக்குறுக்கேமறிக்கச்செய்குவாய், (மந்-வ-ம்.) நல்லது வேந்தே அப்பாவேடர்களே? நீங்களதிதீவரத்தோடு குறுக்கேபாய்ந்து மிருகங்களைமடக்குவீர்கள். (வே-வ-ம்.) அப்படியேசாமி.

நளமகாராஜன் - தரு - நாதநாம - ரூபகம்.

வேட்டையாடுநேன்-விலங்கினங்களுங்-கலங்கியோடவும்
காட்டைவிட்டிங்கு கூட்டமாய்வந்ததோர்
கன்மனமுடையப் புல்லைச்செந்தைப்பார். (வேட்)
வாட்டியோட்டுநேன்வந்தவழிதனைமுந்திப்பிடிக்கவும்
மீட்டவோரம்பு மெறண்டுகரிக்கூட்டம்
பெய்மதந்தோடுதே ஐயோபுலிபாட்டம் (வேட்)
காட்டிக்கொய்கிறேன் ஞலம்புமொன்றுகச் சாலநான்போக்க
ஆட்டங்கள்மறந்தே அலங்கோலமாக [வும்
அந்தோவோடுதுபார் வந்தவழியாக (வேட்)

(நள-வ-ம்.) மந்திரி மிருகங்களெல்லாஞ் சின்னபின்னமாய்ச் சிதறுகலங்கிட மாண்டவைபோக, மற்றவைகள் திக்கால் ஒன்றுமோடி தங்களிருப்பிடங்களாகிய வனங்களுங் குகைகளுஞ் சேர்ந்தன, இனி இங்கு தலைகாட்டாதுகளானதால் நமது சேனைகளையும் வேடர்களையு மிருப்பிடம்போக விடையளித்து குடிகள் மனக்கொதிப்படங்கிக் கொண்டானடிக்கும்வாறு, ஜெயபேரிகை யவாயச்செய்குவாய், நானுமிதோரதத்தை அரண்மனைநோக்கிச் செலுத்துகின்றேன், இவ்வருடத்திய கடமையை அவர்களுக்கு வெகுமதியென விளம்பரப்படுத்தி நீயுங்கொலுமுகம் வந்தணுகுவாய், (மந்-வ-ம்.) நல்லது தந்தையே

### புஷ்கரராஜன் - கொலு.

அதிபெருமைபுகழுருமையோகமுத்தி
யனுட்டானஜபதவத்திற்காதிமூர்த்தி
நதியுடனேயருகுகொன்றைமல்லிமுல்லை
நற்பாம்புஞ்சிரமாலையணியுமநந்தி
மதிபுனைந்தோய்குழுவகுத்தோய்வழுத்தொணாத
மானமைத்தோய்மயானத்திலுடுஞ்சுலா
நதியிசைந்தேனெனதுசெங்கோன்மேன்மேனுக்த்
தோன்றவேயருள்புரிவாய்தொண்டனுக்கே.

---

### மந்திரி - விருத்தம்.

உலகினிற்கீர்த்தியோங்க வுத்தமர்மனங்களிக்க
பலவுயிரோற்றிசெய்ய பணிந்தடிமன்னர்போற்ற
நிலமதுசெழிக்கமாரி நேமமாய்ப்பெய்யவித்தத்
தலமதையாளுமெந்தன் தாணுவேயுன்றாள்போற்றி.

(மந் - வ - ம்.) போற்றி இந்தப்புஷ்பாகரத்தையு மதின்கு
டிகளையு மிக்கமேன்மையோ டாண்டரதரிக்கின்றவென்றந்தை
க்கதிகமாகிய புஷ்கரமகாராஜனே போற்றி, (பு-வ-ம்.) அப்பா
மந்திரி என்னுடை மதிலுள்ளகுடிகளு மவர்களிட்பிராணின்ற கா
ல்நடைகளும் சுகமேயிருக்கின்றார்களா, (மந்-வ-ம்.) சுகமேயிரு
க்கின்றார்களரசே, (பு-வ-ம்.) நேசா நேற்றையதினம் ஈளச்ச
க்கிரவர்த்தியினுடைய மந்திரி அனுப்பியவோலையைக் கண்டமு
தற்கொண் டென்மனமொருவாறுன கிலேசத்தை அடையலாயி
ற்று; சென்ற மூன்றுவருடத்திய பகுதியை இவ்வருடத்தியத்தி
றையுடன்சேர்த்தனுப்பத் தடைசெய்ப்போகாதென்றுஞ்செயி
லோ மூன்றுக்கரசைமறக்கத்தக்கதென்று மெழுதியதைக்கவனி
க்கினேதோ துன்பம்விளையுமெனக் காட்டுதென்றிவேறில்லை இதற்
கெப்படிநாமநுப்பிப்பது தகுந்தயோசினையுனக்குப்படியாகி லெ
னக்கெடுத்துரைப்பாய் தோழா (மந்-வ-ம்.) அரசே பூலோகவாசி



களாகிய எல்லோருஞ் சிலகாலஞ்சுகத்தையுஞ் சிலகாலந்துன்ப
த்தையு மனுபவிப்பது மகாநவக்கிரகங்களிற் சிறந்தவராயுந் தே
வாதிதேவர்களு மன்னுமிடையனோர்களுஞ் சதாமறவாமல் பூஜை
த்தொழுதேற்றும்படியான சநிபகவானே காரணகர்த்தராதலி
னால், தாங்களவரைக்குறித்துத் துதிசெய்து வித்தேயுத்தி விப்போ
து தலையிட்டெல்லாம் வழங்கும்யான்தோடியெறிய ஜென்பதிற்கு
த்தடையேயில்லை பிரபுவே, (பு-வ-ம்.) அப்படியா? நானின்று
முதல்அப்புண்ணியபுருடனையே இஷ்டவிடாமற் பூஜிக்கின்றே
னேசா நீமறவாமற் றுதிப்பதோடு நமதுதேயத்தில்வாழுஞ்
சதுர்வர்ணத்தாரையு மிவ்வாறேசெய்யும்படிக்குத் திட்டஞ்செ
ய்வாயப்பா, (மந்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன்வேந்தே.

---

(தம-வ-ம்.) அம்மா யாங்கி, இன்றெனக்கொருவாறாயிருப்ப
தைநோக்கி விதாபிரசவவேதனைக்குறியென எண்ணுகின்றேன், நீ
அதிசீக்கிரத்தில் மருத்துவமாதைவரவழைப்பாய், (மரு-வ-ம்.)
அம்மணியிப்போதுதங்களுக்குத் தலைச்சன்குழந்தைக்கிருந்தவா
றிரா,து, என்னமோ எறும்புகடித்ததுபோற்காட்டு மிந்த ஆசன
த்தின்மீதமருவீர், (தம-வ-ம்.) ஆ! ஆ! ஆ! அம்மம்மா, (மரு-
வ-ம்.) சற்றுபொறுப்பீரம்மா இதோதிவ்யவடிவுள்ள புகாலட்
சுமிக்கு மதிகருபத்தோடு சற்புத்திரி பிறந்தனள், உங்களு
டைய தாயார் கெர்ப்பத்தில் தாங்களுந் தங்கள்தமயனும்பிறந்த
வாறுங்கள்கெர்ப்பாரம்பணித்தது அம்மணி, (தம-வ-ம்.) சந்தோ
ஷமடிமாதே, (தோ-வ-ம்.) அம்மணி யிக்குழந்தைபிறந்தசங்கதியே
ன்னவருக்கறிவித்துவருகின்றேன் ; (தம-வ-ம்.) அப்படியேசெ
ய்வாயடி ; (தோ-வ-ம்.) போற்றி ஆண்டவா ! இன்றுதேவியா
ரொருமதிருபந்தங்கிய பெண்குழந்தையை யீன்றெடுத்தனர்வே
ந்தே, (நள-வ-ம்.) சந்தோஷம்பாங்கி, அப்பாமந்திரி பெரியோர்
கள் பெருங்கிளையெனச் சொல்லும்வாக்குக்கிணங்க இன்றெனெ
க்குப் பெண்குழந்தைப்பிறந்தமையால் தேசத்திலெங்குஞ்சுபம்
பேசச்செய்வாய்,தோழி என்புத்திரிக்கு புஷ்பகேசினியெனப்பெ
யரிட்டழைப்பீர்கள், (தோ-வ-ம்.) நல்லதுசுவாமி, அம்மணி இக்

குழந்தையைப் புஷ்பகெந்தியென பெயரிட்டீன்றெடுக்குமட்டும் அரசாட்சியினைப்பெற்றுவந்தேன், (தம-வ-ம்.) சந்தோஷமடா இதுவும்நல்லகாலமே நமது புண்ணிய காலமே.

(சனி-வ-ம்.) நாமோ நளனை என்னும்செய்யாத் ஜீவியம்மையே செய்யச்செய்தவாறே அவனுஞ்செய்துமுடித்துத் தன் ஸ்திரீமார்க மதுகைவசமாகிவிட்டனன், இனி யிவனைப் பிவனுடையபெண்டீரையும் பிரிக்கத்தக்க முயற்சியெடுப்பது எப்படி, எவரால், யோசிப்போம், இப்போது பொருளாசையைக்கோரிப் மித்தனனுக்கஞ்சியும் நம்மை வருந்திப்பூசிக்கானின்ற புஷ்கரனிடஞ் சென்றுஅவனை நளனேடுச் சொக்கட்டாடச்செய்து நமது மாய்கையினால் புஷ்கரனுக்கு செயிப்பையுண்டாக்கி நளனைப் பரதேசியாக்கி அப்பால் நாம் தேவேந்திரன்முன்சொன்ன சபதப்படிமுடித்து அத்தமயந்தியினுடைய கெர்வத்தைப் பங்கப்படுத்துவோம் இதுவே சரியானயோசனை போகவேந்தருக்குக்காலமினிச்செல்லுவோம். அப்பா கட்டியனே உங்களரசனாகிய புஷ்கரனிடஞ்சென்று தெய்வலோகத்திலிருந்து சாயாதேவியின்ற சனிபகவான்வந்திருப்பதா யறிவிப்பாய்; (க-வ-ம்.) ஸ்ரீமஹாபிரபுவே ஸ்வாமி தங்களைக்காண சநிபகவான்வந்திருக்கின்றாரையா; (பு-வ-ம்.) அப்படியா மந்திரி, சநிபகவானை எதிர்கொண்டழைத்துவருவோம்வருவாய், (மந்-வ-ம்.) நல்லது வேந்தே.

---

### புஷ்கரன் - தரு - சவாமி - மிசரம்

பகவனேவாரும் தயை பாலித்தேகாரும்-சநி.
ஜெகத்துளோர்போலெனைச் சிர்தாக்கியாளென்று
செய்தபூஜைக்காய்வந்து சித்தித்தவாயின்று. (பக)
மையிற்பொருளிலாதக் கஷ்டனுய்நானுமே
கலங்குங்காலமிதேநீர் கைதூக்கத்தானுமே. (பக)
உம்மைதெரிசிக்கநான் உளமுருகிவாடியே
உரைத்தமுறைக்கிரங்கி உற்றவாநாடியே. (பக)



(சனி-வ-ம்.) எழுமியப்பா, (பு-வ-ம்.) சுவாமி, இந்த ஆசனத்திலெழுந்தருளி அடியேனையாட்கொள்ளவேண்டுமாறியே, (சனி-வ-ம்.) சந்தோஷம் புஷ்கரனே, நீயு முன்தேசத்தின் குடிகளுடனென்னைக்கோரி இடைவிடாமற்றுதிக்குங் காரணமென்ன? என்றுனக்காகவேண்டியகாரியமென்ன? சீக்கிரம் வெளியிடுவாயா! (பு-வ-ம்.) அரசர்க்கரசே, ஆதிக்கரனே, என்தேசத்தில் கஷ்டமேவிட்டு, குடிகள்வருந்த கோல் ஓய்க, பகுதிகட்டப் பொருளில்லாமையால் இனிப் பதிவைவிட்டதனுங் காலமாயிற்றே யென வருந்தியதே சுவாமி, (சனி-வ-ம்.) அப்பா புஷ்கரா! கஷ்டத்தைப்போக்க விருஷ்டியல்லோவேண்டியது, அதற்காய்வருணபகவானையன்றோகோரவேண்டும், நிதிபெருக்கவேணில் அளகாபுரிக்கதிபனைதியானிக்கவேண்டும், ஆயுளதிகரிக்கவேண்டில், பிரமனையழைப்பது முறையின்றி, என்னை வணங்குவதினாலென்னபலனைப்பெறப்போகிறாயப்பா! என் திஷ்டிபட்டவாள் நாளுக்குநாள், ஒடுங்கிப்போவார்கள், என்பார்வைநிற்கும்வரையில், உசிதமடையப்போவதேயில்லை; (பு-வ-ம்.) சுவாமி யெனக்கு தங்களைவிடக் கெதிவேறுதெய்வமில்லை, எப்போது அந்தளச்சக்கிரவர்த்தியின்மந்திரி, யெழுதிய ஓலையை நினைக்கின்றேனோ, அப்போதெல்லாம் என்மனம் கலங்குகின்றது; (சனி-வ-ம்.) நளனுக்கோ, நீ பகுதிகட்டவேண்டியது; (பு - வ - ம்.) ஆம் சுவாமி; (சனி-வ-ம்.) அவனோ அதிதீரமான், அதிவல்லவன், அதிசத்தியன், உத்தமநெறியுள் பத்தினியைமணந்தவன், சதுரங்கங்களிற்பெருத்தவன். விஷ்ணு அம்சம்போன்றவனுச்சதே, நல்லதுயோசித்துரைக்கின்றேன் புஷ்கரா! என்னிஷ்டப்படி நீ நடப்பையா? (பு-வ-ம்.) கிஞ்சித்தேனும் தடைசெய்யேனாண்டவா; (சனி-வ-ம்.) உண்மைதானு? (பு-வ-ம்.) தங்கள் திருப்பாதங்களறிய சத்தியம்; (சனி - வ - ம்.) நானிதோ பிராயாணமாய் நிடததேசமடைந்து நளனிடமுறுமாறி, வேதியனைப்போலிருக்கின்றேன், நீயும் பிரயாணப்பட்டு யாத்திரைசாலியைப்போலவனிடமுற்றவனைச் சொக்கட்டாடக் கருது, நானிசையச்செய்து, உன்பரமிருந்தவனுடைய நாடு, நகரம், பணிகளையெல்லாமுன்வசமாக்கி யவ

னைப்பருதிசெய்துவிடுகின்றேன். நீ ரிஷபத்தின்மீது, கொடியொ ன்றமைத்துவரவேண்டுமக்கொடியில் நானிருப்பேன்பாலா; (பு-வ-ம்.) மகாபாக்கியம்,அப்படியேசெய்கின்றேனுதா,மந்திரி! சநி பகவானிப்போதுனைத்துச்சென்றமாக்கமுனுக்கெப்படியிருக்கி ன்றது, யோசித்துரைப்பாய்நேசா; (மந்-வ-ம்.) அவர்நினைத்தா லணுவைமேருவாக்குவர், மேருவைத் தூசாக்குவர், முப்பத்து முக்கோடிதேவர்களினுமிவரதிகபெருமையையு மாண்மையையு முடையவர், அவர்வாக்கின்படிநடக்கி லதிகயோகத்தையடைவ துடனது யென்றுமழியாதபடிச் சுகானுபவிக்கலாகுந் தேவே. (பு-வ-ம்.) ஆனால் நீயொரு நவரத்தினமயமான கொடியை யதி சீக்கிரத்தில் சித்தஞ்செய்விப்பதோடு நல்ல தேகவலுமையுங் காத்திரமுமுள்ள காளையெருதையு மமைப்பாயா? (மந் - வ - ம்.) நல்லதுவேந்தே.

---

## புஷ்கரராஜன் - விருத்தம்.

அடிமாதெயின்றுசநிபகவான்தோன்றி
யருள்வாக்காலெனைநடத்தவரவேச்சொன்று
ரடிமானையங்குசென்றுநளனைக்கோரி
யாடவென்றார்சொக்கட்டான்தானிருந்து
மடிமானேஜெயமெனக்கேயளிப்பேனென்று
ரவனுடையரசுபணிமணிகைக்கொண்டு
அடிமானைப்பிரிப்பேநீயுமன்று
டடைந்திடுவாய்வாழ்த்திவிடையீதேனே.

(பு-வ-ம்.) அடிமானே! சுந்தரநங்கை! என் தவத்திற்கிரங் கிச் சநிபகவானின்றுதோன்றி, யென்னை நளனிடம்வந்து ஓரா ட்டஞ் சொக்கட்டானாடும்படியுந் தானிருந்து எனக்கே ஜெயிப் பாக்கி, யவன் செங்கோலையே யென்றுதினஞ்செய்வதாயுந் திரு வாய்மலர்ந்து, தானவனிடம்போயிருக்கின்றார், என்மந்திரியோ, யிதோவெனக்களிப்பாய் பிரயாண சித்தப்படுத்துகின்றான், நான் போக நீயன்போடு வாக்களிப்பாய், திடதப்ரி என்சுவாதீனமாய் விட்டவுடன் நீயுமங்குவந்து சேருவாய்கண்ணே; (சு - வ - ம்.)



மெத்த சந்தோஷம், சநிபகவான் வருமொன்றிருந்தாற்போதுமி ப்போதே எனக்குச் சகம்வந்ததாகவே யுமது முகக்குறிப்பாற் றோட்டுகின்றது;சபமசமும், நீர் போய் அச்சக்கிரவர்த்தியை சிம் மாதனத்திலேற்றுமன்னவே; (பு-வ-ம்.) மந்திரி! பிரயாணபேரிகை யறையச்செய்வாய், நான் வருமளவும் நீ ராசபாரதுகாப் பாய் பிரதானியே; (பி-வ-ம்.) மகாபாக்கியமரசே. (நள-வ-ம்.) ஆ! வைகுந்தவாசா! இதென்னகொடுமையை யென்மீதுகாட் டுகின்றனை, யிதுவுனக்கடுக்குமா! என்மன மெத்தவுந்துயரப்ப டுகின்றதேநாதனே; (த-வ-ம்.) பிராணநாதா! நீரொன்றுமில்லா ததற்கெனமா யின்று சித்திரையிலதிகமாக வாய்பினாத்தி, வெருண் டு, பயந்து, பகவானைநினைந்துருகியகாரணமென்னவோ யடி யாளுக்கறிவிப்பீர்துரையே.

---

## நளமகாராஜன் - விருத்தம்.

அன்னமேயென்னுயிருக்குயிரோமானே!
அறிவுள்ளபெண்மயிலேயடிநீகேட்க
என்னவெனயெடுத்துரைப்பேனினிக்கண்ணே!
எனையொருவன்கைப்பிடித்தேயிழுத்துமானே!
நன்னகரைத்தாண்டிவனத்திலமாதே!
நயனங்களதனைப்பிடுங்கநினைக்கோதே!
பன்னருமோர்க்கூச்சலிடமீசைதன்னைப்
பற்றியேசத்திறித்தான்பாவிதானே.

(நள-வ-ம்.) மாதே! ஒரு அகோரமான்புருடனென்னைக்க ட்டிப்பிடித்து, வனத்திலிழுத்துச்சென்று, இருகண்களையும்பி டுங்கி மீசையுந்தரிக்கக் கலங்கியழுதே னிதன்பலனென்னவோ கோதே; (த-வ-ம்.) தேவே! மந்திரிக்கிதை யுரைத்தறியவேண்டி யதாகும், அப்பா காவலனே! நீசென்று, மந்திரியை யழைத் தோடிவருவாய். (கா-வ-ம்.) நல்லதம்மணி; (ம-வ-ம்.) போற் றிதாவே! அடியேனை யின்னேரவேளையில் வரவழைத்த காரணத் தை வெளியிடும்படிக்குமது திருப்பாதங்களுக் கிதோ நமஸ்கா

ரம். (நள-வ-ம்.) அப்பா! மந்திரி! என்றுமில்லாத கினவுகண்
டேன், என்னமோ வதாய்வந்துமுடியுமோவெனக் கலங்குகின்
றேன்பாலா; (ம-வ-ம்.) அக்கினவெதுவோ யடியேன் கேட்க
வுரைசெய்வீர் தயாநிதியே.

### நளமகாராஜன் - தரு - பியாக் ரூபகம்.

கண்டகினவதைச்சொல்வேன்-கண்மணியேகவனிப்பாய்தான்
காரியின்கோனேதுசெய்யுமோ - காணேனேதொன்றுயேநான். ()
சிம்மாதனத்திருந்தவென்னை - செப்பற்றியேதிருடன் பாலா
சித்திரமோர்வனங்கொண்டேகிச்செய்தகோரங்கேள் சிலா(கண்)
வலக்காத்தைத்தரித்தானெந்தன் வளர்விழிகளைத் தோண்டிப்பாவி
வளைத்துமெந்தன்சிகையைபற்றி-வாங்கினனென்மீசைதாவி. ()

### மந்திரி - தரு - ஆகிரி - ரூபகம்.

ஆ! அரியே - இவர்மேலுன் - அருளில்லையோசரியே. (ஆ! அரி)
தேவியும்பாலருந் - திசைக்கெங்குஅலைவரோ
தெரியேனேதொன்று - மறியேன்சிறியேனான். (ஆ! அரி)
உத்தமமனஞ்சோர - அண்ணல்துயர் - பத்தியேவேசார
சத்தியம்பொய்த்ததோ - சஞ்சலம்வாய்த்ததோ
சாற்றிப்பயனேயுளந்-தேற்றலாகேனே நான். (ஆ! அரி)

### தமயந்தி - கன்னிகள் சாமா - ரூபகம்.

எந்தாணிவ்வாறு - ஏக்கங்கொண்டாய்கூறு
எம்பிரானருள்பாரு - அப்பா - நம்பியுனக்கேது. (எனி)
மகனேவரும்விதியை - மாற்றவுண்டோமதியை
மயக்கிவிடாதேபதியை-அப்பா-நயந்துரைப்பாய்கதியை. (எ)
அண்ணல்கலங்குறார் - ஆவியுஞ்சோருறார்
அடங்கியுரைகூறுறார்-அப்பா - இடிந்துதுயர்மீறுறார் (எனி)
(நள-வ-ம்.) அப்பாமந்திரி! நீ இவ்விதம் பிரலாபிப்பதேன்,
நான்கண்டகினவின்பயனை வெளியிடுவாய், (ம-வ-ம்.) என்தங்



தையே! உம்மை கட்டிப்பிணித்தவனக்காரியேயாகும், அவனி
ன்னொருவனென்றால், தங்களுக்கு கீழ்ப்பட்டவனைக்கொண்டு
தங்களரசைப்பறிக்கச்செய்து தங்களைப்பரதேசிபோலாக்கி வன
த்தில் என்தாயையும்பிரித்து, அவள் கற்புநிலைதவறிடுமென நீர்
கேட்கவு மதனா லங்கள்மனம்வெட்கமடைந்து விசனமுறச்செ
ய்வன் அதுதான், மீசையைக்களைவைக்கண்டபலன், திருடனைப்
போற்தோன்றியதால் தங்கள் திருமேனிவடிவுகுன்றிக்காட்ட
வும் வஸ்திரமின்றியொருவரிடம்பணியாளாகிருக்கச்செய்வான்.
நேத்திரங்களைதோண்டியதோ, தங்கள் வலக்கண்ணாகிய இந்திர
சேனனையும், இடக்கண்ணாகிய புஷ்பகேதுவையுந் தங்களை விட்டு
ப்பிரித்திடுவார்கள்தேவே; (நள-வ-ம்.)பாலா! மற்றதையுஞ்செ
ப்புவேன்கேளாய்; (ம-வ-ம்.) ஆக்ஞாபிப்பீர் பிரபுவே.

### நளமகாராஜன் - சரணம்.

ஓரிரதம்பற்றியோடகாணு-மொளியுமாண்பையுதிக்கக்கண்டேன்
ஒடியநிக்கள்ளன்வணங்கிவாழ்த்த - வுயரதாதுமுலாவிக்கொண்
[டேன்.

(ம-வ-ம்.) அப்படியா! சந்தோஷந்தேவே, யதின்பலனோ தாங்
களொரு யரசனுக்குச் சாரதியாருவீர்க்காலை காரிவாழ்ந்திப்
போவனுடனே, தேவியும், பாலருமொன்றாய்ச்சேருவீர்; இங்
குமங்குமெங்குந் தங்கள்கீர்த்திபரவி மேலானபதவியையடைவீ
ரானதா லெதுவந்தாலுந் தைரியத்தை விடாமலிருப்பீரென்கோ
வே; (நள-வ-ம்.)அயோத்திபனைவிட்டயெனக்கதிசமுண்டா? அவ
னயே மனைதனராமலனுபவித்து, மகிழ்ச்சியை யடைந்ததற்கு
க்காரண மனதின் வலிமையென பெரியோர்களால் கேட்
டிருப்பதனால், நான் திடத்தைவிடேன் பாலா, வரும்விதி வழித
ங்காது, நீயுன்னாண்மனைபோவாய்தோழா; (ம-வ-ம்.) நல்லது
சுவாமி, (நள-வ-ம்.) அடியென்னமுர்தப்பசங்கிலியே.

### நளமகாராஜன் - விருத்தம்.

அன்றுநான்துறவந்தகாலையாலே
அமரரைக்கைப்பற்றெனவுமாய்க்கோதே

கன்றலைவென்றெனை மறந்தாய்பயந்துதேனே
நாயகியேயவர் போகப்சுகிக்கர்தென்றும்
இன்றறிவாயென்னசுகம்மாறுங்காலம்
என்வினையுாலவரப்போருதேங்கிரரன்
கன்றிமுந்தயானைப்போற்கதறும்வேளை
கண்ணெளியேதுணையாரோகரேனேனேயோ.

(கன்-வ-ம்.) தமயந்தி, அன்று தேவர்களைப்பற்றாதெனை யுன்னிடம்வந்தபோது அவர்களிலொருவரை நீ மணந்தால் சதா போகத்திலிருப்பாயென்றும், என்னைப்போன்றநானை கைப்பிடித்தால் சிலகாலத்திற்குள் சுகமாரிச் சோக மநுபவிக்கவேண்டிய தென்றுனக்குத் தெரியச்சொல்லியும், அதைக்கேளாமற்போயினை, இனி யிந்தச்சுகமாறி துக்கவருங்காலை உன்னைப் பாதுகாப்பவர் யாரடி பைங்கொடியே; (த-வ-ம்.) பிராணநாதா, ஏனிப்படிக்கு அதிவ்யகலங்கியாநின்றீர்.

---

## தமயந்தி - விருத்தம்.

தேவருடன்மூவர்களும்ஞானமிக்கத்
தெளிந்தவருமன்னர்களுந்தேவேகேளும்
பாவவினையகற்றுமலனுபவித்தார்
பைங்கொடிமாரவ்வாறேபட்டதுணிந்தார்
காவலரோயுமதடிமையமறவாவென்னைக்
கரிவென்னசெயக்கூடும்கலங்கலாகேன்
சாவதிலும்பிறப்பதிலும்கோன்புமேலாய்ச்
சாற்றுதேநூல்சளைவாந்சரணநகோவே.

(த-வ-ம்.) என்னநாதா, மூவரும், முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளு மவரவர்கள் பத்தினிமார்களும், இப்பூமியை நீதியுடனாண்டயரசர்களும், வினைவந்தடைந்தகாலே, அனேகவிதமான துன்பங்களை அநுபவிக்காமல் மீண்டார்களா? எல்லோருக்கு மிது உடன்பிறந்தவியல்பன்றோ. அடியாளை யுமது திருப்பாதங்களை உள்ளன்போடுநியானிக்கும்நெறி



யிசகாதிருப்பவள் அந்தச் சநிதான்பென்னசெய்வான் மற்றதேவர்தானேதுசெய்யக்கூடும், பாவையாகப் படியிசைபிறப்பதிலுமிறப்பதிலும் பதிவிரதம்பூணலே மேலானதென சாஸ்திரமுருதியா யுரைக்கின்றதேநாதா! (நள-வ-ம்.) மெச்சினேன் அடிமெல்லியே.

---

## நளமகாராஜன் - கொலு.

(சே-வ-ம்.) போற்றிவேந்தே. (நள-வ-ம்.) என்னவிசேஷமப்பா சொல்லவற்சேர்லவ. (சே-வ-ம்.) சுவாமி யாரோ ஒரு அரசன் மெத்தவு மாட்டம்பரத்தோடும், சிலபரிவாரங்களோடும், ஒரு வெள்ளை எருதின்மீது ரத்தினசச்சிதமான கொடியை கையிற்றாங்கி நமது தேசந்தருகாமையாகச்செல்லுகின்றார்வேந்தே, அதைக்கண்டதாலறிவிக்கவந்தேன்தேவே, (நள-வ-ம்.) அப்படியா அப்பாமந்திரி நமதுதேசப்பாரிசமா யாரோவோரரசன்செல்வதால் நீசென்று என்வந்தனங்கூறி யின்றிங்கு போஜனமெடுத்தேகும்படியாகவழைத்துவருவாய்பாலா? (ம-வ-ம்.) நல்லதுதேவே, அரசே, யிந்தகிடதேசத்தை சத்தியம்பிசகாமலுத்தமநெறியோடாளாநின்றநளச்சக்கிரவர்த்தியினுடைய பிரதமமந்திரி வந்தனஞ்செய்கின்றேன்மகாராஜரே, தாங்க ளின்றிங்குதங்கி போஜனமருந்திச்செல்ல, எங்களாண்டவன் வந்தனமீந்தழைத்துவரச் சொன்னார். (பு-வ-ம்.) அப்படியா நாமெத்தவுந்துரிதமாக நேபாளமடைபச்செல்கின்றோ மிங்கு நெடுநேரந் தங்கப்போகாதாகிலும், சரியொற்றவர்வரவிட்டதையு மழிக்கப்போகாது, நல்லதுவருகின்றேன்மந்திரி, (ம-வ-ம்.) போற்றியாண்டவா, அழைத்துவந்தேன்; (நள-வ-ம்.) வாருமகாராஜரே, வந்தனம், ஆசனத்திலமர்ந்திருந்து தங்கள் தேசமெதுவோ யிப்போது விஜயஞ்செய்யும்படிக்குத்தேடித்துநடக்குமிடம்யாதோ, தாங்கள் காளகண்டதிரிநேத்திரனைப்போலரிஷபமேறியிக்கொடியைத்தாங்கிச்செல்லும் பெருமையாதோ, எனக்கு விளங்கச் செப்பவேண்டுமரசே; (பு-வ-ம்.) அப்படியேநாமிருப்பது இலங்கைத்திசையைச்சார்ந்த

ஏருண்டாரோ, நானதற்குத்தக்கவன், நம்மோடு சொக்கட்டா
னாட வெகுநாளாய் விருப்புக்கொண்ட நேபாளத்தரசனிடஞ்
செல்கின்றேன், நாமந்தவித்தையிலெவரையும் வெல்லத்தக்கவ
னென விந்த விஜயக்கொடிபிடித்தோம், பரமனுடன் ஒருகாலுச
ம்மாயாடிக் கெலித்தமையால் இவ்விட்டோகனமவராலளிக்கப்
பட்டது நளமகாராஜனே. (நள-வ-ம்.) சந்தோஷமிங்குதங்கிபோ
ஜனமெடுப்பதோடு ஓராட்ட மென்னுடனாடிச்செல்லவேண்டுகி
ன்றேனரசே; (பு-வ-ம்.) உமக்கிந்த விளையாட்டிற் பயிற்சியு
ண்டா? அப்படிக்குப் பயிற்சியில்லாதவருடனாடிக்கெலிப்பதை
ந்தாற் பாவம்சம்பவமாகும்அரசே; (நள-வ-ம்.) எனக்கிதில் மிகு
ந்தப்பயிற்சியுண்டு; (பு-வ-ம்.) அதுவல்சந்தோஷம்; (நள-வ-ம்.)
போஜனத்திற்கெழுந்தருளும்; (பு-வ-ம்.) நல்லதரசே. (ம-வ-ம்.)
ஆ! இதென்ன! இன்றரசர் வழியேசெல்பவனையழைத்துச்
சூதாட வெண்ணாநின்றார், இது கொடியசெய்கையென மனதிற்
கொள்ளாமற்போனதென்ன, நாமும் பேசாதிருந்துவிட்டோம்,
போஜனந்தீர்த்துவந்தவுடன் வேண்டியவைகளைச்செப்பியவரை
ச்சொக்கட்டானின் றீண்டாதிருக்கச்செய்யவேண்டுமீது நமது
முக்கியமுக்கியகடைமையேயாம்.

---

புஷ்கரராஜன் - விருத்தம்.

பொன்னுலகத்தோருண்ணும் புனிதவல்வுணவைமாற்றுந்
தன்மையையுடையவன்றி தான்கொண்டுகளித்தேனுள்ளம்
என்னதான்பலவாகுஞ்சென்ம மெடுக்கினுமிதுகிட்டாது
மன்னவாயிங்கென்மெய்தான் மறியேசோர்ந்தன்றோ.

(பு-வ-ம்.) இன்று நான்கொண்டவுணவால் என்ஜென்மம்பல
ன்பெற்றது, என்மெய்மறந்து நித்திரைவருகின்றது, உத்தரவா
கிற் சற்று சயனித்துக்கொள்ளுவேன் அரசே.

---



நளமகாராஜன் - விருத்தம்.

வேந்தனேநீரோகேளும் வெகுதேசங்கண்டபுண்ணியர்
சாந்தனேபலவாறுண்டி சாதிக்கக்கொண்டகன்யார்
காந்தினேமிதுவோர்மேலோ கமுருவேன்புகலிற்றாங்கல்
பாந்தரேபுணரல்பாலும்பழுமைதுந்கோர்ல்லோயாமே.

(நள-வ-ம்.) அரசே, நீரோ வெகுதேசங்களைக்கண்டவர், அங்கங்
குவேந்தர்செய்த விருந்தினைப்புசித் தானந்தித்தவ ரிதையொரு
பொருட்டாய் மதித்தாட்டப்போமா, அன்றியும்பகற்காலத்தில்நா
ங்குவதும், பாவையரைப்புணர்வதும், பாலைக்குடிப்பதும், பழைய
அன்னத்தைப்புசிப்பதும், நோயை விளைவிக்குமானதால், நாம்
சிங்காரமண்டபமடைந்து காலங்களிப்பாய் கழியும்படியானமு
யற்சி, ஓராட்டஞ்சொக்கட்டானாடுவோமன்றோ? (பு-வ-ம்.) அப்ப
டியே; (நள-வ-ம்.) உம்மைப்போல நானும் பலதேசங்களைச்சு
ற்றிப்பார்க்கவெகுநாளாயென்னாமுடையவனாயிருக்கின்றேன், ப
ரதேசமன்றுள் பன்னுங்காலமெப்போதமையுமோ வென்றெதி
ர்பார்க்கின்றேனரசே; (பு-வ-ம்.) சுவாமி, தங்கள்கோரிக்கையை
கடவுளதிசீக்கிரத்தில் கைகூட்டிவைப்பாரென வெண்ணுகின்
றேன்; (நள-வ-ம்.) சந்தோஷம், அப்பாமந்திரி, இவரோடு சற்
றுகாலம் போக்கவேண்டியிருப்பதால் சீக்கிரஞ்சொக்கட்டான்
பெட்டியை எடுத்துவரச்செய்வாய் நேசா; (ம-வ-ம்.) அரசே!

---

மந்திரி-விருத்தம்.

முப்பிறப்பில்தவஞ்சற்றுந்திமைசெய்த
மூர்க்கருக்காயிருபிறப்பிலுமைதானுஞ்
செப்பிடவல்வெசிமையல்மதவதன்னல்
சேரழிக்குஞ்சூதாடல்சிட்டிசெய்தே
இப்புவியிலிட்டிருப்பதறிந்துமாந்தர்
எண்ணுவதும்வரும்பிறப்பிலேழ்மையுட்டும்
ஒப்பில்சேரான்றோர்களிதையேயென்று
ஓதினேன்தருதியல்லவுணருவீரே.

(மங்-வ-ம்.) சுவாமி, முற்சென்மத்தில் நன்னெறியில் நடவாதவருக்காய், மறுபிறப்பில்அவர்வருந்தவன்றோ நான்முகன், கள்ளு, வேசி, சூது, ஆகவிம்மூன்றையுமமைத்தனுப்பி யிருப்பதென்றுணர்ந்த தாங்களிப்போது, சொக்கட்டானைத் தொடக்கருதுவது தங்களைப்போன்ற சான்றோர்கள் ஒருவருமுடையிடங்கொடுக்குமென்பதை வெளியிடத்துணிந்த குற்றத்தைமன்னிப்பீர் கோவே ; (சநி-வ-ம்.)இதுசமயம்நாம் ரிஷபத்திருப்பதைவிட்டு, ஓர்பிராமணனைப்போலாகி நளன்முன்னிருந்து அவன்மனதையுஞ்சிதறும்படி சூதையேயாடமயக்கி புத்தியையும்மந்திரிசொல்லும் நீதிக்கிணங்காதிருக்கும்படிச் செய்யவேண்டியது, அப்பா காவலனே! நான் தேவேந்திரனைதெரிசிக்கப்போனவிடத்தே நளச்சக்கிரவர்த்தியினுடையபெருமையை அங்கெல்லோரும்புகழவடியேன் முதலவனாதெரிசித்தபின், தேவேந்திரன்முதலானவர்களைப்பணிவோமெனஓடிவந்தேன்,உந்தன்அரசனெங்கிருக்கின்றாரப்பா ;(கா-வ-ம்.) இங்குசில்லுமதிவித்துவருகின்றேன்!தேவே! தங்களைக்காண தெய்வலோகத்திலிருந்து ஒரு பிராமணன் வந்திருக்கின்றான் சுவாமி ; (நள-வ-ம்.) வரச்செய்வாய்,வாருஞ்சுவாமிகளே, இந்தஆசனத்திலிருந்து வந்தகாரியமுரைசெய்வீர்; (வே-வ-ம்.) நானெடுநாளாய்த் தவம்புரிந்து தேவேந்திரனைதெரிசிக்கச்சென்றவிடத்தேஅவருக்குபேரனுஞ் சொக்கட்டானுடும் வேளையில் உமதுபெருமையை மிகக்கொண்டாடிப்பேசக்கேட்டநானும்மைவணங்கியபின் அவரைதெரிசிப்போமென ஓடிவந்தேனைய ; (நள-வ-ம்.) மெத்தசந்தோஷம், சுவாமி! அவர்களெனைக்கொண்டாடச்செய்ததுங்களனுக்கிரகமேயாகும்! அப்பா மந்திரி, இவர்வெளியிட்டதைக்கேட்டனையா, இச்செய்கைதகைமையற்றதாயிருக்கின் தேவர்களைத்தொடுவரோபாலா.

---

### மந்திரி - விருத்தம்.

மன்னவரேயதைத்தீண்டிலொழுக்கம்நீங்கும்
மானம்போம்தருமமதுமறைந்தேவோடும்
இன்னகரிலுமதுசத்தியநிலைமையாவும்
இறைவரேசெங்கோலுக்கிடரைத்தேடும்
பன்னரியதுயர்விளைக்கும்பலருமாடிப்
பரிகாசஞ்செய்யவிடம்படைக்குநாதா
என்மொழியைக்கிளியுரையார்க்குதலைச்சொல்லா
யேற்றிவிரிதுசமயமீசாபோற்றி.



(மங்-வ-ம்.) சுவாமி! சொக்கட்டானைத் தங்கள்திருக்கரத்தால் தொடில் ஒழுக்கமுந் தருமமும், ஓடியொழியும் ; சத்தியமென்னுங் கீர்த்தியைமாற்றும், செங்கோலுக்குந் தீமையைவிளைவிக்கும், பலரும் நகைக்கவிடந்தருமாதலால் என்மொழியைகுழந்தைவாக்காய்ச்செவிகொண்டு, நீங்கள் கீனத்தகாரியத்தைப் புரியமுயல்வதைத்தவிர்ப்பீர்நயாசிதியே ; (நள-வ-ம்.) மந்திரியிவரியம்பிய செய்கைமேலானதாலன்றோ அதிசத்தியவானானதேபாளத்தரசனிவனை வரவிட்டிருக்கின்றானெமதுப்பதை நானெப்புவேனாகி னிவனொன்னையொருவாறு தூரிப்பேச விடந்தருமாதலால், நீ ஒன்றுக்குந்தயங்காமல் எடுத்துவருவாய்பாலா.

---

### மந்திரி - விருத்தம்.

ஐயனேசூதாட்டங்கொடிதுநாதா
யனைகுவேன்சிறுமைவரவிதுவேதாம்
மெய்யனேபொய்க்குமதுயதிகநேசம்
மேதினியிற்களவிற்கோமிருந்தசுற்றம்
துய்யனைநன்னெறிக்கும்பகையாமிந்தத்
தொல்புவியிற்பவத்திற்கும்பழிக்குந்தாயாம்
செய்புதெந்தல்மனம்பலவாறெண்ணுதென்னி
கோகுதையாவிதைமறப்பீர்கோன்புளோரே.

(மங்-வ-ம்) சுவாமி!சூதென்பது தரித்திரம்வருவதற்குமுன்னானபுத் தூதனாகும், பொய்க்கி அதிகநேசம், களவுக்குஉறவு, நன்மார்க்கத்திற்குப்பகை, பாவத்திற்கும்பழிக்குந் தாயானதாலென்மனம்வாடுவதானீக்குவீர் ; (பு-வ-ம்.) இவான்சொல்வது

அக்காரியத்திலேயேமோகமாயிருப்பவிருக்கிறதன்றி, நாமொருவேளை காலம்போக்கத்தொடங்குவதை அதாக்கினையாய்க்கொள்ளபோகாதரசே; ஆம், நீசொன்னதுஞ்சரி, மந்திரிநீயிப்படித்தடுப்பதைநீக்கிடுவாய்அப்பாபிரதானிநீசென்று எடுத்தோடிவருவாய்.

### பிரதானி - விருத்தம்.

சூதாடனிதியுள்ளோர்க்குத்தகன்று
சொல்லுவேனாடுமிடஞ்செல்விற்பாவம்
போதாதும்வந்தடையும்படியாமாதைப்
புணர்வதொக்கும்போதக்களத்திற்முதுகுகாட்டி
ஓடாமலோடுவதையொக்குமன்மை
யோர்காதுதருமமதுவொடுங்கிப்போகும்
தீதன்வாழ்வனைத்துங்கவலைசூழுந்
தேவேசேவிநுவன்மைதெரிகுவீரே.

(பிர-வ-ம்.) தேவே! சூதுகெட்டது, அது ஆடுமிடம்போவதிறம் கோடியபாவங்களொன்றால் அடிமையின் பெண்டையிச்சித்தல் ரணக்களத்தில்முதுகுகாட்டியோடல்பஞ்சமகாபாதகங்களுக்கிருக்குங்குலை; இவைகளினிலேவந்தெய்தும், வாழ்வைப்போக்கித்தாழ்வைத்தரும் மறப்பீர்தேவே; (வே-வ-ம்.) நானிங்குவந்தமையால் உங்கள்காரியங்களுக் கிடையூரானதுபோற்காட்டுகின்றது; (நள-வ-ம்.) அப்படிக்கொன்றுமில்லைகொஞ்சம்போதாராதுமிவரும்சந்தோஷமாக வேராட்டஞ்சொக்கட்டானுடனிளைத்தோம்; (வே-வ-ம்.) சரிதான, நான்தேவர்களாடத்தான்கண்டேன், பூலோகத்திலேவர்களுமாடக் கண்டதேயில்லை, எதோ ஆடுவீர்கள் நானும்பார்த்து ஆநந்திப்பேன்; (நள-வ-ம்.) அப்படியே, அப்பாமந்திரி! பிரதானிகளே! தேவர்கள்மெச்சும்படியானதைஇகழுமெண்ணங்கொண்டவர்களே! இனியுங்கள் வீண்தர்க்கங்களைப்போக்கி சொக்கட்டான் பெட்டியையெடுத்துவர்துஎன்னுத்திரவைக் கனப்படுத்துவீர்கள்; (மந்-வ-ம்.) அரசருக்கு நாம் எவ்வளவோ நீதிகளோதியும் தான்ஆடவேதுணிந்தெ



ண்டார், அது அந்தச் சனியனுடைய கோளேயின்றிவேறில்லை; வருவதுவந்தேதீரும், இனி நாம் எடுத்துவரத் தடைசெய்யில் வேந்தர்தானே எடுத்துவரத்துணிவார், நாம் பிதாவாக்கை அசட்டைசெய்ததோஷம், பிராப்தமாகும் எடுத்துவருவோம், இதோ சொக்கட்டான்பெட்டியைக் கொண்டுவந்தேன்வேந்தே; (நள-வ-ம்.) சந்தோஷ மிப்படித்தருவாய்நேசா, அரசே இனிஆட்டத்தைத் துவக்கவேண்டுமே; (வே-வ-ம்) ஆட்டம் ருசிக்கும்வாறு ஒருபந்தயமிருக்கவேண்டுமே: (நள-வ-ம்.) ஆமாம்அதுவுஞ்சரிதான் அரசே, நீரென்னபந்தயங்கட்டுகின்றீர், (பு-வ-ம்) சுவாமிஎனது எருண்டகாட்டுச்செங்கோலாகியவிச்கொடியும்பரமளித்தவெருதுமிங்கின்றே னீரு முமதுசெங்கோலைபிடவேண்டியது, (நள-வ-ம்.) அப்படியேசம்மதித்திட்டேனினித்துவக்கும், நீர்தான்முன்னாடும், (பு-வ-ம்.) இல்லை நீரேயாடுமரசே.

(நள-வ-ம்.) இதோ நானுருட்டிய பாச்சிகையால் முதல்விழுந்ததேமுத்தாத்துகையென்பதுபோல பன்னிரண்டு, பத்து, இரண்டெட்டு, இருக்கால், நாலொன்றுவிழுந்தது நான்வைத்துக்கொண்டேன் இனிநீராடும்.

(பு-வ-ம்.) எனக்குப்பகடை ஆறொன்று விழுந்ததுஅரசே.

(நள-வ-ம்.) இரண்டுபனிரெண்டு இருக்கால்-6-1-விழுந்தது.

(பு-வ-ம்.) இரண்டுபனிரெண்டு இரண்டுபத்துஇரண்டெட்டு. துகை, இருக்கால், நாலொன்று விழுந்தது பார்த்தீரா.

(மந்-வ-ம்.) ஆ! இந்தமாட்டுக்காரனுக்குமும்பந்தயங்களை நோக்கில் நமது அரசர் தோல்வையடைவாரென்பதற்குச்சந்தேகமில்லை, விதியே! இவர்மதியை யிவ்வாறு புரிந்ததும் அக்காலியின்கோளோ! அல்லது, நாம்தேவியாரிடஞ்சென்று அறிவித்து வேந்தரையிவ்விபரீதசெய்கையிலிருந்துவிடுவிக்கவேண்டுவோம்

(நள-வ-ம்.) சரிதான்வைத்துக்கொள்ளும் மூணைத்தொன்று நீராடும். (பு-வ-ம்.) பனிரெண்டுபத்துஎட்டுதுகை நாலொன்று விழுந்ததுஎன்னுட்டம்செலித்தது, இனி உமதாக எனதாயிற்று.

(மந்-வ-ம்.) போற்றி என்னம்மணி, தங்கள் திருவடிகளுக்கே போற்றி, (தம-வ-ம்) வாழியப்பா மந்திரி, ஏது நீயின்று மெத்தவுமிரங்கிய முகத்துடன் கண்ணீர்வடித்துவந்த காரணமியாதோ சீக்கிரம்விளிசெய்வாய்.

மந்திரி - விருத்தம்.

அன்னையேயென்னசொல்வேன்வேந்தர்தானு
மறிவகற்றியெங்கள்முறைவனைத்துமோட்டி
தன்னிலைமைமறந்தாமம்மாசூதையாடத்
தான்றுணிந்துஞ்செங்கோலைப்பந்தயமிட்டார்
வன்னமாயெதிரிக்கேகெலிப்பாய்ப்பாச்சி
வழங்குதேயென்செய்வேன்வருமைசெய்ய
முன்வினைவந்தடையுமுன்னேதந்தைநாடு
மோய்குழலேயடைந்திடுவீர்மோசமின்றே.

(மந்-வ-ம்.) அம்மணி, நமதுராஜா வரும்விதியையறியாமல்வ ழியேபோகு மேருண்டநாட்டானை அழைத்தவனோடு சொக் கட்டாடவெத்தனிக்கவும், நாங்கள் எவ்வளவோ எடுத்தோ தியுங் கேளாமற் செங்கோலைப் பந்தயமாகயிட்டுத் தோர்வடை யுந்திசையிலிருப்பதால் தாங்களவருக்கு வேண்டியதைச்சொல் லிகிருந்தவேண்டும், இல்லாவிடி னித்துயரம்வருங்காலமான தால்,குழந்தைகளை அழைத்துக்கொண்டு விதர்ப்பதேயம்போவ துத்தமம் தாயே ; (தம-வ-ம்.) பாலா ! நான் கணவருக்கு அங் குதோன்றி புத்தியுரைப்பது அடாது, அவரைவிட்டு நான்றாய் மனைபோவது மொப்பாது, ஆனாலவர்தோர்வடைந்து துயரனு பவிக்கதியிருந்தாலெப்போதும்விடாது, நானுமவருடன்கஷ்ட த்தையனுபவிக்காமலகலவும்போகாது, ஆனாலிந்தச் சிறுவர்க ள் வருத்தமடைந்து நடவார்கள் இவர்களுக்கு எங்கள்வரு மைகாலையி லெவ்விதம் வித்தியாப்பிசமும் சிறிதாட்டங்களையும் போதிக்கலாகு மான்தால், இவ்வென்னருமைமக்களை விதர்ப் பதேச மிப்போதே அனுப்பத்தக்க முயற்சிசெய்வாய் அப்பா ; (மந் - வ -ம்.) தாயே முன்னமேசிவிகையையுஞ்சேனாதிபதியை யுஞ்சித்தஞ்செய்திருக்கின்றேனம்மா ; (தம-வ-ம்.) அடா என் கட்டிரசமேகற்கண்டே! ரத்தினமே! நீ பிறந்தநாளா யுன்னையு முன்றங்கையாகிய புஷ்பகெந்தியையும் என்தாய்தந்தைகளாகிய உங்கள்பாட்டனும் பாட்டியாரும்பார்க்கவேணுமென மெத்தது,



வல்கொண்டிருப்பதா லிந்த சிவிகையேறி விதர்ப்பதேசமடைந் து அவாள்மனங்களிக்கச் சிலகாலமிருந்தால் நானுமுன்தந்தை யும்வந்து உங்களையழைத்துவருகின்றோமடாகண்மணியே: (இ- வ-ம்.) தாயே?தாங்களிவ்வாறு என்னிடத்தில் மாறுபாடாய்வா ர்த்தையாடுவது மவ்வரியினருளோ ! யந்தக்காரியின்கோளோ! தெரியேன், இப்போதிங்கு மந்திரியதிகதுயரத்தோடு வந்தோதி யதும் நீங்களாலோசித்துத் தீர்மானித்ததையு மறிந்திருப்பத லாலென்மனந் தங்களைவிட்டுப்பிறிய ஏக்கமாகின்றதடி.

11/7.01

இந்திரசேனன் - தரு - கமாசு ! ரூபகம்,

எப்படிப்பிரிவேன்-அம்மா-வுன்னை-எப்படி. (எப்)
இப்படியுமயன் எழுதியிருந்தானோ
எங்குதம்மாவுள மேங்கித்துயரேனோ. (எப்)
ஆர்செய்ததீவினையோ அம்மாவிந்த
அரிவிட்டபல்வினையோ
பாரோரிகழ்ந்திடப் பரிகாசஞ்செய்திடப்
பாலவயதிற்றுன்பம் பற்றியமைந்திட. (எப்)
தாயில்லாச்சேய்களென்றே எங்களைபலர்
தாறுமாறாப்பார் அன்றோ
வாயில்லாப்பூச்சிகள்போல் வருந்திடலானதே
வளர்ந்துசுகப்பனிபோல் வாடிப்பின்போனதே. (எப்)

(தம-வ-ம்.) அடா ! என்னறிவிலுயர்ந்த கண்மணியே ? நீ இ வ்வாறு சிந்தைகலங்கப்போகுமா, உங்களை என்தாய்தந்தைகா ள் எங்களைவிட எண்மடங்கதிகமாகப் பார்ப்பரேயின்றி, அசட் டைசெய்யார், நாங்களுஞ்சிலகாலத்தில் வந்தழைத்துவருகின் றோமடாமைந்தா ; (இ-வ-ம்) அம்மணி கண் ணிற்படுவதினும், கைவிரல்புருவத்திற்படில் கரிக்குமா உன்குடல் எங்கள்விஷயத் திற்றுடிப்பதுபோல என்பாட்டியாருக்குக் காட்டுமோதாயே ; (தம-வ ம்.) மகனே? நீ அப்படிக்குவேறுபாடுகினையாதே,அவா ளெங்கு, உன்னைபேதாகினும் விருப்பமின்றி நடத்துவதைக்கன்

டாஹுடனே என்னிடம்வருவாய் சேனாதிபதியை யுன்னிடமே இருத்திக்கொள்ளடாபாலா ;(இ-வ-ம்.) நல்லது அம்மணி.

---

## இந் - தரு - தர்பார் - சாபு.

போய்வரவோ அம்மா நான். (போ)
போறேன் தாயு ராமேன் மனது
சோறேன் மொழி மீறேன் நான். (போய்)
பத்துமாதந்தாங்கிப்பெற்றுவளர்த்திட்ட
பத்தினியேயடியம்மா-இந்த
பாலப்பிராயத்திலுங்களைப்பிரிந்தும்
பாவியிருப்பேனோ அம்மா
சுத்துதென்னறிவுஞ்சுழலுதென்விழியும்
சோருதேமேனியுஞ் சுகமேதினியுஞ்
சத்தியம்பொய்த்ததோ சதியருள்வாய்த்ததோ
சாரா யுடன் வாரா யின்றிப்பாரா யிடர்தேராய். (போ)
முன்செய்தபழியோ என்வினைக்குறியோ
மூதையுந்துதாட அம்மா-இனி
முன்னுக்குஇன்னுட்டின்மன்னவருனை
முராரியருளுண்டோ அம்மா
லென்செய்யலாகும் எவ்விதங்கூடும்
வன்துயர்நீங்கும் வளமென்று ஓங்கும்
நன்மைபெறக்காலம் நமக்கேதனுகூலம்
நாடி-வனத்-தேடி-யுடன்-ஓடி-யங்கு-வாடி-அம்மா.(போ)

(த-வ-ம்.) மகனே!நீ யொன்றுக்கு மனங்கலங்காதேஅடா, கண்மணியே! நானுமுன்தந்தையு மதிசீக்கிரத்திற்காரியங்களைத் தெரிந்துகொண் டுங்களிடம் வருகின்றோமடா பொன்மணியே.
(இந்-வ-ம்.) தாயே.

---

## இந்திர - ஸ்லோகம்.

அரிராபிஅரநாபி ப்ரமனாபிசுரோத்தா
ல்லாடவிக்ரோகோ பரிமாணம்நசக்கதே.



(இ-வ-ம்.) விதி யெவரையும்விடாதன்றோ, போய்வருகின்றேன், என்தந்தைக்கு என் நமஸ்காரங்களைச்சொல்லிவிடு தாயே, அடியேன் தங்கள் திருப்பாதங்களுக்கு நமஸ்கரிக்கிறேன் அம்மணி. (த-வ-ம்.) சுகமாய்ப் போய்வருவீர்கள் என் கண்மணிகளே.

(பு-வ-ம்.) நளராஜனே! ஏன் இன்னத்தடை, இனிப்பந்தயங்கட்டவுமக்கு உமது மாதாகிய தமயந்தியின்றி வேறொன்றுமில்லை, அப்படிக்கிட்டு நீ யாட்டத்துணிந்தால்; எனக்குசம்மதமே, இல்லாவிடில், உமது செங்கோலைக் கொடுப்பதுடன், நாடு, நகரி, பண்டு, பக்ஷிகள், போக்கிஷம், சதுரங்கசேனை வஸ்திரம், ஆபரணங்களும் என்னைச்சேர்ந்ததாகையால், என்மந்திரிவசமொப்பித்து;நீரும்உமதுபெண்மணியும், பிள்ளைகளும், கட்டினவஸ்திரத்தோடு இடத்தேயத்தெல்லையைக்கடந்து நடக்கவேண்டுமாக்கும், சம்மதியாகில், என்னிடத்தில் நீர் அஸ்வலக்ஷணங்களில் தேர்ந்தவராகையால் கூலியாளாயமர்ந்திருக்க ஒப்புவீராகில் உமக்குமாதம் ஒன்றுக்கு (ரூ) பொன்கொடுக்கின்றேன். இதில் உமக்கெதுயுக்தமோ சீக்கிரம் வெளியிடுவீர் ராஜனே, காலம்போக்குங்குணத்தை யிமது கண்டிப்பது முக்கியகடமையாகும்,

---

## நளமகாராஜன் - விருத்தம்.

உன்னுடைசெயலொவ்வின்றி யுதித்தநாட்கோளோவெந்தன்
அன்னைதந்தையர்கள்செய்த அருப்பழிப்பயனோவாய்ந்த
பின்னெடியாள்புரிந்த மிடியதோசகிதன்கூற்றோ
என்னரும்பவமோநீதி யின்றதில்வருவோகாணேன்.

(ந-வ-ம்.) ஓ! வைகுந்தவாசா! மந்திரிபிரதானிகள் எவ்வளவோ தடுத்துரைத்தும் கேளாமல் புத்திமயங்கி சதியன்செய்த மாயையை யுணராமல், வலிய சூதாடித் தோல்வடையச்செய்தது, என்வினையா? மாதுதமனரர்த மகிழ்ச்சியா? மக்களைப்பெற்ற பெருமையா? என் மாதாபிதாக்களியற்றிய தீங்கா? மங்கை தமயந்தியினுடையபாவமா? அல்லதுஎன்நீதிவழுவானதுவோ? அறியேனே நாதா! ஓ அரசே!நான் பந்தயங்கட்டியவாறென்செங்கோலை யொப்புக்கொள்ளுமையா, அப்பா மந்திரி, மதியூகியிவருக்கொப்பித்

துவிடுவாய், எனினுநீ யின்றுடனெல்லையைத்தாண்டிச் செல்லவே
ண்டியதுபாலா. (பு-வ-ம்.) அப்பா மந்திரி, நீ சகலமுமொப்புக்
கொள்வதுடன், அதிசீக்கிரத்திலிவ்விடத்தில் நாமடைந்த சந்தோ
ஷசங்கதியை புஷ்பமாநகரத்திலிருக்குமென் தேவியார்மகிழும்
படிக்கறிவித்திங்குடனே வரவழைப்பாய். (ந-வ-ம்.) ஐயாபு
ஷ்க்கரனே நானும்மை முன்விசாரித்தபோ துண்மையைவெளியி
டாமல்வேறுநாமத்தையும்,நாட்டையுஞ் செப்பினீரோ,அதுஇரா
ஜ நீதிதானோ. (பு - வ - ம்.)உம்மைப்போன்ற வதிவீரரையர்த்த
வரோ டுதாட வுடன்பட்டபோது நான் பொய்புரைபுரிவது குற்
றமா? (வே-வ-ம்.) அல்லகாணும் நளமகாராஜனே, சீராடியதெ
ன்ன? (ந-வ-ம்.) சூது; (வே-வ-ம்.) சூதென்பதே பொய்க்கித்
தாயல்லவோ, யினி யிவ்யோசனையைவிட்டு விண்ணுலகையா
ளுந்தேவர்களதியாவலாய்மணரவேண்டிவந்தமயந்திக்குத்தனி
த்துச்சென்று என்னென்னபோதித்தன்வசஞ்செய்துகொ
ண்டசுகமிதைவிடச் சிறிதோ, பெரிதோ, யினிதெரியப்போரீர்,
கேடுவரும்பின்னே மதிகெட்டுவருமுன்னேவென்பதறியீரா? இ
னிநீர் போகும்வழியை யோசியும்வேந்தே, நானுந் தெய்வலோ
கஞ்சென்றுஇச்செய்தியையிந்திரனுக்கும்மற்றவர்களுக்குமறிவிக்
கின்றேன். (ந-வ-ம்.) விதியே! என்னைப் பலரும் நகைத்து நை
யாண்டிசெய்யவாவிட்டனே.

---

## நளமகாராஜன் - தரு - கருட்ப் - ரூபகம்.

ஏனிந்தமதியீந்தனே அரியே-சரி- சரி-சரி-சரி சரி-சரியே
நானினிவாழ்தல் - நாயபோல் நாயமோ. (ஏனிந்த)
செங்கோல்பிடித்தோர்க்கரசனுகிச்
சிரணித்துமிருந்தவென்னை
சிறுமைப்பட - வறுமைவரச்
செய்தாய் - செய்தாய் - செய்தோனீயே. (ஏனிந்த)
தீண்டலாகாச் - சூதையாடத்
திகழுமன்மதியைக்கமுடப்



பூண்டபணி - துணிகளையும்
போக்க-போக்க-போக்கினேநீயே. (ஏனிந்த)
எங்குசென்று - வசிப்பதென்
எங்கிருத்துய - ரோங்குதையோ
இங்கிவ்விதி - யமைக்கக்கொண்ட
எண்ணம் - எண்ணம் - என்னவோ நீ (ஏனிந்த)

(பு-வ-ம்.) நளராஜனே, என்கையிற் செங்கோலைக்கொடுத்து
நீரிப்படிக்கழுவதழகாமோ, எந்தன் கொலுச்சாவடியைநீங்கி அ
ப்புறஞ்சென்று அரியையாவதுமினையு மல்லது குள்ளநரியையா
வதுமினையும், எதுவுமிந்த வெரியைநீக்கவுரியதாகாது, சீக்கிர
மும்மையபூஷணவஸ்திரங்களை என் மந்திரிவசங்கொடுத்துவிடு
ம். (ந-வ-ம்.) நல்லதையா புஷ்க்கரராஜனே; (ந-வ-ம்.) அப்பாபு
ஷ்க்கரராஜன்மந்திரியே? இதோ என்வஸ்திராபரணங்களை ஒப்பு
க்கொள்ளுவாய். (ந-வ-ம்.) வைகுண்டவாசா.

---

## நள - தரு - அடாரூபம் - ஏகதாளம்.

சரியிதுஉனதருள் - சதுர்ப்புயத்தோனே
சகிவந்துதொட்டதுந் - சம்பத்தைவிட்டதும். (சரி)
விரிவுலகாண்டதும் - விரைந்தைபூண்டதும்
வேகமே - யோகனே - சாக்செய்திடுந்தநி. (சரி)
எரியுதென்றுவியும் - எக்கியேதாவியும்
ஏமனே யேவந் - தாமதம்யிடுந்தநி. (சரி)
கைகொட்டிமாதுமே - கறையவெப்போதுமே
காவலா - மாவலாய் - வேதைபோக்கிடத்தநி. (சரி)

(தம-வ-ம்.) அம்மாதோழி, நீஇவ்வளவுகண்ணீர்சொரியவந்த
காரணமென்னமோ, கொலுமண்டபத்தில் ஏதாகிலும் விசேஷ
நடக்கக்கண்டாயா? சீக்கிரம்வெளியிடுவாய்; (தோ-வ-ம்.) நா
னென்னவென்று எடுத்துரைப்பேன், எங்களுக்கெல்லாம்பெரு
மான் எழுதியிருக்க எழுத்தைத்தாயே; (தம-வ-ம்.) அதென்ன
வம்மா; (தோழி-வ-ம்.) நமக்குக்கப்பமிந்து கைகட்டி, வாய்
புதைத்து நிற்கும்படியான ஓர் சிற்றரசனுகிய புஷ்க்கரனுடனே

சக்கிரவர்த்தி ஆகிவுஞ் சொக்கட்டான் ஆடித் தோல்வடைந்
து செங்கோலை ஒப்பித்துப்போகிறான் அணிந்திருந்த ஆடையாப
ரணங்களையெல்லாம் கழட்டிக்கொடுக்கக்கண்ட என்னுயிரின்
னும்போகாமலிருப்பதும் நான் முன்செய்தவினையே அம்மணி;
(தம-வ-ம்.) அப்படியா ஆ! என்தன்,

---

## தமயந்தி - ஸாவேரி - பியாக் - ஏகதாளம்.

விதி - யே நீ விளைந்த பரியாமே. (விதி)
நேத்திசேத்தி செட்டுயிர்விடல்
தேத்துவோரார் ஒதோது-தவம்
ஆற்றிற்புளியாச்சதே. (விதி)
எண்ணியெண்ணியிந்தசோகம்
எக்கமாவதென்னோ-முன்
பண்ணியபாவம்போமோ-ஓ. (விதி)
அருடவாழ்வை யகற்றினேனோ
அன்றியேதோ சீ-சீ-சீ-இனித்
தேருங்காலம்வருமோ ஓ. (விதி)

(தம-வ-ம்.) ஓவைகுந்தவாசா! நீயே என்துரைக்குத்துணை;
(ந-வ-ம்.) நாமிங்கு தயங்குவதிற் பயனில்லை, தமயந்தியைப்
போய்க்காணுவோம், ஆ! இதென்ன? அவளுங்குரலோட்டியழு
கின்றனளே!

---

## நளமகாராஜன் - விருத்தம்.

அன்னமேகுயிலேமானே ஆசைப்பொட்டகமேதேனே
கன்னகன்மொழியேயந்தக் காரிதன்செயலாலின்று
என்னகர்பணிபட்டாடையெவற்றையும்புஷ்கரர்க்கே
புன்மையாற்குதிற்றேத்தேன் போம்வழியறியேனானே.

(நள-வ-ம்.) அடி யறிவிலுயர்ந்தஅன்னமே! சகியன்கூத்தாலி
ன்று என்மதிமயங்கி புஷ்கரனுடன் சூதாடிஎன் செங்கோலைத்
தோற்றேன், என்னசெய்வேன், இனி யெங்கு செல்வேன்,
எமனுக்குந் தயவுவரவில்லையேமாதே, (த-வ-ம்.) பிராணநாதா!



வருவதெல்லாம்வந்தே நீருமெனும்வாய்மையையறிந்தவராயிருந்
தும், நீரிங்கு தைரியத்தைப்போக்கியதிகதுயரத்துடன் கண்ணீ
ர்வடித்தலரியகுரலோடழுவதை யடியாள்கேட்டவுடனேஎன்ப
ணிகளையெல்லாங்கழட்டி யிதோபாரும் பாதங்களுமன்றியக்கரு
தர்தவஸ்திர முடுத்திக்கொண்டு நீர் வருவதை யெதிர்பார்த்
திருந்தேன். இனி நாமிங்கிருக்கப்போகாது, வெளிப்படலாம்
வருவீர் நாதா. (நள-வ-ம்.) அடிமாதே! நமது புத்திர
ர்கள் எங்கடி என்தேவியே. (த-வ-ம்.) பிராணநாதா! உமது
சொக்கட்டானாட்ட முடிவாவதற்குமுன்னமேதோர்வையுடை
யிரன வறிந்துணர்ந்த வமச்சன்கருத்தின்படி அடியாள் குழ
ந்தைகளை விதர்ப்பதேச மனுப்பினேன், தங்களுக்கறிவிக்காமற்
செய்தகுற்றத்தை மன்னிப்பீர்துரையே. (நள-வ-ம்.) மாதே
நீசெய்தகாரியமோ மெத்தவுமேன்மையானது, மந்திரி நானுந்
தேசிக்காமுன் நீயுணர்ந்துசெய்த வுபகாரத்திற்கு மாறுசெய்ய
த்தக்கது மன்னிலுண்டோ, வெகுவுந்நாணே னிதோ வந்த
னம்நேசா.

---

## நளமகாராஜன் - விருத்தம்.

அன்னமேகுயிலேஎன்னை அடைந்ததாற்சநியன்தானுஞ்
சொன்னமேபலவாற்றன்பஞ் சூட்டுவான்வருத்தெடுப்பான்
என்னிருபுதல்வரோடு எந்திழாயுன்தாய்வீடு
நன்னதாய்ச்செல்வாய்பாவி நற்காலமறிந்தேவாரேன்.

(நள-வ-ம்.) அடியென்னாசைமனோரஞ்சிதமே? சனியனுடை
யகாட்சகழியும்வரையி லென்னை யதிகாயதிகமாய் வருத்தங்க
ளையனுபவிக்கச்செய்வானாதலால், நீயோ பெண்பால், நமதுபா
லகர்களுக்காதாரணையாய் உன் தாய்வீடடைந்து சுகித்திருப்பா
ய், நாமோபாவி, நற்காலம்வந்தவுடனுன்னிடம்வருகின்றேனடி
மானே. (த-வ-ம்.) துரையே.

---

## தமயந்தி - விருத்தம்.

கணவனுடன்சுகமதனிற்களித்தமாது
கைப்புவரக்கண்டகன்றுற்காணுநாதா!

பிணமதினுங்கிழானனிலக்குள்ளாவாள்
பேசரியபாழ்நரகமட்டாய்வேறு
குணமுள்ளதாயன்மதியிலேறுவருபனையா
கொற்றவரேதந்தைதாயகம்நீசிக்கிக்
கண்பிரியேன்வருந்துமயானாளுங்கொள்வேன்
காமினியோரிகழாமற்காப்பீர்நாதா.

(த-வ-ம்.) பிராணநாதா, கணவனுடன் சவுக்கியகாலத்திற்கூடிச் சகலபோகங்களையுமனுபவித்து, கஷ்டதிசைவரிலவனைவிட்டுப்பிரிந்து தன்சுகத்தைநாடிச்செல்லும்நாரிகாகவன்றோ, எமனேழுநரகங்களுக்கு மதிகக்கொடிதான ஓர் பாழு நரகக்குழியை வேறுயேர்ப்படுத்துவான், தங்களுடன் பெருமைகாலத்தில் வாழ்ந்திருந்ததைப்போலவே சிறுமைகாலத்திலுமிருப்பேனென் விரதத்திற்கிழிவுவாராமற்காப்பதுமதுடன் பத்தாவே, (ந-வ-ம்.) அல்லடிமானே.

நளமகாராஜன் - விருத்தம்.

கட்டும்வஸ்திரமின்றிக் களிப்புறத்தாகியின்றி
இட்டம்போற்புசிப்புமின்றி யினைப்புறமஞ்சமின்றிக்
குட்டவென்பின்னேபற்றி தொலைதேசம்பலகாடேற்று
மட்டிலாவறுமையேந்த மாளாதுன்றுலேமானே.

(நள-வ-ம்.) உடுத்திக்கொள்ளத் துணிகளும் பணிவிடை செய்யத்தாதிகளும், புசிக்க ருசியுள்ளபாகங்களும், தூங்கமஞ்சமுமில்லாமல், அறிவின்மையாற் குகாடி அரசையிழந்துபலநாடுங் காடுமோடித் திரியப்போகுமென்னுடனிருந்து துன்பங்களை யனுபவிக்கவுன்னலாகாதுடமயிலே(தம-வ-ம்.) துணையே.

தமயந்தி - விருத்தம்.

ஆளனுடன்றுறந்திசையில்மங்கைதானு
மாடைபணிகேரரில்வன்பரதத்தையாளும்
காளமதிற்கொப்பலவோகணையைக்கோரிக்
கணவனைவிட்டகலுபவள்காட்டிப்பேயாம்



மீளவவனுடனிருப்போள்மென்மைப்பெண்டாம்
மெய்யரோயுமைத்தனிக்கமெல்லினாடேன்
தாளடிகளெனக்குமேதிம்பதியதாகுந்
தனைவிடுத்தாலந்தகனுந்தண்டிப்பானே.

(தம-வ-ம்.) பிராணநாதா, புருஷனுக்கு கஷ்டகாலம்வந்தபோது, வஸ்திராபரணங்களைக் கேட்பவளே வேசி, நல்லபோசனங்கோருபவளே கருநாகப்பாம்பு, கணவனைப்பிரிந்து செல்லக்கருதுபவளே காட்டில்வசிக்கும்பிசாசம், கூடவேயிருந்துசகிப்பவளே உத்தமி, நாதா; உமது திருவடிகளே எனக்கவ்வைகுந்தம், உம்மைப்பிரிவேனாகிலென்னைத்தண்டிக்கஎமனெதிர்ப்பான், நான்தாய்வீடுபோகக் கினவிலும்நினையேன்பத்தாவே.

நளமகாராஜன் - விருத்தம்.

வஞ்சியேயுரைக்கக்கேளாய் வருமவிதிவழிதங்காது
கஞ்சியுங்கூழுமின்றிக் கனிசாகருந்துங்காலம்
மிஞ்சியவருமோமேனி மெலிந்திடுந்தொழிலமைக்க
அஞ்சிலென்செய்வேனென்று அலையுதென்னிதயங்காணே.

(நள-வ-ம்.) அடி பொன்மரகதவல்லியே, பசியெழுந்தவேளையிற் புசிக்க அன்னம், அல்லது கஞ்சி, அல்லதுகூழுமின்றி காட்டிற்கனிகளையு மிலைகளையும்புசித்துக் கடினமானவேலைகள்செய்ய நீ பின்னிடுவையே, அப்போது நான் என்னசெய்வேனடி அன்னமே ; (தம-வ-ம்) என் பத்தாவே.

தமயந்தி - விருத்தம்.

தரணியிற்சாதிக்கேயின்றதாயோ
தமையனோதனைவனையப்பனோவோது
அரசரேநீர்தான்கொடியபணியைச்செய்கி
னடியாளும்புரிவதுமோரகாதமன்று
திரமுடனத்தாய்கேர்ப்பஞ்சகித்தாலன்றோ
தீங்கற்றிச்சிசுவளருந்தேவேயிந்த
உரமெனக்குள்ளிருப்பதனுமையேங்கே
உத்தமரேயென்னைப்பிரித்தலுமக்கடாதே.

(தம-வ-ம்.) சுவாமி! பதிவிரதம்பூண்ட பெண்களுக்கு கணவனே, தாய்தந்தையென்று நூற்பேசுவில்லையா! எனதியாதவர் போலபினவிக்கின்றீர், நீரோ கஷ்டத்தை யனுபவிக்குங்காலை நானனுபவித்தலரிதா, தாய்க்கிச்சுகமிருந்தாலன்றோ சிசுவிற்குஞ்சுகம், என்னைப்பிரிந்துபோகச்சொல்வது உமக்குரியவென்னைமன்னித்தாட்கொள்ளும்பிராணநாதா; (நள-வ-ம்.) என்னவிபரீதகாலம்வந்தது, நமதுமொழியை என்றுந்தட்டாத உத்தமியின்றிப்படி மறுத்துப்பேசுகின்றாய் விதிவும்வினையின்கூற்றேயன்றிவேறல்ல, இனிப்பன்னிச்சொல்வதிலும் பயனில்லை, அரசமர்ந்தைப்பிடித்த சனி பின்னையாரையும் பிடித்த தென்பதுபோலாயிற்று, என்னசெய்வது அவனிஷ்டப்படி நடக்கவேதகுதி, மாதே? உனக்கப்படி இடமனமிருக்குமாகில் நாமிருவரும் வேறெங்காவதுசென்று வந்தசலத்தைக் கழிக்கலாங்கண்டோ; (தம-வ-ம்.) மெத்தவானந்தங்கொண்டேனிப்போ தென்கோரிக்கை யீடேறிற்றென்பிராணநாதா, என் தருமமும்பலித்தது, நான்பெருங்கீர்த்தியும்பெற்றேன், புனிதனானேன், புகழடைந்தேன், உமது திருப்பாதாரவிந்தங்களுக்கிதோ பிரசாஷ்டாங்கமாய்ப்பணிந்தேன், பத்தாவே; (நள-வ-ம்.) வாழி நீவாழி, உன்கற்புநெறிவாழியபடி யென்மாத்திரத்தினமே; (நள-வ-ம்.) அப்பா மந்திரி இனி எனக்குப்போகவிடைதருவாய்க் காலதாமதஞ்செய்யப்போகாது, புஷ்கரன் மறுப்படியும் போவெனும்வார்த்தை என்செவிகள்கேட்கப்போகாது.

---

மந்திரி - தரு - சாமா - ரூபகம்.

என்னகால்கெதியிது இன்றுமக்கேவந்ததையோ.
நன்னிலையுங்காடுநேர்ந்த நரகிணைப்பெதைபோல. (என்)
முன்னூர்செய்ததிங்கோ நாதா-யல முனிவர்சாபக்கோனோ பாதா
இன்னுமென்னைப்பிரிய ஈசனிட்டமோசமிய. (என்)
ஆடியமைந்தொழுவேன்பாவி என் அன்னை போலவேணப்பார்தாவி
சீரகற்றிச்செல்வம்போக்கிச் சிறுமைப்படவிலையோக்கி. (எ)



புஷ்கரனுக்காளாகினேன் இப்புவியி லுயிர்வைக்கிலேன் நான்
நிஷ்கரம்நானிடதம்விட நீங்கத்துயரோங்கத்தொட. (என்)

(தம-வ-ம்.) பாலா, அறியாதவனைப்போல ஏனிப்படி மனங்கலங்குகின்றாய், நமக்குத்திடீலெனவந்த இத்துன்பமுஞ் சிலகாலந்தான், இது நீங்குவது ஒருபெரிதா, சுகமெப்படி நீங்கியதோ அப்படியேவந்ததுன்பமுஞ் சிலநாளிருந்து நீங்குமென்பதற்குச் சந்தேகமுண்டா? உனக்கந்த வைகுந்தன்கொடுக்கும்புத்தியைப்போல காலத்தைக்கழிப்பாயாக; (மந-வ-ம்.) நல்லது மாதாவே; (தம-வ-ம்.) சுவாமி என்பிராணநாதரே! நீரிப்படிக்குக் கண்ணீர்வடிப்பதழகாமோ.

---

தமயந்தி - விருத்தம்.

முன்வினையாலயன்சிரசை அரனுங்கிள்ள
முடிந்திலையோசங்கரனும்அரியாற்றேவே
புன்மதிகொண்டோர்காய்க்குள்ளடங்கலானன்
புகழ்ரவியுமதியுளம்புண்ணாய்கின்றார்
தன்வினையாலேமனுதைபுண்டானந்தத்
தம்பிரான்சுடலைதனிலாடலானன்
நன்மையிலாநரஜென்மிவிதியைத்தள்ள
நாடுவதுங்கூடாநடக்கையாமே.

(தம-வ-ம்.) பிராணநாதா, பிரமன்சிரசைப் பரமன்கிள்ளியதும், சிவபெருமான் மகாவிஷ்ணுவினுடைய மாய்கைக்குட்பட்டு ஓர்காமிதுள்ளடங்கியதும், சூரியச்சந்திரருமலங்கோலமாய், மனந்தளர்ந்ததும், எமதருமனுதைபட்டதும், ஈஸ்வரன் சுடுகாட்டில்நடித்ததும், வினைப்பயனலன்றோ, நாமோ, நரஜென்மிகள், நரைதிரைமூப்புக்குடன்பட்டவர்கள், வருவதைத் தள்ளப்போமா, நீர்துயரப்படலாமா, நீரெங்கிருந்தீர், புஷ்க்கரனெங்கிருந்தவனிங்கெப்படிவந்தா னீரெப்படிச்சூநாடத்துணிந்தீர் திதுவெல்லாமுமது செய்கையல்ல; விதிச்செயலென்றறியுந் தேவே; இங்கிருக்கவிருக்க வருபவர்களையும்போபவர்களையுங்கண்டுருகமனமானதிடந் தருமானதா விளிக்கப்போகாது, வாரும்வெளிப்

படுவோம்வேந்தே ; (நள-வ-ம்.) நல்லது வருவாயடி அறிவிலு யர்ந்த அன்னமே.

---

### நளமகாராஜன் - விருத்தம்.

சிறப்புள்ளநமதுநாட்டைச் சேர்ந்ததோரெல்லைதாண்டி
விருப்புடன்துணைகாணுத விவ்வனமடைந்தோம்கண்ணே
பிறப்பிலுமுனராத்துன்பம் பெருகிடக்கண்டாய்நீயும்
இறப்பதேமேன்மைநாட்டி விருப்பதுமழகதன்றே.

(நள - வ - ம்.) பிராணபதமானசகி, கடந்ததேசத்தெல்லையை க்கடந்து ஒருவழித்துணைவரையுங்காணுதவனந்திரம்வந்தோம், நீயோமெத்தப்பசியாலும்,பனியாலும்,வெயிலாலும்,களைத்தாய்; இதைப்பார்ப்பதைவிட சாவிறப்பதே யுத்தமம், இங்கொருவழி த்துணைவரையுங் காணேமடிமாதே.

---

### தமயந்தி - விருத்தம்.

அழுவதாலதுமோதுன்ப மயனன்றுவரைந்தவாறு
பழுதின்றிநடப்பதல்லாற் பாருளோர்தடுக்கரன்றே
முழுவதுஞ்சகித்தோநாதா முன்னுளோர்கீர்த்திகொண்டார்
பழுவதுமகன்றேவேறோர் பதிதனையடைவோம்வாரீர்.

(தம-வ-ம்.) சுவாமி? அன்றெழுதியவிதி அழுதாலழியுமா? பூலோகத்திலதைப் போக்கடிக்கத்தக்கவருமுண்டா? நமக்குமு ன்னிருந்தவர்கள் வந்தவினைகளைச் சகமாயனுபவித்தல்லவோ சொல்லொணுத கீர்த்தியைப்பெற்றார்கள், இந்தவனத்தை சீக்கி ரத்திற்கடந்து, ஏதாவதொருநகரத்தை யடைவோம் பிராண நாதா ; (நள-வ-ம்.) பெண்ணே? நீ சொல்வதுசரியே, முன்னுக் குவழியைக்காட்ட ஒருதுணைவரையுங்காணேமே தேவியே.

---

### தம - தரு - கநடா - ஆதி.

அரிபதமின்றி நமக் கார்துணை - ராஜே. (அரி)
சரிசொலாவண்மைகள் தங்கியதேவனும்
சாமியந்த்ரநேமியுமை காமிமதம்போச்சிய. (அரி)



அலைகடல்மீதுரு மாலவிசெல்வனும்
ஆதியெங்குஞ்சோதிபர ஞ்சிநெறிதாக்கிம். (அரி)
கரிமுறைகேட்டன்று கனிந்தருள்காட்டிய
கண்ணனிலவண்ணனர்தஅன்னலருள்கொள்ளுவீர். (அரி)

(நள-வ-ம்.) அடிபெண்ணே,நாம்வார்த்தையாடிக்கொண்டே நெடுந்தூரம்வந்தோம், இக்குசற்றின்ப்பாறி அப்பாலடிக்கிளப் பிடப்போமடி நாயகி, (தம-வ-ம்.)அப்படியேசெய்வோம்பிரா ணநாதா; (மணியகாரன்-வ-ம்.) அப்பா குடிகளே? நாமிதுவரையி லேயொரு குறைகளின்றி வாழ்ந்திருந்தோ மினிநமக்குக்கெடு திகாலம்வந்துலபித்ததே, என்னசெய்யப்போறோமன்பர்களே; (குடி-வ-ம்.) ஐயா அதுவென்னகாரணமோ, எங்களுக்குத்தெ ளிவாயெடுத்துரைப்பீர் நாதா ; (மணி-வ-ம்.) குடிகளே ? நமது ராசன்புஷ்கரனேடு சூதாடி, நாடுநகரங்களைத்தோற்று தானுந் தமயந்திதேவியாரும், பரதேசிகளைப்போல எங்கேயோபோயினரா ம் ; இனி அவரைக் கண்டுவராமலிருப்ப தடாதுபோவோம்வரு கிர்களன்பரே ; (குடி-வ-ம்.) ஐயா மந்திரி ? அரசரெங்கே;(மந்- வ-ம்.) நான்அவர்சென்றவிடமறியேன்; (கு-வ-ம்.)-ஆ ! அரசே.

---

### குடி - தரு - பியாக் - ரூபகம்.

எங்குகண்டரசனைநாமேற்றிப்பணிவோம்நேசரே. (எங்கு)
சங்குசக்ரபாணியருள் சற்றுமில்லையோ-பதி
சத்யருக்குமித்துயர்கள்
நத்தவும்விதியோ நில
அத்தனும்மதியோ - ஆ ! (எங்கு)
நீதிமதியுடனேநம்மை நெறியுறக்காத்தோர்-தம்பி
நீக்கிவினியோங்கும்வினை
தாங்குமேசதியே - நீதிமின்
வாங்குமேயதியே - ஆ ! (எங்கு)
அன்னைதந்தைபோலநம்மை ஆண்டிட்டசீலன் - அப்பா
அன்புடையோ நன்குணர்ந்தோன்
ஆனைநாம்பார்ப்போம் - நற்
பேனையேகார்ப்போம்-ஆ ! (எங்கு)

மாதமூன்றாய்ப்போயுமா [illegible]ங்காட்டுமே-இனி
மன்னனில்லாமந்தன்னுடையோ
மரவிக்காளாளோம் - சகக்
குறைவிற்கிறாளோம் - ஆ ! (எங்கு)

(பு-வ-ம்.) அப்பா, மந்திரி ! இதென்ன நமது கொலுமண்டபத்திற்கெதிரிலே[illegible]வொரு பெருங்கூச்சற் கேழ்விப்படுகின்றது ; அது எதுவோ விசாரித்துரைப்பாய் ; (மந்-வ-ம்.) அடா சேர்வையே ! இதென்ன இரைச்சலடா ; (சேர்-வ-ம்.) சுவாமி, நளச்சக்கிரவர்த்தி வெளியோடிய சமாச்சாரத்தைக்கேட்டகுடிகளவரைப்பிரியலான சோகத்தாற் புலம்பிக்கொண்டு தேடிச்செல்கின்றார்கள்; (பு - வ - ம்.) அப்படியா! மந்திரி ? நளனையெவர்களும்போய்க் காணப்போகாது, அவனுக்கேதொருசகாயமுஞ் செய்யலாகாது, அப்படிக்கு எவராகிலுஞ் செய்ததறிவோனாகிற் கொடியதெண்டனைவிதிப்பதாக இக்ஷணமேபறைசாட்டச்செய்வாய்; (மந்-வ-ம்.) மகாபாக்கியத்தேவே; (தோட்டி-வ-ம்.) டிடும், டிடும்; நளனிடம்போவோர் குடிகெடும், புஷ்க்கரன் ஆக்கினைவந்துவிடும், துன்பந்தொடும், இன்பங்கெடும், நன்மையைச்சுடும், டிடும் ; (குடி-வ-ம்.) ஆ ! தெய்வமே ! இதுவும் எங்கள்விதியா ! தந்தையைப்பார்க்கத்தாவிச்செல்லுந் தனையர்களைத்தடைசெய்வோருலகிலுண்டானபோதே, தரித்திர மொவ்வொருவீட்டிலுந் தலைக்காட்டிய தென்பதாக் கத்தாக்ஷியேயாம், இனிக் கிராமம்போவோம் வாருங்களப்பா அன்பரே.

---

(நள-வ-ம்.) அடிமாதே ? இனிநாமுன்னுக்கு நடப்போமா ; (தம-வ-ம்.) புத்தி, அப்படியே செல்லுவோம் நாதா ; (நள-வ-ம்.) தமயந்தி, இதோபார்த்தையா? இம்மரங்கள் வளர்ந்து நெருங்கி அகண்டு நீண்டு இருண்டிருக்கின்றது, நீ மனதிற்கிலேசங்கொள்ளாதே, என்பின்பற்றியே வருவாய்கிளியே ; (தம-வ-ம்) நல்லது துரையே; (நள-வ-ம்.) ஓ! வைதர்ப்பவாசா! நீ என்னைப்பின்படிக்கு வருத்தத்திலிருத்திச் சோதிப்பதுமக்கழகோ, எனக்குப்பசிநோய் மேலிடச்செய்தால் நானதை எவ்வாறுதணிக்க



க்கூடும், என்றுமிலென்ன முயற்சிசெய்யக்கூடும், எனக்குப்பசிநோயெனவிளம்பிலோ, எனைவிட வெண்மணங்கதிகமாய் தனதுசந்திரபிம்பம்போன்ற திருமுகக்காந்தியானது குன்றி வாடிவதங்கி, அம்சபாதங்களோ இந்த கல்லுமுள்ளுகளிற் பாவுவதால் நொந்துப் பசிதாகத்தால் மேனிவதங்கிச் சோர்வடைந்து தன்சோகத்தை வெளியிடாமல்வருமென்னுயிர்க்கு, இன்னம் துக்கத்தை நானே அதிகரிக்கச்செய்ததாகு மின்றிவேறில்லை, நாமிந்தப்பசி அக்கினியைதணியாமல் முன்னுக்குநடப்பதேநலம் நலம்; (தம-வ-ம்.) அரசேயங்குதோன்றுபவைகள் என்ன? கண்ணுற்றுப்பாருந்தேவே, (நள-வ-ம்.) இன்னுங்கொஞ்சமுன்சென்றால் தெளிவாய்க்காணலாம் ; ஆ ! இது, அன்னப்பட்சிகளாய்க்காணுகின்றது, அருகிற்சென்று அவைகளை மெள்ளத்தாவிப்பிடித்து வதைத்துப்பொசுக்கி நாமொன்றைப்புசித்துப் பசியைப்போக்கி மன்றொன்றைமாதக்களித்து மனமகிட்சியாக இன்னமுன்னுக்கு நடப்போம், இந்தவேளையில்நாமிருந்துந்துயரத்தைக்கண்ட அரியே ! இவைகளைநமக்குமுன்வரவிட்டனேயின்றிவேறல்ல, (தம-வ-ம்.) பிராணநாதா? நீர் என்னிடத்திற்குமுன் தூதனுப்பிய அன்னப்பட்சிகளின்றோ அங்குதோன்றுபவைகள், நமக்கு நேரிட்டதுன்பத்தைக்கண்டு ஏதோ முன்பிரயோசனத்தைத்தருங் காரணத்தைச்செப்பவந்தவைகளாய்க் காட்டுகின்றது ; அவைகளைத் தாங்கள் எனக்குப்பிடித்துத் தரவேண்டும், அவைகளோடு நானுடிப்பேசி ஒருவாறு உல்லாசம்பூண்டிருப்பேன் பிராணநாதா, ஐயோ அவைகள்பறந்துபோகும்போற் காட்டுகின்றதே ; (நள-வ-ம்.) நல்லதடி நாயகி.

---

நளமகாராஜன் - விருத்தம்.

உன்னுடைமனதிலேருக்க யொருவாறுநீங்கக்கண்ணே.
உன்னிநீசொன்னவார்த்தை யுகிதமென்றறிந்தேன்மாதே
இன்னிடமதிநீசிற்கி நிலநின்றென்லகுவாய்ப்பட்சி
தன்னையேபிடித்துவாரேன் தமயந்திதளரொளுதே.

(த-வ-ம்.) பெண்ணே? மனந்தளராதே, நீயிப்போதுசொன்ன வார்த்தையுஞ்சரியானதே, நானெதெனவிருவுபாய்த்து அவை

களை யெப்படியும்பிடித்துவருகின்றேன், இங்குநிற்பாயடி கண்ணே; (த-வ-ம்.) நல்லது பிராணநாதா! (ந-வ-ம்.) ஆ! ஆ! பக்ஷிகளைப்பிடிக்குந்தந்திரம் வனவேடர்களுக் கியக்கமானதேயன்றி நம்மால்முடியுமா, நாமும் முன்பின் யோசிக்காமல் பிடித்துக் கொடுப்பதாகவுந் தமயந்திக்கு வாக்களித்தோம், மாதர்க்குகொடுத்தவாக்கைமீறுபவனுக்கு மாநரகமின்றி வேறில்லையென மனுவுரைத்திருக்கின்றான், அவைகளிருகாய்ப்பறங்கிச்செல்வோம், இதென்னவாச்சரியம் கைபிற்சிக்குவதைப்போல பிரயத்தனம்பிடிக்கமுயலும்வேளையிலப்புறமகன்றுவிடுகின்றதே; இங்குதோன்றும் ஆறுங்கொடிகளைப்பிடுங்கி வலையைப்போல வீசுவோமா; சரியல்ல, இந்தப்பக்ஷியோ, மற்றப்பறவைகளைவிட வதிகமிருதுவானதேகமுடையது, கொடிதாக்கினால் அதிகவருத்தத்தையடையும், ஒன்றை யிம்சிப்பது பாவமன்றோ, மெள்ள மெள்ளவதினருகிற்சேர்ந்து நமது வஸ்திரத்தை வலையைப்போல வீசிப்பிடிப்போமிதுவேசரி, ஆ! என்னகாலவித்தியாசம், நாம்கொண்டகருத்தைமாற்றி வஸ்திரத்தைப் பேற்றிக்கொண்டப் பக்ஷிகள்பறந்துபோயிற்றேவிதியே, நாளொருச்சக்கிரமேந்தி யதிவனுமைமையப்பூண்டவனாயிருந்தும், ஒருபக்ஷியைப்பிடிக்கச் சத்தியற்றவனாகியதுங் காலக்கொடுமையோ,யல்லது காரியின்கூற்றோ; (பக்ஷி-வ-ம்.) அப்பாநளமகாராஜனே? இப்போதுநினைந்ததே உண்மை, உண்மை.

## நளமகாராஜன் - விருத்தம்.

மாதேகேளுனக்காயந்த மானதோர்பறவையையென்
கோதேநான்பிடிக்கச்செல்லக் கோமளவாண்டியாக்கிப்
போதேயென்வஸ்திரமேந்திப் போவதோடெனைநோக்கிப்பூந்
தாதேதான்சனியனென்றுந் தையலேசொல்லிற்றன்றோ.

(நள-வ-ம்.) அடிகண்ணே? உனக்காகநானந்தஅன்னங்களைப் பிடிக்கப் பலமுயர்ச்சிகள்செய்தும்பலியாமற்போகக்கண்டு என் வஸ்திரத்தை வலைவீசுவதைப்போல பறவைகளின்மீதிலெறிந்த வாறுபோட்டேனந்தபக்ஷிகள் வஸ்திரத்தையெடுத்துக்கொண்டு



பறந்துபோகக்கண்டேன், அம்மறந்துமிடிசிரத்துவிதற்கு கவுபீனதாண்டியாகி யென்றுதெல்லா மெண்ணித்திரும்பவந்தினேன் அடிமாதே, (தம-வ-ம்.) இதற்கெல்லாமனந்தளரப்போகுமா, வருவதெல்லாம் வந்தேபோகுமின்றி வழியிற்றங்காது, தாமோ தைரியத்தை மாத்திரம் விடப்போகாது, (நள-வ-ம்.) நாமவைகளை வதைத்துப் புசிக்கநினைத்தோமே, அநிருளிப்படிக்குமுடிவானதாயோசிப்போம்; (தம-வ-ம்.) பிராணநாதா? என்ன தங்கள்கவனத்திற்பட்டு யோசிக்கின்றீரடியாருக்குரைக்கொணாதோ, (நள-வ-ம்.) மாதே, நானந்த அன்னப்பட்சிகளைக் கொல்லநினைத்தேன், (தம-வ-ம்.) அப்படிக்கென்னியதேனோ.

## நளமகாராஜன் - விருத்தம்.

சுந்தரமேசொல்லக்கேள் பசிதான்வந்து
சூழ்ந்தவர்க்கேமானமுட னெறியுநேர்ப்பும்
மந்தரமாம்பூசைகளும் போகம்நித்திரை
மங்கையேகுலவளப்பும் நிதிசம்பத்தும்
தந்திரமாமாஜால மிந்திரஜாலந்
தையலேபறந்தோடுந் தரணியோர்க்கே
வந்தபசிதனையணைக்கக் கொலைபொய்சூது
வஞ்சகவிடுமெனாலும் வறையுதன்றோ.

(நள - வ - ம்.) மானே? பசிநோயானது பற்றியகாலையினிம்மாகிடதேசிகட்டோ, மானம், படிப்பு, குலாச்சாரம், நெறி சம்போகம், தூக்கம், பொருள், இந்திரஜால வித்தைகள்முதலானது மெய்கணே? ஓடிப்பதுங்கி,அந்தப்பசியைத்தீர்க்கும்பொருட்டாய், பொய், சூது, களவுமுதலான தூர்ச்செய்கைகளைச் செய்ய மனம்நாடுமெனச்சாஸ்திர முறைக்கின்றதால், நானுமென்பசியைத்தணிக்க அவ்வாறுநினைத்தேன் மாதே; (தம-வ-ம்.) அதினுவிராதுதேவே, அந்தச்சனியன் நம்மைச் சோதிக்கச்செய்ததேயின்றி வேறல்ல நாதா; (நள-வ-ம்.) நீ சொன்னதுஞ்சரிதான், அந்தப்பறவைகளும்மவ்வாறேசெய்தியதுடீமயிலே; (தம-

வ-ம்.) துரையே ! நீர்மெத்த வருந்துவதா லடியாளங்குபோன்று மரத்தருகிற்சென்று சிலகனிகள் பொறுக்கிவரும்வரையி லிவ்விடமிருப்பீர்தேவே : (நள-வ-ம்.) நல்லதடிமானே.

தமயந்தி - ஜா - காபி - யீசரம்.

ஏனோதானிந்த - வேதனையிட்டாய்
நானொருமாபாவியென்று நாயகரும்மனம்வாட. (ஏ)
முப்பிறப்பினியார்க்கு முஷ்கரங்கள் புரிந்தேனோ
இப்பிறப்பென்னுயகரு மிறப்போனைப் போகிலயாற. (ஏ)
வஸ்திரமில்லாமேனியோடு வனத்தலையவிட்டனையே
சத்தியம்பொய்த்ததுவோ சக்கரபாணிஜனார்த்தன. (ஏ)
வீசவெயிற்பனிமேனி வெதுவண்டுகுளிரவவர்க்குமே
நாசகாலனுஞ்சகி நாட்டமதையோட்டாமல். (ஏ)

(தம-வ-ம்.) நாமு மிங்கிப்படித்தியங்கினல் நாயகரோமெத்தவும்வருத்தமடைவா ரவர்பசியைக்கொஞ்சம்போதுதணித் தப்பால்வேறுதேசமடைந்து, வந்த வறுமைகாலத்தைக்கழிப்போம், பிராணநாதரே ? இக்கனிகளைப்புசிப்பீர்; (நள-வ-ம்.) மாதே நீயோ என்னைவிட அதிகக்களைப்பெறினவளா யிருப்பதால்நீமுன்னுண்பாயடிகண்ணே.

தமயந்தி - விருத்தம்.

மானிலத்தில்மன்னனுண்பதற்குமுன்பாய்
மாதுபசிதணிப்பதுநீலாயலடிசெய்கை
நானினிபெண்கணவனுண்டசேஷங்கொண்டால்
நல்லுணவாமுயரமிர்தம்நமனும்நாடான்
தேனமருந்தீம்புசிப்புமதர்க்கொவ்வாது
தேவனேபசிநோயால்நொன்புமாறில்
வானவரும்வையகத்திலுள்ளோருமேசி
வசையாடவிடமாகுமரசேபோற்றி.

(தம-வ-ம்.) பிராணநாதா? நற்பதவிக்காளாகாத ஜென்மியாகிய்பாணைப்பெண்ணென்று கணவன் பசிதீருவதற்குமுன்தன் பசியைத்தணிக்கக் கோருவாளென்று கற்பிலுயர்ந்த கன்னியர்கள்கணவனுண்டசேஷத்தைக்கொள்வர், அதுவே தேவபிரசாதம் தேவாமிர்தமெனப்படும், பசியினால் நான்வீரதைப்படில் வீண்றோரு மண்ணோரும் என்னையிகழ்ந்து பேச இடமாகும்தேவே; (நள-வ-ம்.) சரிதானடிகண்ணே, இதோ நான்புசித்தேன் மிச்சமிருக்கிறதை நீ புசிப்பாய், இனிநாமுன்னோக்கிச்செல்வோமா; (தம-வ-ம்.) துரையே, அந்தப்பட்சிகளும்மை இவ்வாறு வஸ்திரவீனமாக்குமென நம்பாமற்போனேன்; இந்தப்பாவிகளைப்பிடித்தோட்டதால், நீரனுபவித்த சகிதுதானோ ! என்னுள்ளல்லவோ இவ்விதத்துயருமக்கு வந்தடுத்தது. இனி இவருக்கு வஸ்திரத்திற்கென்னசெய்வது, வைகுந்தவாசா! எங்களை இப்படிச்செய்துபார்ப்பதுமக்கழகாமோ, ஒருநாட்டை அடைந்திருந்தாலும், என்மாங்கிலியத்தையாவது விக்கிரயஞ்செய்து ஒருவஸ்திரங்கொண்டுவருக்களிப்பேன், அரியே! (நள-வ-ம்.) அடிகண்ணே! நீஏன் வருந்துகின்றாய், அன்றெழுதினவன் அழித்தெழுதானென்பது உனக்குத்தெரியாததன்றே, முன் நாம் செய்ததெல்லாம், நாமே அனுபவிக்கவல்லவோவேண்டும்; (தம-வ-ம்.) பிராணநாதா! கதிரோன் அஸ்தமிக்குங்காலமானதால், குளிர்ந்தகாற்றடிக்கிறது, தங்கள்மேனிவருந்தி மயிர்கூச்செறிகின்றது, நானென்னசெய்வேன். நமது நாயகர்வஸ்திரமின்றி இருப்பதெப்படி, முண்டமாயிருந்தால் காத்திருந்தும், பனியினாலும்வருந்தாவிரோ ஏதுசெய்வோம், இப்போது நாமுடுத்திருக்கு மிந்தச்சேலையின் வேறில்லை, இதிற்பாதியாவதுகிழித்துக்கொடுப்போமா? யோசிப்போம். அப்படிச்செய்வதைவிட வேறொருமார்க்கமுந்தோன்றவில்லை, இதுவேசரி சுவாமி! என்வஸ்திரத்தின்மேற்பாதியைக்கிழித்தேன், இதைப்போர்த்திக்கொள்வீரா; (நள-வ-ம்.) என்ரத்தினமே, இதைநான் எப்படித்தரித்துக்கொள்ளுவேன், கண்டவர்கள் நகைபுரிவாரோ. மனமே! நானிதற்கென்செய்வேன், இதைவிட வேறுமார்க்கமேதொன்றுங்காணேன், இவ்வேளையிப்படிக்கு நாம்செய்வதேயுக்தமின்றி வேறில்லை. அப்படியே போர்த்திக்கொள்ளுகின்றேன் கொடுப்பாயடிப்பிரியே.

### நளமகாராஜன் - விருத்தம்.

ஐயோவுலகிற்றென்னை யரசனாயமைத்தநாதா
வினையுஞ்செய்தனந்தன் விருப்பென்றுமதுபோதாமல்
பூணவுமாதாரடைப் புகழ்ந்தனையென்றுதென்னி
நாணவும்விட்டாயுத்த நாட்டமேதறியேன்தேவே ! ! !

(நள-வ-ம்.) கருடவாகனா? என்னை இப்புவிக்கோர் சக்கிரவர்த்தியாகவமைத்தாய், அப்பெருமையைச் சூதாடச்செய்து போக்கடித்தாய், வனத்திற் பரதேசியைப்போல பஞ்சவேடம்பூண்டலையப்பார்த்தாய், பக்ஷியைவிட்டு என்வஸ்திரத்தையும் கவரச்செய்துகளித்தாய், இப்போது, இவ்வுலகத்திலெவ்விதவினஸ்திதியிலிருக்கு மாடவனு மனியப்போகா, பெண்பாவிலுடையபாதித்துணியைக்கிழித்து என்னையுந்தயே ஒரு பீதாம்பரத்தைப் போலெண்ணிப் போர்த்தச்செய்த உன்றிருவிளையாட்டை நான் என்னவென்றெண்ணிவுய்வே னும்பர்கோனே ? மாதே! நாம்படியால் வருந்துந்துயரைப்போக்கவேண்டி இதோ! சூரியபகவான்கீழ்த்திசையி லுதயமாகினு னினி இக்காட்டைக்கடந் தொருநாட்டை அடைந்து நானேக்கலிப்போமடி கண்ணே, (தம-வ-ம்.) அப்படியேசெய்வோம்பிராணநாதா.

### நளமகாராஜன் - தரு - சுருட்டி - ரூபகம்.

இந்தவனங்காட்டும்வண்மை யெடுத்துரைப்பேன்கேளாய்மானே
அந்தோபாராய் மயிலினடனம்
ஆ ! ஆ ! இன்னமொழியின்கவனம். (இந்த)
காடைகளும்புறாக்குத்திக்
கதறுமோசைகேளாய்முந்தி
கருக்குருமான்மரத்திருந்து
காக்கையைக்கொத்துப்வகைதெரிந்து. (இந்த)
கொக்கின்கூட்டமொன்றாயங்கு
குந்தலும்வெண்கூடாரம்போலங்கு
கோதேடேகைமேற்படக்குறு
கொத்தப்போகுவதேயோவிரைந்து. (இந்த)



காட்டுக்குரங்கிகளிலை
கல்லைப்போலோடுதுபார்வை
கள்ளிக்காக்கைகுயிலோசை
கலந்துபேசுமினிப்பேஆசை. (இந்த)

(நள-வ-ம்.) அடிமரகதமே ? நாயிந்தவனத்திலுவாழும் சகுனஜெந்துக்களினாரவாரங்களைக் கொண்டாடிக்கொண்டேநெடுந்தூர மிளவெயிற்றேறுமல் நடந்துவந்தோம், இப்போது சூரியனுமுச்சியமேல்வரமடைபெற்று தன்கிரணங்களை தீக்ஷணியம்பெருகும்படி வீசுகின்றான் இனி நீ என்பின்னிந்த மாசிழுப்பாடையாய் நடந்துவருவாய் கண்ணுட்டியே ; (தம-வ-ம்.) நல்ல தென்துரையே , (நள-வ-ம்.) அடிமாதே.

### நளமகாராஜன் - விருத்தம்.

உன்மனங்களிக்கவிங்கொன்றினைக்கண்டேன்கண்ணே
என்மனங்கூடவின்ப மெய்ததுமகிழ்பெண்ணே
நன்மைசெய்திடநமக்கே நாடியவ்விரியவிண்ணே
இன்னிமைபிதனைக்காட்டவிங்குறநடியேபெண்ணே.

(நள - வ - ம்.) மாணிக்க ஒளிபோன்ற மங்கையர்க்கரசியே ! இதோ, நானிங்கொன்றுகண்டே னதைப்பார்த்த என்மனம்பரவசங்கொண்டது, உனக்கித்தியரு மகலத்தக்க காலமும்நேர்ந்தது ; இதை என்கண்ணிற்காட்ட வைகுந்தவாசனே இங்குவந்தானென்று எண்ணிக்களிப்பாயடிமானே ; (தம-வ-ம்.) துரையே! அது எதுவோ, அடியாளுக்கு விளங்க எடுத்துரைப்பீர்நாதா ! (நள-வ-ம்.) தமயந்தி ! பார்த்தையா, இந்தப்பாட்டையைப்பற்றிச்சென்று உன்னையீன்றெடுத்த தந்தையாகிய வீமசேனமகாராஜனுடைய விதர்ப்பதேசமடையலாம்.

### நள - தரு - சாமா - ரூபகம்.

மாதேநீபோவாய் மகிழுடன்வாழ்வாய்
நீதேதமனுகாமற் நிகழுடன்வாழ்வாயென். (மா)
தந்தைதாய்மக்களோடு தானுடிநீயே
தமயந்திதுயர்நீங்கித் தானிருப்பாயே-நீதானிருப்பாயே (மா)

வந்தவல்வினையினால் வருந்தினேனே
வஞ்சியேவிருப்பத்தில் வாருமார்சேயே-நீகளிப்புறுவாயே.
ஒருநாளிலென்கண்ணை நூக்கம்விட்டாயே
இதுமென்மொழிநிற வுரையெடுக்காயே-நிறைபெருக்காயே. ()
வந்தகாரியமென்னை வருத்தெடுப்பானே
வஞ்சிக்கேசமெத்திட்ட வருந்தலைவேதனை-யெழிந்திடுமோனே.(மா)
என்மொழியைத்தடுக்க விதாகாலமன்று
எம்பிரானருளாச்சென்றேன்றுவட்டின்று-நிகன்றுவாய்கன்று
(தம-வ-ம்.) ஐ! என்பிரானாநாதா ?

---

## தமயந்தி - விருத்தம்.

ஏனையிவ்வாறடிக்கடிக்குநீசோதிக்க
வென்றுவதுரனெய்தகுறையோவின்றித்
தனையடைக்தகாரிழைக்கோனோவித்தத்
தரணியினுனைத்திட்டபவமோகானோன்
வினைநலத்தாலுமைமணந்தேனன்றுநாதா
விட்டகன்றுவேறுசெலவிரும்பேன்பாதா
இனிவினும்நான்மறந்ததனைடுன்னைனைன்னோன்
கிளருவேனுளம்பதறியாளுவேனே.

(தம-வ-ம்) துரையே ? என்னையடிக்கடி இப்படிச்சோதிப்பதி
ற்புறுனதோ ! நான்செய்தபாவமோ ! அல்லது தவக்குறை
வோ ! என்ஜென்மதிசையாலன்றோ வும்மைக்கைப்பிடித்தேன்,
உமக்கொப்பர் யக்தஉம்பர்களுமில்லையெனமதித்தேன், உமதுதி
ருப்பாதக்கனை யித்தலத்திலாவியுள்ளவனாயினு மப்புரமிப்பர
மகலாதிருக்க மனதிடம்வைத்தேன், அயர்ந்துறங்கும்போதுமு
மையகன்றிருக்க வென்றுவியுளமட்டிலுமென்னோன் நாதா.

---

## தமயந்தி - ஜாவளி - பரசு - ஏகதாளம்.

உம்மையேநான்பிரிய வுளம்நாடேனடேன்சாமி
இம்மையிலுமடி யேற்றிப்போற்றுவேன்காமி. (உம்)



திக்குநீயேயென்றும் தெய்வமுநீயென்றும்
அக்கரையோரென்று மகத்தினில்நான்கொண்டும்
இக்கனாஞ்சோதிப்ப தேனோயேனோநாதா. (உம்)
கணவனிலாளென்றும் கரமிழந்தாளென்றும்
குணமிலாப்பெண்ணென்றும் கூருவரோகண்டும்
இனைபிரியில்வரும் இழிவுயிழிவாம்நாதா. (உம்)
அன்னியர்வாழிடம் அன்னைதந்தையிடம்
புன்னில்கோலமும் போக்காமலியடம்
பன்னவுமென்றுநற் பாவம்பர்வயேநாதா. (உம்)

(தம-வ-ம்.) அடிமாதே ? நீதயங்கித்துயரப்பட்டாதே, இனியுன்
னைநான்போவெனக் கினவிலுஞ் சொல்லேன் செய்லேன், என்
னைப்பற்றியே நீடந்துவருநீயடி கண்ணே ; (தம-வ-ம்.) நல்லது
பிராணநாதா.

---

## தமயந்தி - விருத்தம்.

முன்வினையதனையென்னவென்றறியாதுவனத்தில்வந்தோம்
தாயவனைவாயேனேனுயிமைகளுஞ்சொக்குதையோ
மன்னவரேமையோர்வாறுய் மயங்குதுபெருத்தவாவி
உன்னவுமுத்தாள்வந்து முறும்புராளென்செய்வேனே.

(தம-வ-ம்.) என்பிராணநாதா ? விதியையென்னவென்லோநா
மிவ்வனத்தில்வந்தோமிப்போதென்னமோதெரியவில்லைமூதேவி
வந்து என்னைக்கட்டிப்பிடிக்கின்றாள், கண்ணிமைகளுமூடச்செ
ய்கின்றாள், என்செய்வேன் துரையே ; (நள-வ-ம்.) மாதே-நீபசி
யால்வருந்தியெய்ப்பினாலுலர்ந்து இவ்வனத்தில்நெடுந்தூரமென்
னோடுவந்தமையாலுனக்குத்தேகவருவுகுலைந்து சோம்பலதிக
ரிக்கச்செய்து கோட்டாவியைக்கிளப்புகின்றது, கொஞ்சப்போ
திந்தமரத்தினிழலிற் சயனித்துக்கொள்வாயடிகனிரசமே ; (தம-
வ-ம்.) சுவாமி தாங்களோ, அடியாளைவிட அதிகமாய் களைப்புற்
றிருக்கின்றீர், தாங்களுங்கொஞ்சஞ் சயனிக்கிலதிமேலாய்க்கா
ட்கின்றதாமே ; (நள-வ-ம்.) அடிமருவே ! இதுவோநாட்ட
மிருகங்களும், விஷப்பூச்சி புழுக்களுநிறைந்ததாகச் சஞ்சரிக்கும்வ

னமாதலால் நாமிருவரும், ஏககாலத்தில் சயனிப்பதடாது, அல்
லது சித்திரைதோன்றின், எந்தத்தொருதெருத்துவன் தநிகதன்ப
த்திற்கிடத்தைக்கொடுக்கும் "சயனித்த்வாசவத்தோராத்தவர்," எ
னும்பழமொழியியல்லவோ, நீ முன்சயனிக்கின்றனவ்வாறேதொ
ன்றுங்கேரிடாமற் பாதுகாப்பேனடி பைங்கொடியே, (தம-வ-
ம்.) ஆனைடியாள் நங்கள்திருப்பாதங்களின்மீது எச்சிரஞ்சாயி
ட்டுச்சயனிக்க விடைகாருங் கோவே, (நள-வ-ம்.) அப்படியே
செய்வாயடி அன்னமே. ஆ! ஆ! நமக்கென்னகெதிநேர்வம்வ
ந்த...ந்தது, வழியேபோகும் புஷ்கரனே, வலியவரவழைத்து,
நலியசூதாடி, நாடு,நகரும்,நால்வகைச்சேனைசயின்யங்களையும்
வஸ்திரங்களையுமிழந்து புத்திரர்களைப்பிரிந்துதேவாதிதேவர்க
ளுங்கோரிய, திருமுகங்காந்திபூண்ட இத்தேவியை பனிப்பெ
ண்ணிற்குமேரான நிலையிலிருத்தி, அன்னபானாதிகளின்றி, ஆர
ண்யத்திலொருமில்லாத அரும்பாதேசிகளைப்போல லலையச்செய்து
கொண்டோமே. நமது வித்தையும், புத்தியும், விவேகமும், எங்
கோடியதோ வறியோம், முக்காலமுமறிந்து மூலையிலிருந்துமொ
ழியும் பல்லியானது கண்டதைப்பற்றத்தாவிக் கழனிப்பானையி
ல்வீழ்ந்துமுழுங் கெதியாயிற்றே! ஓர் சிற்றரசன் வார்த்தைக்கி
ணங்கியல்லவா நமது சுகத்தையும் பெருமையையுமிழந்தோம்,
அதிலும் பெண்ஜென்மமோ புருஷனைமணந்துமவளாகில்சுக
த்தையும், போகத்தையும், போஜனவஸ்திராதி பூஷணத்தையும்
பூணப்புவிதிப்பிறந்ததன்றோ இவளோ, நம்மைநாடிக்கைபிடித்
தபலனிதுவன்றி வேறல்ல, நல்ல சவ்வனகாலத்திலேயே சொல்
லப்போகாத சேர்க்கத்தையும், சோர்வையு மடைந்தாள்விதியே!

---

### நள - ஹா - காபி - ஆதி.

விதியேநான்செய்த வினையோவிவ்வித
வேதனையெய்ததுன் விளையாட்டோமத. (விதி)

ஓதிபேபழமொழி யுரவினைராடியும்
உதரியேசூதினை யுன்னிதாறேடியும்
நீதினையமறந்து நிலையதைமாறியும்
நிந்தையைப்பூண்டதும் இன்னருமேமத். (விதி)



எத்தனையோநீதி யெடுத்தோதிமந்திரி
இயம்பவுமங்கனே யென்னையத்திரி
புத்தியைமாற்றிறன் புல்லனிவாக்கிறன்
பூவையுந்துன்பத்திற் புக்கிடவாகினன்மத். (விதி)

பலபலவிதமாய் படித்துநானேதியும்
பாவையுமுத்தே பகன்றனள்நீதியும்
விலவிலத்தியங்கனே வீழ்ந்தனளாதியும்
விட்டகுறையிதோ வேறெதுவோமெது. (விதி)

(நள-வ-ம்,) ஓ! மனமே! நீ இப்படிக்கிங்கு பசித்தவன் பழ
ங்கணக்கைப் பார்ப்பதுபோலும், நசித்தவனுட்பட்டணைக்குக
ளை நாடுவதுபோலும், அக்காலத்தி லதியின்பத்தோடோதிய
அமைச்சன்மொழியைக் கேளாம லிக்காலத்தி லெண்ணியுருகு
வதால், என்னபலனடையப் போகின்றனை, ஓ! பேய்மனமே!
என்ன துயரத்தை நோக்குகின்றனை? சீ - சீ, கேடுகெட்
டபாவிகண்களே! சப்பிரமஞ்சத்தில்லவம்பஞ்சணையில் மல்
லிகை, முல்லை, மரு, குருவேர்முதலானதுகளைமுடித்து,கலவை
ச்சாந்தணிந்து, அதிகசவுந்தரியச்சேடிகள், வெட்டிவேர், முத
லானவைகளா லமைந்த விசிறிகளிற் பன்னீராத்தெளித்துவீச,
குளிர்ந்த காத்தடிக்கச் சுகநித்திரைசெய்பவள், இந்தவனத்தில்
கொக்குக் குருவிகளின் மலத்தின்பேரில் சுமெனவின்வாடை
தாக்கத் திக்கற்றதீப்பெண்மணைப்போல விக்குராங்குவதைக்க
ண்டென்னை சித்திக்கவா நோக்குகிறீர்கள்,-ஆ! சங்கு சக்கிரகோ
தண்டபாணி! இதுவுமுன்விளையாட்டோ? மாதோ சோர்ந்துநித்
திரைபோயினள், அடி யென்கண்ணே! உனக்குஇவ்விதிஎன்கை
யைத்தொட்டதாலன்றோ வாய்த்தது,வேறொருவனைமணந்திருந்
தா லதிகசுகத்திலிருப்பையே பாழும்பிரமனிப்போர்க்கொத்தவி
தியுனக்கெழுத எப்படி பாவிமனந்துணிந்தானோ பாவையே!
சாம்பிரமனை நிந்திப்பது அடாதகாரணமே, நாமல்லவா சிங்கா
ரவனத்தில்தங்கிய தெய்வலோகஅன்னப்பட்சியைப்பிடிக்கஅநு
அந்நிப்பியந்து திரிகாலமுணர்ந்ததாதலால் நமதெண்ணத்தை

வெளியிடக்கேட்டு, நாமே அதைமெத்தவும்வருந்தி வணங்கித் தமயந்தியிடத்தூதனுப்பி இவ்வமனதை உபாயதந்திரமாய்க்கவர்ந்து இவளை இந்நிலைக்காளாக்கினோம், நம்மைநாமே நொந்துகொள்ளத்தக்கதேசரி.

---

நள - ஊ - செஞ்சுருட்டி - ரூபகம்.

அன்னமேவனத்தினில் துயர்ந்துசோர்ந்திங்கெதிர்க்
காளாக்கவோவென்னை அன்றுதொட்டனைபர்த்தே. (அன்)
தேவர்களுந்தனைத் தேடியங்குநலந்தத்
திரஸ்கரித்ததினி நீவினைக்கோஅடி. (அன்)
மணவரைவந்தோர் மன்னவரோநோக்காமல்
மாபாவியாமென்னை மணந்தக்கதோமோ. (அன்)
எத்தனையோவிதமெடுத்துநானுரைத்தும்
சேர்த்திட்டாளனது மிக்கெதிர்க்கோஅடி. (அன்)
என்னுடனென்னுடன் என்மனம்வாடுதே
வந்தினிச்செய்குவேனோ நிறைமயேஅடி. (அன்)

(நள-வ-ம்.) ஆ! வெறிமனமே! ஏனிப்படிக்கலங்குகின்றனை, கலங்காதே! உலகமுழுதும் ஆளும்பட்டத்தையுந்தான் சூதாடித் தோற்றனை, உன்னுடனே தத்தி அறத்தினையுந் தோற்றனையா? இல்லையே, அப்படிக்கிருக்க ஏன் அறிவில்லாதவனைப்போலாகின்றனை, தவிரியஞ்சாம்பசோதனை என்பது பெரியார்? வரும்போதறிவான்செட்டி; வந்தபின்னறிவான்வாணியன், வருமுன்தெரிவான் வேளாளன், அதன்முன்னுணர்வான் அரசன் என்பதுணர்ந்திடா மல்லவாமற்போனதற்காய் நான் வருந்தப்படுகின்றேன், இனி யேல்நடக்கப்போவதைக்குறித்துக் கோசிப்பாய்,மனமே! முதற் அவசத்திலேயே இவ்விதத்துன்பத்திற்குச் சேர்ந்தமானாகினேனே, இனி யிவள்நம்முடனிப்படியிருந்து துன்பத்தைக்கழிக்கப்போகின்றாள், இவளுக்கு எமன் நாமாகவே பிறந்திருந்தோமன்றி வேறில்லை, மாதே! மாதே! மயிலே! அஞ்சுபவேல்லேல் காலத்திலு மிப்படிக்கயர்ந்து நித்திரைசெய்ததை நான்கண்டறி



யேனடி கண்ணே! பெண்ணே! கரும்பே! மல்லியரும்பே! முல்லையரும்பே! கமலச்சரும்பே! நமதெல்லனகாலத்தில் அடிபெண்ணே ஒருவிலே, மதனநான்முறைகளையுணர்ந்து அதிரதி, சமரதி, உபரதி, ஜலரதிகளிரவும்பகலு மொன்றாய்ப் பலவாறடிப்பாடியனுபவித்தபர்ந்தகாலையிலும், நீ இவ்வாறுறங்கினதறியேனடி உத்தமியே! பத்தினியே! சத்தியமே! என்ரத்தினமே! இன்றென்னகாரணமோ, நீஇப்படித் தூங்குவதறியேனடி; யோசிப்போம், எனக்குத்திக்கெனவாய்ந்த கஷ்டத்தையெண்ணி உய்யுந்தாக்கத்தினு லன்றிவேறில்லை வேறில்லைவெறிமனமே! நீஇப்படிக்கெல்லாமிருந்த சுகத்தையெண்ணி இனிவருவதைமறந்து மயங்குவதுமன்றி, இடப்பமே நம்முடன் இவளிருக்கவிருக்க அதிஜுயா. துன்பத்தை யடையவளேயன்றி வேறில்லை, அல்லது நம்மைப்பிரிந்து போகச்சொல்வோமாகிலும் போகாள், இதுசமயமானதாலிவளையிங்கனே விட்டுப்பிரிந்துபோனாலதா னிவள்துக்க மொருவாறு நீங்கும்.

---

நள - கண் - இந் - கமாஸ் - ரூபகம்.

இதற்கோநீயுமாலை யிட்டனையெனக்கன்று
ஏக்கமுமுண்டனை தூக்கமுங்கொண்டனை
என்னடி-யென்னடி-யென்னடி-அன்னமே. (இத)
அன்னத்திடமென்னைச்சோலாகாவிடலதுகூர
கன்னமேமரிப்பேனென வின்னமொழிசொன்றுயெனக்
காட்டவும் - காட்டவும் - காட்டத்துப ரூட்டவடி. (இத)
இந்திரனைவேண்டாமென்று எடுத்தெறிந்துசொன்னையன்று
நொந்துவாடலானையின்று வந்ததுயர்தீராதென்று
நோகுதேன் - நோகுதேன்-நோகுதேன் போகவோடி. (இத)
தாயுந்தந்தைநானேயென்றாய் தாளடியேமேலதென்றாய் [ய்
வாய்நிறையப்போற்றினின்றாய் சாய்ந்தநோயுறக்கங்கொண்டா
வஞ்சியே - வஞ்சியே - வஞ்சியே மிஞ்சியே அடி. (இத)

(நள-வ-ம்.) மனதேகலங்காதே நாம்பிரிந்தா லிவள்துக்கமெப்படிநீங்கும், எழுந்துப்பார்ப்பாள், வந்தபாட்டைப்பற்றிச்

சென்றுதேடுவேள் ? அப்பால் நாம் வரும்போது காட்டியவழி
யைப்பற்றி விதர்ப்பதேசமடைவாள், அடைந்து மக்களையும்மா
தாபிதாக்களையுங்கண்டொருவாறு சந்தோஷமாயாடிக்காலத்தை
க்கழிப்பாள், அல்லவா சரிதான் ? ஆனால் நம்மையேஎப்போ
துங்கருதுங் கட்டழகியாச்சுதே,நம்மைப்பார்க்காவிடிலிதைவிட
வதிகசோகத்தைக் கொள்ளுவாளே கொள்ளாள்! கொள்ளாள்?
அதுஎப்படி, வீமராஜனிடமிருக்கு மதிகவல்லமைபொருந்திய,
ஜோதிடரால் நாம் வந்தடையுங்காலத்தைத் தெரிந்து மனவுறு
தியோடிருப்பாள், நாம் பிரிந்துபோவதே மேலானயோசனை ?
இன்னம் ஒருநாளிவள் நம்மோடிருப்பாளாகில் இறந்துபோவா
ளென்பதிற் கொஞ்சமுமில்லை, இங்கிருந் திப்படிக்குத் தியங்கு
வதைவிட நாம்பிரிந்துபோவதே யதியுத்தமம் ? உத்தமம்.

---

### நள - தரு - பியாக ரூபகம்.

உனைத்தனியேவிட்டேபோடவோனேன் - மயிலே
ஓங்கித்துயர் தாங்கிமனம் ஏங்கியெருகுயிலே. (உனை)
என்னோடேநீதானிருக்கிலினம் ஏக்காதேன்னையிவ
என்னிமானங்குன்றிதுரோகம்பின்னேயேமயிலே. (உ)
தந்தைநாட்டையடையவென்றுந்தானுரைத்ததை
தாண்டியடிவேண்டிக்கொள்ளாடேவேண்டிக்குயிலே. (உனை)
விழுந்துபோற்கொப்பளித்தேபார்தம் வீங்கிற்றேமானே
விதியோசகிசதியோபெய்தன்மதியோதடக்குயிலே. (உனை)

(நள-வ-ம்.) போவோமா ? போவோம், மெத்தென இவள்சிர
சையெடுத்து தாழவிடுவோம், ஆ ! அடியமுர்தட்டபசங்கிளியே?
உன் சந்திரகாந்தியைமாற்றுதற்க முகமலர்ச்சியானது வெயி
லிலலைந்ததால், கருக்கலாயிற்றே ? மேனிவாதங்கி வேர்வை
கொப்புளிக்கின்றதே ? அடிக்கிளியே, தலைக்கணையில்லாம லிறக்
தபிமோதத்தைக் கடத்தியதுபோல் என்னை மன்னிமீ தூங்க
ச்செய்ய எவர்களிட்டசாபமோ, அடியேந்திழையே ! நீ படுந்து
ன்பத்தைப் பார்க்கமனமில்லாமலன்றோ, நானிங்குனைவிட்டுப்



பிரியத்துணிகின்றேன், எழுந்து இங்குன்னைத்தேடியலையாதே
அலறாதே,அலதிப்படாதே, நான் காட்டியவழியைப்பற்றிக் கு
முந்தைகளிடம்போய்ச்சேருவாய், நான்போகட்டுமா ? என்கண்
ணே ! நாமிப்படிப் பிரிந்துபோவதினாலேதேனுந் தோஷமுண்
டா ! உண்டு ? எப்படி நாமிவளை மணருங்காலத்தில் ஓமகுண்
டத்தினெதிர்ந்து, அக்கினிதேவனைச்சாட்சிவிட்டு இவளைச்சு
கத்திலுந், துக்கத்திலும், பெருமையிலுஞ், சிறுமையிலும், பக
லிலு மிரவிலும் அருகேயோடிருப்பதாக யுண்மை யுரைத்தல்
லோ தேவர்கள், முனிவர்கள், வேதியர்கள், வேந்தர்கள், முன்
பிலிந்த மாங்கிலியத்தைச்சூட்டினேம், அவ்வுறுதியை மாறிநட
ப்பதுதாருக்கிடமே சீ ! மனம்போனபோக்காய்ப் போகப்போ
காதென மாறுவக்களோதியிருப்பதைமறந்து, இப்படிக்கெல்லா
மென்னுவதிமுக்கன்றிவேறல்ல, முன்னென்னியவாறு முடிப்
பதேயழகு,இவளுக்குத்துணைநாமென்பது, நமக்குத்துணை இவ
ளென்பது விவேகமையின்றி வேறல்ல, எல்லோருக்குந்து
ணை வவ்வெம்பிராளேயாகும், கற்பித்தவன் காக்கக்கடவ
னென்பதைமறந்ததும் நமது மட்டித்தனமே இதோ;

---

### நள - கியால் - இந் - பீரோ - ஏகதாளம்.

போறேன் போறேன் போறேன் உன்னைவிட்டு. (போ)
கார்முகில்மேனியே கதலிக்கனிரசமே. (போ)
சீருடன்வாழ்ந்தநீ சிறுமையுறப்பாராமல், (போ)
என்னோடிருக்கினநீ இடருக்குள்ளாவையென்றே. (போ)

(நள-வ-ம்) ஆ ! தமயந்தி, அடிமானே ! தேனே ! மயிலே !
குயிலே ! இன்னந்துயிலா, எப்படி இவளைத்தனியேவிட்டுப்போ
வது; தகாது, தகாது, எதாகினு மிருக்கட்டு மிவளை பகுத்துவி
ட்டால் பழிக்கு நாமல்லோகுறியாவோம், அதினும் ஸ்திரீதோ
ஷம் ஜென்மஜென்மத்திலும் விடாதன்றோ, அது நம்மைச்சா
ருமா ? சாராது, எப்படி முன்னமே இவளைத்தாய்வீடுபோகச்
சிலவிந்தோம், போகேனென மறுத்தவளிவளாச்சுதே, அப்படி
க்கிவள்தடுத்தது மொருவிஷயத்தில் நீதியே, பதிவிரதைகொள்

டபெண்கள் பத்தாளவியெவ்விதத்திசையிலும்பிரியார்களென்ப
லறாவுளாக்கின்றநல்லவர், அடிநாயகி உனக்கிந்தவனமாஅரண்
மனை, பூமியா மஞ்சம், மணலா பஞ்சணை, பறவையின்கூச்சலா
சங்கீதம், மிருகங்களா தோழிகள், விதியா நாதன்,மனமே! என்
னதிப்படித் தயங்குகின்றாய், இதுதானா நீ சங்கிரமேத்தியநிரம்,
உருதிப்படு, பட்டேர்யா? இதெல்லாமொருவிதபொம்மலாட்டம்,
நீர்க்குமிழியொத்தவாழ்வு,எல்லாம்பரந்தாமனருளென்றிருக்கா
ல்,நாயேர்இல்லாதெல்லாமென்னுவதீதன் முன்நிர்மாணித்ததை
என்மறந்தாய்? சீ,நடநட போவோம், அடிதமயந்திபோதேனநீ?
தன்னைப்பட்டமடைந்துத் தனைமைகொள்ளவையென்றெண்ணி.
(போ)

(நள-வ-ம்.) கண்ணே ? இப்படியே உன்னை என்றும்பிரிந்து
இருப்பேனென்றெண்ணாதே, நான் வேறுபராகரிகவனங்கொள்
வேனெனக் கினவிலும் எண்ணாதே, வந்தமிடியைப்போக்கி வா
முவுன்னிடம்நோக்கி,

வாறேன் வாறேன் வாறேன் வஞ்சியே. (போ)

(நள-வ-ம்.)இனியிம்முகம்நோக்காமல் நடப்போம்வருவாய்ம
னமே, ஆ ! ஆ ! என்னாயகி இனியென்றுன் இனியமொழிகளெ
ன்னிருசெவிகள்கேட்குமோ,வறியேன்எழுப்பி ஒருவார்த்தையா
கிலுஞ் சொல்லாமல்போய்நடக்குமா? நமக்கு, நல்லவர்க்குமுரு
சொல்லாமற்செல்லுதலென்பதுநம்மிடத்தே விளங்கிற்றன்றோ.

---

நள - தரு - காபி - ஏகதாளம்.

நங்கையைப்பிரிய நண்ணியகொடியன்
நான்தானே பாவி நான்தானே. (நங்)
இங்கிதமாகவே இனிமையிற்கூடியே
இன்றதனுஞ்சென்டாளன் நான்தானே. (நங்)
நம்பியமாதினை நயந்தனைக்காமலே
நடுக்காட்டகனுந்தோஷி நான்தானே. (நங்)
நன்றிதுந்திதிலும் நானதலேன்னற
நால்வமறந்ததுரோகி நான்தானே. (நங்)



(நள-வ-ம்.) நாம் தமயந்தியைத் தனியேதூங்கச்செய்து வந்
தோமே, எதாகிலுமிருக்கை எவ்விடம்வந்திருக்குமா ? என்ன
மோ மனங்குழம்புகின்றது, போய் இன்னமொருநிரம் பார்த்து
வந்துவிடுவோம், அங்கு நெடுநேரம் நிற்கப்போகாது, அடியெ
ன்கிளியே! கிளியே ! அன்பே ? ஒளியே ! இன்னும் நித்திரை
யா ? கண்ணைத்திறந்துஇந்தக்கருமியின்முகத்தைப் பார்க்காயா ?
ஏதேது அதிகசோகத்தால்மிகுந்த நித்திரையிலிருக்கின்றாள், நா
மே எழுப்பியாவது ஒருவார்த்தையாடிப்போவோம், ஆ ! தூங்
குவோரை எழுப்புவது தோஷம் தோஷம், இவ்வளவு தூயாத்தி
லிருந்து மென்னாயகியினுடைய முகக்காந்தியானது இந்துவினு
டைய ஒளியைவிழுங்கி, வீசுகின்றதே ஒருநிரம் உற்றுப்பார்த்
துப்போவேன்.

---

நள - ஜா - காம்போதி - சாப்பு.

மயிலே மனமாறுது மானே
மாறுதுமானே சோருதுதேனே. (மயி)
அந்தத்திலொளியே சந்தத்திற்கிளியே
சொந்தமாய் தொத்தித்தே தந்திட்ட பந்தனமெண்ணி. (மயி)
அன்னையைமாறவும் உன்னையேசாரவும்
என்னையே கன்னியே வன்னமா யுன்னியதெண்ணி. (மயி)
என்மனந்தேறவே நன்மைகள்கூறவே
தன்மையாய் நன்மையாய் இன்மொழி பன்னியதெண்ணி. ()
பிந்திநீ தூங்கியே முந்தெழுந்தோங்கியே
கந்தமும் சுந்தரம் தந்திடும் வந்தனமெண்ணி. (மயி)
இல்லறவாழ்வையே சொல்லியேநாள்வையே
மெல்லியென் பல்லவ வல்லமை புல்லெனவெண்ணி. (மயி)
எங்கனுமென்னையே தாங்குஞ்சொன்னையே
மங்கையே யிங்கெனி யங்கமே குங்கியதெண்ணி. (மயி)

(நள-வ-ம்.) மனமே ? நடந்ததையெண்ணி என்நாய்போலவு
ழையுகின்றாய், நீ இவ்வளவுநேரங்கத்திய மவளொழுக்கு எவ
ன்றுபசரித்தாளா? இல்லையே, கெட்டகாலத்திற் கிருப்பமுமெ

ட்டஓடுமென்பதென்னுவாய், நட அடி என்னறுகுணம்பொரு ந்திய அன்னமே! நான்போகவா? போறேன், நீஉன்தாய்வீடுபோ ய்ச்சேரு, ஐயையோ! என்முகத்தின்மீது அந்திவெய்யற்ப டுகின்றதே, துணியால் மூடிச்செல்லுவேன், போறேன்தமயந் தியேபோறேன்.

நளமகாராஜன் - விருத்தம்.

சத்தியம்நிலைமைநீதி சாந்தத்திலனுவதேனு
பத்தியும்பிசகிடாமற் பயின்றதுமெய்யதாகின்
உத்தமிதனக்கிங்கேதோர் குபத்திரமணுகிடாமற்
பெற்றவர்தம்பால்சேர்க்கப் பேணினேனரியேபோற்றி.

(நள-வ-ம்.) என்னுடலெடுத்த நாள்முதல் விதாவிளையிலுத்தம ஒழுக்கு,சத்தியம், தானம், தருமம் பொருமை, உன்திருநாமஸ்மர ணையிலுஞ் சற்றும் வழுவின்றி நடந்துகொண்ட துண்மையா கில் என்மாதாகிய தமயந்தி அவள் தாய்வீட்டைச்சேரும்வரை யில் மிருகங்களாலும், விஷப்பூச்சிகளாலும், மோகினி, டாகினி, ஜாங்கினி, பேய், பூதம், பிரமராக்ஷசி, வேடர், வில்லியர், இருளர், ம்மழை, பனி, காற்று, அக்கினி, இவைகளால் ஏதொருதுன்பமு ம்நேரிடாமற் பாதுகாப்பது உன்பாரம் பராங்குசநாயனே! வாழிமாதே.

நள - கஜல் - இந் - சுருட் - ஏகதாளம்.

கண்ணேயுனைப்பிரியுங்காலமீதாமோ
காரியின்செயலதுகாரணமாமோ. (கண்)
விண்ணோர்பணியுமந்தவேந்தனைநீக்கியே
வென்னைமணந்தசுகம் இதற்கேதானோ. (கண்)
அந்தரங்கத்தில்நாம் ஆடியசாரமும்
அன்புமறக்கவிதோ ஆனதேகாலமும். (கண்)
என்றும்பிரியேனென்று இயம்பியபாவிதான்
எவரின்சாபமோவிட்டு ஏகுறேன்தேவிநான். (கண்)

(நள-வ-ம்.) மாதரசே! போறேன், இனிமறுபடியும்கான்இம் முகந்திரும்பேன், அல்லதுவிரும்பேன்! போகட்டுமா! போறே



ன், காய்போறதுபோறேம், அன்று தேவாதிதேவர்களைச்சீறி நம் மையேகோரி மாலையிட்டியகாத்தித் கொருமுத்தமாய்விட்டுப் போவோம், சரி, நட நட நாய்மனமே நட.

(தம-வ-ம்.) ஓ! பிராணநாதா? எனக்கா இந்நேரத்தனியாய்க் குந்தி என்றதெல்லா மெண்ணிக்கொண்டு, காவல்புரியச்செய் வித்த மாபாதகியாகிய என்னை மன்னிப்பீர் ஐயையே, இனி நீர் சற்றுராங்கிச் சோம்பலைப்போக்கிக்கொள்ளுமீர் புண்ணியவந் தரோ, ஐயையோ! இதென்னா! இங்கிருந்தஎன்துரையைக்காணே னே! எங்குபோயினரோ! நம்மைவிட்டுப்போனரோ! இனியெ ன்செய்வேன்!

தம - தரு - நாசி - ஆதி.

எங்கேநடந்திராஜே என்னைவிட்
டெங்கேயொளித்திராஜே. (எங்)
அங்கமும்வாடுதென் னவியுஞ்சோருது
தங்கவிடங்காணோன் என்துரை
இங்குஉடைக்காணேனே அரசே-நீர். (எங்)
நரிகளுங்கூவுது நாய்களுந்தாவுது
தரிக்கமனந்தாளேனே உம்மைநான்
பிரிக்கமதிமீறனே அரசே-நீர். (எங்)
சாலவேசகியனுஞ் சஞ்சலமிட்டதும்
காலகெதியிதோ வுமைவிட்டெக்
கோலமாகவிதியோ அரசே-நீர். (எங்)

(தம-வ-ம்.) ஆ! ஆ! தெய்வமே, என்பிராணநாதா என்னை விட்டெங்குச்செல்லப்புத்திகொடுத்தாய்புரந்தரா? நானெங்கென இந்தவிருளிலிவ்வனத்தில் தேடுவேன், அவரைக்கூடுவேன், சுகம் தருவேன்;

தம - தரு - நீலாம்புரி - ஆதி.

ஐயா துரையே யெங்கு-ஓடிவா-நான்
அலையுந்துயரைப்போக்க நாடிவா. (ஐயா)

செப்புங்கனியிதழே
செத்தினிற்கிட்டாருணமே - என்
சிந்தைகலங்குதிங்கே
சிறுத்திலையுடைந்தே - உடல்
சிக்கி வெக்கி துக்கி சொக்கினேன். (ஐயா)

தேவேகிலமொழியே
திகட்டாதநன்மதனே - என்
தேகம்நலிக்குதையே
தேடவிடாய்தனியே - வந்த
தேவர் யாவர் தாவி மேவினர். (ஐயா)

கண்ணேகளித்தேதேவே
கைவைபிடித்தகோவே - மிக்
காட்டில்தனித்தேன்வாவே
கடக்கப்போகுமோதேவே - முகங்
காட்ட நாட்டத் தேற்ற ஒட்டமாய். (ஐயா)

ஐயேயெனைத்தனித்தாய்
அலையவிட்டுக்களித்தாய்-எதற்
காகச்செய்தீரோநாதா
அவதிப்படநான்பாதா - ஓரி
ஆவேன் போனேன் நானே தானிதோ. (ஐயா)

(தம-வ-ம்.) இனி என்னதான்செய்வேன், எங்குசென்று தே டுவேன், ஓ! மிருகங்களே! பக்ஷிகளே! என்னுயிர்நாயகனைவி ட்டுப்பிரிந்துபோனவிட மின்னதெனத்தெரிந்திருந்தா லுரைசெ ய்வீர்களுங்களுக்கிதோவந்தனம்.

---

தம - தரு - ஆகிரி - ஆதி.

மாபாவியென்றெனைவிட்டிங்கு
மறைந்திட்டீரோதுரையே - இந்த
மண்ணின்மீது என்னுடைமண்ணைப்
புண்ணாய்ச்சோரஇரையே
தலைச்சுமையென்றெனைமதித்தே
தனித்திட்டீரோதுரையே - வனந்
தாவியெங்குமோடிப்பாவி
கூவிச்சாகஇரையே.



(தம-வ-ம்.) பிராணநாதா! நீ என்னிடமிட்டிருந்த விசுவா சமென்ன, அன்பென்ன, ஆசையென்ன, அவைகளெல்லாம் எவ்விதமறந்தீரோ.

---

தமயந்தி - விருத்தம்.

அன்னமேகிளியேமானே அமிர்தமேயளியேதேனே
சொன்னமேசரும்பேமாவே சோதியேகனியேபாகே
வன்னமேயென்றழைக்கும் வார்த்தையைக்கூடத்தாங்கி
என்னையிங்கலையவிட்டு எங்குற்றீரெனதுகோவே.

(தம-வ-ம்.) அடியேன் அன்னமே! கிளியே! அளியே! மா னே! தேனே! மயிலே! குயிலே! என்றடிக்கடி என் அகங் குளிர ஆடும்வார்த்தைகளாய் மழைந்துக்கொண்டு என்னையிங் குதனியே அலையவிட்டு எங்குசென்றீர்துரையே.

---

(வேடன்-வ-ம்.) ஆ! ஆ! அதோயாரோவொருபெண் அதிரூபசவு ந்தரி தனியாய்ப்போகிறாள், நாம் சீக்கிரஞ்சென்று அவளைவ ழிமடக்கி நமதுவசமாக்கிக் கூடிச்சுகிப்போம், ஒருவேளை அவ ளுக்காராவது துணைவருகிறார்களா? பார்ப்போம், வந்தால்வர ட்டும், நாமென்னலேசா; அவர்களைவிரைய எமலோகமனுப்பி இவளைக்கூடிச்சுகிப்போம்; (தம-வ-ம்.) ஓ! பிராணநாதா! நா னும்மைத் தேடித்திரிவது தகாதெனவெண்ணி அந்தச்சுபசகுனா வென்பேரிலதிகவிருளைசூழ்ந்ததோபாருமோருபெரியமலைப்பா ம்பை பேசிறேன், அதுஎன்னைநோக்கிவருஞ் சீறலைப்பார்த்தால் எடுத்துவிழுங்குமென்பதிற் சந்தேகமில்லை, எனக்குமது திருப் பாதங்களெதிரே காத்த, ஐயையோ! இந்தப்பாம்பு நம்மைக்க ண்டு வாயைத்திறந்து திறந்து மூடுகின்றதேயன்றி விழுங்கவில் லையே, இதற்கும் கம்பிடபேரில் நாயகனைப்பிரிந்த நங்கையெ னக்கோபமோ வேண்டுவோம்.

---

தம - கன் - நாகவராளி - ரூபகம்.

பாம்பேசரணம் தாம்பேசரணம் - இந்த
பாதகியைக்கொல்லப் பதறிவாதருணம். (பாம்)

காட்டினில்நாயகனை கைசோரவேவிட்ட
கசடியைக்கடித்திடக் கருதுவாய்க்கிட்ட. (பாம்)
ஆளன்தனைப்பிரிந்த அரும்பாவிகொடும்பாவி
அரவமேநீவிழுங்கி ஆனந்திதாவி. (பாம்)
இறைவன்தனைப்பிரிந்தே இருந்தாலேதுபலம்
எந்தனைநீகடிக்க இதுவேகாலம்நலம். (பாம்)

(வே-வ-ம்.)ஓ! ஓ! அந்தப்பெண், மலைப்பாம்பைக்கண்டு மதி மயங்கிப்பயந் துளருகின்று விச்சமயத்தில்நாமுபகாரஞ்செய்தால் நம்மை அவளே மேல்விழுந்து தழுவுவதற்குக் காரணங்காட் டுமாதலால், நாமதிசீக்கிரஞ்சென்று அப்பாம்பை வதைப்போம். அடி பெண்ணே? அஞ்சாதே! இதோபாருன்னைமிரட்டிய பெரும்பூச்சியை வதைத்தேன், இனிப்பயமின்றி என்கூட என்குடிசைக்குவருவாயடி.

வேட - தரு - கருட்டி - சாப்பு.

மாலேயென்னை மதன்வருத்துறான்
மையல்பெருகுது மனந்தாளேனடி. (மா)
தேனேயந்தச்சித்தஜன்வேதனையைத்
தெரிந்துஎந்தனைப் பரிந்துகூடடி. (மா)
தித்திக்குந்தேனே தெள்ளமுதேயுந்தன்
திரண்டகுசங்களைக் கண்டபோதேயெந்தன்
புத்திபுமாறிப்போச்சுதென்னுளமும்
போற்றியென்றேன்மனந் தேற்றக்கூடடி. (மா)
சந்திரபிம்பமுகச் சாடையைக்கண்டோன்
சாணுகெதியெனச் சுடுதிவந்துதான்
வந்தவோர்பாம்பைவதைத்திட்டேனினி
வாட்டிடுங்காமனை ஓட்டிடவாயடி. (மா)
செய்தவுபகாரஞ் சித்தத்தில்வைப்பாயே
சீர்தூக்கியென்றனைச் சேரவுந்தப்பாயே
நொய்யுறவேகாம நோயெனைவாட்டுதே
நோக்கிடுகனிப்பைத் தாக்கிடுவாயடி. (மா)



தமயந்தி - விருத்தம்.

ஐயையோவிதுதானென்ன அடாதநேர்காலங்கண்டேன்
மையரவமுமேயென்னைப் பார்த்தோடிவருகும்வேளை
நொய்யுறுத்தென்றிவ்வேடன் நொடிக்குளப்பாம்பைக்கொன்று
துய்யவாகொடுஞ்செய்கைக்கே துணிதமாயழைக்கின்றானே.

(தம-வ-ம்.) ஓ! பிராணநாதா! இதுவென்னமோவிபரீதகால மாய்முடிந்தது, நாளும்மைத்தேடி இவ்வனத்தில் வருவதைக்க ண்டமலைப்பாம்புக்குமனமிரங்கி என்னையெடுத்துவிழுங்கமுயலு ங்காலை, யிக்கொடியகுணம்போன்றவேடன்குறுக்காகி, அப்பாம் பை வதைத்து என்னைபலவாறுனீதுர்மொழிகளாடித் தன்னைச் சேரவாவென்றழைக்கின்றான்; இவ்விதத்துன்பங்களை அனுபவிக் கவுமென்னை இக்காட்டில் தனியாய்விட்டொழிந்திருக்கின்றீர். துரையே? நீரிந்தக்கணம் யிங்குவருகாவிடில் விந்துஷ்டன்கையிலி ருந்து நானெப்படித்தப்புவேன் தயாநிதியே; (வே-வ-ம்.) அடி வஞ்சியே? நான் இவ்வளவாசவேண்டியும் நீ என்கருத்தைமுடி க்காமல் என்னமோயோசிக்கிறாய்;

வேட - தரு - கமாஸ் - ஆதி.

வாடிநிற்பது மேதுகாரணமோ - அடி
வஞ்சியே - கெஞ்சுகிறேன் - சொல்வாய் - நீ. (வா)
தேடியுனக்காய்த்தினங் காடியெல்லாரிணும்
ஆடிக்காத்திருந்தவாயப் போடிவதைப்பேனும். (வா)
கண்ணேதேன்நான்கொண்ட வெண்ணமுடித்திடாமல்
பெண்ணேயுனைப்பிரிய தன்னேனடிபோமல், (வா)
ஏதேந்தன்மேற்கோபமோ துனக்குயின்னம்
வாதுசெய்வதழகு காதகண்டியன்னம். (வா)

(தம-வ-ம்.) இதுயாரோதெரியோமே! நமது பிராணநாதர் ஒருவேளை நம்முடைய கற்புநிலையைச்சோதிக்கக்கருதி, இவ்வி தமுவமாய் வந்திருப்பாரா? அப்படியிருந்தால் நாம் வேடன் னமுன்னெண்ணியதோஷம்நீங்க நமதுதுரையினடிகளைத்தொ ழுவோம், முகத்தைச் சற்றுசிந்தாலித்துப்பார்ப்போம், சீ - சீ,

இவனுரோகொடியன்காட்டில்விசிக்குங்கிராதகனே சரி, அண்ணு? என்துரையாகிய நளபூபதியை எங்கணுமிலுங் கண்டிலா ; (வே-வ-ம்.) அடிபெண்ணே? கண்ணே? என்னைவிட உனக்குவேறொரு துணையும்வேண்டுமா? என்றுனைப்பார்த்தவெத்தனையோ இருளப்பெண்கள் மயங்கித்தயங்குகிறார்களே, உன்னைக் கண்டபோதே என்னை மன்மதபாணம்வருத்தெடுக்கின்றது, உன்பயோதரங்களைப் பார்த்தவுடனென்காமமீறி மதம்பொங்கிக்கண்வழியா யொழுகுகின்றது, எனன்டி உன்மனங்கல்லா? அந்தஆலமரத்தோப்படைந்து நானுனைத்தழுத்தைக் கொள்ளும்படிக் கிடங்கொடுப்பாயடி மயிலே ; (தம-வ-ம்.) அண்ணு !

தமயந்தி - விருத்தம்.

தன்றேவியின்றியேகேள் மற்றோர்கொண்ட
தாரமதைத்தாயெனவே மதிக்கவேண்டும்
நன்மையறிபெற்றவளும் வளர்த்தமாதும்
நாட்டரசன்றேவியருங் குருவின்பெண்டு
முன்னுதித்தோன்றேட்டவளுஞ் சேசன்பத்னி
மொழிகுவெனிவரெல்லா மாதாவாக
உன்மதியிற்நினைந்திடுவாய் வேறேதேனு
முனிந்தாலெமன்வருவான் முடிக்காய்த்தானே.

(தம-வ-ம்.) அண்ணு? நீ இப்போதாமெம்வார்த்தைகளைக்கேட்டு, மனஞ் சந்தோஷிப்பவளான பெண்ஜாதியேயன்றி, வேறெவரும் இனவிழுமறந்து சம்மதியார், அண்ணு? சேசன், அண்ணன், அரசன், ஆசான் இவர்கடேவிமாரையும், பெற்றவளையும், பால்கொடுத்து வளர்த்தவளையுந், தாயென்றெண்ணு ; இல்லாவிடிலெமன்றெண்டிப்பான், நானோ நளமகாராஜாவின் பத்னி ! என்னேடிப்படிக்காடப்போகாதாக்கும்,புத்தியில்லானே, மனம்போகும்வாறுநடக்காதே! வருங்கதியறியாமல்பதராதே! கெடுமதிகண்ணிற்குத் தோற்று வேண்டாமண்ணுவே ? நான்முன்னுக்குச்செல்ல வழிவிடுவாயண்ணு ; (வே-வ-ம்.) அடி ! நானுன்ஆபத்தைத்தீர்த்த ஆம்பிடையானல்லவோ ? காமத்திற்குக்க



ண்ணேது ? மோகத்திற்கு முறையேது, ஆசைக்கடக்கமேது, ஆளுக்குப்பாவமேது, கன்றுண்களித்தகோகிலி, இறந்தபின் எமன் இம்சையை உயிருக்கும்போது என்னுவதேன் இருக்கட்டும், உன்னைநான்சகிக்கட்டும், எமன்வருகட்டும், உனக்குதவிபெவர்வந்தாலுமென்னென்னமீட்டோராம லிவ்விடம்விட்டகலவிடேன், இப்போதே தூக்கிச்சென்று என்கருத்தை முடித்துக்கொள்வேனடி, கடுமனம்படைத்த காதகியே ; (தம-வ-ம்.) ஆ ! இவன்வரும் நோக்கத்தைப்பார்த்தால், தம்மைபலவந்தஞ்செய்வான்போற் காட்டுகின்றது, இதற்கெப்படி? தன்னைக்கொல்லவரும்பசுவைத் தான் முந்திக்கொல்வது தர்மமென நூலோதுகின்றமையாலினிநாம் சும்மாவிருப்பதடாது,பதிவிரதையெனவியாத பாமரனுக்குத் தெண்டனையேதேவப்பிரசாதமாகும்.

தமயந்தி - விருத்தம்.

அன்னவாய்சுரேந்திரனைக்கைப்பிடித்த
அக்காலமுதல்வினைடிகளேற்றி
மன்னதிருளிருப்பதுமே மெய்யேயாகின்
மனவாளருவொன்மே விருப்பதாயின்
வின்னவருமற்றவரு மென்னையேற்ற
வினைநாமவிதனுடனுஞ்சாம்பலாகி
கன்னிமைதான்கெட்டாமுன் னெரிய்யெந்தன்
கனவனடிபோற்றிசெய்தென் கருதிநானே.

(தம-வ-ம்.) ஓ ! சண்டாளா ? நீ சாம்பலா யெரிந்துபோகக்கடவது, சரி, இனியப்பாற்சென்று நமதுநாயகனைத்தேடுவோம் ; (நள-வ-ம்.) ஆ ! ஆ ! நாம் தமயந்தியைவிட்டு, இவ்வளவுதூரமகலமனம்படைந்து வந்துவிட்டோமே இதுவுஞ்சரிதானு? நம்முடைய அவிவேகத்தினலன்றோ நாடு நகரையிழந்து இக்கெதிக்காளாகி நின்றோம், தமயந்தியினல்லனைத்தோஷம் குற்றமற்றவளாச்சதே, நாம் அவளைவிட்டுவந்ததோ மகாதோஷம், இதுவரையி லெந்தமிருகங்கொன்றுவிட்டதோ ? அவள்சவம் அநேகிப்பிரேதமாகச் செய்வதிக்குமா, நாமுயிரோடிருந்தும், போ

யப்பார்த்துவருவோம், ஆ! இதுதான் நமதுபத்தினிசயனித்தி ருந்தவிடம், கண்ணாட்டியைக்காணோமே, எங்குதனியேநம்மை த்தேடிச்சென்றனளோ? இருளாச்சே, இந்தக்காட்டிலிருக்கும் பாதைகளை யறியாதவளாயிற்றே, தெரிந்தவளாயிருந்தாலும் நா ம்வரும்போது அவளுக்குக்காண்பித்த பாட்டையையடைந்து அதைப்பற்றி விதர்ப்பதேசம்போயிருப்பாள் என, எண்ணலாம் ஆ! வைகுந்தவாசா! என்னுயிர் எங்குபோயினளோ வறியேன் சி, மனமே! ஏன்கலங்குகின்றனை, சந்திரமதியும், தமயந்தியைப் போலபெண்பாலல்லவோ, அவள் அமாவாசையினிருளில், அர்த் தராத்திரிவேளையில், தனியாய் அடவிக்குட்சென்று, பாம்பு கடித்திறந்த, தன்பாலகனைக்காணவில்லையா, அவ்வாறே தம யந்தியும், விதர்ப்பதேசத்திற்சேரும் பாட்டையைக் கண்டுபிடி த்திருப்பாளென, ஏன் மதிக்கப்போகாது, நெஞ்சே? பெண்க ளியல்பாகவே பேதமைபொருந்தியவர்களாயிருக்கினும், மன த்திடம்கொள்ளிலோ ஆண்பிள்ளைகளைப்பார்க்கினும் நான்மட ங்கதிகமாயாவார்களென, நீதிசாஸ்திரம்பேசவில்லையா?

## நளமகாராஜன் - விருத்தம்.

உணவதுமிரட்டிப்பாகு மூக்கமும்நாற்பங்காகும்
தனலதுமறுகாரும் தாளாண்மையறுபங்காகும்
பிணக்குதுமைப்பங்காகும் பிடிவாதமெழுபங்காகும்
புணர்ச்சியுமெண்பங்காகும் பூவையர்தமக்குக்காணே.

(நள-வ-ம்.) இதமறந்து, ஏன் என்னுடைமென்னை ஏக்கங் கொள்ளுகின்றாய்மனமே, நீதானி, சந்திரமதிக்கோ பாலகன் மடிந்தவிடத்தை எளிதில்கண்டுபிடிக்கும்படி அயலார்ந்தவேதியரு டையமைந்தர்கள், காட்டுச்செடிகளைப்பிடுங்கி அடையாளமா கவழிமுழுதும்போட்டுவைத்து கற்பித்ததாலன்றோ, அவள் எளி தில் அடையலாயிற்று, நாம் அப்படிக்கேதொருகுறியும் இடவி ல்லையே, பாம்பினைமிதித்த பாதாங்குசா, என்னுயிரையெக்கே கச்செய்தாய், அல்லது என்னசெய்துவிட்டனை.



## நள - பதம் - காம்போதி - ஆதி.

பெண்ணேநீயெவ்விடம்போனாயோ-அடிகண்ணே (பெ)
அன்னமேயுனைப்பிரிந்து அரும்பாவிசென்றேனையோ
அலையவென்னைவிடுத்துக் கலைவாய்ச்சென்றாய்நீஜயோ. (பெ)
தாய்மனைபோவாயெனத் தடுத்துனைப்பிரிந்தனை
தனியாயில்லிருளினிற் றவியெங்குற்றனை. (பெ)
நாயமிலாத்தசெய்கை நான்செய்தேனெனவோடி.
நங்கையேநீயெங்கொளித்தாய் லொங்குதேயென்னாகமடி. ()
காட்டில்வாழ்விலங்குன்னைக் கடித்துபுசித்ததோதான்
கலியேயென்னைவினைந்து கதறியழுகபோதான். (பெ)
காட்டிலிருந்தவுன்னை நான்கூட்டிவந்தேன்பாவி
நடுக்காட்டில்விட்டுச்சென்று தடுக்காதேனவேதாவி. (பெ)
எச்சென்மத்தினிலுன்னை எந்நிலையேபார்ப்பேன்
எறிபுதென்றுலையிதோ எவ்வாறிதைமறப்பேன். (பெ)
அச்சத்துடனழுந்து அலறியெங்கடைந்தாயோ
ஆர்கைச்சிக்கிப்புழுவாய் அன்னமேதுடிக்கிறாயோ. (பெ)

(நள-வ-ம்.) மனமே? இங்கு அழுவதில் என்னபலன், தமய ந்தியெழுந்து ஏகி எங்குசென்றனளோ, எவர்கைச்சிக்கினளோ அல்லதெந்தமிருகம் பக்ஷித்துவிட்டதோ, இக்காட்டையாவது சுத்திப்பார்ப்போம். அவளைப்புசித்தமிருகம், நம்மையும்புசித்து க்களிப்படையட்டும், இனித்தேடுவோம்இதோ, என் அன்னத்தி ன்காலடிகள்காணுகின்றது, பற்றிச்செல்லுவோம்ஆ! இதென்ன கொடுமைஇங்கு அக்கினிபற்றி யெரிந்திருக்கின்றது, ஆ! என்;

## நளமகாராஜன் - விருத்தம்.

குணவந்திதமயந்தி கோணவாஞ்சைக்
குலவந்திதமயந்தி கோடிபுஷ்ப
மணவந்திதமயந்தி மானியின்ற
மதிவந்திதமயந்தி மான்மகளுதித்த

நளா வந்தி தமயந்தி சேர்க்கொளுந
நாதல்வந்தி தமயந்தி கொண்டுமிரு
உணர்வந்தி தமயந்தி யுரக்கம்நீங்கிப்
குற்றனேயோ தமயந்தி ஓடினாராய.

(நள-வ-ம்) ஆ! தமயந்தி! நீ எழுந்து என்னைக்காணமல்தே டி எங்கும் தனியே போனேனே, இங்குடன் பாத அடிகள் மாறிக்கா ட்டுகின்றது, நெருப்புப்பட்டிருக்கின்றது. மனமே இன் னமும் இங்சென்று பார்ப்பேன், ஆ! இதென்ன! இங்கு அஸ்திக ளுமண்டை ஓடுமிருக்கின்றதே ஓ! தமயந்தி, அக்கினிக்கிரையா கவா என்னையன்று கொளி மாண்டிட்டாய்.

---

நள - தரு - காமா - ரூபகம்.

அக்கினியுனைப்பற்றி அடவியிலெரிக்கவோ
அன்றென்னைக் கைப்பிடித்தாய் - மாதே. (அக்)

இக்கில்லாப்பாவிபோல நெடிப்பரதவித்து
நீபால் நிமாண்டாயோ நாயகிதமயந்தி. (அக்)

தாய்தந்தைமாரையெண்ணித் துரையிலதடித்தாயோ
தானமரந்தாயோதான் - மாதே
செய்கனின்மேறுசைச் செழுமதிதானத்துமே
சிந்தித்துமாண்டாயோ சீருளதமயந்தி. (அக்)

படிபாவிகைப்பிடித்த பாவியினாலேவன் தெண்ணி
பாதவித்துழுதாயோதான் - மாதே
கெடுமதியாற்பிரிந்து கிளம்பநான்நெருப்பினால்
கிடிபெற்றமருவே மரித்தாயோ தமயந்தி. (அக்)

ஆருக்குமோர்தீயதை அமைக்காதுனக்கிந்த
அவமிருத்திவாவிதியோ - மாதே
ஆருக்குநானாய்த் தோஷிபோலவிந்திடத்
தொட்டசகிக்கோமோ துரைசாலிதமயந்தி. (அக்)

(நள-வ-ம்.) சீ, வெறிமனமே? எனிப்படிக்கிங்கு அலறியழுக லாமோ; அப்படிக்கு தமயந்தி, தீயாலெரியவிருந்தால வைத்தமைக் கம்மாலாகுமோ, அப்படிக்கிருந்தாலன்றோ, நம



மைப்பிரிந்துவிட்டது, இல்லாவிடில், தாமுமவளைப்பிரிவதுமுற ண்டா? வருத்தவாவேதற்பயனில்லை; தமயந்தியினுடைய அஸ்த் திகளையெல்லாம்சேர்த்து, கனிதுகையைப்பற்றியகட்டுங்கயொ ருசீரோவைமிற்போட்டு ஸ்நானஞ்செய்துகர்மத்தைதப்போக்கிய ப்பாற்செல்லுவோம், ஆண்டாண்டழுதாலுமாண்டார்வருவரோ மனமே; அடி நாயகி! நமது செல்வகாலத்தில் நீஇறந்திருந்தா லெந்தனைதானதர்மம், ஆடம்பரங்கள் நடந்தேறும், மனமே? வருந்தாம விளி எரிபட்ட வெலும்புகளைக் சேர்ப்பாய்; ஆ! இதென்ன! இந்தக்கைவெலும்பு, இவ்வளவு பருத்தாகிக்காட்டு கின்றது, நமது நாயகிக்கிவ்வளவு காத்திரமிருக்கவில்லையே; ஆ! இம்மண்டையோடோ! அதிகபருமனுய்த்தோற்றுகின்றது; இது, புத்ஷனுடைய புகரின்றிப் பெண்ணல்ல, அதிலு மிவன் ஓர் காட்டான், அல்லது இராக்கதனயிருக்கவேணும்; ராவிதுவ ரையிலுங்கொண்டுவெண்ணங்களெல்லாம் வீணன்றிவேறன்று இனி அப்புறம்சென்று, தமயந்தியைத் தேடிப்பார்ப்போம்;

---

நள - ஜூ - கம்வரி - ஏகதாளம்.

எனைபலவாறு மெண்ணிருதிமனை
வேகவிட்டுப்பிரிந்தாய் - மாதுமயிலே. (எனை)

மானைப்பிரிந்தகலை யுருத்துமவங்கியாயினும்
மாறி - மாறி - மயங்கிடவே - அடி. (எனை)

இருந்த தேசகத்தை இங்கனேயென்மனம்
எண்ணி - எண்ணி - இடிந்திடவே - அடி. (எனை)

தனித்துமஞ்சத்தில் தந்தகோரிகத்தை
தாவி - தாவி - தவித்திடவே - அடி. (எனை)

(நள-வ-ம்.) மனமே? இதென்னபுதுமை! நீயே தமயந்தியை த்தனிக்கவிட்டுப்பிரிந்துபோன;

---

நளமகாராஜன் - விருத்தம்.

அடிதோஷியாசையென்பதில்லாத்தோஷி
அருந்தோஷிபெருந்தோஷியண்டநேனைக்
கடுதோஷிசொல்லுக்கெல்லாத்தோஷி
குகாட்டத்துணிவுகொண்டகோரபல்தோஷி

படுதோஷித்ருமமென்பதறியாத்தோஷி
பாவைதனைவிட்டகன்றபாமதோஷி
கெடுதோஷிகொடுதோஷிகொலைக்கஞ்சாத
கடைமைத்ததோஷியெனக்கினைபொன்றோ.

(நள-வ-ம்.) இவ்விதமான செய்கைகளையுடைய மாபாவியாயிருக்க அத்தமயந்தி உன்னைவிட்டுப்பிரிந்தனளென வின்னிந்தையாடுவதினியடுக்காது, ஏமனே இப்போதோ,எப்போதோவந்துன்னைவதைத்தல்வஞ்சிக்கொடியைப்பிரிந்ததோஷத்திற்காகவாட்டவிருக்கச்சே, எனிப்படிக்கு ஒருவர்மேல்வன்புரணியாடத்துணிகின்றாய், இது அடாது இனிமுன்னெக்கிச்செல்,மதியில்லாமட்டிமனமே, எனிப்படிக்குப்பெண்ணெனுமாசாபாசத்திற்கட்டுப்பட்டு, அங்குமிங்கும் குட்டிபோட்ட நாயைப்போற்குலைத்துக்கொண்டலைகின்றாய், திடப்பட்டு, நீமுன்தீர்மானித்த என்னைத்தின்படிநடப்பதே ஆவ்மையின்றி யிதல்லவிரம் ; சூரம், விவேகம், இனி நடப்போம்; ஆ! இதென்னகாட்டுத்தீயானது, மேகமண்டலமட்டுங் கொழுந்தோட்டியெரிந்து எங்கும்புகைசூழ்ந்து நம்மெதிர்நோக்கி வருகின்றது, நாமிப்படித்தனியே, என்னுதெல்லாமெண்ணியக்கமிழியிடிவிழுந்தழுதுவதைவிட்டு, இன்னெருப்பிற்பட்டிறப்பதே நலமென்றெண்ணியன்றோ, எம்பிரானெக்கினைசுபானையேவினதாய்க்காட்டுகின்றது, ஓ!அக்கினிதேவா.

நள - ஜா - பைரவி - சாப்பு.

இருக்கப்போமா இனிநானுலகினில்
இந்தோவந்தனஞ்செய்தேன் எடுத்தழலாக்குவாய். (இ)

தமயந்தியைக்காட்டில் பிரிந்தேனே - பாவி
தனித்தவளைவிட்டு விடுந்தேனே - மேவி
சமயபேதமறியான் ஆனேனே - கோடி
சமனமென்னுமகலைச் சார்ந்தேனே - நாடி.
சரியே - நெருப்பே - கரியாய் - கருக்குவாய். (இ)

உத்தமியைவஞ்சிக்க உளத்திலேயிட்டு
உருகியாய்கிளைந்தவாற் கிலத்திலேதொட்டு



எத்திசையோருமென்னை யேசவேயோசி
இடும்பதனமைத்திட்டேன் என்றுமலேதோசி
இதுவே - நெருப்பே - வதைக்கச் - சமயந்தான். (இ)

(நள-வ-ம்.) நாம்ஒருவார்த்தை,தமயந்தியெங்கிருந்தபோதிலுமவள்செவியிற்கேட்கும்படி உறக்கவுரைத்து, அப்பால், நாமே வலியமுன்சென்று எதிர்வரும் அக்கினியில் விழுந்திறப்போம்.

நளமகாராஜன் - விருத்தம்.

முக்கனியேதமயந்திவிதர்ப்பனீன்ற
மோகினியேதமயந்திமுகவிலாச
சர்க்கனியேதமயந்திநாணம்பூண்ட
நாயகியேதமயந்திநாட்டமாறு
கைக்கனியேதமயந்திகருணைவெள்ளக்
காமினியேதமயந்திகாட்டிலோங்கு
மக்கினியேதமயந்தியென்குமேனும்
நாட்டியெனத்தமயந்திமிறைக்குகின்றோ.

(நள-வ-ம்.) ஆ!.ஆ! இந்தவிசேடத்தை என்னென்று பேசப்போகும், தமயந்தியினுடையபெயரை நாம் சொல்லக்கேட்ட அக்கினியு மடங்கிப்பயந்து, ஓடி ஒழிந்ததல்லவா? இப்படிக்கவள்பெருமை யிருப்பதை நாமுணராமல் அற்பமதியடைத்துக்காட்டிற்பிரிந்துவந்தோமே ; அவளைநம்முடனிருப்பாளாயின்நமக்கொருதுன்பமும் மனுகாதென்பதற்கு ஏதொரு தடையுண்டோ? இப்போதல்லவா அவளுடையபெருமையை யறிந்தோம்; இனி எங்கேனத்தமயந்தியைக் காணப்போகிறோம், கையிலிருந்த கனியை எறிந்துகாட்டில் காயாவிருட்சங்களைத்தேடித் திரியுந்தீயனென்பவனுமேயன்றோ ;

நளமகாராஜன் - விருத்தம்.

அன்னமேயுன்பெருமையறியாப்பாவி
அரும்பாவிபெரும்பாவிபடுங்காப்பாவி
சொன்னமேருதாடத்துணிந்தபாவி
சுருதியின்றிமுறைவிடுத்தகோத்தப்பாவி

கன்னமுதேகடும்பாவிகருமப்பாவி
காட்டிலினையகன்றிட்டகடன்பாவி
நன்னறியா நளன்பாவியெனத்தெரிந்தும்
நாயகியேவுளங்கனிந்தநாட்டமன்றே.

(நள-வ-ம்.) ஆ ! தமயந்தி, நானுன்னைத் துன்பத்திற்காளாக்கினதோஷியென்று நீயறிந்தும், நான் தமயந்தி, தமயந்தி,யென்றமாத்திரத்திலேயே, அக்கினியை அடக்கி ஒடச்செய்தாய், நாயகியுன்னுடைய பூதகையை, பல்யாதாபம், அன்பு, இவைகளை என்னென்றுசொல்வேன், அடியுத்தமியே? மனமே! இனி, முன்னேக்கிநடப்போம் ; ஓ ? ஓ ! ஒருசர்ப்பமானது, அக்கினியிற்சிக்கி அவஸ்தைப்படுகின்றது; (சர்-வ-ம்.) ஓ! நளமகாராஜனே! தன்னுயிரைப்போல மன்னுயிரைக்கார்க்குந் தயாநிதியே ! நானிவ்வாறு இக்காற்றஜெந்துவாய், தீயிலிறப்ப துமக்குத்தர்மமா ? என்னைக்காக்குங்கடனுமக்கில்லையோ? "தெய்வமானுஷரும்பெறும்,, எனுமொழிப்படிக்குந்த வைருத்தவாசனுகிய கோதண்டபாணியே? உம்மைப்போ லுருக்கொண்டுவந்தானென நம்பிப்போற்றி செய்தேனென்னை இவ்விடுக்கத்திலிருந்துவிடுவித்துச்செல்லும், வித்தகரே? வீரசூரவிவேகமுள்ளவரே ; (நள-வ-ம்.) ஓ! சர்ப்பமே நீயோ கொடுங்குணமுடைய ஜெந்தென்றும், கோபமுள்ளதுச்சென்றும், ஒருவனைக்கொல்லத்துணியும்புழுவென்றும், பலநீதிகளும்பேசுவதையறிந்த நானவைகளைமறந் தெப்படியுனக்குபகாரமுசெய்யத்துணிவேன் ; (சர்-வ-ம்.) சுவாமி? என்னிடம்விஷமிருப்பதாலெல்லோருந்நிந்திப்ப துண்மையாயினும், எங்களுக்கொருகெடுதிசெய்யாதவரை நாங்கள் தீண்டாதிருப்பதனாலன்றோ, நல்லபாம்பெனும் பட்டப்பெயரையடைந்தோமன்றியும், எங்கள்நற்குணங்களுக் குகந்ததன்றோ, பரமசிவன் ஆபரணமாயணிந்திருக்கின்றான் ; வைகுண்டவாசன் பஞ்சணையாய்மகிழ்ந்து சயனித்திருக்கின்றான், வேந்தர் வேந்தே ? இதையோசிக்காம லாடப்போமோ தயாநிதிவே ; (நள - வ - ம்.) இச்சர்ப்பம், எடுத்தோதியதிஞ்சரியே, ஆபத்தைத் தவிர்ப்பது அரசர்க்குரியசெய்கையே, எடுத்துவிடுவோம் ; ஆ ! சர்ப்பமே ! உன்றுணத்தை மாறுமல்காட்டினையேவஞ்சகநெஞ்சினையுடையநச்சுநாகமே;



நள - கண் - நாதநாமக்கிரியை - சாப்பு.

ஐயையோயிதென்ன அநியாயமநியாயம்.
அரவங்கடித்ததுவே அரவங்கடித்ததுவே
அரவங்கடித்ததுவே ஓதெய்வமே - தெ - தெ. (ஐயை)
மெய்யடிமைபுரிந்த மெல்லியைவஞ்சித்த
மிடிக்கிதுதெண்டனையோ - ஓதெய்வமே. (ஐயை)
பொய்யோதான்சத்தியம் போனதோபுவிவிட்டு
புல்லறிவாளர்நானோ - ஓதெய்வமே. (ஐயை)
அங்கமுமெரியுதே ஆவியுஞ்சோருதே
ஆரிட்டதிவினையோ - ஓதெய்வமே. (ஐயை)
நஞ்சதுந்தலைக்கேறி நாவறண்டுமேனியும்
நடுங்கிவெயர்க்கின்றதே - ஓதெய்வமே. (ஐயை)
அஞ்சலியென்றமொழி அரவுமறந்துமென்னை
அலரக்கடித்திட்டதே - ஓதெய்வமே. (ஐயை)

(நள-வ-ம்.) ஆ ! நெஞ்சிரக்கமில்லாத வஞ்சகமனமுள நஞ்சுடைய சர்ப்பமே! என்னை, நீமுன் வருந்திக்கேட்டவரப்பமென்ன ? அபயமென்ற அடக்கமென்ன ? நெருப்பிலிருந்து எடுத்துவிட்டபின், ஓங்கிக்கடித்த ஒழுங்கென்ன ? உனக்குநான்செய்திருந்த, பழிபாவங்களேதாயினுமுண்டோ, பாம்பே ?

---

நள - கண் - கேதாரம் - ரூபகம்.

கண்டேன்குணம் கண்டேன்குணம்
கண்டேன்குணம் கண்டேன்குணம்
கார்க்கோடனேநான். (கண்)
நன்றேசெய்தவினைக்கோயென்னை
நாடிக்கொத்தலாமுன்னை. (கண்)
விண்டேயின்பமொழியதனை
வெருளக்கொத்தி விஷமூட்டினை. (கண்)
மெத்தவேண்டிக்கொண்டாய்நீயே
மிடிதீர்த்தபின்கடித்திட்டாயே. (கண்)

மேனியெங்குமொருவாறதாய்.
மிக்கிஜயோகருக்கச்செய்தாய். (கண்)

என்னையிவ்வாறு நீண்டப்பதை
இட்டிருந்தவுந்தன்வகை. (கண்)

பார்ப்போரென்னைப்பரியாசங்கள்
பண்ணவுறுப்படைச்செய்தாய். (கண்)

இவ்வுருவாயெங்குசெல்வேன்
எவரிடத்திற்றொழில்புரிவேன் (கண்)

(கார்க்கோடகன்-வ-ம்.) ஓ! நளமகாராஜனே? உமக்குவருமைகாலந்தான்வந்தடைந்தது; அறிவுங்கூடவே அகன்றோடியதோ? உபகாரஞ்செய்தவர்களை, ஓரமாயாகெடுதமக்கடுக்குமா? நீரிந்தகஷ்டதிசையைக்கழிக்க, ஒருவரிடம்பணியாளாகப்போகச்சேஉமது, நிஜருபத்தோடுசென்று லும்மையின்னாரெனவறிந்து, எவருமருகிற்சேர்க்கார்களே, அதனாலும்சுந்தரத்தைமாத்தினேன், உமக்குச் சரியன்றோட்டகாலமளவுநீங்கியபோது, என்னை கவனிப்பீராகில், நான்தோன்றி இவ்விதைத்தைவாங்கிக்கொள்கின்றேன் மகாராஜனே, (நள-வ-ம்.) இதுசெய்ததும், நல்லுபகாரமேயின்றி வேறல்ல, சரிதான்போவாய்சர்ப்பமே; நாமிந்தப்பாட்டையைப்பற்றி இனிமுன்னுக்காய்நடந்து ஏதாவதொரு நாட்டையடைந்து மற்றநாளையுங்கழிப்போமாகத்து.

தம - ஆரு - எ - காம்போதி - ரூபகம்.

துரையேயினி உந்தனையிந்தத்
தோஷியுங்காணப்போவே னாயினியே. (து)

குறையார்செய்தனோ சகிக்
கோனோ அறியேனே யினிக்
கூவிக்கூவித்தேவிப்பாவியாகினேன். (து)

பற்றுதேவாயிற் பற்றுதேதலைப்
பார்ப்பதெப்போதெனச் சுற்றுதே
சற்றுந்தயைவில்லாதே
சதியானேசீர்பிரிந்ததே
சாமி சாமி தேவி காமி நீ ஓடியே. (து)



தேடுதேகண்கள் தேடுதே - யிங்கு
தேவியுடல்வருந்திவாடுதே
வாடிதுளம்நோகுதே
வஞ்சிகுடல்வேகுதே
வாதோ வாதோ ரூதோ
ஏதோகாணேன். (து)

(தம-வ-ம்.) துரையே! இதுவரையிலும்மைத்தேடிக்காணாதவளாய்க் கலங்கிவாடலானேன், இந்தக்காட்டிலோ ஒருவழிப்போக்கர்களையுங் காணாதவளாகினேன், இனி என்செய்வேன் பிராணநாதா? ஆ! அதோ! யாரோ பொதிமாட்டுக்காரர்போகின்றார்கள், ஆகையால் நாம் அவர்கள்துணைபற்றி ஒருதேசத்தையடைந்து காலத்தைக்கழித்துக் கணவர்வரும்வழியைநோக்கிக் கண்களைவிழித்துக்கொண்டிருப்போம்; அண்ணா? நீங்கள் எங்குபோகின்றீர்கள், அடியாளும் உங்கள்துணைப்பற்றிவருகின்றேன்அண்ணாவே; (பொதிமா-வ-ம்.) அடே குண்டா! அந்த அம்மாளைப்பாத்தியோடா? யாரோ ராஜாபெண்சாதி, எவ்வளவயகுலச்சிமியடா! ஒன்னுஞ்சொல்லப்போகாது வா! அம்மணி வா? அடே அந்தமாட்டை மடக்குடோ? மாடுகள்ரொம்போ நடந்து வெசாரிப்போச்சுடோ, இந்த ஆலமரத்தின்கீழே பொதிகளையிரக்கிக் கொஞ்சம்தூங்கிப் பொழுதுவிடிந்தால் இன்னாங்கூப்பிடுதூரத்திலிருக்கும் சேரி நாடுபோவோம், அம்மா? நீ எங்களோடேயிருக்கிறையா! அல்லது இதோபாட்டைவழிபிடிச்சுப்போனால்ஒருபெரியவூருவுண்டுதாயே; அண்ணா! அடியாளுமிங்குதங்கி சூரியனுதித்தபின் உங்கள்பின்பற்றியேவருகின்றேன் அண்ணா; (மா-வ-ம்.) சரிதா னீயுங்கொஞ்சம்உரக்கஞ்செய், நாங்களுந்தூங்குறோம்: (தம-வ-ம்.) நமதுபிராணநாதர்எங்கேயின்றுரோ அவருக்கெவர்துணையோகாணேன், இவ்விதமானதுன்பங்கள்வந்தமைய நாமென்னகெடுதியிழைத்திருந்தோமோகாணேம், விதியே, உன்வல்லமையேவல்லமை, உன்னைவெல்லத்தக்க முயற்சி எடுப்பவர்களுண்டென மதிக்கவிடமில்லை, நமக்கோசோம்பலதிகரிப்பதால் நாமுமிங்கேசயனிப்போம்.

தம - தரு - இ - செஞ்சுருட்டி - ஆதி.

ஆ! ஆ! இதென்னசத்தம் அச்சமும்பயமாகுதே. (ஆ)
ஓ! ஓ! காட்டானைகள் ஒன்றாகக்கூடியே
உத்தமப்பொறிக்காரர் செத்திடமிதித்ததே. (ஆ)
அரும்பாவிகாளவ ராகிலிருந்துமென்னை
ஆனைமிதித்திடாத தேனோயறிகிலேனே. (ஆ)
எத்தனைநாளினம் இத்துயரருந்திட
ஈசனெழுதினனோ தோழியறிகிலேனே. (ஆ)

(தம-வ-ம்.) அன்னைமாரே! என்னையதிக அன்போடு திருத்தச்சொன்ன உங்களுக்கு இவ்விதியா எழுதியிருந்தான் பிரமன், உங்களை எல்லாங்கொன்ற யானைகள் என்னைக்கொல்லாமற் போன காரணம், என்னமோவறியேனே விதியே, நாமே அந்த ஆனைவழி சறுகிச்சென்றுவோம், ஐயையோ! நம்மைக்கண்ட ஆனைகள்பயந்தோடுகிற் குப்போயினதே, இனிஎன்செய்வோம், சூரியனுதிக்கும்வரையிலிம்மரத்தடியிலிருந்தப்பால்பாட்டையை பற்றிவாகுபுரியடைந்துமனுபிராணனாதனைத்தேடுவோம்.

---

தம - தரு - ஆ - பைரவி - ரூபகம்.

நந்திமலர்மார்பனே - நான்தொட்ட
நயகுணநளராஜனே. (நந்தி)
முந்தியுமதடியை மூணாத்துமிடித்துநாதா
முறையிட்டுமன மிரங்கியேஅபயம்
அறைந்தகனவரே யடிமையைப்பிரிந்தீரே. (நந்தி)
நான்செய்ததீவினையோ - என்னைப்பெற்ற
நாயகிதன்குறையோ
தான்புரிந்தபழியோ - தந்தைதன்
தவத்தினிலக்குறையோ
வனிலியென்ஜென்மம் இருப்பதிற்பயனுண்டோ
எங்குசென்றுட்டல் ஒங்குதேதுயர்
நீங்குதேஆவி வாங்குதேயிதோ. (நந்தி)



(நள-வ-ம்.) ஆ! எனருந்தவஞ்செய்துபெற்றமகனே? உன்னை யிவ்வயதில்பிரியுங்காலம் நேரிட்டதல்லவா!

---

நளமகாராஜன் - விருத்தம்.

பால்வேனாலநால்களோரச்செய்தே
பாரினுனைச்சீராட்டாவதிசண்டாளன்
சில்லேனசெங்கோலேட்டியோக்கிகெட்ட
சீலாச்சண்டாளன் சினச்சண்டாளன்
காலமெலாமொருவிதமென்றெண்ணுமத்தக்
கருமியினுமகருமிகனச்சண்டாளன்
நாளுமாராயாகுதாடிவாழ்நாஞ்டாளன்
நேருமபலதுயர்கொண்டேன் சோரன்பிலானே.

(நள-வ-ம்.) அன்பிருந்தும், என்மைந்தா? இருமனைவியனுபவிக்கச்செய்த சர்வசண்டாளன், இனி எப்போதுனைக்காண்பேன் கண்மணியே! ஓ! முகுந்தா?

---

நளன் - கண்ணி - சவாயி - ரூபகம்.

நாராயணாவென்னை நாகங்கடித்ததும்
நன்னெறியின்றியே நாடாண்டபழியோ. (நா)
சீராயிருந்தென்னை தியங்குதாடவே.
செப்படிவின்றிச்செப்பாய்வேறல்லவே. (நா)
புத்திஸீமயாமேந்தன் பாலனையும்பிரிந்து
பாதகிதிடச்செய்த பாவமுனக்கல்லவோ. (நா)
கார்க்கோடகனைவிட்டே கடித்தெனுருவையிவ்வாறு
கருக்கச்செய்ததுமுந்தன் கருணைக்கடலல்லவோ. (நா)
எனையிவ்வாறுவருந்திட வேஷமாகொண்டயோ
எமெத்தனைநாட்டாயிருந்து எதிராஜசுந்தரா. (நா)

(நள-வ-ம்.) சீ? சீ?

---

## நளமகாராஜன் - விருத்தம்.

கெடுமனமேநீசெய்த தீக்கோளெல்லாங்
கிட்டிபொருபுருவாகவந்தமைந்து
படுமனமேபத்தினியும்பாலர்தன்னைப்
பரதவிக்கச்செய்ததெனப்பண்ணிடாமல்
தொடுவழக்காய்ப்பாரங்குசனைத்தாராலனுய்
தோஷிநெஞ்சே ! பாவிநெஞ்சே ! துல்யமில்லா
தடிமனமே ! நாய்நரிபோலானாயிட்டால்
தான்போமோமுன்வினைதான்தணிந்துபாரே.

(நள-வ-ம்.) ஆ ! மனமே ? நீ முன்ஜென்மத்தில் செய்தபழிகளல்லவா ! இச்ஜென்மத்திலுன்னையிக்கெதிக்காளாக்கினதென்றுணராமல், மலத்தையும், மாங்கிஷத்தையும்புசிக்குமறிவில்லா நாய்நரியைப்போலஎரும்புகடை என்பந்திரான்குலக்ஷ ஜீவராசிகளிலும், ஏகோபாவமாய் மிது உரிது. அதுசிறிதென்றென்னுமல், எல்லாமொன்றென இரக்ஷிக்கும் எம்பெருமானாகிய, வைகுந்தன்மேல் வசையைச்சாட்டி பூனையிடுவதால், என்னபலன் ? ஓலமிட்டழுவதனுல்என்னநலம்? அதோவெள்ளிமலைநந்துநமக்கெதிர்வருஞ்சனங்களைக்கொண்டு இன்னாட்டையுமதையாளுமரசனையுமின்னதென்றறிந்துக்கொள்ளுவோம், ஐயா! நீங்களெங்கிருந்துவருகின்றீர்கள்; (ஜனங்கள்-வ-ம்.)அப்பா? நாங்கள்அதோ காணுமயோத்தியிலிருப்பவர்கள்; (நள-வ-ம்.) அதையாளும்அரசனாரையா ; (ஜ-வ-ம்.) அப்பா, ரிதுபர்ணமகாராஜன் ; (நள-வ-ம்.) சரிதானையா வந்தனம், இந்தரிதுபர்ணனோ, அதிவீரனென்றும், நீதிமானென்றுங் கேள்விப்பட்டிருக்கின்றேன் இவனிடமிருந்து, நமது காலத்தைக்கழித்துவிடுவதே யதிமேலாய்க்காணுகின்றது, சரிதான் அவன்நம்மையாரெனவினவிலேதுனைப்பதுபொய்புகலப்போகாதே, நளனிடமிருந்த வண்டகசாலைத்தலைவனென்போம், பெயர் பாகுகனென்போம், என்நளனைப்பிரிந்துவந்தனையென்றால் நமக்குவாய்ந்ததை படர்க்கை யொருவாறெடுத்தோதுவோம், இதோ கொலுமண்டபமடைந்தோம்.



## ரிதுபர்ணமகாராஜன் - கொலு - விருத்தம்.

ஆதியுமாயந்தியுமாய்நடுவுமாகி
யண்டமுமாயண்டத்துளனைத்துமாகி
சோதியுமாய்ச்சோதிக்குட்சுடருமாகி
சுத்தமுமாய்ச்சுத்தநிலைதனுமாகி
நீதியுமாய்நிருபமுமாய்நிமலமாகி
நித்தமுமாயெங்குமின்னொளிர்கண்டா
ஓதியபுனைப்பணிந்தேனென்றுசெங்கோ
லோங்கிடவுமருள்செய்வாயும்பர்தேவே.

(மந்-வ-ம்.) பேசுற்றிடென்னுடையராகிய ரிதுபர்ணமகாராஜனேபோற்றி ! அப்பாமந்திரி, நமதுநாட்டில்வாழுஞ்சதுர்வர்ணத்தாருந் தங்கள் ஒழுக்கத்தோடுசுகமேயிருப்பதும், மாதம்மும் மாரிபெய்வதும், குடிகளு மவாள்காலநடைமுதலானவைகளிருக்குஞ் சவுக்கியமுந் தேவாலயம்பிரமாலயங்களிற்பூஜைகள்குறைவின்றி நடந்தேறுவதும், ஓமம், எக்கியங்க ளங்கங்குதவடையின்றி நடப்பதும் ரிஷியாஸ்ரமங்கள் மிருகாதிகளால் ஏதாமொருதொந்திரவின்றியிருப்பதும், நமக்குக்கப்பங்கட்டுபவர்களிடமிருந்து பகுதிப்பணங்கள் நிலுவையின்றிவருவதும், பாட்டைசாரிகளைக்கண்டு, உபசரித்து உணவளிப்பதும், கிரமமாய் நடந்தேறிவருஞ்சங்கதியை இன்றெனக்குத்தெரிவிப்பாய்நேசா ; (மந்-வ-ம்.) அரசே, தங்களாக்கினையின்படிக் கெல்லாமேதோருகுறைவின்றி நடந்தேறுகின்றனதேவே ; (ரிது-வ-ம்.) ஆனால் சந்தோஷமந்திரி ; (நள-வ-ம்.) ஐயா கட்டியரோ, உங்களரசரிடஞ்சென்று, தங்களைக்காணவேண்டி நளமகாராஜனிடமிருந்த பாகுகன்வந்திருக்கின்றான் எனத்தெரிவிப்பாயா ; (கட்-வ-ம்.) அப்படியே ; (நள-வ-ம்.) போற்றிமகாராஜனே ; (ரிது-வ-ம்.) அப்பா? நீயார், எங்கிருப்பது இங்குவந்தகாரியமென்ன உன்னுடைய நாமதேயமெதுவோ வெளியிடுவாய் ; (நள-வ-ம்.) நானிருந்தநாடுநிடதம், நளச்சக்கிரவர்த்தியினிடம்வண்டகசாலைத்தலைவனாயிருந்தவன், என்பெயர் பாகுக னென்பார்கள் சுவாமி ; (ரிது-வ-ம்.) சரி, அந்த மகாவுத்தமராகிய நளச்சக்கிரவர்த்தி

னிடமிருந்தவ னவ்வாசீங்கிவரத்தகுமா? அப்படிக்குவந்தகால கெடுதிஉனக்கென்னவெளியிடுவாய்; (நள-வ-ம்.) இதற்கெப்படி உண்மையை யொளியாமல் ஒருவாறுய்ச்சொல்லுவோம்தேவே.

நளமகாராஜன் - விருத்தம்.

நிடதனிடம்பாருகனுய்நேமத்தோடு
நெடுநாளாயானிருந்தேனீதியேகேள்
பட்டமதனிற்றனக்குநிகரில்லாரென்று
பகன்றிடும்வாறரசுசெய்யபாவையோடு
மடத்தனமாய்புஷ்க்கரனவ்வழியேசெல்ல
வழைத்துவரத்துசுதுவப்பிமார்க்கம்விட்டுத்
தொட்டபோகாச்சூதாடியரசைத்தோற்று
தேசையுடன்காடுசேரத்தோணினேனே.

(நள-வ-ம்.) சுவாமி! நள்மகாராஜ ரதிக்கீதியாய், தமயந்தி யெனுமாதினோ டரசாளுங்கால் புஷ்க்கரனெனுந் தனக்குக்கீழ்ப்பட்ட வரசனவ்வழி செல்ல வவனைவரவழைக்கச்செய்து வலியவவனுடன் சூதெனுஞ்சொக்கட்டானாடிச் செங்கோலையிழந்துபரதேசியாகித் தானுந் தன்பத்தினியுங் கட்டவுங்கந்தையின்றி எங்கேயோ போய்விட்டபடியா லுமதிடம்வந்தேன் வேந்தே;

ரிதுபர்னன் - விருத்தம்.

அதிபெருமைப்புகழ்சத்தியகீர்த்திமார்க்க
மறிந்தவுடன்பலகலைகளுணர்ந்தசீலன்
விதிவசத்தால்நாட்டைவிட்டுச்சென்றகாலை
வெறுத்தவனையிங்குவர்விவேகநாடோ
பதிபெனவேகநற்காலந்தனிற்பணிந்து
பாருகனேபடிவரவும்பிரிந்துமன்னியர்
கெதியெனவேவிந்தனையேயடிக்குமோதான்
கிளருவாயுன்கருத்தைக்கேட்கலானே.

(ரிது-வ-ம்.) அப்பா பாருகா? மகாகீர்த்திமானாகிய நளச்சக்கிரவர்த்தியினிடம், நல்லகாலத்திலெல்லாமொத்திருந்து, ஏதோ



விளைப்பயனால், நாட்டைவிட்டு எங்கேயோ தலைமறைவாய்ச்சென்றிருக்குங்காலை, நீபிரிந்து என்னிடமிருக்கவந்தது அடுக்குமா? எஜமானைவஞ்சித்தலேற்குமா பாருகா?

பாருகன் - விருத்தம்.

நீதிநெறிவழுவாதநிடததேச
நிருபனிடம்பாருகனாயிருக்குங்காலை
ஆதிமுறைவிடுத்தவருஞ்சூதையாடி
ஐயையோபுஷ்க்கரனுக்கரசைத்தோத்தார்
வேதனைகள்செய்வேனெனவவன்கலங்கி
வித்தகனேயிங்குற்றேன்வேந்தருக்கே
ஓதரியவாறதனைநடத்துவேன்யான்
உத்தமனேயிதுவுண்மையுரைத்திட்டேனே.

(பாரு-வ-ம்,) சுவாமி? சூதினால் நிடததேச அரசைக்கவர்ந்த புஷ்க்கரன், எவராயினும் நளனிடம்போகப்போகாதெனவுமப்படிப்போவோர் கொடிய தெண்டனைக்காளாவார்களெனப்பறைசாட்ட, அக்கொடியனிடம்வாழ்வதடாதெனத் தங்களிடமடைந்தேன்தயாநிதியே; அன்றியும்அந்நளமகாராஜர், நாவிரதத்தை நடத்தும் வல்லமைக்காய், அநேகர்முன்பு என்னைமகாபெருமையாய்க் கொண்டாடியிருக்கின்றார் வேந்தே; (ரிது-வ-ம்.) அப்பா பாருகா, இது உண்மைதானே, நான் நம்பேன், அந்நளனோ மெத்தவும் விவேகசாலி, வீராதிவீரன், தருமநூல்களாய்ந்துணர்ந்தயாளியைச்சூதாடினானென்பதை நீயிங்கிருந்தபடிரூபிக்காவிட்டா லுனக்குத்தக்க தெண்டனைவிதிப்பேன் பாருகா; (பாரு-வ-ம்.) ஆ! வைகுண்டவாசா? இதற்கென்னசெய்வேன், உண்மையை வெளியிட்டும் ரூபிக்கும்படிக் காக்கினையிட்டனே, இதை எவரைக்கொண்டு ரூபிக்கலாவேன், சரி, இவ்வரசனால் நாம் தெண்டனையநுபவிக்கவும், விதியிருக்குதாக்கும் தெய்வமே! நீயேதுணை.

(பௌஷியன்-வ-ம்,) அப்பா கட்டியனே, நான் வந்திருப்பதாக, வேந்தருக்கறிவிப்பாய், (கட்-வ-ம்.) நல்லதையா சுவாமி!

முன்தங்களிடமிருந்த பௌஷியன் காவலிருக்கின்றான் தே-
வே, (ரிது - வ - ம்.) வரச்சொல், (பௌ-வ-ம்.) தங்கள் திவ்ய
பாதாரவிந்தங்களுக்கடியேன் வந்தனஞ்செய்கின்றேன், (ரிது-வ-
ம்.) அப்பா பௌஷியனே, நீ நளச்சக்கிரவர்த்தியினிடமிருந்த
வனுக்கே, இவ்விப்படிக்கு வந்தகாரணம் என்ன ? சீக்கிரமெய்
யைவெளியிடுவாய், (பௌ-வ-ம்.) வேந்தரே.

பௌஷிகன் - விருத்தம்.

சக்கிரவர்த்திசொக்கட்டாடியெல்லாச்
சம்பத்துந்தன்னநுசம்புஷ்கரர்க்குத்
தக்கவிட்டுத்தாமுந்தன் பத்தினியோடுந்
தலைமறைவாயோடிவிட்டார்தரணியெங்குந்
திக்குதிக்குந்திசையெல்லாந்தேடித்தேடித்
தெரியாமலிருப்பிடமிதுவுந்தேன்றுமிக்
கக்கிசங்கள்வர்த்தெனயவலாகீங்கக்
கருத்தெடுக்கவில்லடியென்காண்பீர்கோவே.

(பௌ-வ-ம்.) தேவே, நளச்சக்கிரவர்த்தியானவர், புஷ்கர
னென்னுஞ்சிற்றாசனோடு, சொக்கட்டாடிசகலத்தையுந்தோ
ற்று தாமும் தன்பெண்சாதியாகியதமயந்தியம்மாளுந் தலைமறை
வா யெங்கேயோபோய்விட்டதால், நானெங்கு மவரைத்தேடிக்
காணாதவனாயும்மிடம்வந்தேனேயன்றி அவருக்குக்கஷ்டகா
லம்வந்ததென விட்டோடிவந்தவனன்று தேவனே ; (ரிது-வ-
ம்.) அவருக்குக் குழந்தைகளில்லையா ; (பௌ-வ-ம்.) ஒருஆ
ணும் ஒருபெண்ணுமுண்டு, அதுகளைவிதர்ப்பதேசத்திற்க
னுப்பிவிட்டனர் வேந்தே ; (ரிது-வ-ம்.) சரிதா னீயென்னிட
மிருப்பாய் நளச்சக்கிரவர்த்தி மறுபடியும் நிடதம்வருவாராகி
லவரிடஞ்சென்று, சுகிப்பாய்பௌஷியனே ; (பௌ - வ - ம்.)
நல்லதையா ; (-பாகு-வ-ம்,) ஆ ! இதுவும்அறுதாகனுமே,
நம்மைநுபிசுசொன்ன சங்கதி ரிதுபர்ணனுக்குப் பௌஷிய
னால் தெரியவிளங்கியது, இனி, நாமுமிங்கிருந்தே காலத்தை
யொருவாறுகழிப்போம், கார்க்கோடகன்செய்த பேருதவிக்கு



நாமவனுக்குச்செய்கிறோருபகாரமா ! நம்மைப் பார்த்துக்கொ
ண்டேசென்ற பௌஷியனும்நாமின்னாரெனத் தெரிந்துகொ
ள்ளாதவனாயினன், இது இந்தகாலத்திற்குத் தக்கதுபமேயாம்;
(ரிது-வ.) அப்பா பாகுகனே ! நானுன்னைக்கேட்ட சந்தேகம்
பௌஷியனால் விளங்கியது, ஆயினும், நீ நளமகாராஜனை விட்டு
வந்ததடாது, ஏனெனிலோ, அவனுக்குவறுமைவந்தகாலத்தில்
எங்காயினுந்தொழில்புரிந்து,பொருளைத்தேடியும்அவர்களுக்கு
தக்கபடி பாகஞ்செய்து,படைப்பவரை எங்கமைக்கப்போவர்!
அவருடைய மாதுகிரோன்மணியாகிய தமயந்தி தேவியாரோ,
இன்னிச்சத்தொழிலெப்போதும் பிரவேசித்தவருமல்ல, அல்
லது கைதேர்ந்தவருமல்ல ; (பாகுகன்-வ-ம்.) சுவாமி.

நள - கிரு - ஆரபி - ஆதி.

சரியாமோ இதுகூறும் ஓ ! அரசே. (சரி)

விரிவுலகதனிலே வேந்தர்வேந்தனை
வித்தகனைபோற்றி புத்தியீனனையேற்ற. (சரி)

ஐம்பத்தியாறுதேசமன்னர்களும்
அடி பணிந்து முடி குனிந்து
அபயமென்றுபோற்றும்
அந்தனவேனு - டையா
வம்பனனபுஷ்கரனெனுமதப்பனும்
வலியவந்துசூதாடியேயரசதை
தன்வசங்கொண்டவன் றனைநான்வணங்குதல்
தாழ்வல்லவோ செலிப் பாழலவோ - கீர். (சரி)

ரிதுபர்னன் - விருத்தம்.

மன்னர்கட்குமன்னவனு மாண்மைபுள்ளோன்
மாநெறியோனதிசத்தியன் மாதுமவ்வாற்
றன்னிலைமாறுதோள் தருமநேமி
தனைப்பணிந்ததீயவனைத்தானேயென்ப

நன்னிலையேசன்னவர்க்குநற்காவெய்தும்
நாட்கழிக்கமன்னுகொண்டவாறுபோல
என்னிடம்நீபாகுகனுயிருப்பாயப்பா
இகபரமுன்னெழுக்கத்திற்சேற்றுந்தானே.

(சிது-வ-ம்.) அப்பா பாகுகா ? சத்தியரூபியாகிய, நளமகாராஜனைப்போற்றிய கரங்களால், சிற்றாசனும், வஞ்சகமனமுடையவனுமாகிய, புஷ்கரனைத் தொழுத்தகாதென, நீ கொண்டமனவுறுதியானது, இங்கு மெங்கு மெச்சுங்கொண்டாடத்தக்கதே ? உன்னரசனாகிய நளனை நீ காணுங்காலம்வருமளவில் என்னிடம் பாகுகனாகவேமனக்களிப்போடிருப்பாய் ; (பாகு-வ-ம்.) மகாபாக்கிரமரசே.

---

(தம-வ-ம்.) இதோ, சூரியபகவானுதயமானார், நாமதோதோன்றும்படியான, ரிஷியாஸ்ரமமடைந்து, அவாளுளங்களையும்படிக் கேவல்புரிந் தவர்களருளால், நமது கணவரிருப்பிடமறிந்து அவரிடஞ்செல்லுவோம், அவாளோ திரிகாலமுணர்ந்த புண்ணியவான்கள், அவர்களிடமபயங்கொண்டால், நமக்கேதொருதுன்பமுமணுகாது, கற்புக்குமோரிழிவும் நேரிடாது போவோம், போற்றி சுவாமிகளே ? அடியாளை ஆதரிக்கவேண்டும், அபயமபயம், (ரிஷி-வ-ம்.) ஆ ! இம்மாதுயாரோ ! யோசிப்போம்; சரி, விதர்ப்பதேசத்தரசனுகிய வீமராஜ னருந்தவஞ்செய்துபெற்ற பெண்? நளமகாராஜனைக்கைப்பிடித்தகன்னிகை, சகியன்சூதால் நளனிவளைக்காட்டிற் பிரிந்துபோயினதா லிவளிங்குவரக்காரணந்தந்தது, நாயிக்குழந்தைக்கு மனந்தேரும்படிசெய்யவேண்டியதே முக்கியகாரிய மில்லாவிடி லிப்போதிருக்குஞ்சோக்கத்தினு லிறந்தேபோவாள், அம்மணி ! நீயார், உரைப்பாய்.

---

## தமயந்தி - விருத்தம்.

நளபதிதன்கைப்பிடித்தநங்கைபாவி
காதலெனைப்பிரிந்திடவம்பழியிழைத்தோள்
தளமதனிற்றனிநாய்போலலையுந்தோஷி
தயாகுணமோவேறுகெதிதான்காணும



வளங்களைந்துமெய்சோர்ந்துவதங்கிசுவாமி
ஊரறியேனுடறியேனுழலுசெய்யும்
குணமறியேனுயிர்நீக்குங்கொள்கைகாணேன்
கொற்றவரோயிக்குற்றேன் கோதைதானே.

(தம-வ-ம்.) சுவாமிகளே ! அடியாளோ, நளமகாராஜாவின் தேவி, என்பெயரோ தமயந்தி, என்பிராணநாதர்மனமென்மேல்வெறுப்புண்டாகிப் பிரிந்துபோகத்தக்க பாவங்களைச்செய்த பாதகி ! அண்டமாருமில்லை ? ஒண்ட நிழலுமில்லாத யநாதி, ஆதரிப்பீர்கள் நாதர்களே ! (ரிஷி-வ-ம்.) அம்மணி ! நீ ஒன்றுக்குங் கிலேசப்படவேண்டாம், வீமராஜனின்றகண்மணியே ? உன் கணவன் காரியின்கோளாலுன்னைப்பிரிந்தனனேயின்றிவேறொன்றுமில்லை, அவனுக்குக் குரூரமானநாட்கள் இன்னமூன்றுவருடமிருப்பதாலக்காலங்கழிந்தபின் உன்கணவனுமரசும்எப்போதும்போலவுங்களைவரும், நீமகாபொறுமையோடிருப்பாய், எங்கள்தவமுடிந்ததால்நாங்கள்வேறிடஞ்செல்கின்றோம், நீ இக்காட்டிலொண்டியாயலைவதடாது, இப்பாட்டையைப்பற்றிசபாகுகரமடைவாயங்கு வுனக்குசினேகிதைமனைக்கவலைநிறைந்து காட்டுமம்மணி, (தம-வ-ம்.) மகாபாக்கியருசுவாமிகளே ! மூன்றுவருடங்கழிந்தபின் என்பிராணநாதருடைய திருப்பாதங்களை அடியாள் தெரிசிக்கும் பிராப்தியுண்டாகுமா ? அப்படிக்கில்லாவிடி லிருப்பதைவிட இறப்பதேயதிகமேன்மையாய்க்காட்டுகின்றது சுவாமிகளே, (ரிஷி-வ-ம்.) அம்மணி ? நீ யொன்றுக்குங்கிலேசப்படாதே, எங்கள்வாக்கொருக்காலும் பொய்க்காது, இந்தப்பாட்டையைப் பற்றிச்செல்லுவாய் தாயே ? (தம-வ-ம்,) நல்லது சுவாமிகளே.

---

## தம - தரு - பைரவி - சாப்பு.

இருக்கப்போமோ - இனிநானுலகினில்
இறையவனைப்பிரிந்து - எகாகியாய்த்திரிந்து. (இ)
கந்தநின்றுசேர்ந்துஎந்தன் கவனமுமாறுதே
காராய் - சேராய் - வாராய் - மனைவாளா,. (இ)

ஆருக்கோ ரிங்ஙனைப் மயங்குதுயரிலேனே
அடியாளுனைவிட யார்தாரக்கெதிலேனே
ஆருக்குடலேங்கித் தோஷியலேந்திட
துணையே - பிணையே - கிளியே - வனைவிட்டு. (இ)

என்றுகயென்னாக்க ளென்னையுந்தாவுதே
ஏதேதோ அன்பாக ளென்னிடமேவுதே
புன்றுஙியென்மனம் பொரிசலங்குதே கெட்டுப்
போனேன் - ஆனேன் - நானேன் - வனையின்றி. (இ)

பத்தாவடிபிரிந்த பாவியென்பரோ கண்டோர்
பரிகாசமாவோர் பதிவிரதம்புண்டோர்
சேத்தாஅபிச்செல்வமு செக்கமிக்கலாகாக
சிறும் - ஊறும் - யாரும் - நகைத்திட. (இ)

(தம-வ-ம்.) ஆ! என்பிராணநாதா! நம்மைப்பிரிந்து நாது
பிரோடிருப்பதுமொருவாழ்வா? அதைவிடவென்றுயிரை, ஒரு
எரிந்துனர்விலாவது, மாய்த்துக்கொண்டிருப்பேனாகில் நலமாகா
தானேருமா, அதைநந்தோம்து, அதுவமையை அறுபவிக்கக்கா
வரிவிக்கால், அதுத்திவிருந்து நயாந்து போனதையனுபவிக்க
மனமில்லாமல், மயிலிலிருந்திருந்தாலொனும், எனை நீசன்
பொந்திலைக் கப்பிக்கொன்றுபோ என, என்மனங்கவலைப்படுகின்
றதென்செய்வேன் கண்ணாளா! ஒரு நிமிஷமும்மைப்பிரிந்தி
ருக்காவ ளித்பரியத்தமிருந்ததே யதிகஷ்டமாயிருக்கச்சே
சிவிகள், திருவாய்மலர்ந்தருளியவர் இன்னமூன்றுவருஷகால
மெப்படித் தங்கள் பார்த்தெரிசனமின்றி, யடியாளிருப்பேன்!
இதுதான், சமாருங்காரான் பட்டணம்போற் காட்டுகின்றது,
இங்குசென் றெவ்வொருவீதியாய், நமது கண்ணாளனைத்தேடி
அப்பாலெங்காவது செல்லுவோம், ஆனாலும் நம்மைவிசாரித்
தால், நாம் தமயந்திக்குத் தோழியாயிருந்தவளெனச் செப்பு
வோம், இதுசரியானயோசினை; (சேதுபதிதாயார்-வ-ம்.) அம்மா
தோழி அதோயார்? அவலொருயிளமாது, அவிழ்ந்தகூந்தலும்,
அழுக்கடைந்த கலையுந்தரித்துக்கொண்டேதோ பதிவிசாரத்
தோடு கல்லைப்பிரிந்த மானைப்போல அங்கு மிங்கும்பார்த்து



க்கொண்டு தனியேசெல்லுகின்றாள் ? இந்தவீதியிலிருக்கும்
போதே, அந்தமாளிகையைப்பார்கிறுகின்றாள், நீசென்றி
ம்மாதையழைத்துவருவாயா ; (தோழி-வ-ம்.) நல்லதம்மணி, அம்மா ?
பெண்ணே எங்கள்ராசன்தேவியார் அழைக்கின்றார்கள் வருவாயா ?
(தம-வ-ம்.) அப்படியே வருகின்றேனம்மா, போதுவி அம்மணி,
அடியாளை யழைப்பித்தகாரண மருள்செய்யவேண்டுந்தாயே.

---

சேதுதேவி - விருத்தம்.

அன்னமேபசுங்கிளியேயோரிக்க
யலங்கோலமாய்வீதியிலேயலைவாய்
சொன்னமேமேனிருப்பதெந்தவூடு
கரும்பினமேவுன்கணவனெவரோவின்றி
நன்மைமார்பத்திலியோலட்கமிதர்ரோ
நாயகமேநாட்டரசாமனோகன்னோ
இல்லனெவ்வோயுனக்கிவ்வாறிரங்காயிந்த
ஏக்கமேதோவெடுத்துரைப்பாயினிவாய்ந்தாளே.

(சேது-வ-ம்.) அம்மா நீயார், எந்தேயாம், இவ்வலங்கோலமா
யின்றுட்டி லலையவந்தகாரணமேதுவோ ? உன்றுயாருரோ ? நீ
என்னதேவப்பெண்ணோ? அல்லதிராஜகன்னியையா ? தெரியச்செ
ப்புவாயடிகண்மணியே; (தம-வ-ம்.) இம்மாதே ? நம்மையின்ற
தாயைப்போலன்பாராட்டி யாடுகின்றனாளிவளுக்கு நாமுண்
மையையுருவாராயெடுத்துரைக்காவிடல் தோஷம்வந்தெய்திடும்.

---

தமயந்தி - விருத்தம்.

அன்னையேகளபதிதன்தேவியாளே
அருந்ததியாந்தமயந்திக்கன்புசெய்யும்
அன்னையேசாந்தோழிகாரிகோணால்
அரசிழந்துபதியினியைபகண்டுவெந்தர்
அன்னையேசென்றனக்கேட்டுமையோர்
அம்மணியைக்காண்ணமனைத்துத்தேடி
அன்னையேயிக்குந்தேனிஅநாதுனையும்
அலைந்திடுவீதிவழிகலையடியாளன்போரேன்.

(தம-வ-ம்.) தாயே ? ஈங்கு நளச்சக்கிரவர்த்தியின் தேவியாகிய, தமயந்திக்கு அருமையானதோழி, சக்கிரவர்த்தி சகிமாய்கையால், சூதாடி அரசையிழந்து தானுமபத்தினியும் காட்டையடைந்து, யாதுமிதேவியாரைத் தனிக்கவிட்டுத் தானெங்கேனும் போயினரென்க் கேள்விப்பட்டு என்தேவியாரைக்காணவேண்டி இவ்வாறுதவிக்கின்றேனின்றிவேறில்லை, எனக்குவிடைதரவேண்டுந்தாயே ; (சேது-வ-ம்.) ஆ ! கோகிலாதேவி பெற்றகண்மணியே ? தமயந்தி யுனக்குமிவ்விதத் துன்பங்கள்வந்தடைந்ததையுக்கேட்ட வென்மனங்கொதிக்கின்றதடி குயிலே.

---

சேது - தேவி - விருத்தம்.

சேடிநீகேளாயுந்தன் தேவியைக்காணுமட்டும்
வாடிநீயலையவேண்டாம் வடிவுளகிளியேயதுங்
இடியின்றிநாடாதிங் கென்னிடமிருப்பையாகில்
நாடியகவலைநீங்கும் நானுமுன்றெய்குந்தாயே.

(சேது-வ-ம்.) அம்மணி ? நீயுன்தேவியா ரிருப்பிடந்தெரிந்துக்கொள்ளுங்கால வருமளவு மேதாமொருகுறைகளின்றி யென்னிடமிருப்பாயாகாதே ? நானுமுன்னை என்மகளைப்போல பாதுகாக்கின்றேனம்மா ; (தம-வ-ம்.) இது பரந்தாமனன்பராகிய மது பத்தாவினருளின்றி வேறல்ல ; நாமிங்குசிலகாலந் தாதியைப்போலிருந்தால், நமதுநாயகரின்னவிடமிருப்பதாக லேசிலறியப்போகுமல்லவா ? எப்படிக் கறியக்கூடும் ? யோசிப்போம், இது ஒருபெரிதா ? ராஜாங்கமானதால் பலதேசசஞ்சாரிகளுமித்தேவியார்குமாரவிடமடைந்து தாங்கள்கண்டதுங் கேள்விப்பட்டதையு முறைசெய்வார்க ளவ்வாறே நமது நாயகர்வாசஞ்செய்யும் நாட்டையுந் தெரிவிப்பார்கள், இங்கிருப்பது நமக்கு நலமின்றிவேறில்லை, அன்றியும், நாம் தமயந்தியெனக்கேட்டயிம்மாது அதிகவிசனக்குறியைக் காட்டினதால் இவள்நமக்கு ஒருவிதபாத்தியமுள்ளவளாக யிருக்கவேண்டும், அதைக்குறித்துநாமிப்போ தேடுதான் அவிவைப்போகாது, பொருந்த இங்கிருப்பதே நலமடைதற்காரணமாய்க் காட்டுகின்றது, அப்படியேதாங்களாக்கினையின்படிக் கிருக்கின்றேன் தேவியே.

---



வீமசேனமகாராஜன் - கொலு.

(வீம-வ-ம்.) மந்திரி, தேசத்தின்வளப்பமெல்லாம் யெனக்கெடுத்துரைப்பதை நிறுத்தி, நான்நேற்றிரவுகண்ட ஓர் சொப்பனத்தை ஆலோசித்துரைப்பாய் சொ ; (மந்-வ-ம்.) சுவாமி ? அக்கனவை யடியேனுக்கு விளக்கியெடுத்துரைப்பீர் தேவே ; (வீம-வ-ம்.) கேட்பாய்பாரா !

---

அகவல் - நாட்டை - ஆதி.

அப்பனேகண்ட ஆச்சரியக்கினவை
செப்புவேனீயுஞ் செவியதுகொடுப்பாய்
என்னுடைபட்டியி லிருந்ததால்நடையில்
உன்னதக்காளையு மோர்பசுமிரண்டு
கன்றுகளதனைக்கைசோரவிட்டு
சென்றிடவனத்திற் சிறியோர்கூட்டங்
காளையும்பசுவையுங் கதறவேபிரித்து
கோனதுமனைக்கக் கூடவேயலரப்
பசுவதையொருவன் பற்றியிழுத்தனன்
விசுவாசமான பெருதினைகாணு
தென்மனமுருகி யேங்கியேயழுதேன்
துன்பமேதடையுமோ தோழனேசொல்வாய்.

(மந் - வ - ம்.) ஐயா ? தேவாதி தேவர்களையும்விடாத சனிபகவான் நரஜென்மங்களை விடப்போகுமோ ; (வீம-வ-ம்.) அப்பா நீசொன்னதை விபரமாயெடுத்தோதி யென்மனக்கலக்கத்தைப் போக்குவாய் ; (மந்-வ-ம்.) தேவே? பசுவென்பது, தங்கள்குமாரத்தியாகிய தமயந்தியம்மாள், ஏறுதென்பது நளச்சக்கிரவர்த்தியாகும் ; சகிமாய்கையால் அவர் - தாங்களருந்தவஞ்செய்து பெற்ற குழந்தைகளைப்பிரிந்து காட்டடைந்து,அங்குமவன்கூந்தால்மகாராஜன் தேவியாரைப்பிரிந்துபோக, அம்மணியலைந்துதேடிக்காணமல் தங்களிடமொருவர்மூலமாய்வந்து சேருவார்கள் அப்பாலரசரும் வருவார், இதுதான்தாங்கள்கண்ட கினவின்பலன் வேந்தே ; (வீம-வ-ம்.) அப்படியா ! என்மருமகனுகிய நள

ச்சக்கிரவர்த்தியுந்தன் பெண்டுந்தமயந்தியைப்பிரிவாரா! என்னையா? நீதிபெருக்கெடுத்துரைப்பதருகா! (மங்-வ-ம்.) தேவே! தாங் கண்ணிடை கிலவிவள்ளருந்தென்றி : எதுவாகவில்லையே, சகியன்கொட் டிற்கு எவ்வாயுந்துன்பத்திலிருத்தியே பார்ப்பான ; (சேனு-வ-ம்.) போற்றி மகாராஜனே! எங்கள்ராசனையே, கிட தபுபன் புஷ்க்கரனுடு சொக்கட்டாடியுந் தோல்வடையுங்காலத்தைக்கண்டதேவியார் நினிவருந்துயரைப் பார்க்க ஏனுபூவிக்கார்களென எண்ணி இருவரையுந்தங்கள்வசம்சேர்த்துவரும்படிக்குஎன்னை யனுப்பினார்கள், இதோ இந்திரசேனனும், புஷ்பகெந்தியுமிவா ளோதங்கள்வசமிருத்தி பாதுகாப்பீர்தேவே ; (வீம-வ-ம்.) அப்படியா வாருங்களப்பா என்கண்மணிகளே ! (நீதிமந்-வ-ம்.) அடியேன் தங்கள் திருப்பாதங்களுக்கு வந்தனஞ்செய்கின்றேன் ; (வீம-வ-ம்.) அப்பா, நீதிமந்திரி! நீ தடம்விட்டு இங்குதனியேவந்தகாரணமென்ன ? சீக்கிரம்வெளியிடுவாய் பாலா.

---

நீதி - மந் - விருத்தம்.

என்னவென்றெடுத்துரைப்பேன்மன்னவர்க்கே
எம்பெருமானிட்டவிதியினாலே கேளும்
அன்னநடைதேவியுடன்சகிக்கப்பார்த்த
வழுசகியன்புஷ்கரனையேவிஜயா
கன்னரசைசூதாடிக்கெலிக்கச்செய்தான்
காயசகுந்தேவியருமெங்குற்றாரோ
மன்னவனோகானகத்துலைந்துவாடி
மகிமையங்கிழிந்துவந்தேன்மன்னனேபோற்றி.

(நீதிமந் - வ - ம்.) சுவாமி, சகியனுடையசூதினால் புஷ்கரன் வந்தாரசேரிச் சக்கிரவர்த்தியவர்களுடன் அரசைப்பந்தயமிட்டுச் சொக்கட்டாடியுந்தோற்று, தமயந்தியம்மாளையழைத்துக் கொண்டு, இவ்விடமெனாநெரிவிக்காமல் போய்விட்டதாலடியேனென்றுடைவனைந்தேடி அருவேவிவிஞ்சுற்றினேன் வெனனிமனவெளைவாரமனேன் கோவே ; (வீம-வ-ம்.) அப்பாமந்திரி, நீ பிரதக்ஷமிவ்விதச்செய்கைக்கு இடந்தக்கரப்பற்றி கா



ன்மெத்தவும் வியசனப்படுகின்றேன்; (மங்-வ-ம்.) தேவீ! எங் மொழியை எப்போதுங்கடிக்காதவ ரன்னகிருந்துமிப்படிமக்கான்கொண்ட என்னைத்தருமடிப்பதிலேயே முயன்றனரதை சகியினுடைய மாய்கையென்னெண்ணி யுருகின்றேன்கோவே; (வீம-வ-ம்.) ஆ! ஆ! மகனே ? உனக்கும் இவ்விதத்துன்பம்வந்ததெனக்கேட்கவா நானுயிரோடிருந்தேன்கண்ணே! அடிமாதே கோகிலா? இதோபாருன்னுடையபோதுவம் பேத்தியும் வந்தனர்கள் ; (கோகி-வ-ம்.) வாருங்கள் என்கண்மணிகளே! பிராணநாதர் ஈன்ற மகவு மருகரும்வந்தனர்களா ; (வீம-வ-ம்.) அடிமானே! அவர்கதியை நான் என்னவென்றெடுத்துரைப்பேன் மாதே.

---

வீம - ரா - காபி - ஆதி.

அடிமாதேநமனை அவகிக்குளாயாம்சதி
அமைச்சனுரைக்கக்கேட்டாயோ நாவன்பாதி. (அடி)
சகியன்கேளெனச் சூதுமுறையாயே
சக்கிரவர்த்தியுங்குதிக் காட்புகுந்தேன்
விவேகதல்லவெனவே வெறித்தாளித்தவெப்பியம்
விதுப்புஞ்சுவரசமடைக்க யிரந்தனரெப்படியோ. (அடி.)
புஷ்பகெந்தமாரும் பூச்சக்கரக்குடைகாழு
பூமேதமயந்தியும் புருஷனுடைமைதந்தாறு
நிஷ்கரிதத்தேடவெங்கிறே நீக்குதசைகாரம்விதி
நிட்டூரமமைத்ததுநிந்திப்பதாரைச்சதி, (அடி)
இருவரும்பருதிபோல வெங்குசென்றனரோ நான்
எதுசெய்குவேனினி யொருபெருந்தனமுற்றான்
தருமநூல்விதிகளுந் தான்பொய்த்ததோயினி
தாய்தந்தையைப்பாராமல் தவிக்கிறாரிவளினி. (அடி.)

(கோகி-வ-ம்.) அடி ! என்னருமைமகளே.

---

கோகி - ரா - தோடி - ஆதி.

மைந்தர்க்கினவிட்டு மகளேபொருதென்றும்
வந்தவினைநீக்கவிங்கு வாராமாதேராஜ்ஜிப். (மக)

சகியுனக்கேயஞ்சிச்-சகுனமுமின்றி
பனிமிக்கவொருவேனைப் பாவாய்சென்றாய்மின்றி. (மை)
உந்தனைநான்காணவுழலுகின்றேனே தோணா
கிருந்தனைத்துணை திருபமைருமினாகாண். (மை)
அருக்குநானென்ன பவீரஞ்செய்தேன்முன்னை
தாருக்குஞ்சியாயென்ன தோஷைகடந்தாயின்ன. (மை)

(வீம-வ-ம்.) நீ இவ்வாறு துயரப்பட்டால், குழந்தைகள் திகிலடைந்திடுவர், இவர்களுக்குநீவேண்டியநல்லவார்த்தைகளையுரைத் தாய்சேர்க்கமனுங்காமல் பாதுகாப்பாய், நான்மந்திரிமாரையும் வேதியர்களையுமனுப்பிநமது மகளு மருகருமிருக்குமிடந்தெரிந்து, நானேசென்றழைத்துவருகின்றேனடி வஞ்சியே; (கோ-வ-ம்) பிராணநாதா நீயிப்போதுனைக்காரியத்திற்சந்தோஷமகட்டைசெய்யப்போகாது, சுவாமி? ஆ! என்னருமைக்கண்மணிகளே! உங்களைநான்வந்துபார்க்கமிகவுவோடிருந்து மிவ்வடந்தியகாரியங்களைப் பாதுகாப்பதி லேசல்லாததனால் உங்களை இவ்விடம் அனுப்பிவைக்கும்படிக்கு எழுதிய ஓலையின் வாறுன்தாயா ரனுப்பக்கண்டென்மன மிகசந்தோஷமடைந்தது இனிப்போசனஞ் செய்விக்கின்கிள்களோ; (இக-வ-ம்.) ஆ! அம்மணி.

---

## இந்திரசேனன் - தரு - காமாஸ் - அடதாளம்.

காலத்திலேயென்னைக் கைவிட்டாயேமா - தாயே
கோலமாய்த்தொழுதுட்டன்
கூடிப் - பாடி - யாடி - யிந்த. (கா)
உந்தனைப்பணிந்து உடமுகொள்ளைத்து
செந்திடக்கினைந்து அறுறமேனையற்றமே
வந்ததோ நாளின்று
வாட - தேட - நாட - யிந்த. (கா)
தாயிரையென்னந் தாணியோர்பன்ன
நீவிட்டதென்ன சேர்மையோசுர்மையோ
ஆறிநா தெரிந்தால்
அழேன் - வாடேன் - நோன் - இந்த. (கா)



(புஷ்-வ-ம்.) அண்ணா? நீயேனிப்படித் துயரப்படுகின்றனை, நமது தாயாரின்னமிங்குவாராதகாரணமென்னமோ எனக்குரிவிப்பாய், இவர்கள்யாரோ அதையுஞ்சொல்லுவாய்! என்மனதிற்கொருவாறாய்த்தோணுகின்றதென் அண்ணாவே; (இந்-வ-ம்.) ஆ! என் அருமையுள்ள தங்கையே, இப்போதிங்கு மந்திரிசொன்ன சங்கதியினால் நமது தாயுந் தந்தையும், நாட்டைவிழந்து எங்கேயோபோய்விட்டதாய்த் தெரியவந்தமையால், என்மனம்பலவிதமாய் பதறிவாடலாயிற்று; இவர்நமது தாயைப்பெற்றதன்னியர்களாம் தங்கா; (புஷ்-வ-ம்.) ஆ! அம்மா.

---

## புஷ் - தரு - பூரி - கல்யாணி - ரூபகம்

என்னசெய்வோம் ஓ! ஓ! அண்ணா.

அன்னைதந்தைதமைப்பிரியஆனதுவும் ஆர்சதியோபார்விதியோ
ஈன்றருட்புகழ்க்காவன்னைமேகத்திப்பாலூட்டிவளர்த்த [யென.(எ)
தாயைவிட்டோம்தனிக்க தலைவிதியோதான்தெரியேன் வேறுபி
பலவாற்றிலும்பண்டங்களைபரிந்தளித்துவளர்த்ததாயை [யோ
நலமோநாமும்கண்டிருந்தல் நாடுகின்றேன் காரியின்செய்வோயி
தாயில்லாதசேய்களெனத் - தரணியோரும்நம்மைப்பேசி [அ
வாயாடிடக்காலமதுவாய்ந்ததுவேவருந்துதேனேஅருந்துயரால்
ஈன்றோர்போலநம்மையிங்கு ஏந்திப்பார்ப்போரெவரோவென
தோன்றுதுளந்துயரமீறி துக்கத்தாலே தோசியாம்பர தேசியா
[னோம்

(கோசி-வ-ம்.) ஆ! என்னிருகண்மணிகளே? நீங்களிப்படி வருந்தி வாடுவதென்ன! உங்களைவிடயெங்களுக்கு வேறுசுகமுண்டா? நானேயே என்மகளாகிய உங்கள் தாயாரையிங்குவரவழைத்துக்காட்டுகின்றேன், அந்தப்புரம்வருவீர்கள் என்றனைக்குயில்களே; (வீம-வ-ம்.) அப்பா மந்திரி? எனதுபெருமைதங்கிய மருகனாகிய நளச்சக்கிரவர்த்தி தன்னாட்டை புஷ்கரனுடனசூதாடித்தோற்றுத் தான்தன்பத்தினியோடு எங்கேயோபோய்விட்டசங்கதியைக்கேட்ட என்மனம் பெரிதும்வாடுகின்றமை

யால் இத்துயரம் நீங்கத்தக்கமுயற்சி யெதுவோ சீக்கிரமெனக்
கெடுத்துரைப்பாய் நேசா; (மந்-வ-ம்.) அரசே! அந்தநளமகாரா
ஜனே பாசத்தியவான், அன்றியுந்தமயந்தியம்மாளோ மாபதிவி
ரதையானதா லவர்கடங்களுடைய வுருமாறியெங்கிருக்கின்றார்க
ளோ அதைநாம் எளிதி லறியக்கூடாமையாதலால் நம்மிடமிருக்
கும்விவேகசாஸ்த்திரப்பிரவீணர்களாகியவேதியர்களை யேவிஅ
வர்பலதேசப்பிரவேசங்களிற்சென்றுவிசாரித்துகண்டுபிடிக்கி
லுடனேநாம்சென்றழைக்கப் பெருமையாகயிருக்குமிதாவே;
(வீம-வ-ம்)நீசொன்னதுஞ்சரியானயோசினையே, சீக்கிரம் வேதி
யர்களைவரவழைப்பாய்; (வே-வ-ம்.)வாழி மகாராஜனே எங்களை
யழைத்தகாரிய மருள்செய்யவேண்டுமரசே; (வீம-வ-ம்.)அ
ய்யா வேதியர்களே! என்மகளாகிய தமயந்திதேவி யிருக்குமி
டந்தெரியாததால் நீங்கள் பலதேசங்கள், காடுகள், ரிஷியாசிரம
ங்கள் முதலானதுந்தேடி அவளிருக்கும் நாடறிந்துவந்துரைப்
பீர்களாகில் உங்களுக்கு வேண்டியவெகுமதிகள் கொடுக்கப்ப
டும்; (வேதி-வ-ம்.) நல்லது மகாப்பிரபோ.

---

(சுபா-வ-ம்.) மந்திரியின்று, எனதுதோகப்பனுக்கு வருஷா
ந்திரமானதால்,எங்குள்ளப்பிராமணர்களையும்வரும்படிக்குத்தெ
ரிவிப்பாய்; (மந்-வ-ம்.) நல்லது வேந்தே: (கிருஷ்ணவர்ணன்-
வ-ம்.) சுபாகுமகாராஜன் தந்தைக்கு திதியானதால், நாமங்கு
சென்று அந்நாட்டில் நளமகாராஜன்சேதி ஏதாகிலுந் தெரியக்
காட்டுமாகில் அறிந்து, அப்பாற்செல்லுவோம்; (சுபா-வ-ம்.)
வாரும் வாரும் கிருஷ்ணவர்ணரே? நல்லசமயமின்று, எனது
தந்தைக்கு திதி தாங்கள்வந்ததே எனக்கதிகசந்தோஷத்தைவி
ளைத்தது, எனது சிறியதாயாராகிய, கோகிலாதேவியம்மா சுகந்
தானா? (கிரு-வ-ம்.) சுகமேயிருக்கிறார்கள் வேந்தே; (சுபா-வ-
ம்.) சந்தோஷம், நீர் அரமனைக்குட்சென்று என்தாயாரைக்க
ண்டு அவர்களின் தங்கையுடைய க்ஷேமத்தையறிவிப்பீர்சுவாமி;
(கிரு-வ-ம்.) நல்லது மகாராஜனே? ஆ! இப்பெண்யார்? தமயந்
தியைப்போற் காணுகின்றது! சற்றுநிதானிப்போம்! தமயந்தி



யேயாகில் நாம் கொண்டுவந்தயென்னம், கோதிப்போனதெய்
வம்குறுக்கேவந்தாற்போலாச்சுது தமயந்தியேஅம்மாதமயந்தி!

---

கிரு - தரு - முகாரி - ரூபகம்.

ஆ! அம்மணி உனக்கிவ்விதி
அமைந்ததோ அம்மணி. (ஆ)

பாவிநான்கெட்ட பாதகனுனையிந்தப்
பரதேசிக்கோலத்திற் பார்க்கலானேனெந்தன். (ஆ)

சந்திரனொளியைமாற்றுஞ்சாந்தமுகம்வாடி
சற்குணிதாசியைப்போல் சாரயிங்குற்றமடி. (ஆ)

பிறந்தசுகமென்ன பேரிட்டவளப்பென்ன
பேதைபோலிங்கனீ பெருந்துயர்படலென்ன. (ஆ)

தேவாதிதேவர்களுந் தேடக்கிட்டாக்கிளியே
தெய்வச்செயலோநீ தியங்கலானையளியே. (ஆ)

(தம-வ-ம்.) இவ்வேதியனாரோ? நம்மைக்கண்டு இவ்வாறுது
யரப்படுகின்றான், சென்றுவிசாரிப்போம், ஆ! இவர் நமதுதந்
தைவீட்டுப்புரோகிதருடைய புத்திரன், ஐயா! கிருஷ்ணவர்ண
ரே? என் துயரப்படுகின்றீர், "அன்றெழுதினவன் அழித்தெ
ழுதப்போறானா" (சேது-வ-ம்.) அம்மா தோழி? இதுவரையிது
மிங்கு யதிக ஒழுக்கந்தோமி, ஒரு ஆடவரிடத்திலும், எதிரில்
நின்று வசனிக்காதிருந்தவ ளின்று, அவ்வேதியனிட மேதோ
ரகசியவார்த்தைகள்பேசுவதை நாம் கண்டறியா திங்கிருப்பதடா
தாவருவாய் பாங்கி; (கிரு-வ-ம்.) அம்மா? எங்கள் வீமராஜன்
பெற்றவிவேகப்பசுங்கிளியே? நீ பிறந்தபெருமையென்ன, இப்
பூமண்டலத்திற் கதிபதியாகிய நளச்சக்கிரவர்த்தியை, மணந்த
மகிழ்ச்சியென்ன, உன்பாதம்பணிய அநேகராஜகன்னிகைகள்கா
த்திருக்கக் கொலுவீற்றிருக்குங்குணவந்தியே? தமயந்தியே?
உன்மேனிகறுத்து கந்தைவஸ்திரந்தரித்து, மயிரெல்லாம்புழுதி
யடைந்து வருந்திவாட, உன்னைவிட்டு நளபூபதியெங்குசென்

ரூரன்னையே ? அடியேனுக்கறிவிப்பீர்தாயே ; (தம-வ-ம்.) வே
தியரோ இதெல்லாம், நான்முன்செய்தவினையே ; (சேது-வ-ம்.)
ஆ ! மகளேதமயந்தி ? என்தங்கையாகிய கோகிலாதேவிபெற்ற
குணவந்தி ? அன்றெனக்குமாலைபாடா யுரைத்தனையே மாணிக்
கமே ? என்கட்டிக்கரும்பே ? கண்மணியே ! சுவாமிவேதியரே
என்மகளை யிப்போது, நீர் என்தங்கையிடமழைத்தேகும். சிவி
கையைக் கொண்டுவரச்செய்வாய் தோழி, சேர்வையே நீங்கள
திஜாக்கிரதையோடு தமயந்தியம்மாளை விதர்ப்பதேசம்சேர்த்து
வரவேண்டியதே, அம்மணி? உனக்குவேண்டியபணிபட்டாடை
களைக் கொண்டேகுவாய்மகளே ; (தம-வ-ம்.) தாயே நான்என்
கணவரைக் கண்ணுறக்காணும்வரையில், இக்கோலத்தைமாற்றப்
போகாது, நான்போய்வருகின்றேன்அம்மா ; (சேது-வ-ம்.) சுக
மாய்ப்போவாய், நானுங்கூடியசீக்கிரத்தில் விதர்ப்பதேசம்வரு
கின்றேன், கோகிலாதேவியாருக்கு என்வந்தனம் செப்புவாய்
கண்மணியே; (தம-வ-ம்.) நல்லது அம்மா.

---

(வீம-வ-ம்.) அப்பா மந்திரி எனது மகளிருக்குமிடத்தைத்
தேடிச்சென்றவர்களில் ஒருவரும் நாளதுவரையில், வாராதிரு
ப்பதை நினைக்க நினைக்க என்மனம் அதிகவியாகூலத்தை விருத்
திக்கின்றது, அவ்வியசனம் நீங்கத்தக்க வேறுமார்க்கமேதாகிலு
முன்புத்திக்குப் புலப்படுமாகில் யோசித்துரைப்பாய் நேசனே ;
(மந்-வ-ம்.) நல்லது மகாராஜனே ; (கிரு-வ-ம்.) போற்றிமகாரா
ஜனே ; (வீம-வ-ம்.) ஐயா புரோகிதர் புத்திரரே? நீர்சென்றசங்
கதியின்முடிவைத்தெரிவிப்பீர் ; (கிரு-வ-ம்.) அரசே! நான்செ
ன்று தமயந்தியம்மாளை யழைத்துவந்தேன் ஆண்டவா ; (வீம-
வ-ம்.) ஆ ! சந்தோஷமப்பா, எங்கென்னுடைய அருந்தவப்பே
டு ; (தம-வ-ம்.) போற்றி போற்றி பிதாவே ! (வீம-வ-ம்.) ஆ !

---

வீமசேனமகாராஜன் - விருத்தம்.

என்மகளேவுனக்குமிந்தவிதியதன்னை
யெழுதிடவுமயன்கொண்டயெண்ணமேதோ



முன்வினையோநான்செய்தபாவந்தானோ
மொழியொணப்பழியெதுவோமுனிவரிட்ட
துன்பமுறுஞ்சாபமதோவுன்னையீன்ற
தோகைசெய்ததோஷமதோதோணேனதும்
நன்னிலையோனபெந்தன்மருகன்தன்னை
நாயகம்நீபிரிந்ததென்னநவிலுவாயே.

(வீம-வ-ம்.) ஆ ! நான்பெற்ற செல்வமே ? நீபிறந்து வளர்
ந்த பெருமையென்ன! செப்பரியமகிமைபூண்ட நளமகாராஜனு
க்குமாலையிட்டசிறப்பென்ன! இப்போது நீ இந்தக்கோலத்தோ
டுகைப்பிடித்த கணவனைப்பிரிந்து, கடுந்துயரணிந்து கட்டவும்
வஸ்திரமின்றி, அனாதிபனாதியைப்போல அலையவந்தவிதி நான்
செய்தபாவமோ. அல்லது உன்தாய்செய்ததவக்குறையோ, நீநா
யகனைப்பிரிந்து தனியானகாரணத்தையோதுவாய்கண்மணியே;
(தம-வ-ம்.) கேளும்என்னை அருந்தவஞ்செய்துபெற்றதந்தையே.

---

தமயந்தி - விருத்தம்.

தேவர்களும்யாவர்களும்மதிக்கத்தக்கத்
திகழ்பெருகிவாழ்ந்திருக்குங்காலைக்காரி
ஆவலுடன்வந்தனையமன்னர்தானும்
அமைச்சனுரைதள்ளியேசூதாடி ஐயா
காவலருந்தன்னரசைபுஷ்கரன்தன்
கையிலிட்டுங்காடுறைந்துமடியாள்சோம்பி
பாவம்வினைகித்திரையைக்கொள்ளவெந்தன்
பத்தாவும்பிரிந்தவகைபரமன்கூற்றே.

(வீம-வ-ம்.) அம்மணி ? நீ துயரப்படவேண்டாம், நான்சீ
க்கிரத்தில் என்மருகனிருக்குமிடந் தெரிந்தோடியழைத்து வரு
கின்றேன் நீமக்களோடும் மாதாவோடு மனமகிழ்வாயிருப்பா
யகண்ணே ; (தம-வ-ம்.) நல்லது பிதாவே, அடியாள் என்பிரா
ணநாதனைக் காணுங்காலம்வரையில், இந்தக்கோலமாகவேயிரு
ப்பேன், இதைமாற்றில், என்கற்பிற்கிழிவைப்போற்றும், தந்தை

யே ; வீம-வ-ம்.) அம்மணி யுன்னிஷ்டத்தின்படி செய்குவாய்கண்மணியே; மந்திரி? நமது புரோகிதருடைய குமாரனாகிய கிருஷ்ணவர்மன் செய்தவுபகாரத்தினால் என்துயரிற் பேர்பாதிநீங்கியது, இன்னமிருக்கும்பாதியையும் போக்கடிக்கத்தக்கமுயர்சியை இப்போதே செய்குவாய் நேசா ; (மந்-வ-ம்.) நல்லதாண்டவா ? அப்பா கட்டியனே, நீசென்று யாத்திரைவேதியர்களி லதிசாதுர்யவானை யழைத்தோடிவருவாய் ; (கட்-வ-ம்.) அப்படியேசுவாமி, (வே - வ - ம்.) வாழி அரசே ! எங்களையழைப்பித்தகாரிய மருள்புரியவேண்டும், (வீம-வ-ம்.) இப்படிவாருங்கள் வேதியர்களே; அம்மா ! தமயந்தி உன்கணவனிருக்குமிடத்தைக்கண்டுவரும்படிக்கிவர்களை யனுப்புகின்றேன், நீ யேதாகிலுங்குறிப்படையாளங்கள் சொல்லவேண்டியதிருந்தா லிவர்களுக்கோதி விடைதந்தனுப்புவாய் கண்மணியே, (தம-வ-ம்.) நல்லதென்தந்தையே ; சுவாமிகளே? நீங்கள் ஒவ்வொருராஜசபையிற்செல்லுவீர்களாகில் அவ்வரசர்கள் என்னவிசேஷங்கண்டீர்களென வினவுவதியல்பாகையா லப்போது நீங்கள்?

---

தமயந்தி - விருத்தம்.

நன்னிலையிலிருந்துவந்தநளனுமையா
நாயமிலாச்சூதாடியரசைத்தோற்றுத்
தன்மனையாளுடனடவிசேர்ந்துமங்ஙன்
னையல்தனைத்தூங்கவைத்தவன்தன்சேலை
புன்மதியாற்பேர்பாதிக்கிழித்தணிந்து
பூவைதனைவிட்டகன்றுன்புதுமையைப்போல்
என்வரையிற்கண்டதில்லைகேட்டதில்லை
இறைவரோயரசர்க்கோரிழிவாச்சன்றே.

(தம-வ-ம்.) இவ்வாறுசொல்லுவீர்கள், இம்மொழியைக்கேட்டவர் என்னபேசுகின்றனரோ, அதை யடியாளுக்கறிவிப்பீர்கள் சுவாமிகளே, (வே-வ-ம்.) நல்லதம்மணி; (சாமாசாஸ்திரி வ-ம்.) ஓய் சுப்பாசாஸ்திரி? யேதோ நமக்கு நல்லகாலம்வரு



ம்போற் காட்டுகின்றது, நமக்கு அந்தநளச்சக்கிரவர்த்தியிருக்குமிடம்புலப்படும்போதுங்காட்டுகின்றது, அப்படிப்படில்நமக்குத் தமயந்திதேவியார்வேண்டியவெகுமதிகள் கொடுப்பார், இனி, நம்மைப்பிடித்த மிடியெனும் யாசகவிருத்தியோடியொழியுஞ்சுப்பா ? (சுப்-வ-ம்.) அடா! சாமா! நோக்கேதடா இன்று இவ்வளவு தயிரிய வார்த்தைகள்வந்தது, நம்முடையகண்ணிர்க்குநளன் சிக்கிலன்றோ? நீ சொன்னவார்த்தைபலிக்கும், சிக்காவிடில் இன்னமதிகதுக்கமேயன்றோ? ஒதுடா. சாமா, (சா-வ-ம்) அடா சுப்பா.

---

சாமா - கண்ணி - முகாரி - ரூபகம்.

சுப்பாசொல்வதைக்கேளாய் சோடாய்க்கருங்குருவி
சொகுசாயிடமாவதைப்பாராய் - இது
சொல்லரியசகுனம் நல்லபெருமைவரும்
சோம்பாரிப்பயலேநீதேராய். (சுப்பா)
காகங்கள்பின்முன்னாய்க் கடுகிவலமாவதைக்
கண்ணுற்பார்த்துமனஞ்சேராய் - போகும்
காரியஞ்சித்தியெனக் கருத்திலமைத்துருமை
கழுதைப்பிறப்பேயென்பின்வாராய். (சுப்பா)
எதோமங்கலவாத்திய- மிருதபடங்கிளிகள்
எந்தியமூர்தங்குடம்வாரார் - இவை
எண்ணுங்காரியங்கூடப்பண்ணுமெனப்பலதா
லெடுத்துரைக்கின்றதிதைச்சேராய். (சுப்பா)
அந்தோபிரேதமொன்று அரியரியெனச்சொல்லி
அடக்கஞ்செயவெதிரில்வாரார் - சுப்பா
இந்தசுபசகுனமெவர்க்குங்கிட்டாதென
எண்ணியென்பின்பற்றிவாராய். (சுப்பா)

(சுப்-வ-ம்.) அடே சாமா ? நாமோபலபல தேசங்கள்திரிந்ததால் தேகவலுமைகுறைந்தது, நோக்குத்தோணவில்லையாக்குமின்னமென்னை மெங்கேயிழுத்துச்செல்கின்றாயடா ? நான்

இங்ஙனே குந்தியிருக்கின்றேன், நீர்போவீர்களாகும் ; (சாம-வ-ம்) அடே ! நாமிவ்வளவுதொந்திரையெடுத்து மென்னப்பன், அயோத்திநாடொன்றைப் பார்த்துவிட்டுத் திரும்புவோம் வருவாய், இனி முன்னுக்குப்போக எனக்கும் இஷ்டமில்லை; (சுப-வ-ம்.) அப்படியானால் வருவாயாக; (சா-வ-ம்.) வாழி வாழி மகாராஜனே ; (ரிது - வ - ம்.) சுவாமிகளே ! இந்த ஆசனங்களில், எழுந்தருளித் தாங்களடியேனை நாடிவந்தகாரணத்தைவெளியிடுவீர்கள் குணவந்தரே ? (சா-வ-ம்.) அரசே ! நாங்களோ யாத்திரைவாசிகள், அநேகதேசங்களைச்சுற்றிக்கொண்டு இத்திவ்யநாட்டையு மிதைஅரசாட்சிசெய்யுந்தங்களையுந்தரிசித்துப் போக வந்ததேயின்றி வேறன்று மகாராஜாவே, (ரிது-வ-ம்.) சுவாமிகளே ? நீங்கள் பார்வையிட்டதேசங்களி லேதேனு மாச்சரியங்களைக் கண்ணுற்றிருந்தா லடியேனுக் கறிவிப்பீர்கள் ? (சா-வ-ம்) கேளும்ராஜாவே.

### சாமா - அகவல் - காம்போதி - ஆதி.

கண்டதோர்விந்தையைக் - கழறெனவேண்டிக்
கொண்டதோரந்தன் - கோவேநீர்கேளும்
நிடததேசத்தைப - நெறியுடனாண்ட
படமிகுநீட்டொளுப் - பண்புளநேயன்
சத்தியனும்நளச் - சக்கிரவர்த்தியும்
எத்திசைபுகழ - விருந்தகாடதனில்

(ரிது-வ-ம்.) ஆமாம், மகாவுத்தமனே, எனக்குங்கேள்விதானையரோ, (நள-வ-ம்.) ஆ ! இவனோர், இந்தவேதியன், நம்மைக்குறித்து ஏதோ யிங்கெடுத்துரைக்கத் துணிகின்றான் ! என்னசொல்கின்றானோ, அதைநாமும்கவனிப்போம்.

உத்தமிசற்குணி - உயர்நடைவிவேகி
பத்தினிவீமன் - பாலியைமணந்து
அபுத்திரனென்றுலகை - மறந்திடாவண்ணஞ்
சுபுத்திரரைப்பெற்றுச் - சுகமுறுமந்நாளில்
சூதினைபாடி - சொத்துடனரசும்
நீதிக்குடையையும் - நிமிஷத்தில்நாதா.



(நள-வ-ம்.) ஓ ! இந்தசங்கதியைப்பூர்வமே ரிதுபர்ணனுக்குரைத்திருக்கின்றோம் ? இவ்வேதியன் சொல்வதனால் என்னகிந்தனை இன்னும்கேட்போம்.

ஒப்பித்துமன்னன் - ஓட்டாண்டியாகித்
தப்பித்துநாட்டை - தமயந்தியுடனே
காட்டையடைந்து - கனிசருகருந்தி
கூடவேமாதுங் - குளிரினல்வருந்தி
அலைந்திடுங்காலை - அரசரேகேளும்
நிலையுளவேந்தன் - நிகழ்த்தியவாறை,

(நள-வ-ம்.) ஆ ! இங்கென்ன வெளியிடுகின்றானோகேட்போம், (ரிது-வ-ம்.) வேதியரே ? நீர்சொன்னதை நான் பாகுகனாலக்க முன்னமேகேட்டிருக்கின்றேன், அந்நளபூபதி மகாவுத்தமன், சத்தியன், ஆனதால், அவ்விதத்துன்பகாலத்திலுஞ் சதியினைப்பாதுகாத்தான், (வே-வ-ம்.) இன்னமுழுதுங்கேட்பீராசே, (ரிது-வ-ம்.) சொல்லும்வேதியரே.

காற்றிலும்பனியிலும் - கன்னிகையலைந்து
வேற்றுருவாகி - வியர்த்துடல்சோரி
நித்திரைகொள்ள - நிடதபூபதியுஞ்
சத்தியமறந்து - சதியாளைப்பிரிந்தான்.

(ரிது-வ-ம்.) ஆ ! ஆ ! சிவசிவா ? அப்படியா ! ! !

போனவன்மாதன் - புடைவையிற்பாதி
மானமதின்றி - மன்னனுங்கிழித்தே
கொண்டேகினனிக் - கொடுமையையெங்குங்
கண்டதுண்டோநீர் - கௌரவம்பூண்ட
அரசற்கெவரொரு - அழப்பதைகாட்டி
பார்த்தனனெங்கோ - பாவியும்வேந்தே
பைங்கொடியாளும் - பதறியவ்விருளில்
சங்கடமடைந்ததை - சாமியேயறிவான்.

(ரிது-வ-ம்.) அப்படியா ! அடடா ! சண்டாள நளனேநம்பியமாதை நடுக்காட்டில்விட்டுப்பிரிந்தது அந்த நளச்சக்கிரவர்த்

திக்கடுக்குமா? அவனைப்பாவியினும் மாபாவியென்பதற்குத்தடையில்லை, அவனுக்கு படுகுழிநரகமின்றி வேறில்லை, தன்னுயிரைப்போல மன்னுயிரைக் காப்பவனாயிருந்தும் இப்படிச் செய்தானன்றோ அச்சண்டாளன்பெயரை சபையிலினி யெடுக்கப்போகா; சுவாமிகளே! தமயந்தியின் விருத்தாந்தத்தை சொல்வீரா? (வே-வ-ம்.) அப்பால் அவளானகெதி யேதொன்றுந் தெரியவில்லை அரசே. (ரி-து-வ-ம்.) சிவசிவா! இன்று அதிகதுயரமானசேதி கேட்கலானேன், மந்திரி இவர்களுக்குவேண்டியவெகுமதிகள்கொடுத்தனுப்புவாய்; (ம-வ-ம்) நல்லதுவேந்தே. (சு-வ-ம்.) இந்தவேதியர்களிப்போதுரைத்தசங்கதியினால் நம்மை ரிதுபர்னன் மகாபாதகனெனப்பேசினான், நாம் செய்ததுங் கொடியகாரியமேயல்லவா? நல்லது, அந்த வேதியருக்கு நாம் தமயந்தியைப்பிரிந்தகருத்தை ஒருவாறாய் முன்றுவது மனிதனைப்போல வெடுத்தோதுவோம். ஓ! சுவாமிகளே! நீங்களுங்கள் அந்தநளச்சக்கிரவர்த்தி தனக்கு சனிகோளால் நேரிடும் பலதுன்பங்களை யநுபவிக்க தமயந்தியால் முடியாதெனவெண்ணி யவளை நோக்கி விதர்ப்பதேசம்போகும்படி யெவ்வளவோ வருந்திச்சொல்லி வழியையுங்காட்டினான். அவள் பிடிவாதமாய் மறுத்ததினாலன்றோ, அவளைவிட்டுப் பிரிந்துபோனால் எழுந்துபார்த்து முன் காட்டிய பாட்டையைப்பற்றி தன் தாய்வீடுபோய்ச்சேர்ந்து குழந்தைகளுடன் சுகமாயிருப்பாளென மதித்தன்றோ அவன்கண்மறவாய்ப்போயினன், நீரதைமறைத்து பலவாறுடியதடுக்குமா? போம் போம் புத்தியில்லானே; (சர - வ-ம்) அடா சுப்பா இங்குதான் ஒருவன் நம்மைத் தடுத்துப்பேசினான் இவனே ரிதுபர்னனுடையபாருகன், இந்தச்சேதி தமயந்திக்குஅறிவித்துவிடுவோம், இனி யெங்கும் போகத்தக்ககாரணமில்லை; (சுப்-வ-ம்.) சந்தோஷம் நேக்கு என்னும்பிடையாள்கியாபகம் மெத்தவும் வருத்துகின்றது, சாக்கிரதையாய் நடப்போம்; (சா-வம்.) இதோ நமது தேசம்வந்தோம், தமயந்திதேவியாருக்கு நாம் அறிந்ததை யறிவித்தபின் நமதாத்துக்குப்போவோமடா; (சுப்-வ-ம்.) அப்படியே, (சா-வ-ம்.) வாழிவாழி வீமராஜனருதவத்தில்வந்ததமயந்தி; (த-வ-ம்.) சுவாமிகளே என் பிராணநாதனைக்கண்டீரா? அவர் எங்கிருக்கின்றார்? தங்களுடன் என்னவார்த்தையாடினார்? சீக்கிரம் என்சிந்தைகளிக்கச்செப்புவீர் வேதியரே; (சா-வ-ம்.) அம்மணி! நாங்கள் அனேகதேசங்களடைந்து கொலுமுகத்தில் தாங்களுரைத்தசங்கதியை வெளியிட்டோம், ஒருவரும் செவிகொடுக்காததைக்கண்டு வியசனமீறி அயோத்தியடைந்து அங்கு ரிதுபர்னன்முன்பு எடுத்தோதினோம். அவன் கேட்டு மெத்தவுந் துயரப்பட்டு நளபூபதிசெய்தகாரியம் அடாததெனச்செப்பி எங்களுக்குவேண்டிய வெகுமதிகளை கொடுத்தனுப்பினான். நாங்கள் திரும்பிவரும்போது அன்னையே,



---

சா - விருத்தம்.

கூன்வளைந்தமேனியுளோன்கோரரூபன்
கோதையேரிதுபர்னன்வண்டசாலை
தானமரும்பாகுசனுமெனைத்தடுத்து
தமயந்திதனைநளனுந்தாய்வீடேக
மான்விழிக்கேயெடுத்துரைத்துவழியுங்காட்ட
மறுத்ததனால்மன்னனவள்மாதாவீடு
தானடைவளெனமதிந்துபிரிந்தாவீதை
தப்பிதமென்றெடுத்துரைத்தல்தகாதென்றானே.

(சா-வம்.) வேதியரே? அந்நளன் தமயந்தியை தாய்வீடு சேரும்படிக்கு வழியையுங்காட்டி யெவ்வளவோ வேண்டியும் தடுத்ததால் இவளைவிட்டுப்போனால் தாயிடஞ்சென்று நல்லநாள்வரும்வரையிலிருந்தால், சனியன்காலம்தீர்ந்தபின் தானும்வந்துசேரலாமென்று எண்ணிப் பிரிந்திருக்கச்சே இப்படிப்பேசியது யடுக்காதெனச்சொல்லிப்போயினான், அவனே கூனன், கோரரூபன் ரிதுபர்னனுடைய வண்டசாலைத்தலைவனுந்தாயே; (த-வ-ம்.) அவரே யென் பிராணநாதன், அவர் என்ன

விசாரரூபமாயிருந்தபோதிலுஞ் சிந்தையில்லை, பிராணனேயடிருந்தால் அதுவேபோதும்; தந்தையே! என் பிராணநாதர் ரிதுபர்ணனிடம் ஊழியத்திலிருந்து வண்டிக்காரனாயிருப்பதாய் தெரியவருகிறதாலானதினால், அவரை யிங்கு வரவழைக்கத்தக்கமுயற்சி செய்யவேண்டும் பிதாவே; (வீ-வ-ம்.) அம்மணி யிப்போதே நான்சென்று அழைத்துவருகின்றேன் நீ யொன்றும் யோசிக்க வேண்டாம்மகளே; (த-வ-ம்.) தந்தையே நீர் சென்றால் அவர் தானுருமாறியிருப்பதனால் நளமகாராஜனல்லவென மறுத்துவிட்டில் நான் மறுபடியுமவரைக் காண்பதரிதாகிவிடும், அவரிங்கு வரத்தக்கமுயற்சியொன்றுசெய்தால் அதிக மேன்மையாயிருக்கும்பிதாவே; (வீ-வ-ம்.) மகளே? அவ்விதமுயற்சி யேதாகிலுமிருந்தால் சீக்கிரம் வெளியிடில் அவ்வாறே தடையின்றிப் புரியச்செய்வேன் கண்மணியே; (த-வ-ம்.) பிதாவே.

---

## தமயந்தி - விருத்தம்.

மன்னவரையிங்குவரவழைக்குமார்க்கம்
மற்றொன்றும்பரியாதுமகிழ்வாய்க்கேளும்
இன்னகரிலெனக்குமறுவிவாகமென்றே
எழுதியொருமணவோலையின்றரித்து
பன்னனுக்குத்தானனுப்பில்வந்திடுந்தன்
பத்தாவும்வந்திடுவர்பாவைநானும்
என்னகுறையிருந்தாலும்பொறுப்பீரென்று
எற்றிடவுமுளங்கனிவாரினிவாய்தானே.

(த-வ-ம்.) பிதாவே! எனக்கு மறுவிவாகமெனவும், அதுவருகிறசுக்கிரவாரமெனவும், ஒருமணவோலையெழுதி ரிதுபர்ணமகாராஜனுக்குமாத்திரமனுப்பினால், அவ்வரசன் ஓலையைக்கண்ட மறுநாளிவ்விடம்வரவேண்டியதனால் என்பிராணநாதரே, இரதநடத்துவோனாய் ஒப்பி யிங்கு நடக்கும்விவாகத்தையும் பார்க்க மன்முன்னவராய்வருவார், அப்போதவரடிகளைப்பணிந்து



என்னிடமிருக்கச்செய்வேன் தந்தையே. (வீ-வ-ம்.) அப்படியே செய்வாய் என்கண்மணியே; அப்பா மந்திரி! என்மகள் தமயந்தியம்மாளுக்கு மறுவிவாகமென ஒரு மணவோலை யெழுதி அயோத்தியாபுரியையாளும் ரிதுபர்ணமகாராஜனுக்குமாத்திரம் அனுப்புவாய், அவ்விடம் எனது மருகனாகிய நளச்சக்கிரவர்த்தி யுருமாறியிருப்பதால் இந்தச் சங்கதியைக்கேட்டுத் தானு மிங்கு வருவானென நம்புகின்றேன் சேனாபதி; (மந்-வ-ம்.) சுவாமி யிந்தயோசினையவரை யிங்கோடிவரச்செய்யத்தக்கமார்க்கமிப்போதே யனுப்புகின்றேன்; அப்பா தூதர்தலைவனே! நீ யிந்த மணவோலையை ரிதுபர்ணமகாராஜனிடமளித்து நாளைக்கு தமயந்தியம்மாளுக்கு மறுவிவாகமெனத் தெரிவித் தாங்குநடக்கும் விசேஷத்தையுமுணர்ந்துவந்தறிவிப்பாய். (தூ-வ-ம்.) நல்லது சுவாமி; இதென்னவிபரீதகாலமாகக்காட்டுகின்றது, முன்னமே நளமகாராஜனுக்குப் பலதேசத்தரசர்களிருக்க மாலையிட்டு இரண்டிபாலகர்களையும் பெற்றெடுத்த தமயந்திக்கு மறுபடியும் விவாகமென ஓலையனுப்பலாயினன். நமது வேந்தன், இவ்வாறு இதுவரையில் எவர்களும்நடத்தியதேயில்லை, சத்தியமாருங்காலஞ்சம்பவித்தது, இனி நாட்டில் காலமழைபெய்யாது, இதோ நாம் அயோத்திவந்தோம், போற்றி மகாராஜனே. (ரிது-வ-ம்.) நீயாரப்பா? (தூ-வ-ம்.) நான் விதர்ப்பதேசத்தரசனாகிய வீமராஜருடையதூதன், (ரிது-வ-ம்.) எங்குவந்தனை? (தூ-வ-ம்.) அரசே வீமராஜனுடையபுத்திரியாகிய தமயந்தியம்மாளை மணந்த நளமகாராஜா சூதாடிச் சுகத்தையிழந்து மாதைக் காட்டில் விட்டுத் தான்எங்கேயோ ஓடிப்போனமையால், எங்களரசனவனை பலதேசத்திலுந் தேடிக் காணாமல் கலங்கித் தன்மகளிப்பருவ காலத்தில் பத்தாவின்றியிருப்பதா? என்று, நாளையதினம் மறுவிவாகமெனச் சுயம்வரஞ்சாற்றியிருப்பதால் தங்களுக்கு மணவோலைகொண்டுவந்தேன் கோவே. (ரி-து-வ-ம்.) அப்படியா! அவ்வோலையை யிப்படிக்கொடுப்பாய், சரிதான். (ந-வ-ம்.) ஆ! ஆ! விதியே, இன்று யிந்தவார்த்தையும் நான் கேட்டு உயிரோடிருக்கச்

செய்தாயா! நாம் சகியனுடைய கோளால் பிரிந்திருப்பதை யுணராமல் அதிகபுத்திசாலியாகிய வீமராஜன் தன் மகளுக்கு மறுவிவாகமென சுயவரஞ்சாட்டத் துணிந்தாரோ, மறுமுறை மாண்டுபோனதா, நீதி நெருப்பிலெரிந்துபோய்விட்டதா, சத்தியமென்பது சமுத்திரத்திலாழ்ந்திப்போயினதா, இப்புதுமை யெங்காயினும் எக்குலத்தார்களிலாயினும் நடந்தேரியதுண்டா! ஓ! பாழுந்தெய்வமே! நீ யெங்கிருக்கின்றனை, என்னை வதைக்கவுனக்கு எண்ணமேன்வரவில்லை, இவ்விதச் சங்கதியைக் கேட்டும் நான் சண்டாளனுயிரோடிருப்பதுனக்கழகா, என்ன ரசைந்தான் புஷ்கரனை யாளச்செய்துபார்க்கின்றதுபோதாமல், என் அகமுடையாளையும் அன்னியர் வசப்படுத்த வென்னை நினைக்கொண்டதுவெக்குமா, வீமராஜ னவ்வாறு நினைத்தப்போதிலும், தேவாதிதேவர்களைய மறுத்து என்னையே பிடிவாதமாய் கைப்பிடித்தபெண்ணனங்கை யிப்போதுமறுபுருஷர்களைக்கோரமனங்கொண்டனளே! கொண்டனளே! அடி பாதகி! நீ என்னோடாடிய வுண்மைமொழிகளென்ன, தாய்வீடுபோவென்றால், தடுத்தாடிய நீதிமொழிகளென்ன, பதிவிரதத்தின் பெருமைகளைப் பலவாறாய்ப் பன்னிக்காட்டியபஞ்சகளென்ன, என் மனதைக்கவர்ந்த மாயமார்க்கமென்ன, இப்போது நீமாறிய தீர்க்கமென்ன, அடி கண்ணே! மன்மதன் உன்மனதை மயக்கினனோ, என்னை மறக்கச்செய்தானோ, மறுபுருஷனை மருவ மனந்தந்தானோ, சன்மார்க்கத்தை விடுக்கச்செய்தானோ, அடி மாதே! என்னடி வயிற்றில் என்றென்றைக்குமவியாத அக்கினியையிட்டனையே.

---

## நளமகாராஜன் - விருத்தம்.

அரும்பாவிகடும்பாவியவனிதன்னில்
    ஆண்மையில்லாப்படுபாவியகந்தைசெய்யும்
பெரும்பாவிபேச்சகில்லையில்லாப்பாவி
    பேதைதனைவஞ்சித்தப்பிடிவாதபாவி
கரும்பாவிகைப்புநடையுள்ளபாவி



    கருநரியகூடாடத்துணிந்தபாவி
வெருப்பாவியெனமதித்தேகந்தனை
    விட்டனையோதமயந்திவெறுத்தாயே.

(நள-வ-ம்.) அடி நாயகி! எனக்குவந்துநேரிட்ட கஷ்டக்காலத்தைக்கண்டறிந்தவளாயிருந்தும் இதுவுஞ் சிலகாலமென வெண்ணாமற்போனையே, நானிறந்துபோனாலும் என்பெயரை வசையானது சுத்திக்கொண்டிருக்கத்தக்கமார்க்கம் நினைத்தனையே, யினி யென்னசெய்வேன். மனந்துணிந்தனையே!

---

## நளமகாராஜன் - விருத்தம்

அத்தியின்பூவும்வீணுய் அலரியேகாகாவென்று
காத்திடுங்கரவாகத்திற் காணினும்வெண்மையின்ன
மத்தியவாழிநீந்து மச்சத்தினடிகண்டாலும்
சத்தியமாதர்நெஞ்சி நடுநிலையறியொணாதே.

(நள-வ-ம்.) ஏனும் பழமொழி யின்றெனக்கு தெளிவாய்விளங்கியதடிதேனே, யிது நான் முன்செய்தவினையோ, முனிவர்களிட்டசாபமோ, மூதாதைகள்செய்த பாவமோ, உன்னைப் பிரிந்ததாலுண்டாகிய கோபமோ, நீ யிப்படிச்செய்வாயெனக்கினவிலும் நினைத்திலேனடி அன்னமே! இவ்வாறுசெய்ய நீமுயல்வாயென்றுணர்ந்திருந்திருப்பேனாகில் உன்னைப்பிரியத்துணிவேனடி தோகையே.

---

## நளமகாராஜன் - விருத்தம்.

தரித்திரனையின்றதாயுந் தந்தையும்வேண்டார்மற்றும்
வரித்திட்டவஞ்சிவேண்டாள் வணங்கியபணியாள்வேண்டான்
பரித்துண்ணுஞ்சோரர்வேண்டார் பாலரும்பாரத்தைவேண்டார்
எரித்திடுந்தணலும்வேண்டா தென்பதுநிஜமேநெஞ்சே.

(நள-வ-ம்.) தரித்திரனைப்பெற்ற தாய்தந்தை சுற்றத்தார் பெண்சாதியின்ளைகள், வேசி, கள்ளர் நெருப்பும்வேண்டாதென்பது

இன்றுவிந்தாயா மனமே, என், கலங்குகின்றாய், நீ செய்துக்கொண்ட செய்கையால் வந்தவிறுமையை நீ யநுபவிக்கத்தக்கதேயன்றி தமயந்தியேன் அநுபவிப்பாள், அவ்விளா நல்லவஸ்திராபூஷணங்களையுஞ் சுவையுள்ள போஜனத்தையும் சுந்திரமான போகத்தையு மநுபவிக்க காருதினன்போற்காணுகின்றது; அதற்காக நீவருந்துவதேதன், நீயே சத்தியமறந்து, அவளைக் காட்டிற்பிரிந்திருக்கச்சே அவளோ பெண்பால் அவள் நெறிமாறியது அடாதெனநினைத்து நிந்தனையாவதெதற்கு உனக்கு நியாயமேது, உன்னையே நீ நிந்தித்துக்கொள்வாய் நிலைகெட்ட மனமே ஆ! ஆ! வீமராஜருடையதூதன் பலருங்கேட்க ரிதுபர்னன் சபையிற்சொன்னமொழிகளை நினைக்கிறால் என்னுடல் நெருப்பிலிட்ட வெண்ணெய்போலுருகின்றதே, தமயந்தியை அதிக வுந்தமியென கன்றுமறந்திருந்தாயே-நாய்மனமே.

---

## நளன் - தரு - முகாரி - ரூபகம்.

இப்போதறிந்தேன் மாதரின்பம் - கண்
 எதிரில்நடிப்ப தெல்லாம் வின்ஜம்பம். (இப்)
தப்பிலிவிரபோர்கள் - தாவிப்புரியுஞ்செய்கை
தமயந்திகொண்டதைத்-தான்கேட்கவிட்டாய்தன்மம். (இப்)
 பாவையுமெனைமறக்கேனென்றனளே - பத்தாவைவிடற்
 பாதகமெனபலவாறோதினளே
ஆவலாயெனையுன்றுதொட்டனளே - வெகுவாயுரைத்து
அன்னைதந்தைநீதெய்வமென்றனளே
 கோவித்தவள் - காரிசெய்திடுவள்
 கொணிறைல்லை - கீர்ணலைவிழுந்து
குலமுங்கெட்டது குணமும்போயிற்றது
கொள்ளைகழியதென்னசெய்குவேன்
கூடிருக்குமவரைமிஞ்ஞுவேன். (இப்போ)



(ந - வ - ம்.) மனமே? இனி யவள்நாமத்தைக் கனவிலு மறந்திருப்பது நலம், அவளை நினைப்பது உன் கவரதைக் கிழிவென மனதில்படுகிறது இதெல்லாம், நீர்மேற்குமிழி நிலையில்லா வாழ்வென நினைத்து சித்தத்தை சிருஷ்டித்தவன்பாலிருத்தியினிச் செம்மையாவராயிருக்கத்தக்க மார்க்கமெதுவோ அதைக வனிப்பாய், ஆ! எப்படி நாம் நமது நாயகியை மறப்பது

---

## நளமகாராஜன் - விருத்தம்.

கோங்கிரிபூன்றருவிமுலைமாதர்குதிதப்பினுல்
பாங்குறிவாளர்பின்பற்றுவரோபசுங்காய்வனத்தில்
தூங்கியபோங்களிவ்வாலுன்றுஅடிகடந்த
வேங்கையுண்டுறையிடப்பாகம்வீழ்ந்தவிடக்கதுவே.

இதுதான் மீசையுள்ள ஆண்மக்களுக்கழகு ஒருவேளை அவளைமறந்தாலும் நமது புத்திரசிகாமணிகளை எவ்வாறு நினைவிலிருந்து அகற்றப்போகும், தன்னைத்தானறிந்த தன்யர்களைக்கூட மக்கள் மழலைச்சொல்லானது மனதின்வியாகூலத்தைமாற்றி மாவானந்தத்தையுட்டுமென மறைகளுமுறையிடுகின்றதே, நாம்சென்று நங்குழந்தைகளையாவதுயழைத்துவருவோமென்றாலோ, இக்கோலமாயெப்படிப்போவதென வுளங்கூசுகின்றது, கூச்சத்தைவிட்டாலும் எப்படி நாம் விதர்ப்பதேசம்போவது, ஒருவேளை போயினும் அரண்மனையிலிருக்குங் குழந்தைகளை எவ்விதமழைப்பது, மனமே? சற்று நிதானிப்பாய், ஒருவேளை ரிதுபர்னன் தமயந்திசுயம்வரத்திற்குப்போக நினைப்பானாகில் நாமே ரதத்தை நடாத்துவதாயொப்பிச்சென்று அங்கு நடக்கும்விந்தைகளைக் கண்ணுற்று அப்பால் யோசிப்போம், இதுவேசரி.

---

(ரிது-வ-ம்.) அப்பாமந்திரி? இன்றொரு மணவோலை வந்திருக்கின்றது, அதாவது, வீமசேனமகாராஜன்புத்திரியாகிய தமயந்திக்கு மறுவிவாகமாம், அம்மாதைப்போல் ரூபவதியையும் அவயவாதிக எமைந்திருப்பவளையுந் தேவரிலுங்காண்பதரிது, என

க்கிப்போ தவள்மீது காதல்பெருகுவதனால் மனம் போகக் கரு
துகின்றது, ஆனல் விதர்ப்பதேசம் நெடுந்தூரமிருப்பதனாலும்,
கலியாணநாள் நாளைக்கானதனாலும், இன்று பொழுது பகல்
பத்துநாழிகை யாய்விட்டதனாலும் எவ்வாறு நாம் போகக்கூடு
மென மனமும் வருத்தப்படுகின்றது. இதற்குத் தக்கமுயர்ச்சி
உனக்கேதாயினுந் தோணுமாகில் சீக்கிரம் என்றுசிந்தை களிக்
கும்படிக்கெடுத்தோதுவாய்நேசா; (மந்-வ-ம்.) அரசே! நம்மிடம்
பாகுகனாயிருப்பவன் தன்னை நளச்சக்கிரவர்த்தி ரதம்நடத்துவ
தில் மெத்தவும் மெச்சிக்கொண்டாடுவாரெனச் சொன்னான்
றே, நளனே சாரதத்திலும் அஸ்வப்பரிக்ஷயிலு மதிகவல்ல
வனெனத் தேவர்களுங் கொண்டாடியிருக்கச்சே, அப்பாகுகனை
யழைத்துக் கேட்டால் சித்தத்திற்குத் தெளிவாகும் வேந்தே,
(ரிது-வ-ம்.) ஆனல்பாகுகனைவரச்செய்வாய்மந்திரி; (பாகு-வ-ம்.)
போற்றி அரசே அடியேனை அழைத்தகாரியம் அருள்செய்யவே
ண்டுந் துரையே.

---

ரிதுபர்னன் - விருத்தம்.

பாகுகனேவிதர்ப்பனருந்தவத்தாலீன்ற
பாவைதமயந்திக்கேநாளைப்பா
ஆகுதெனமறுவிவாகந்தானேனை
அப்பனேவந்ததெனக்காசைமீறிப்
போகுதுயரறிவழிந்தவனைக்கூடப்
போவனேவெனமதியும்புலம்பலாகி
ஏகுவதுமின்றங்கெவ்வாறென்று
எண்ணுகிறேனிதற்குமுறையியம்புவாயே.

(ரிது-வ-ம்.) அப்பாபாகுகா? தன்னை நாடிவந்தபலமன்னவர்
களையும், தேவர்களையும் அசட்டைசெய்து நளமகாராஜனைக்
கைப்பிடித்த தமயந்தியை நளன் சூதாடி அரசைத் தோற்றும்
அவளைவிடாமலிருந்தஅம்மாதை ஆரணியத்தில்தூங்கச்செய்து
தான் எங்கேயோபோய்விட, அவளை வீமராஜா தேடிக்காணமல்



தன்மகளுடைய எவ்வளகால மிழிவாகாவண்ண மறு விவாக
ஞ்செய்து கொடுக்கப்போவதாயும், நாளைக் கலியாணமெனவு
மணவோலை யனுப்பியதைக்கண்ட என்மனம் மன்மதவேதைக்
குள்ளாகிவருந்துவதால் இன்றேநான்விதர்ப்பதேசமடையத்தக்
கமுயர்ச்சிஉன்னாற்செயக்கூடுமோ?வுரைசெய்குவாயப்பா; (பாகு-
வ-ம்.) அரசே இன்று பொழுதுசாயாமுன்னந் தங்களை விதர்ப்
பதேசங்கொண்டுபோய்ச்சேர்க்க என்னாற்கூடும் ஆனல், தாங்க
ளங்குபோவதுஅடாதெனவெண்ணுகின்றேன் வேந்தே; (ரிது-
வ-ம்.) அதேன்அப்பா? (பா-வ-ம்.) கேளும் அரசே.

---

பாகுகன் - விருத்தம்.

அன்னியரின்பொருட்தனைக்கருதல்தோஷம்
அதினுமவர்மனைகவரலதிகதோஷம்
மன்னரியபாவமதாம்தாரந்தன்னைப்
பற்றிடக்கைகொடுவதுபகர்க்கேளும்
துன்னுமற்றகுலத்திற்கேதோஷஞ்சுற்றும்
தொல்லுலகிலறியாதசிந்தையென்றே
வன்னமுளசான்றோருநூலுங்கூவி
வரையுவதைக்கவனித்தல்வண்மையாமே.

(பா-வ-ம்.) அரசே? அன்னியர் சொர்க்கத்தைக் கவருதல்தோ
ஷம், அதினுமவருடைய பூமியை யபகரித்தல் மிகவுந்தோஷம்,
இவைகளைப்பார்க்கினும் ஒருவருடைய தாரத்தை யிச்சிப்பது
மகாபாதகமென மறை முறையிடுவதனால், ஒருவன் மணந்த
பெண்ணைக் கருதிடப்போகுதல் மகாதோஷமென்று அறிவீர்
துரையே; (ரிது-வ-ம்.) அப்பா பாகுகா? அந்தப்பெண்ணையீன்
றதந்தையே மறுவிவாகஞ்செய்துகொடுக்கவெத்தனித்தால் வரி
த்துக்கொள்பவனுக்கெவ்வாறு தோஷமென்று சொல்லப்போ
கும்; (பாகு-வ-ம்.) வேந்தே? முன்னமே அவள் ஒருவனைக்கைபி
த்திருக்கச்சே அவளைத் தாரமிடத் தந்தைக்குயேதுபாத்தியம்?

(ரிது-வ-ம்.) தமயந்திசம்மதிக்காமல் ஒலை யொருபோதும் வீமசேனமகாராஜன் எழுதத்துணியான். (பாகு-வ-ம்.) ரிதுபர்னமகாராஜனே.

---

பாகுகன் - விருத்தம்.

பேதையெனும்பெண்களுக்குவிவேகமேது
பெருக்கவொன்றையோசிக்குங்குணமதேது
வேதைவரும்வினையறிந்துநடக்கத்தக்க
விதமேதுபுத்தியதில்விளக்கமேது
கோதைகட்கெனப்பலநூலோதநீரும்
கோரியங்குசெல்வதுவுங்குணமீயாது
தீதையொற்றகார்யமெனக்காலன்தானுந்
தெண்டிப்பானினியுமதுசிந்தந்தானே.

(பாகு-வ-ம்.) வேந்தே! பெண்கள் வாசித்தவர்களாயிருந்தாலும் அறிவு விசாலமில்லையெனவும் முன்வருவதை யெண்ணிப்பாரார்களெனவும் நீதியோதுவதாலும் அவள் சம்மதியின்பேரில்தொட்டபோதினும் ஒருவன்பெண்டெனத் தொடுமுன்னமேயறிந்திருந்துந்தொடுபவனைத் தோஷஞ்சூழுமென நூல்முறையிடுகின்றது,இனி யுமதிஷ்டப்படிநடப்பீர்மன்னு;(ரிது-வ-ம்.)பாகுகா!உன்புத்திக்குமெச்சினேன், ஆனால்,அவள் சுயமாய் வரிக்கப்போவதனால் யாரைக்கருதுகின்றுளோ யதைப்பார்க்க நான்எண்ணமுடையவனாயிருக்கின்றேன், உன்னால் என்னை யின்று விதர்ப்பபுரிக்கருகிற் சேர்க்கக்கூடுமோவில்லையா சொல்லுவாய் பாகுகா?(பாகு-வ-ம்.)அதர்க்கொருதடையா! இதோ நான் ரதத்தைக்கொண்டுவருகின்றேன் சீக்கிரம் நீருடுத்திக்கொள்ளுமரசே; (ரிது-வ-ம்.) அப்படியே; மந்திரி? மங்களபேரிகையறையச்செய்வாய்;(மந்-வ-ம்.)நல்லது ஆண்டவனே; (பாகு-வ-ம்.)அரசே யிதோ ரதத்தைசிங்காரித்து தகுதியான அஸ்வங்களையும்பூட்டி வந்தேன் வாருமரசே. (ரிது-வ-ம்.) பாகுகா? இதென்ன பலயீனமானகுதிரைகளைப்பூட்டினை ? என் ? வலுவானவைகளைக்கட்டப்போகாதோ ? சரிதான், நீ நளனிடமிருந்த விசுவாசத்தினால், அவன்தேவியை நான் கைப்பற்றக்கூடாதெனவெண்ணியிவைகளைப் பூட்டியதாகக்காட்டுகின்றது;(பாகு-வ-ம்.)அப்படிக்கொருபோதுமில்லை, இவ்வஸ்வங்களின்வலுமையுங் குணமுந்தெரியாமலா நான் ரதத்திற் பூட்டியிருப்பேன் ; ரதத்தில் ஏறியபின்பல்லவோ அறியப்போகின்றீர், ஏறுவீர், காலதாமசங் கண்டிக்கத்தக்கதுமன்னவா ; (ரிது-வ-ம்.) நல்லது பாகுகா, சந்தோஷம்.

---

பாகுகன் - பதம் - தோடி - ஆதி.

நடத்தும்ரதத்தைப் பாருமே.
நலமுடன்கண்டவர் கிலேசுலைத்தோடிட. (நட)
நிடதன்தேவிவிவாகத்திடமறியவேக [சொல்லை
நிமைக்குள் விதர்ப்பத்தெல்லை - உமைச்சேர்ப்பேனென்ற
நிச்சயிக்க - பக்ஷமுடன் - தக்ஷகனே - யிச்சணத்தில்
அச்சமின்றிநீருமே - மெச்சும்படி நானுமே. (நட)
உச்சியிற்சூரியனும் - உதித்தானையனேபாரும்
ஓஓ அயோத்தியெல்லை - யொழிந்ததிங்ஙனேநீரும்
பக்ஷிகளிந்தவேகம் - பறக்கலாகுமோகூறும்
பாகுகன்தேர்நடத்தும் - பாங்கையினிமேற்றேரும்
பற்றியென்கையினாற் - சுற்றினேன்வாரிதோ
எற்றிசைவாழ்வோரும் - நற்றியுமைப்புகழப்
பாரும்அஸ்வத்தடிகள் - படபடபடபடபடவெனவே
தேரும்பூமியதிர்ச்சி - திடதிடதிடதிடதிடவெனவே
பன்னருஞ்சாட்டியே - என்கரமூட்டியே
மன்னனேகாட்டவே- மின்னல்போலஸ்வமும்.(நட)

(ரிது-வ-ம்.) அப்பா பாகுகா? என்மேலிருந்தஉத்தரியம்விழுந்துபோனதே சற்று ரதத்தைநிறுத்துவாயா? உனக்கிதோவந்தனம், நீ குதிரைகளுக்கொருவருத்தமின்றியும் எனக்கொருஆயாசமில்லாமலும் ரதத்தைநடத்தியதற்காக மெத்தவும் ஆனந்தங்

கொண்டேன்நேசா; (பாகு-வ-ம்.)சுவாமி உத்தரியம்விழுந்ததெ னச்சொன்னதற்குள் மூன்றுயோசினைதூரந் தேர் வந்துவிட்டது, இனி நீருத்திரியத்தைக் கவனிப்பதிற்பயனில்லை மன்னா. (ரிது-வ-ம்.) சந்தோஷம் பாகுகா.

பாய - ரதத்தின்கொடி - சாய - தேவர்கள்திடம்
ஓய - உடறு உளம் - நோய - மனைத்தனையில்
இருபுரஞ்சக்கரம் - கரகரகரகரகர வென்னவே
கருங்கிச்சக்காங்கல்லுகள் - நரநரநரநரநர வெனவே
பாரும் - பொடியாகுது - பாறைபிளக்கோடுது
கூரும் - விதர்ப்பதேசம் - கோவேயதோகாணுது
கொண்டுவந்தேன்குதிரை
சென்டுபோல்வாயினுரை
கண்டுவகைத்துடைக்க
அண்டத்ததிர்ச்சிரிக்க
கொற்றவனே தேரையிங்கு - சற்றுநேரந்தேக்கிலங்கு
உற்றதொருகனைநீங்கு - இற்றலத்தினீரிரங்கும்
கூவிடுமுன்னமே - தாவிடவன்னமே
மேவிடக்கன்னமே - ஏவிடநன்னமே. (நட)

(ரிது-வ-ம்.)அப்பா பாகுகா? நீதேரைநடத்தியதற்காக மெத்தவும்மெச்சியதுடன் . அதியாளத்தங்கொண்டேன், ஆனால் இது அஸ்வங்களின்வலுமையென நம்ப எனக்கிடந்தரவில்லை யாதனினவிதன்மருமத்தை தயைசெய்தெனக்கறிவிப்பாய்நேசா!(பாகு-வ-ம்.)அப்படியேசுவாமி? அடியேனுக்கு நளசக்கிரவர்த்தி அஸ்வமந்திரம் உபதேசித்திருப்பதனால் இரதத்தை இவ்வளவுதூரிதமாய்நடத்தினேனாயிற்று, குதிரைகளுக்கும்இளைப்பென்பதுசற்றேனுந்தோற்றாது மன்னவா; (ரிது-வ-ம்.) அப்பா பாகுகா? இது மெத்தவும் அருமையானவித்தையே, எனக்கொன்று தெரியுமதை புனக்குபோதிக்கின்றேன், நீ தயைசெய்து அஸ்வமந்திரத்தை எனக்குக் கொடுப்பாயா? (பாகு-வ-ம்.) சந்தோஷம் உம்மி



டமிருப்பதெதுவோ தெரிவிப்பீராயசே. (ரிது-வ-ம்.) நான் ஓரம்பை யம்மரத்தைநோக்கிவிடுகின்றேன், நீ சென்று அம்மரத்தினெல்லைகளை கண்ணுற்றுவந்தறிவிப்பாய், (பாகு-வ-ம்.)நல்லதும காராஜனே; ஆ! இதுவும் நல்ல சமர்த்தானவித்தையே; இம்மாத்திலிருக்கும் ஒவ்வொருயிலையையும் புஷ்பத்தையும் ரிதுபர்னன்விட்டஅம்பானது துளைத்துப்போயினதன்றோ, இதை நாமறியத்தக்கதே, (சகி-வ-ம்.) இன்று நாம் நளனைத்தொட்டகாலம் சரியாகிவிட்டது ; அவனும் ரிதுபர்னனேவிய அம்பானதுசெய்தவித்தையை வியப்போடு களிப்பாய் கவனிக்கின்றான்; நாம் சென்று அவனிடம் விடைப்பெற்று ஏகுவோம் ; அப்பா ! நிடதபூபதியே வந்தனம் ; (ந-வ-ம்.) நீராரையா ? (சநி-வ-ம்.) நான்தான் உன்னை யிக்கோலமாக்கிப் பார்த்தயர்ந்த சநியனரசே ; (ந-வ-ம்.) அப்படியா !

---

## நளமகாராஜன்-தரு-அடாணா சாப்பு.

போம்போ மெதிரில்நிற்காதே.

பொறுமையில்லாப்பாவியே-கருமம்புரிதோஷியே. (போம்)
நான்பணியவன்று - நயந்தமொழிகளாடி.
வின்பழிசுமத்தி - வினைக்குள்ளாக்கினைநாடி. (போம்)
சூர்யன்புதல்வனென்றுபேசி - எனைச்
சோம்பேரிபோற்செய்தா யோசி
பார்புகழுவேந்தனென்றும் - பரிதிகுலத்தோனென்று
பார்த்திடாமலே - பலதுயர்விளைத்தனை
தீர்த்திடாச்சோகந் - தீண்டிடவிட்டனை. (போம்)
மாதைப்பிரியச்செய்தாய் - அவள்
மறுமணமாடவைத்தாய்
நீதையிதைப்போலாருஞ் - செய்ததுண்டோகூறும்
தெண்டிப்பேனுனைத் - தென்திசைச்சாரவே
அண்டத்தோரெனை - அரசெனக்கூறவே. (போம்)

(சநி-வ-ம்.) ஆ! ஆ! நாம் செய்வித்த கொடுமையினலன்
றோ, அதி சத்தியவந்தனுகிய நளனுக்குங் கோபம் பிறக்கலாயி
ற்று, இந்தவேளை நாம் வணக்கமாய் வார்த்தையாடித் தப்பித்
துக்கொள்ளவேண்டும், இல்லாவிடில் நளனிடுஞ் சாபத்தைத்
தாங்கவேண்டியதாகும், தேவர்கள் நம்மைப்பார்த்து பரிகாச
ஞ்செய்ய விடந்தரும்.

---

## சநிபகவான் - விருத்தம்.

அன்றுசீரெனைவணங்கிவாஞ்ஞையோடு
அடையவிதேகாலமெனவரியதாலும்
நன்றெனவுஞ்சம்மதித்தேனெவ்வனத்திற்கேற்ற
நாட்டமெலாமாட்டிவைத்தேன்நளனேகேளும்
இன்றெனைநீர்வெறுப்பதுவுமேற்றதன்று
இறைவனேவார்த்திபத்தில்வாவென்றால்நான்
சென்றிருப்பேன்சிறுமையிலுங்குறைபுரிசெய்வேன்
சீமானேமன்னிப்பீர்சேவித்தேனே.

(சநி-வ-ம்.) அரசே? உம்மை நான்கேட்டபோது இதுவே
நல்லகாலம் வருமெனச்சொன்னீர், உமது எவ்வனத்திற்குத்
தக்கவிம்சைகளைப்புரிந்தேன், நீர் அன்றே எனை விருத்தாப்பிய
காலத்தில் வரும்படிக்குப்பிரார்த்திருந்தால், அந்தவயதிற்குத்தக
கஷ்டத்தைகொடுப்பேனின்றி, யீக்கொடுமைகள்புரியேன்; வய
துக்குத்தக்க வருத்தங்கொடுப்பதல்லோ என்க்குப் பிரமத்தாவி
ட்டப்பட்டிருந்துங்கட்டளை தாங்கள் என்னை வெறுப்பதடாது;
மன்னிப்பீர் நளச்சக்கிரவர்த்தியே. (நள-வ-ம்.) சுவாமி சநிப
கவானே? நீரோ சூரியனின்றகுந்தரன், நானோ சூரியமரபோன்,
என்விஷயத்தில் நீர்நடத்தியதெல்லாம் பெருமைக்கிடந்தருக்தே
யின்றிவேறன்று, ஆயினும், நீரென்விஷயத்திற்செய்வித்தகாரி
யங்களை கவனிக்கின் மனம் அதிக பீதியையடைகின்றதுதாதா.
(சநி-வ-ம்.) அரசே! நீ மந்த அரிச்சந்திரன்பட்ட துயரத்தைகவ
னிக்கி லிது அதிலாயிரத்திலொருபாகமென வெண்ணவுமிடங்
கொடாது, உமக்கு வேண்டிய வரத்தை இப்போதே கேட்கிற்



கொடுத்தேகுவேன் மன்னு. (நள-வ-ம்.) சுவாமி நீருரைத்ததை
கேட்ட வென்மனம் மதிக சந்தோஷத்தைஅடைந்தது, என்னு
டைய விருத்தாந்தங்களை அன்புடன்பேசுவோரையும், ஒருவரு
க்குரைப்போரையும், ஆவலாய்க் கேட்போரையும், சரித்திரரூ
பமா யெழுதினோரையும், வாசிப்போரையும், பலர் கேட்க விரி
த்துரைப்போரையும் நீர் ஹுகாமலிருக்கவேண்டியது, அல்லது
அணுகினும் வருத்தஞ் சிறுமைகளைக் கொடாதிருக்கும்படிக்கு
ப்பிரார்திக்கின்றேன். (சநி-வ-ம்.) அப்படியேமகாராஜனே! நீரும்
உமது பத்தினியாகிய தமயந்திதேவியாரும் புத்திரர்களுங்கூடி
சவுக்யமேயிருக்க வாழி!!! நான்விடைப்பெற்றுக்கொள்கின்றே
னரசே. (நள-வ-ம்.) சந்தோஷம், ரிதுபர்னமகாராஜனே நீரும்
பெய்தவித்தையை எனக்கருள்செய்யும், நான் அஸ்வமந்திரத்தை
உபதேசிப்பேன். (ரிது-வ-ம்.) நல்லது இப்படிவருவாய்பாகுகா
இதுதான்; (பாகு-வ-ம்.) அறிந்தேன் இதுதான் அஸ்வமந்திரம்;
(ரிது-வ-ம்.) தெரிந்துகொண்டேன், இனித் தேரை நாட்டிற்கு
ள்நடத்துவாயா ? (பாகு-வ-ம்.) நல்லதுஅரசே, (ரிது-வ-ம்.)
ஆ! இதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது, நானைக்குச் சுயம்வர-
மென ஓலையிற்கண்டோம், இங்கு ஒரு அலங்கரிப்பையுங்கா
ணேம், அன்றியும் வேறுவேந்தர்களையுங்காணேம், இதென்ன
மோ சூதாகக்காட்டுகின்றது, அப்படிக்குப் பொய்யானவோலை
வீமராஜன் போக்கானே, எதற்கும் நான் கொலுமுகமடைந்து
தெரிந்துவருமளவும், பாகுகா நீ தேரை அந்தச்சோலையில்நிறு
த்தி, அஸ்வங்களைப் புல்லருந்தச்செய்வதோடு போஜனமுஞ் சித்
தப்படுத்துவாய், (பாகு-வ-ம்.) நல்லது வேந்தே.

---

## வீமராஜன் - கொலு.

(வீம-கட்-வ-ம்.) பிராக்குவேந்தே? அயோத்தியாபுரியையாளும்
ரிதுபர்னமகாராஜன் கால்நடையாய்வருகின்றார்தேவே. (வீ-வ-
ம்.) அப்படியா மந்திரி! நாமெதிர்சென்றழைத்துவருவோம்வா
ராய். (ம-வ-ம்.) நல்லது மகாராஜனே. (வீ-வ-ம்.) வாரும் வா

ரும் ரிதுபர்ணரே, நீரிப்படித் தனியே பாதசாரியாய்வந்ததே னே தெரிவிப்பீர் அரசே. (ரிது-வ-ம்.) இல்லை இன்று காலை (10)நாழிகைக்குப்பார்த்து எப்படிக்கிங்குவரக்கூடுமென வருந்தக்கண்டபாகுகன் தான் ரதத்தை நடத்துவதாயொப்பி தேவாதிதேவர்களுங் கண்டு வியப்படையத்தக்கவாறு நடத்திக்கொணர்ந்ததால் தேனை சிங்காரவனத்தருகிலிருத்தி நான் தங்களைக் காணவேண்டிவந்தேன், நெடுந்தூரம் ரதமேறி இறங்காமல்வந்தஆயாசந்தணிந்து அவயவங்கள் தளர்ச்சிப்பெறவேண்டிப் பாதசாரியாய்வந்ததன்றி வேறில்லை ; (வீ-வ-ம்.) சந்தோஷம், அப்பாமந்திரி? இவருக்கு தக்க விடுதியமைத்து ரதத்தையுங்குதிரைகளையும் லாயத்தில்விடச்செய்து போஜனமுதலானதிற்குத் தக்க சாமக்கிரயங்களும் சிப்பந்திகளையுங் குறைவின்றி யமைப்பாய் நேசா. (மந்-வ-ம்.) மகாபாக்கியம் வேந்தே. (ரிது-வ-ம்.) நம்மிடமிருக்கும் பாகுகன் திவ்யமாய்ப் பாகஞ்செய்வான்.(வீ-வ-ம்.) மெத்தசந்தோஷம் ரிதுபர்ணமகாராஜனே.

---

(தோழி-வ-ம்.) அம்மணி ரிதுபர்ணமகாராஜன் கொலுமுகம் வந்தார்,அவருடன் பாகுகன்வந்திருக்கின்றானம்தாயே;(தம-வ-ம்.)அந்தப்பாகுகர் எங்கு இறங்கினரோ? (தோழி-வ-ம்.)அம்மா நமது சிங்காரமாளிகையில்தாயே. (தம-வ-ம்.) அப்படியா சந்தோஷம் ; பாங்கி சித்திரகங்கை நீசென்று ரிதுபர்ணனுடன்வந்தபாகுகர் என்ன செய்கிறாரோ அறிந்தோடி வருவாயம்மா, (தோழி-வ-ம்.) நல்லது தாயே ; ஆ ! ஆ ! இதென்ன ! பாகுகன், அக்கினியின்றிச் சமயற்செய்கின்றான், இப்புதுமையை தேவிக்கறிவிப்போம்; அம்மா நான்கண்ட விந்தையை யென்னென்று சொல்வேன், அந்தப்பாகன் பார்க்கிறதற்கு விகாரமாயிருந்தாலும், நெருப்பில்லாமல் சமயல்செய்கின்றான்,தாயே ; (தம-வ-ம்.) அப்படியா ? நீ என்குழந்தைகளை யவரிடமழைத்தேகி, மரியாதையோடு இந்த தந்தையில்லாப்பிள்ளைகளுக்குக் கொஞ்சம் அன்னங் கொடுப்பீரோ என வாங்கிவருவாய்,அங்குநடப்பதையும் எனக்கு விவரமாய் தெரிவிப்பாய். (தோழி-வ-ம்.) நல்லதம்



மா ; வாருங்களப்பா ; வந்தனமையா இந்தத் தொகப்பனில்லா தகுழந்தைகளுக்கு கொஞ்சம் அன்னங்கொடுப்பீரையா. (பாகு-வ-ம்.) கொடுக்கின்றேனம்மா.

---

### பாகுகன் - தரு - அபருபகம் - ஏகதாளம்.

இந்தவிதியென்தலையில் எழுதினையோ,பரவி
அந்தநாளிலுந்தனடி ஆவலாய்போற்ற
அகங்குளிர்ந்தியீந்தவரம் அகன்றதுவோ மேவி. (இந்த)
தந்தையிலாச்சேய்களெனத் தரணியோருமேச
தனையருளந்தவித்துருகத்தான்விட்டாயே தாவி. (இந்த)
கும்பிட்டேனுன்னையே பெண்குழந்தைவேண்டியே
கோரமானசிரிவிட்டாய்க் குணமாமோ கோவி. (இந்த)
ஊனைவிட்டுக்காடுளர்ந்தும் உண்மையீ ருனை
உருகிவுடற்குறுகி உளங்கரையச்செய்தா யேவி (இந்த)

(பாகு-வ-ம்.) ஆ ! தெய்வமே நான் தவமிருந்துபெற்ற என்கண்மணிகளாகிய மக்களை இக்கோலமாய்ப்பார்த்த என்மனங்கலங்குகின்றதே, கண்ணில் நீர்பெருகுகின்றதே, அப்படிக்குக் கலங்காதிருக்க என்மனமென்ன கருங்கல்லா ஹரியே ?

---

### பாகுகன் - தரு - இராகம் - பைரவி.

ஓங்குதேதுயரமிங்கு வாராய் - உள
முருகிக்கரையலானேன்பாராய் (ஓங்குதே)
எங்களைச்சீரில் - இருத்தியிப்பாரில் —
இக்கெதிவிட்டதேனோ கூறாய். (ஓங்குதே)
மூர்த்துவேருகி - மக்கள்தனியாகி
மன்னனலரவிட்டாய் நேராய். (ஓங்குதே)
காலத்தில்வித்தையை - கற்காமலேசேவை
கயவர்மைந்தன்போற் - செய்தாய்வீராய். (ஓங்குதே)
செங்கோலைத்தாங்கியே - சிறப்புடனோங்கியே
சிறுவனிருப்பதேப்போசீராய். (ஓங்குதே)

(பாகு-வ-ம்.) மனமே நீ இப்படித் தயங்குவதனால் என்னபலனைக் காணப்போகின்றனை. இந்த ஆலோசனைகளெல்லாம் அன்று சூதாடத்துணிந்தபோது என்னுமற்போயின்று உன்புத்தியீனமாயிருக்க இங்கு இப்போது வருந்துவதனால் என்னலாபம், விதர்ப்பத்தரசன் இந்தக் குழந்தைகளை இக்கோலமாய்வைத்திருக்குங்காரண மின்னதென்றுதோன்றவில்லையே, பத்துமாதஞ்சுமந்துபெற்றுப் பாலூட்டி அன்புபாராட்டிவளர்த்ததமயந்தி இங்கிருந்தும் இவர்களை கவனிக்காமலிருப்பதுங்காலமே, சரிதான், அவளை இப்போது மறுவிவாகஞ் செய்துக்கொள்ளப் பூரணவெண்ணமுடையவளாயிருக்கும்போது நமதுபுத்திரர்கள்மீதன்பு நீங்கியே யிருக்குமென்பதற்கும் இவாளிருக்கும் ஸ்திதியே அத்தாக்ஷியாயிருக்கின்றது, நானே இங்கு நடப்பதையுங் கண்டறிந்து அப்பால் யோசிப்போம் ; (தோழி-வ-ம்.) நீ இந்தக் குழந்தைகளைக் கண்டு இவ்விதத் துயரம் பெருக்கியகாரணமென்ன ! வெளியிடுவாய்;(பாகு-வ-ம்)அம்மா நான் இந்தப்பாழும் வயற்றின்கொடுமைக்காக ஒருவருக்காளாயமர்ந்து பலதேசங்களுங் காடுகளுஞ் சுற்றிக்கொண்டிருந்த ஏழுவருஷங்கழித்தேன், என் பெண்சாதி பிள்ளைகளையும்பிரிந்தேன், இந்தப் பாலர்களைப்பார்க்கவும் என்மனதிலென் மக்களுடைய ஞாபகந் தோன்றியதனால் துக்கிக்கலானதேயின்றி வேறல்ல ; (தோழி-வ-ம்.) அப்பா இக்குழந்தைகள் நவகண்டங்களையாண்ட நளச்சக்கிரவர்த்தியின் மைந்தர்கள், இவாளுந் தந்தையைப் பிரிந்து நெடுநாளாய்த் தவிக்கின்றார்கள் இப்பிள்ளைகளினுடைய தாயாராகிய தமயந்திதேவியோ புழுக்கையைப்பார்க்கினுங் கீழ்ப்பட்டபுழுக்கைபோல உண்ணாமலும், உடுத்தாமலும், உறங்காமலும், அந்தப்புருஷன்நாமத்தையே தியானித்துக்கொண்டு எப்போது வருவாரோவென எதிர்பார்த்திருக்கின்றாள், இன்னஞ் சிலநாளில் அவர் வருகாவிடில் இறந்துபோவாளென்பதிற் சிஞ்சித்தேனுஞ்சந்தேகமில்லை, அப்போது இந்தப்பிள்ளைகள் தாயுந்தொகப்பனுமில்லாமலலைந்துபோவார்கள், இவர்களைப்பாதுகாப்பது யாரோ ! எவரோ ! தெரியாது ! இப்படிக்கு பெண்சாதியையும்



பிள்ளைகளையும்விட்டுப்பிரிந்து எங்கேனோ தன் வயிறுவளர்க்கப் போவதுண்டுமா ! போனவர் இவர்களையுங் கூட அழைத்துச் சென்றிருந்தால் ஒருவாறாயிருக்குமன்றோ, இக்குழந்தைகளை மறந்திருக்கும் அந்த நிஷதபதிமனம் என்ன கருங்கல்லா ! இரும்பா! நீ யோசிப்பாய், நானிந்தப்பிள்ளைகளை எவ்வளவோமேன்மையாய்த்தான்பார்க்கின்றேன், இவர்கள் நாளுக்குநாள் தொகப்பன் ஏக்கத்தால் உண்ணாவுண்ணா உருகித், தினந்தினந் தேய்ந்துபோகின்றார்கள், (பாகு-வ-ம்.) ஆ ! விதியே ! நாம் அன்று மந்திரிபிரதானிகள் சொன்னதைக் கேட்டிருந்தால், இக்கெதி வந்தடையாதே இப்போதுஞ்சிந்தையில்லை, சகியனே அலைந்துபோனேன், நாளைக்கே எல்லாந் தெரியுமல்லவா.

---

பாகுகன் - தரு - சுருட்டி - ஆதி.

புண்ணையமனம்புலம்பலானேன் அரியே - நான்
என்னுது மென்னாலானேன் அரியே. (புண்ணைய்)

குறினையாடிச் - சுகமதைத்தோற்றேன் - என்
சொர்னக்கிளிகள் வாடப்பார்த்தேன். (புண்ணைய்)

மாதுமக்களையுமலைந்திடவிட்டேன் - நானு
மாறுவசையிறந்திவிட்டேன். (புண்ணைய்)

வலியவென்றுசே - வதைத்திடச்சேறி - தேடி
வருமோவெனச்சூனாப்பாய்வேறி. (புண்ணைய்)

(தோழி-வ-ம்.) அப்பா? என் இன்னமதிகமாயழுகின்றனை ? நாளைக்கே நல்லகாலம்வரப்போகின்றது, நீ இந்த உத்தியோகத்தைவிட்டுவிட்டு உன் பெண்சாதிபிள்ளைகளிடம் போய் சேருவாய், தனியாய் நீ எவ்வளவு சுகத்திலிருந்தாலுந் தாழ்மையே, பெண்டோடிருப்பது பெருமை, பின்னும் பிறரோடு ஒத்துவாழ்வது பேரு பிரபஞ்சத்தில் எவர்களுஞ் சரியானது, கூழாகினும், கேளுமற் குடும்பத்தோடுகொள்ளுவதே அறிவுடையோர்களினுடையகோட்பாடுபோகுகா;(பாகு-வ-ம்.)சரிதான் அம்மா

சரிதப்பியகாலத்தில் சகலமும் வேறுபடுமென்றமொழியானது இன்றுவிளங்கியது, அப்பா பாலகர்களே! இதோ அமுதம் சொன்றுவீர்கள், (தோழி-வ-ம்.) இதை எடுத்தேகி தமயந்திக்குங்கொடுக்கவேண்டும்; (பாகு-வ-ம்.) அம்மா இதனைங் கொஞ்சங்கொடுக்கின்றேன் கொண்டேகி இக்குழந்தைகள் மறுவேளை கேட்டால் கொடுப்பாயம்மா, (தோழி-வ-ம்.) நல்லதப்பா.

---

(தம-வ-ம்.) அம்மா தோழி என்னவிசேஷம்? (தோழி-வ-ம்) தாயே அப்பாகுகன் இப்பாலகர்களைப்பார்த்து மெத்தவும் ஆறுபோல கண்ணீர்சொரவிட்டழுதான், ஏனென்றேன், தான் தன் குழந்தைகளைப்பிரிந்து ஏழுறைவருடமென்றுசொல்லி இந்தபாகத்தையுங் கொடுத்தான். (தம-வ-ம்.) எதோ, கொஞ்சமுண்டுபார்ப்பேன், சரிதான், இவரே நமது பிராணநாதர், இனி நாமே சென்று வணங்கி அழைத்துவரவேண்டியதே நமது கடமை, பாங்கி எனக்கு அந்தப்பாகுகனிருக்குமிடங் காட்டுவாயா? (தோழி-வ-ம்.) நல்லது வாருந் தாயே; (பாகு-வ-ம்.) அதோ! வருபவள் தமயந்தியல்லவா! நானோ மறுவிவாகமென ஓலை எழுதியகருத்து இப்போதுணரலானேம், நம்மை இங்கு வரச்செய்யவேண்டி பெடுத்தமுயர்ச்சியேயாகும்; நாமிவளைப் பலவாறு சிந்தித்தாடியதெல்லாம் பாவமேயின்றி வேறில்லை, அவ்விதச் செய்கைக்கு உண்மையா யுடன்பட்டவளாயிருந்தால், இக்கோலமாயிராள், இவள் கூந்தலிலிருக்கும் அழுக்கைப் போக்க ஆறுவாரஞ்செல்லும், அன்றுதொட்ட வஸ்திரத்தோடிருக்கின்றாள், நாமவளை இனி வெறுத்துப் பேசுவோமாகில் வினைக்கிடமாகும், வரட்டும்; (தோழி-வ-ம்.) அதோ! ஆங்கு குந்தி முழந்தாள்களின்மீது சிரசையிட்டுக்கொண்டிருப்பவன்தான் அம்மணி; (தம-வ-ம்.) அப்பா மகனே இந்திரசேனா! அடி அம்மா புஷ்பாஞ்சலி! என்பின் வருவீர்கள், ஆ! எனது நாதாயே!

---



தமயந்தி - தரு - நீலாம்புரி - ஆதி.

ஐயையோ எப்பிறப்பில்
அமைத்தபாரியோவெந்தன்
அரசருறுகுலையத் தானே. (ஐயை)

பொய்யோவென்னெறிநோன்பு
போனதோசத்தியமாண்டு
புருடர்க்கித்துயர்வரத் தானே. (ஐயை)

சந்திரபிம்பத்தைமாற்றும்
சரசன்முகத்தின்காந்தி
சகியனல் மழுங்கிட லாச்சே. (ஐயை)

இந்தகெதிபூணவோ
எனைமணந்ததுமெந்தன்
இறையேவுமதுபுகழ் போச்சே. (ஐயை)

தன்னைப்பணிபவளைத்
தானும்பணிந்திட நாதா
தலையிலெழுதினதோ பாவி. (ஐயை)

என்னைவதைக்குக்காலன்
இன்னம்வருகாதெந்தன்
எசாவெவர்சாபமோ தாவி. (ஐயை)

(தம-வ-ம்.) ஆ! என் பிராணநாதா! தேவாதிதேவர்கள் ஆசிகூர தபோதனர்கள் வாழ்த்த மன்னுதிமன்னர்கள் மலரடியைத் தழுவ வீற்றிருந்தசுவாமி? உமக்கும் இவ்விதியெழுத அப்பாவி எப்படித்துணிந்தான், அடியாளைப்பிரிந்து ஒண்டியாய் உதவியில்லாமல் என்னென்னவிபத்துகளை அனுபவித்தீரோ, ஒரு சிற்றரசனுக்குந் தேர்ப்பாகனுயிருக்க எக்காலத்திற்செய்தவினையோ, அல்லது இந்த அரும்பாவியாகிய அடியாளைக் கைப்பிடித்ததாலவந்ததுன்பமோ தேவே.

---

தமயந்தி - தரு - செஞ்சுருட்டி - ஆதி.

ஐயா துரையேஇன்று - பார்த்தேனே - என்
ஆவியினிலேக்கக் - காத்தேனே. (ஐயா)

பொய்யாமொழியுள்ளோரே பொருமைக்கடலே எந்தன்
பூஜாபலன்பலிக்கப் பொருந்தியதுவோ உந்தன்
கையாலெந்தனைவீசிக் களிப்புடன்சென்றாமலே
காட்டிற்பிரிந்தவண்ணம் சுழலுமெர்ளியாடலே

காதகியோ - கெட்ட - பாதகியே - குண
தோதகியோ-துட்ட-சூதகியோ-சொல்லும்(ஐயா)

(தம-வ-ம்.) பிராணநாதா ! நான்கூட விருந்தது உமக்குத்தலைச் சுமையாயிருந்ததோ! என்னைப்பிரிந்தபின் என்னசுகத்தையடைந்தீர், அடியாளிருந்தால் அரசே உமக்கு இவ்விதத்துன்பம்வருமா, தனியாய் என்னென்ன எண்ணி யேக்கங்கொண்டீரோ.

தமயந்தி - விருத்தம்.

அன்றுமைக்கோரிவெருநோன்பமைத்து
அடியாளுமாலையிட்டஅகங்குளிர்ந்து
கன்றுளபமலர்மார்பனருளடைந்து
நானிரண்டுபுத்திரனாயின்றெடுத்து
என்றுமெனைப்பிரியேனெனவாக்களித்து
இருந்தவரேவ்வெவாறுமனந்துணிந்து
சென்றிடவுங்காலெடுத்தீர்காட்டில்நொந்து
செம்மலேயெனையலையவிட்டசெதி.

இராகம் - செஞ்சுருட்டி - ஏகதாளம்.

இன்றடியாளுக்கு - யெதித்துரைசெய்திடும்
இறைவரேயென்தலை - கொய்திடும் - கொய்திடும். (இன்)

நன்றலயிச்சென்மம் - நாயினுங்கெட்டது
நான்பட்டபாடும்பஞ்சு - தான்படமாட்டாது. (இன்)

சோகசுளமானே - சுந்தரமேனியும்
சுட்டகரிபோலாக - வட்டதென்வினையும். (இன்)

உமைக்காணுமட்டுமென் - உயிரைவைத்திருந்தேன்
ஒப்பித்துவிட்டேனினி-இப்போச்சாகத்துணிந்தேன்.()



(பாகு-வ-ம்.) மாதே நீயார் ? என்னைக் கண்டு இவ்விதமாய் இல்லாததெல்லாஞ்சொல்லிப் புலம்புங்காரணமென்ன? உன்னை நோக்கிலோ, இராஜகுமாரத்தியைப்போலிருக்கின்றது, உன்பெயரென்ன? உன் தாய்தந்தையர்யாவர்? உன் கணவன்யார்? இந்தப்பிள்ளைகள்யார் ? சொல்லுவாய்; (தம-வ-ம்.) கேளுஞ் சுவாமி.

தமயந்தி - விருத்தம்.

ஆரொளிநாளேசிடகபுடமெய்யன்றுகைதொட்டவனென்பேர்
கூறுவரேதமயந்தியென்றிவ்விளக்கொற்றவரளித்தசுப்புதல்வர்
சீருளவரசைச்குகினநிறுத்தச்செம்மலுமயோத்திபனாயப்
பேருறவிருக்கவறிந்துநான்செய்தபிழையதைச்சொல்லுவேன் [கேளீர்.

(தம-வ-ம்.) சுவாமி ? நான் கோகிலாதேவி கெர்ப்பத்தில் வீமராஜ னருந்தவத்தாற் பிறந்தவள், என்பெயர் தமயந்தி, திடதசக்கிரவர்த்தியாகிய நளமகாராஜனைக் கைப்பிடித்தவள், இவர்கள் வரருளா லடியாளடைந்த புத்திரர்கள், நான் பாவிசெய்த பாவத்தால் எந்நாயகர் புஷ்கரனுடன் சூதாடி அரசையிழந்து காட்டி லடியாள் மூதேவியின் கைவசமாகி யுறங்குங்காலையில், நான்படுந்துயரத்தைப் பார்க்க மனந்தாளாமல் பிரிந்துபோயனேகதுன்பங்களை அநுபவித்து அயோத்தியனிடம் பாகுகராகவமர்ந்திருப்பதை அறிந்தபின் நான் செய்த தப்பிதத்தை வெளியிடவேண்டேனும்.

தமயந்தி - விருத்தம்.

எனக்குமறுவிவாகமெனவோலையொன்று
எழுதிவைத்தென்தந்தையினாலயோத்தியாள்வோன்
தனக்கனுப்பச்செயிலதனைக்காணிலெந்தன்
தார்வேந்தர்கொதிப்படைந்துரதத்தையோட்டி
மனக்குறையாய்வருவரெனமதித்தேனிதை
மன்னிக்கதக்கதன்றிமறுக்கிலென்னைக்.

கனக்குறைவென்றுபுமால்வாலோடுங்கிக்
கண்டிக்கிந்திரமதனைக்கடைத்தேறுவேனே.

(தம-வ-ம்.) என் நாயகருயமாயிருப்பவரழைத்தால் வரத் தடைபுரிவாரெனமதித்து எனக்கு மறுவிவாகமென ஒரு ஓலை யெழுதி அயோத்திபனுக்குமாத்திர மனுப்பினால், என் துரை கோபமீறி யிவ்விடம் ரதத்தை நடாத்திவந்தே காணலாம், கண்டு அவர் பாதத்தைப் பூணலாம், நான் செய்வித்ததை மன்னிக்க வேண்டலாம், மறுக்கில் அவர் காந்தா விரந்து கடைத்தேர லாமென அடியாள்செய்த குற்றமொன்றேயின்றி வேறில்லை;

---

## பாகுகன் - விருத்தம்.

உணவதோரிரட்டிப்பாகும் ஊக்கமுநாற்பங்காகும்
தலைஞாமதிகமாகும் தாளாண்மையறுபங்காகும்
பிணக்குமைம்பங்காகும் பிடிவாதமெழுபங்காகும்
புணர்ச்சியுமெண்பங்காகும் பூவையர்தமக்குமானே.

(பாகு-வ-ம்.) இது நீதிநூல் வாக்கியமானதால், மாதே? நீ செய்ததும் நல்லகாரியமே, உன்னைக் காட்டில் வஞ்சித்துப்போன வன் மறுபடியும் வாருனெனவறிந்தும் உன்னுடைய சுகத்தைக் குறித்தும் செய்த வேற்பாடு மிகவும் நலமே, நானும் என் பெ ண்சாதிபிள்ளைகளை விட்டுப் பிரிந்து நெடுநாளாயிற்று, அவ ளுமிப்படிக்கே செய்திருப்பாளென நம்புகின்றேன், சரிதான், நீ போவாய்; (தம-வ-ம்.) நான் சுகத்தைக்கோரினவளாயிருந்திரு ப்பேனாகில், ஐம்பத்தாறுதேசத்தாசர்களுக்கு மணவோலைபோக கியிரேனோ? என் துரையைத்தேட நானனுப்பிய வேதியர்கள் ரிது பர்னன் கொலுவிலாடியவார்த்தைகளால் வருந்தியவர்களுக்குத் தான் பிரிந்த வெண்ணத்தை வெளியிட்ட புண்ணியவந்தனை அழைக்கச்செய்ததேயின்றி வேறில்லை; (பாகு-வ-ம்.) அப்படி ச்செய்ததால் உன் நாயகனைக் கண்டனையா? (தம-வ-ம்.) கண் டேன்! கண்டேன்! (பாகு-வ-ம்.) அவர் எங்கிருக்கின்றார்!



(ரிது-வ-ம்.) ஆ! இதென்ன புதுமையாயிருக்கின்றது, நாம் நா டிவந்த தமயந்தி யிக்கோலமாய்த் தன் குழந்தைகளை யழைத் துக்கொண்டு தோழிமாருடன்வந்து நமது பாகுகனை வணங்கி வருந்திநிற்கின்றாள், இப்பாகுகன் நளனிடத்தி லிருந்தவனாத லால் அக்காலத்தில் இவ்விருவருக்கும் ஏதோ தேகசம்பந்தமி ருந்ததுபோற் காணுகின்றது, பெண்களை நம்பப்போகாதெ ன்பது உண்மையே இப்பேர்க்கொற்றவனை நாம் நாடிவந்ததும் நமது மூடபுத்தியே, இவளை நாம் நமது தேசங் கொண்டேகு வோமானால் நாடு கெட்டுப்போகும் என்பதற் கொருதடையு மில்லை, இனி நாமிங்கிருக்கப்போகாது, இவ்வித துற்செய்கை இவளிடமிருந்தாலன்றோ, அந்த சத்தியவானாகியநளனைத் தரி த்திரமென்பது வந்தடைந்தது, எப்படிவந்திருக்கும் யோசி ப்போம் சரி.

---

## ரிதுபர்னன் - விருத்தம்.

பாவைசெய்பாவங்கொண்ட பத்தாவைச்சாரும்நல்ல
பூவையேகுடிகள்தோஷம் பூபரன்தன்னைச்சேரும்
காவலன்பாவம்வேதியர்க் கணுகிடுஞ்சீடன்செய்யும்
பாவமுங்குருவிற்கென்றே பகருதேநீதிநூலே.

(ரிது-வ-ம்.) பெண்சாதிசெய்தபாவம் பத்தாவிற்கென்றும், குடிகள்செய்வது கொற்றவனுக்கென்றும், கொற்றவனியற்று வது வேதியருக்கென்றுஞ் சீடன்செய்யுமக்கிரமங் குருவிற்கெ ன்றும் நீதி பேசுவதால், நளன் தரித்திரத்தைத் தாங்கி இவளை அவ்வேதியர்கள்சொன்னவாறு காட்டில்விட்டுப்போயினன், கா மப்போது அந்த நளனைப் பலவாறு நிந்தித்தாடியது, தோஷமே யல்லவா! இம்மாது யிந்தஸ்திதியிலு மிரவியைப்போற்ஜொலிக் கின்றாளே, இவளழகும் வடிவும் எவர்க்குண்டு, இவள் சிவிக் கோதி சிரா யுதித்தவளாகில் இவளை பார்த்தகண்கள் பூத்துப் போகுமல்லவா, இப்பேர்க்கொற்ற ரூபசுந்தரியை நளன். மறந் தது ஆச்சரியமே! இவனுடைய கெட்டசெய்கையைக் கன்

னுப்பூம் சுசுத்தை நீக்கி சுத்தி அறங்கச்செய்து சொல்லாமற் போய்விட்டான்போற் காணுகின்றது, அவன் மனந்துணிந்து போனதும் ஆச்சரியமே, நாமானுல் பிரியமாட்டோமல்லவா, அதிலும் சூரியசந்திரர்களைப்போல் ஒரு ஆண் ஒருபெண் இவ்விரண்டுபுத்திரர்களையும் பிரிந்தானென்றோ, மக்களையின்ற மாதை மறக்க மனம்வந்ததல்லவா? அம்மன்னனுக்கு, எப்படிவந்திருக்கும் கவனிப்போம் சரிதான்.

ரிதுபர்ணன்-விருத்தம்.

கன்னியர்தானமாயுங் கனகனுபரணத்தோடு
மின்னிடைமகளிரோடு மினிப்புளமொழிகளோடும்
பன்னரும்பதிநான்ற பாவையாயிருந்திட்டாலும்
அன்னியன்தொடவாறிலவளை விட்டகலல்நன்றே.

(ரிது-வ-ம்.) நீதிசாஸ்திரத்தில், கன்னியாதானமாக கொண்ட ஐசுவரியத்துடன் வந்தவளாயுமிருபவதியாயுஞ் சோடசமக்களைப் பெற்றவளாயிருக்கினு மன்னியபுருடனால் தீண்டப்பட்டா ளுடனே நீக்கத்தக்கதென சொல்லியிருப்பதை யுணர்ந்த சக்கிரவர்த்தியானதால் வெறுத்துச் சென்றான், இக் கொடியகுணம்போன்ற இவளை வாளினால் வீசியெறியாமற்போனது அம்மன்னன்மீது பெருங் குற்றமெனவேண்டும், இன்னமிவள் நடந்துவதையுமறைந்திருந்தபடி கவனித்து அப்பால் வீமராஜனுடைய ஆண்மையை யிறக்கிச் செல்வோம், (தம-வ-ம்.) துணையே,என்னை இன்னமுமா சோதிக்கின்றீர்.

தமயந்தி - விருத்தம்.

அன்னமதையடவிதனிற்கண்டிப்பாவி
அடிபணியவஸ்தரமீதின்மேற்போட
என்னரசேயெடுத்தேகக்கண்டநானு
மித்துணியிற்பாதிகிழித்தீர்ந்தேனீரும்
தன்னிடையில்தரித்திருப்பதொன்றேயிந்தத்
தைதனுக்குப்பெருத்தநேரத்தாக்கியாக
இன்னிலையிற்கண்டதொன்றேயென்னைத்தொட்ட
இறைவரெனப்போதாதோயியம்புவீரே.



(தம-வ-ம்.) சுவாமி நாமிருவருங் காட்டில்வரும்போது நான் கண்ட அன்னத்தைப்பிடித்துத் தரும்படிக் கழியாள் வேண்ட,நீர் தன்பேரில் வஸ்திரத்தைப்போட வது சகிகோளால் எடுத்தேக,உமக்கு என்னுடைய வித்தப்புடவையிற் பாதியைக்கிழித்துக் கொடுத்ததை நீர் இடையிலணிந்திருப்பதொன்றே நீரே என்கணவரென காட்டுகின்றதே! பாதம் பணிந்தேன்,பக்தாவே; (தேவர்கள் வசனம்.) அப்பா நளச்சக்கிரவர்த்தியே! நீயே யுத்தமன், தமயந்தியே சத்தியவந்தி,. உங்களிருவரைப்போல் நெறியுள்ளோரைக் காண்பது அரிது, இனிச் சுகமாய் தேசமடைந்து புஷ்கரனை செயித்து எப்போதும்போலக் குடிகளைக் காத்து பிறகு எங்களிடம்வருவீர்கள் வாழி ; (நள-வ-ம்,) தேவர்களே அடியேனை ஒருபொருட்டா யெண்ணி இங்குவந்த தங்கள் நன்மைக்கு நான் மாறு செய்யத்தக்கது மண்ணிலுண்டா ? (தேவர்கள் வசனம்.). சக்கிரவர்த்தியே,

தேவர்கள் - விருத்தம்.

சந்திரனிரவிற்காய்வன் சார்பகல்ரவிப்பிரகாசம்
தட்டிடுசத்யன்கீர்த்தி தலமூன்றுஞ்ஜொலித்துவீசும்
எந்திழைகற்பின்வாசம் ஈரேழுவுலகுமொய்க்கும்
வந்தநற்சுதனைல்மன்னு வளர்ந்திடுங்குலமுந்தானே.

(தே-வ-ம்.) ஆனதால் நீயோ சத்தியன், உன்தேவியோ வுத்தமபத்தினி,நாங்களுங்களை யின்னிலையிற்கண்டு உங்கள் விருத்தாந்தங்களைக்கேட்டு அதிக ஆனந்தங்கொண்டோம், வாழி,வேந்தே ; (நள-வ-ம்.)எல்லாம் தங்களுடைய அருட்பார்வையின்றி வேறில்லை, போற்றி சுவாமிகளே ; அடி மாதே! நீ சதா வாழி; எழுந்திருப்பாயடி கிளியே,

நளமகாராஜன் தரு-தேசிகதோடி-ரூபகம்மிசரம்.

எனழுகிறாய் - மாதே நீ - ஏனழுகிறாய்.
நான்மறையுணர்ந்தோனை
நாதன்செய்த - நிதேமானே. (என)

அன்றுதேவருன்னைக் கோரி
அனுப்பத்தூது என்னை மீறி
நன்றெனவுரைத்தருஞ் சீறி
நடித்ததிந்த-மிடிக்கோ தேனே. (என)

காட்டிலுன்னைவிட்டுப் பாவி
கசடன்போகவெழுந்து தேவி
எட்டியில்லாத்துயர மேவி
ஏங்கினையோ - தேங்கி மானே. (என)

என்னைத்தொட்டுக்கண்ட சுகம்
இதுவன்றிவேறுண்டோ இகம்
தன்னில்தோஷிநானே ஜெகம்
தானறியும் - தோஷிநானே. (என)

பாவிநானேயாகும் எந்தன்
பாவைநீவுந்தமி உந்தன்
ஆவிபோக்கச்சொன்னதெந்தன்
அன்மையெனக்கடுக்குந் தேனே. (என)

---

நளமகாராஜன் - விருத்தம்.

அடவிதனிலுனை அலையவிட்டதுரோகி
அன்னமேமக்களைவிட்டகன்றதுரோகி
படிமிசையிற்பழிக்கஞ்சாபாவத்துரோகி
பத்தினிக்கேசகிக்கொணாதபாழுந்துரோகி
கிடதனைநீவரவிட்டதறியர்துரோகி
கினைவழிந்தவுனையெயின்கித்ததுரோகி
மனமிரக்கமிலாத்துரோகிமாதுரோகியென்னை
மாதேநீவதைக்கினுமைமிழுங்காணே.

(நள-வ-ம்.) மாதே உன்னை, யெட்டிலெழுதாத துன்பங்களை அநுபவிக்கக் காட்டில்விட்டுப்போனதுமின்றி, நானிருக்கும்வி



டமறிந்து என்னை வரவழைக்க நீமுயன்றதை உணராமற் பல வாறுன்னை யிகழ்ந்துணிந்த பாதகனை மரிக்கச் செய்வையாகில் என்னுளங் குளிருமடி கோமதமே. (தம-வ-ம்.) ஆ! என் பிராணநாதா ? ஏனிப்படிக் குறைக்கத்துணிந்தீர்.

---

தமயந்தி - விருத்தம்.

கொண்டவனைக்கனவிலுமேபலவாறுகக்
கோபிக்கத்தகுமவனைக்கொல்லப்போகும்
தெண்டனைகள்செயிலொப்புஞ்செகமும்நாதா
திகழ்பதியைவிட்டாலுஞ்சிறுமைமெத்த
கண்டவர்களேசுமொழியுரைசெய்தாலுங்
காதலிக்கேகனங்குறையாதெனநூலோத
எண்டிசையும்புகழ்வேந்தேதேகமிவ்வா
றிருக்கும்வகையெடுத்துரைப்பீரினிவாய்த்தானே.

(தம-வ-ம்.) பிராணநாதா? கட்டிக்கொண்டவன் காதலியை யென்னகெதி செய்தபோதிலும் அவளுக்கு கனங் குறைவுபட மாட்டாது, அவள் வெறுப்பாளாகில் எமன் சீறிவருவான், என்றுமீளாத நரகம்வந்தெய்தும், தங்கள் திருமேனி யிவ்வாறானவகை தெரியச்சொல்லவேண்டுஞ் சுவாமி ? (நள-வ-ம்.) அடிமானே? தமயந்தி! உன்னை நான் பிரிந்துபோகுங்காலை காட்டுத்தியிலகப்பட்டுவருந்துங் கார்க்கோடகனெனுஞ்சர்ப்பம் என்னை வேண்ட, அதை நான் அக்கினியிலிருந்து நீக்க, அப்பாம்பு சீறி என்னைக் கொத்த இந்த மாறுருபமடைந்தேன், என் காலத்தையும் ஒருவருக்கும் இன்னானெனத்தெரியாமலேகழித்தேன், நான் வேண்டும்போது இந்த மாறுமேனியை மாற்றுவதாக வப்பாம்பு வாக்களித்துச் சென்றதடி மடமானே ; (ரிது-வ-ம்.) இனி நாமிங்கிருப்பதடாது, கொலுமண்டபமடைந்து வீமராஜருக் கறிவிப்போம், வந்தனம் மகாராஜனே ! நான் பாவியிலுங் கொடியபாவியாகினேன் ; (வீம-வ-ம்.) அதெப்படி யரசே ? (ரிது-வ-ம்.) உருமாறியிருந்ததால் இன்னாரெனவறியாமல் உமது மருமகனாகிய நளச்சக்கிரவர்த்தியை பணியாளைப்போல பாராட்டி

பலவாறுடினேன், இப்போது அவரும் தேவரீர் குமாரத்தியாரும் வார்த்தை யாடியதையும் தேவர்கள் மகிழ்ந்துரைத்து மலர் தூவி சென்றதையுங்கண்டு கலங்கி யிங்கோடிவந்தேன், என்னைக் காப்பது உமதுகடன் மகாராஜனே; (வீம - வ - ம்.) அப்படியா! நீர் ஒன்றுக்கும் சிந்தைசெய்யவேண்டாம், அவர் நீர் செய்த நன்மையைக் கொண்டாடுவாரின்றிக் கோவிக்கார், இதோ நளனவரை இங்கு வரவழைக்கின்றேன். (தம - வ - ம்.) பிராணநாதா? இனி இங்கிருப்பதடாது, கொஞ்சநாவடியடைந்து என் தந்தையிடம் விடைப்பெற்று நமது தேசம் போவோம் வாரும் துரையே; (நள - வ - ம்.) அவ்வாறே செய்வேனடி சொர்ணமே.

---

### நளமகாராஜன் - விருத்தம்.

அருமையுடனென்னைமணந்தமாதுதன்னை
யடவிதனிலலையவிட்டபாவிநானே
பெருமைதனக்கொவ்வாதசூதையாடிப்
பெரும்பழியைச்சுமந்தவொருதோஷிநானே
வரும்வினையையறியாமற்பலவாறாக
வஞ்சிதனைத்துயர்வித்தவம்பனானே
கருமியிலுமாகருமியாமாவுந்தன்
காலுதையால்மரிக்கவந்தேன்கழலைபோற்றி.

(நள-வ-ம்.) போற்றி என் பெருமையுள்ள மாமா! நான் மகாபாவி, என்னை உமது திருப்பாதத்தாலுதைத்துப் பவித்திரனாகச் செய்யவேண்டும் மாமாவே; (வீ-வ-ம்.) என்னருமையுள்ள மருகனே நீரிப்படிக் கலங்கப்போமா.

---

### வீமராஜன் - விருத்தம்.

சகியனுடைகைப்பட்டுச்சங்கரனுமன்று
சாம்பலதைமேற்பூசிச்சர்ப்பம்பூண்டான்
இனிமையுளவைகுந்தன்பாம்பணையின்மீது
இருக்கலுற்றனையத்தோடிந்திரன்தானும்



சனியவன்றுசிறையிருந்தான்பிரமன்கூட
காவலுற்றான்தேவகுருகலங்கினின்றான்
மனிதர்தமையவனடைந்தால்வெகுவாய்ச்செய்ய
மறப்பதின்றுதானிதுவெல்லாமாயைதானே.

(வீம-வ-ம்.) கேளும்மருகனே? சகியனால் சாம்பசிவன் சாம்பலணிந்தான், விஷ்ணு சர்ப்பத்தின்மீது சயனித்தான், பிரமன் சிறையிருந்தான், இந்திரன் இராக்கதர்காவலிலிருந்தான், தேவகுருவான பிரகஸ்பதி கட்டியடிக்கக் கண்கலங்கியழுதானிப்படியிருக்க உம்மை இவ்வளவோடு அவன்விட்டதே நீர்செய்தபெருமை, இந்த சிம்மாசனத்திலிருப்பீர் அரசே; (நள-வ-ம்.) நல்லதுமாமா, இதுசமயம் அப்பா கார்க்கோடகனே! நீ எனக்கன்று கொடுத்தவாக்கை நிறைவேற்றுங்காலமீதாகும் நேசா; (ரிது-வ-ம்) சுவாமி நளச்சக்கிரவர்த்தியே! தாங்களுருமாறியிருந்ததால் அடியேன் அறியாமல் பலவாறுபேசிய இழிவானமொழிகளை மன்னித்து என் பாவத்துடைய இந்தவரளால் என்னை விசனிராகிலடியேன் பவித்திரனாகி பரமபதஞ் சேருவேன் மகாராஜனே," (நள-வ-ம்.) கேளும் ரிதுபர்ணமகாராஜனே! நீர் எனக்கு சகியனால் வந்தடைந்த சிறுமைகாலத்தில் என்னை சீராட்டிய செம்மலே! உம்மை நான் தந்தையெனப் பாவித்திருக்கின்றேன், வந்தனம், நீர் அந்த திவ்ய ஆசனத்தில் வீற்றிருப்பீர் வேந்தே. (ரிது-வ-ம்.) சந்தோஷஞ் மகாராஜனே! (வீம-வ-ம்.) மருகனே? நீர் திவ்ய வடிபாவனைகளை யணிந்து, உமது பத்தினியையும் வெகுவஸ்திரமணியச்செய்தால் என்கண்கள் நெடுநாளாகக்கொண்டிருக்குங் கவலை நீங்கு மருகனே; (நள-வ-ம்.) நல்லது என் மாமாவே. (இந் - வ - ம்.) ஆ! என்னையின்ற பிதாவே, நான் பாவி, பிறந்தபலனைக் கண்டேனோ.

---

### இந்திரசேனன் - தரு - சங்கராபரணம் - ரூபகம்.

தந்தையேவந்தனந்தான் - இன்றுட்சென்று
தான்வந்தீர்பார்க்கவேதான். (தந்)

எந்தையே எங்களை - எவ்வாறு மறந்திரோ
இந்தனை நாட்டுப்பின் - னிரங்கிமனம் வந்திரோ. (தந்)

பெத்தமெந்தனக்குத்தியே - தந்தையென
மெய்வித்தேன் உடல்வத்தியே
சித்தமெப்படியாகிச் - செந்தீரொன்றனைகிக
சத்தியம்பிசகாக்கிச - சத்குணாதிபே - யென். (தந்)

## புஷ்பாஞ்சலி - தரு - சங்கராபரணம் - ரூபகம்.

அன்னையைக்கரங்கூடி - துயரத்தால்
ஐயோ கண்ணீர் ஒழுக. (தந்)

புன்னறுகிப்பலவாறு - புலம்பினேயக்கிரு
என்றுறுமென்னிக்கிரு-இல்லார்போலாடியென். (தந்)

தாயுஞ்சோகிப்பியே - அன்னமின்றித்
தவிக்கவுடல்சோர்பியே
காயமிருக்கச்செய்தான் - காயர்ம்புமேனியென்
சேயர்நிமக்குத்தான் - செய்தேனச்சரணமென். (தந்)

(நள-வ-ம்.) ஆ! என் கட்டியமுதே கனுவில்லாதகரும்பே எல்லா கஷ்டகாலமுந் தொலைந்தது, இனி உங்களைவிட்டுப் பிரியேன் பிரியேனென்னுயிர்களே, மாதே! தமயந்தி! இனி நமது தேசம்போய் புஷ்கரனை நீக்கத்தக்க முயர்ச்சி செய்யவேண்டும், அதற்கு உனக்குத் தோற்றும் யோசனையைச் சொல்வாயடி ஆவிஇயர்ந்த அன்னமே. (தம-வ-ம்.) பிராணநாதா! முன்பு தங்களுடன் மாயச்சூதாடி அரசும் அதிலடங்கிய நால்வகைச்சேனையுங் கைகொண்டிருப்பதால்நீரிங்கிருந்து ராஜாவங்களைக் கொண்டுபோய் யுத்தம்புரிந்தால் வேட்டகத்தாரால் வெற்றியடைந்தீரென உலகம் ஏசும், ஆனதால் அவனிடஞ்சென்று மறுபடியுஞ் சொக்கட்டாடும்படிக் கழறியும், பந்தயமென்றால் அடியாளை விடும், ஆட்டம் நமக்கே செயமாக அந்த ஹரி பரந்தாமன் அருள்செய்வான் அரசே; (நள-வ-ம்.) நல்லயோசனை அப்படியேசெய்வேனடி அமுதப்பசுங்கிளியே,



அமுதமயிலாநன்னெஞ்சியே, (மந்-வ-ம்.) போற்றி என்னுடைய தங்கள் திருவடியைக்காணுமல் என் மனந் தாமரையிலையின் தண்ணீரைப்போல் தவித்திருந்தது, இன்று தடாகத்திலே போலானேன் அரசே; (நள-வ-ம்.) வாழியப்பா மந்திரி நீயுமிங்ஙனமிருந்ததற்காக மிகுதி சந்தோஷமடைந்தேனப்பா. (சேனு-வ-ம்.) சுவாமி? சேனாதிபதி வந்தனஞ்செய்கின்றேன் அரசே; (நள-வ-ம்.) அப்பா சேனாதிபதியே! நீயு மிங்குதானிருந்தனையோ? (சேனு-வ-ம்.) அரசே! அம்மணி யவர்கள் குழந்தைகளுடன் என்னை யிருக்கும்படிக்கு ஆக்கினையிட்டனுப்பியவாறு இங்கடியேன் தங்கள் திருப்பாதத்தை என்று காண்பேனென, தங்கள் திருநாமத்தையே தியானித்துக்கொண்டிருந்தேன் தேவே; (நள-வ-ம்.) சந்தோஷமப்பா, நாளை நாம் கிட்டப்போகவேண்டும், (சே-வ-ம்.) மகாபாக்கியஞ் சுவாமி.

(நள-வ-ம்.) வந்தனம் மாமா! நான் மீட்டதேசம்போக வெண்ணமுடையவனாயிருக்கின்றேன், விடைதரவேண்டும் தயர்கிறீயே? (வீம-வ-ம்.) அரசே! நீர் புஷ்கரனுக்குத் தோற்றநாட்டில் இப்போது போவதடுக்குமா? அவன் அவமதிக்கில் அதிகவருத்தத்தைக்கொடுக்குமேயின்றிவேறல்ல; (நள-வ-ம்.) மாமா! அவ்வாறு நீர் யெதாக்கும் சந்தேகங்கொள்ளப்போகா, அவனுக்குவியரகி எல்லைப் பலவாறு துன்பப்படுத்திய சுகிபகவான் எனக்கஞ்சிப்பயந்து வணங்கி வாழ்த்திச்சென்றார், இனிப் புஷ்கரனுக்கு அப்ஜெயமேயின்றி எக்காலத்திலும் ஜெயிப்பையடையமாட்டான் மாமா; (வீம-வ-ம்.) ஆனால் சந்தோஷமாகப் போய்வாரும் மருகரே, அப்பா மந்திரி என்று மருகர் தங்கே சம்போவதனால் ரதம் சேனைமுதலானவைகளை சீக்கிரஞ் சித்தப்படுத்துவாய்; (மந்-வ-ம்.) நல்லது மகாராஜனே. (நள-வ-ம்.) மாதே தமயந்தி, மகனே இந்திரசேனா, மகளே புஷ்பாஞ்சலி, ரதத்திலேறுவீர்கள், அப்பாமந்திரி! நீயும் ஒருதேரிலேறுவாய், அப்பா, சேனாதிபதியே! நீ குதிரைமீதேறி முன்னடப்பாய், நால்

லோரும் கேட்டுச் சந்தோஷிக்கும்படி மங்களபேரி அறையச் செய்வாய், (மந்-வ-ம்.) நல்லது சுவாமி. (நள-வ-ம்.) மாதே ! இதோ நாம் கிடைக்கவந்தோம், நீயுங் குழந்தைகளும், தாதியார் முதலானவர்களுடன் எனது தந்தையால் நிர்மாணிக்கப்பட்ட விப்பூஞ்சோலையில் தங்குவீர்கள், நானிவ்வூர் புஷ்கரனுடைய கருத்தை யறிந்துவருகின்றேன், அவன் ஏதாகிலும் ஏறுமாறாகப் பேசுவானாகில்,

---

### நளமகாராஜன் - விருத்தம்.

அன்னமே வில்வளைத்து அருகணிப்பூட்டியம்பைச்
சொர்ணமேவிடுத்தேயந்தச் சூதனின்சிரத்தைக்கொய்து
நன்னலர்வாழுமந்த நரகத்திலாழ்த்திப்பார்த்தே
உன்னிடம்வருகவோடி உத்தமிவிடையீவாயே.

(நள-வ-ம்.) மாதே தமயந்தி! அவன் தடுத்தாடில் வாயைமூடா தமுன்னம் என்கணைக்கு அவனை யிரைசெய்து உன்னிடம்வருகின்றேன் எனக்கு விடைதருவாயடி மயிலே. (தம-வ-ம்.) கேளும் என் பிராணநாதா.

---

### தமயந்தி - விருத்தம்.

சூதினாலும்மைவென்ற சூதனைச்சூதையாடிப்
போதாரீர்கெலித்தாலிந்தப் புவிதனிலதிகீர்த்தி
நீதியேபோர்விளைத்தால் நிந்தனைவந்துசாரும்
ஓதினேனென்னையிட்டு ஓராட்டமாடுவீரே.

(தம-வ-ம்.) பிராணநாதா! சூதாடி நம்மைக் கெலித்தவனை அதே சூதினால் ஜெயிப்பதே பெருமையைத்தரும், வில்லாண்மையில் அப்பனுதி தங்கள்முன் எதிர்க்கத்தக்கவல்லவனே கேட்பவர்கள் ஊர்க்குருவியின்மீது நாராயணாஸ்திரம்விட்டதுபோல் நளச்சக்கிரவர்த்தி புஷ்கரன்மீது அம்பெய்தானென பேசவிடமாரும், அடியாளைப் பந்தயமாகக்கட்டி ஓராட்டம்ஆடில் ஜெயம் அடைய ஏதுதடையுமிராது என்கோவே ; (நள-வ-ம்.) அவ்வா



றேசெய்கிறேனடி என் ஆவியாயுயர்ந்த அன்னமே; (தம-வ-ம்.) போய்வாரும் பிராணநாதா.

---

### புஷ்கரன் - கொலு.

(கட்-வ-ம்.) போற்றி புஷ்கர அரசே! தங்களைநாடி இவ்வண்டத்தையாண்ட நளச்சக்கிரவர்த்தி அதி ஆடம்பரத்தோடு வருகின்றார் வேந்தே ; (புஷ்-வ-ம்.) அப்படியா ? ஏதுகாரணமோ! எல்லா மிங்குவந்தபின் தெரியுமன்றோ ! நாம் எதிர்சென்றழைக்கத்தக்கஅவசியமில்லை; (மந்-வ-ம்.) ஆம்ஆம் வேந்தே. (நள-வ-ம்) புஷ்கரா? நீ சுகந்தானா? (புஷ்-வ-ம்.) ஆ! இதென்ன? இவன் ஆயுதபாணியாகி வந்திருப்பதோடு கடூரமான வாக்கும் பிறந்தமையால் நாம் ஏதாகிலும் அவமதித்தாடில் எமபுரங் குடும்பத்தோடு குடிப்புகவேண்டியதேயன்றி வேறில்லை, வணங்கி வார்த்தையாடுவோம், வாரும் வாரும் சக்கிரவர்த்தியே! இந்தஆசனத்திலிருந்து அடியேனை நாடிவந்தகருத்தைவெளியிடுவீர்தேவே ; (நள-வ-ம்.) புஷ்கரராஜே, நீ அன்று என்னைக்கேட்டவாறு இன்றென்னுடையபத்தினியாகிய தமயந்தியை பந்தயமிட்டு ஓராட்டஞ் சொக்கட்டான் ஆட ஆவலாய்வந்தேன், உன் கருத்தெதுவோ தெரியேன், (புஷ்-வ-ம்.) அப்படியே ஆடுவோம், மந்திரி! சொக்கட்டான் பெட்டியையெடுத்துவருவாய், ஏ! நளபூபதியே! அன்று நீ எனக்குத்தோற்றசெங்கோலைப் பந்தயமாகவிட்டேன் வாரும் ஆடுவோம் சத்தியவந்தரே; (நள-வ-ம்.) சந்தோஷம், நீர் முதல் ஆடும் ; (புஷ்-வ-ம்.) ஆடினேன், மூணுத்தொண்ணூறு - அஞ்சு.

---

### நளமகாராஜன் - தரு - ஆரபி : ஆதி.

தாழ்வேது - தனைமீது - ஓது.
வாழ்த்தியே - காரியும் - வணங்கியோடிருக்கத். (தாழ்)

(நள-வ-ம்.) இருக்கால் - பனிரெண்டு - தாகை பனிரெண்டு - ஆறுவிழுந்தது, வைத்துக்கொண்டேன், இனி நீர் ஆடும்.

(புஷ்-வ-ம்.) ஆடினேன், எட்டு - ஆறுவிழுந்தது.

ஆண்மையாய்ச்சாமேதி - அரும்பொரிபற்றி
ஓர் - அரசைப்பெறுவதுவே - நீதி
அது - அங்குமிங்குமிரந்து - யாதி
அருணுதி - பிரம்மாதி - ஆதி. (தாம்)

(நள-வ-ம்.) துகை - பணிரெண்டு பந்து, இனி நீர் ஆடும்.
(புஷ்-வ-ம்.) ரூணத்தொண்ணு.

நீதிநெறியுணர்ந்து - நிமலனடிதுதித்
தோர் நிலையில்நிற்பதுவே - நாயம்
நெறி - குலைப்பரிதலனி - யாயம்
கினை மாயம் - வருமபாயம் - தாயம். (தாம்)

(நள-வ-ம்.) பணிரெண்டு - என் ஆட்டங் கெலித்தது.
(புஷ்-வ-ம்.) ஆ! விதியே? இப்படியாகுமென நான் கனவிலும் நினையாமற்போனேனே, இனி எனக்கென்ன கெடுதிவருமோ, முன் நாம் இவ்வரசருக்கு கொடுக்கவேண்டிய கப்பதிறவையை இப்போது கேட்டில் என்னசெய்வது?

கள்ளருக்குறுக்காரமும் - னைக்கைக்குறைப்படதேனக்
கண்டறிந்தவனுமேனோ - மானி
அதை கடந்துநின்றவன்மேலோ - தியானி
கருதாய்நீ - வினையேநீ - ஞானி. (தாம்)

(நள-வ-ம்.) அப்பா மந்திரி! புஷ்கரன் தோற்றமையால் இவனை இவ்வெல்லையைக் கடக்கச்செய்வதோடு, நமக்குச் சேரவேண்டிய கப்பதிறவையுஞ் சீக்கிரமனுப்பும்படிக்குந் திட்டஞ்செய்குவாய்; (மந்-வ-ம்.) நல்லதாண்டவா! (கட்-வ-ம்.) அரசே! தங்கள் குருசுவாமியாகிய வசிஷ்டமூர்த்தி வருகின்றார்தேவே; (நள-வ-ம்.) சந்தோஷம், நமஸ்காரம் என் குருவே? (வசிஷ்டர்-வ-ம்.) அப்பா நளச்சக்கிரவர்த்தியே? இன்று சுபதினமானதால், நீ அன்று நீக்கிய கிரீடத்தைத் தரித்து, சிம்மாசனத்தில் வீற்றிருந்து நீதிசெய்குவாய்; (நள-வ-ம்.) அப்படியே, குருநாதா.

---



பொது - தரு - சுருட்டி - ஆதி.

மகுடாபிஷேகங்கொண்டான்
மன்னர் மன்னு புகழ் நன்னெறி நளராஜன். (மகு)
வெகுவெகுவாத்தியம் - விசைதயாயொலித்திட
வேதமொழிகடலினை - விப்புரர்பயிக்கிட
திருதிமிதையென - தெரிவியர்நடத்திட
திரிவிக்கிரமுடமும் - தேசத்தோர்படித்திட
திகழுடன்-புகழ்வதும்-மகிழ்வதாய்-வழங்கிட. (மகு)
இருபுரம்வெண்சாமரை - யிணையில்லாமல்வீச
எந்நியேமுத்தாலாத்தி - யிளமையரும்பேச
ஒருபுரமமைச்சர்கள் - ஒளரமுர்கமைக்கிவாச
ஒடுங்கிப்பலமன்னரும் - உயர்நோக்கிடக்கூச
உம்பர்கள் - கூர - மேயி
உலகமதராச் - சார - கண்டு
வம்பர்களுளம் - சோர - நீதி
வகுப்பதிலோர் - யார - நாதிய
உத்தமன் - சத்தியன் - எத்திசை - நத்திடு
மெத்தனை - நித்தியன் - புத்திவான் - சுத்திமான்
உருகி - யுளஞ் சகியாஸ் - கருகி - கெலித்தாட்ல
பெருகி - புஷ்கரனேயே - குருகி - திடச்செய்த. (மகு)

(தம-வ-ம்.) போற்றி பிராணநாதா! (நள-வ-ம்.) மாதே? உன்னுடைய கற்பாகிய பெருமையால் பெருங்கீர்த்தியும் பெற்றேன் அன்னமே! நீ அரண்மனைப்போவாய் என் நாயகமே; (தம-வ-ம்.) புத்தி புத்தி பிராணநாதா?

---

(நள-வ-ம்.) அப்பா மந்திரி! இன்று நான், பொக்கிஷத்திலிருக்கும்பொருளை தானஞ்செய்யவேண்டியிருப்பதனால், ஏழைகளிருப்பார்களாகில் வதிக்கிரத்தில் வரவழைப்பாய், நான் அரண்மனைச்சென்று நித்தியகடனைமுடித்துப் போஜனமருந்தி வருகின்றேன்; (மந்-வ-ம்.) அரசே! தாங்களிங்கில்லாததையறிந்து, அனியாயக்கோரங்கீ கலியானது காண்பட்டதால் வறுமையிற்பட்டிருமவர்களதிகமாயிருப்பதில் தடையில்லை, பறைசாற்றி, எல்லோரையும், நாளை உதயத்தில் இங்குவந்து ஒருங்குசேரும்படி திட்டஞ்செய்கின்றேன்; இக்கிருவாகவேண்டியது ஆண்டவா? (நள-வ-ம்.) அப்படியேசெய்வாய் பாலா.

(மங்-வ-ம்.) அப்பா கட்டியனே யாசகர்களை வரும்படிக்குப்பறைசாட்டச்செய்தாயா? (கட்-வ-ம்.) இதோவருகின்றார்களையா.

---

யாசகர்கள் - கீர்த்தனை - தோடி - ஆதி.

நாராயணன்நாமத்தைப் - பாராயணஞ்செய்வோனை
நாடக்கருதா னேயன் - கேட்பிரே. (நா)
வேறொருமக்காலத்திற் - வேண்டி யுதவியாகார்
வெருளாதே - சொன்னேன் - பொருளீதே - தினம். (நா)
கோரபாவவினைகள் - குலைத்தோடச்செய்திடும்
கொலைபாதகமுமனையும் - குறுக்கிடிற்கொய்திடும்
நேயிலாவிடிலோர் - மிலேபோதாகிலும் நீசார்
தெளிப்பாயே - சொன்னேன் - களிப்பாயே-தினம். (நா)
ஆறுமூன்றையடக்கி - யதாவிதென்பதைவிட்டு
அறிந்தவர்யலைமுடி - அங்கச்சோரனைச்சுட்டு
தார்த்மேயுணர்ந்து - தளராத்தவம்புரிந்து
தழைப்பாயே - சொன்னேன் - செழிப்பாயே-தினம். (நா)
இருவினையென்பது - விட்டினைப்பாராது
இகபரத்திலுமுயர் - நெறிக்கு மாறாது
திருமுத்தாக்ஷரமிப்பொருள் - தன்மிருந்திடிற் சால
தெரிவாயே - சொன்னேன் - அறிவாயே - நிலை. (நா)

(நள - வ - ம்.) மந்திரி இவர்களுக்கு வேண்டிய வெகுமதிகள் கொடுத்தனுப்புவாய்; (மங்-வ-ம்.) நல்லதுபிரபோ.

---

வாழி - விருத்தம்.

ஓதிடும்நூற்கள்வாழ்க உலகில்நன்னடக்கைவாழ்க
வேதியரொழுக்கம்வாழ்க வித்தையும்புத்திவாழ்க.
ஜாதிநெறிகள்வாழ்க சற்குணமன்னர்வாழ்க
ஆதியாம்பதுமநாபன் அடியார்கள்வாழ்கவாழி.

சம்பூர்ணம்.

ஸ்ரீ - தி - அப்பாவு.